[illegible]

[illegible]

ஸ்ரீகிருஷ்ண பரப்பிரம்மணே [illegible]

# ஸ்ரீ பகவத்கீதா நவநீதம்.

## வசனரூபம்.

இரண்டாம் பதிப்பு

947

இது

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் வியாக்யானஞ்செய்த

வடமொழி பாஷ்யார்த்தத்தைத் தழுவி

இலிங்கத் திருநகர

ஸ்ரீ சாமிநாத தேசிகேந்திர

சிவயோகியவர்களால்

தமிழ் தேசாபிமானிகள் பலரின் வேண்டுகோட்கிசைந்து

அறாம்பதவுரையுடன்

விருத்தாந்தியாய் மொழிபெயர்த்தருளியது.

---

மதுரை புதுமண்டபம்

பி. நா. சி. [illegible]

பூ. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை] 1916. [ரூபா 1—4

Registered Copy-right.

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY,
THIRUVANMIYUR :: MADRAS-41

கடவுள் துணை.

# முகவுரை.

1. ஸ்ரீ வாணி மணாளரது பிரேரணையால் துவாபர யுகாந்தியமும் கலியுகாரம்பமுமான சந்தியிலே பூபாரந் தீர்த்தருள வேண்டி ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே இப்பூவுலகில் தேவகியென்பாளுக்கும் வசுதேவருக்குமாக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியா யவதரித்தாரென்பது விகசிதம்.

2. இந்தத் தேவகிமைந்தரான ஸ்ரீகிருஷ்ணர், மகாபலிஷ்டனும் மிகப்பிரசித்தனும் பஞ்சவரிலொருவனுமாய இருக்கவண்ணனைக் கிரீடியைநோக்கி ஏ புஜபல விஜய! தற்போது யாம் பூபாரந் தீர்ப்பான்வேண்டியும், தர்மத்தை நிலைநாட்டவேண்டியும் இங்ஙனம் அவதரித்துள்ளோம். கொடிய கிராதகர்களான துரியோதனாதியர்களைத் துலைந்தாலல்லது பூமிபாரந் தீராதாகையால் இனி நீ அவர்களோடு போர்புரிந்து அவர்களை மாய்த்தல்வேண்டும், என்சொல்கின்றாய் அருச்சுனா? எனக் கூறினர்.

3. இவ்வார்த்தை வங்கத்தையுருக்கிச் செவியில் வார்த்ததென்ன அம்மன்னன் காதில் விழவே, மகா துக்கசாகரத்தில் மூழ்கியவனாய் மெய்சோர்ந்து நின்றனன். அக்கணமே இக்கீதா சாஸ்திரத்தை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியா ருபதேசிக்கலாயினர்.

4. இக்கீதாமிர்தமானது மோக்ஷசாதனமாகிய ஞானத்தையும் பரம்பரையாய்க் கர்மத்தையும் இராஜயோகமுதலிய அநேக சாதன தர்மங்களையும்பற்றி மிகவிரிவாய்க் கூறப்படுகின்றது.

5. இன்னும் இக்கீதாமிர்தந் தோன்றியதற்கு முக்கிய காரணமொன்றுண்டு; அதாவது ஸ்ரீநாராயணமூர்த்தி ஒவ்வொரு யுகாந்தத்திலும் அதர்மங்களை நிக்கிரகித்துத் தர்மத்தை நிலைநாட்டும்பொருட்டே ஒவ்வோரவதார மெடுத்தாரென்பது சுருதி ஸ்மிருதி புராணங்களால் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளங்கும்.

6. ஆகவே தர்மஸ்தாபனஞ் செய்யவந்தவர் முதற்கண் துஷ்டநிக்கிரகஞ்செய்து பூபாரந்தீர்த்து அதன்பிறகே தர்மத்தை

ஸ்தாபிக்கவேண்டி அருச்சுனனை நிமித்தமாகக்கொண்டு அவனை தன் சுதன்மமாகிய யுத்தத்தில் பிரவிர்த்திக்கச்செய்து பின் முறையாக ஞான நிட்டையை யப்பியசிக்கும்பொருட்டு இந் கீதையை யுபதேசித்தனரென்க.

7. இவ்வாறாகக் கன்மம் ஞானமென்னு மிரண்டையும் சாத்திய சாதன கிரமமாக வுபதேசிப்பதால் இக்கீதார்த்த சிலாக்கிய வாக்கியம் வெகு முக்கியப்ரக்கியாதியா யெத்தேசத்தும் எம்மதத்தும் எப்பாஷையினும் யெடுத்தாளப்பட்டுவருகின்றது.

8. இதனால் அதிமேன்மையதென்பதற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதர் பாஷியஞ்செய்ததே போதிய சான்றாமென்க. இன்னும் இதன்மேன்மையைப் பின் விவரித்துள்ள கீதாமகாத்மியத்தில் மிகவிரிவாய்க் காணலாம்.

9. விஷயசந்தர்ப்பந் தெரியும்பொருட்டு ஸ்ரீசங்கர பகவத்பாதர் விவரணஞ்செய்த பாஷியார்த்தத்தில் திருதராஷ்டிரமகாராஜன் யுத்தாரம்பத்தைக்குறித்துச் சஞ்சயரை வினாதல்செய்ததைக் கூறியவாகலின் அதனையே நூலாரம்பமாக்கொண்டு இந்நூற்குத் துவக்கத்தில் யுத்த சன்னத்தமான பாகுபாட்டைப்பற்றிக் கூறப்பட்டது.

10. இக்கீதை வடமொழிச் சுலோக பூர்வமாகலின் இதற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதர் செய்த பாஷியார்த்தத்தை யனுசரித்து நந்தமிழ்நாட்டார்க்கு பெரிது பயன்படுமாறு என்சிற்றறிவிற்கெட்டியவரையில் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன். கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்துவிளங்கும் ஆப்தர்கள் குற்ற நீக்கிக் குணத்தைக்கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ சாமிநாத தேசிகேந்திரசிவயோகி.

சிதம்பரம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41

# பகவத்கீதா மகாத்மியம்.

பதினெண் புராணங்களுள் சைவபரமாய புராணங்கள் 10-என்பது பெரும்பாலார்க்குத் தெரிந்ததே. இவைகளில் வராக புராணமென்பதொன்றாம். இப்புராணத்திலே பகவத் கீதா மகாத்மியத்தைப்பற்றி 20 - சுலோகங்கள் பூர்வமாக சூதமகா முனிவரால் சௌனகர்க்குக் கூறப்பட்டுள்ளன. அவைகளில் சிலவற்றைமட்டும் இங்கே விவரிக்கப்படுகிறதைச் சிரத்தையோடும் அன்பர்கள் கவனிக்கத்தக்கதாம்.

ஸ்ரீ வைகுண்ட நாதனான நாராயணமூர்த்தியே கிருஷ்ணாவதாரமாகவந்து அருச்சுனனை நிமித்தமாகக்கொண்டு ஏனையோருமுணர்ந்துய்யுமாறு கருணையாலுபதேசித்தருளிய சதுர்வேதசாரமும், பரமார்த்த தரிசனமெனப் பெயர்பெற்றதுமான இப்பகவத்கீதையின் பெருமையையும், அதன் அர்த்தங்களின் அருமையையும், அதைப் பத்தியோடு பாராயணஞ்செய்தனுட்டிப்பாரது மகிமையையும் பற்றிக்கூறுவது மகா தபசிகாமணிகளாலு மரிதென்றால் இங்குயானோ கூறவல்லேன்! ஆயினும் என்னறிவுக்கெட்டிய சிலவற்றைக் கூறுவேன் கேட்பீர், சௌனகரே!

ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதமாகிய இப்பகவத்கீதையை யாவனொருவன் கைப்பற்றி ஆராய்ந்தறிந்தனுட்டிப்பானோ அவன் பிறப்பிறப்பென்னும் பெருஞ்சாகரத்தைக்கடந்து ஒப்பற்ற மோக்ஷசுகத்தைத் தாழ்ச்சியின்றி யநுபவிப்பனென்பதற்குச் சாக்ஷியாகக் கீழ்வரு நம் வாக்கியங்களே போதியதென்க.

சர்வோத்கிருஷ்டமாகிய இப்பகவத்கீதையை அன்போடுங் கேட்டவர்கள் கிடைத்தற்கரிய இந்திராதி போகங்களை யனுபவித்து ஈற்றில் நான்காம்பதவியாம் சாயுச்சியத்தை யடையப் பெறுவர்கள். அன்றி அங்ஙனங்கேளாது உதாசினமாய்த் திரஸ்காரஞ்செய்தவர்கள் மீளா நரகத்துக் காளாதலோடு முடிவில் சர்வஜீவன்களினுங் கேவலமான பன்றியாய்ப் பிறந்துழன்று மாய்வரென்க.

இக்கீதாமிர்தத்தைப் பாராயண மூலமாகப் பருகியவர்கள் சதுர்வேத சாஸ்திராதிகளையெல்லாம் சம்பூர்ணமாகக் கற்

றுணர்ந்தாரோ டொப்பாவரென்பதிற் சந்தேகமின்றும். அன்றியும் தத்துவஞானத்தைப் போதித்துப் பிரம்மானந்தத்திலாழ்த்துவதில் இதற்கொப்பான சாஸ்திர மில்லையென்றே சொல்லலாம்.

இந்த கீதா நவநீதத்தை நிர்விசாரமாயிருந்து சாவதானமாக 18-அத்தியாயங்களையும் சிரத்தா பத்தியோடு பாராயணஞ் செய்பவர்களுக்கு ப்ரம்மஞானம் லபிக்கப்பெற்று மோக்ஷமெய்துவரென்க.

இன்னும் இக்கீதை முற்றிலும் பாராயணஞ்செய்யவியலாது பாதியையேனும் நித்திய கருமானுட்டான முடித்தபிறகு சுத்த மானஸ்தானத்திருந்து சிரத்தையோடும் அன்போடும் பாராயணஞ்செய்பவன் எல்லாவுலகங்களினு மேலான தேவலோகத்திலே பிறந்து தேவபோகங்களை யனுபவிப்பனென்க.

மற்றும் மேற்கூறிய 9-அத்தியாயங்களைப் பாராயணஞ் செய்யவியலாதவன் அதிற் பாதியையாவது உள்ளபடியோதி வருவானாயின் அவனுக்குக் கோதானஞ்செய்த பலனுண்டாமென்பதிற் சம்சயமில்லை.

இன்னும் இப்பகவத்கீதையின் மூன்றிலொரு பாகத்தைத் தினமானம் பாராயணஞ் செய்பவனுக்குச் சோமயாகபலமும், அதிற்பாதியை பாராயணஞ் செய்பவனுக்கு அக்கினிஷ்டோம யாகபலமும் சித்தியாமென்க.

இப்பகவத்கீதையில், ஒவ்வொருநாளும் ஸ்நானஞ்செய்து அநுட்டானுதிகள் முடித்து ஒவ்வொரு அத்தியாயங்களாகப் பாராயணஞ் செய்துவருபவனுக்கு உருத்திர லோகத்திலேயுள்ள பிரமதகணங்களோடு தானுமொருவனுயிருந்து வாழ்வனென்க.

இன்னும் இக்கீதா நவநீதத்தில் தன் சத்தியானுசாரமாக பத்து வாக்கியங்களேனும், அல்லது 7-அல்லது 5, 4, 3, 2, வாக்கியார்த்தங்களையாவது பிரதிதினமும் பாராயணஞ் செய்து வருபவன் சந்திரலோகத்தையடைந்து பதினுயிர வருடகால பரியந்தஞ் சீவித்திருந்து சுகமெய்துவன்.

இதன்றி கீதையில் ஏகதேசம் சிலவற்றை மட்டும் முறையாக பாராயணஞ்செய்பவன் தேகம் நீங்கிடினும் அவனுக்குப் பிறகு சாரூபபதவி கிடைக்குமென்க.

இன்னும் இக்கீதையினோர் சுலோகத்தையேனும் மரணாந்த காலத்தில் ஸ்மரித்து உயிர்துறப்பானாயின் அவனது மறு ஜென்மம் பிரமஞானமுணர்ந்த பிராமணனிடத்தே யவதரிப்ப னென்க.

இன்னும் இக்கீதாமிர்தத்தைப் பூர்வம் ஜனகராஜன் முதலிய அநேக அரசர்களும் ஏனை தவசிரேஷ்டர்களும் விதிப்படி பத்தி சிரத்தையோடு பாராயணஞ்செய்து அதனால் பாவ நீங்கப்பெற் றுப் பிரபலமான கீர்த்தியோடு மோக்ஷசுகத்தையு மடைந்திருப் பது செவ்வனே விளங்கும்.

இப்பகவத் கீதையைமட்டும் பாராயணஞ்செய்து மகாத் மியத்தை யோதாதொழிவரேல் மேற்கூறிய யாதொருபலனையு மடையப்பெறார்க ளாதலால் பகவத் கீதா பாராயண முடிந்த வுடனே மகாத்மியத்தையும் ஓர்முறை ஓதுதல் அத்தியா வஸ்யமாம்.

இன்னும் இக்கீதா சாஸ்திர பாராயணஞ் செய்பவன் முன்னே மகாபாவங்களைச் செய்தவனாயினும் அப்பாவங்க ளனைத்தும் தாமரையிலைத் தண்ணீரனைய அவனைப்பற்றுதொழியு மென்க.

மற்றும் இக்கீதையின் பாராயண நடக்குமிடங்களிலும், கீதையிருக்கு மிடங்களிலும், கீதார்த்த உபந்நியாச ஸ்தானங் களிலும், கங்கைமுதலான புண்ணிய தீர்த்தங்களும், சர்வதேவர் களும், கோபால கோபிகைகளும், யோகியர்கள் முனிவர்களும், வைகுண்ட துவாரபாலகர்களும், நாரதர் உத்தவர் முதலிய சமஸ்தமான பிரபந்திகளும் விஜயஞ்செய்வார்களென்க.

வராகபுராணத்துள்ள பகவத்கீதாமகாத்மிய

முற்றிற்று.

## பத்மபுராணத்துள்ள

# பகவத்கீதா மகாத்மியம்.

---

தேவகன்னியர்களிருவர் ஓர் இருடியரின் தவத்துக்குத் தீங்கிழைத்தமையால் இலந்தை விருக்ஷமாய்ப் பிறக்கச் சாபமேற்று அவ்வாறே மரவடிவந்தாங்கி நிற்குமார்க்கத்திலே, காசி க்ஷேத்திரத்தினின்றும் யாத்திரையாகவரும் வரதனெனும் பிராமண சீலன் ஷை மரத்தண்டை வரும்போது கீதையின் 4-வது அத்தியாயத்தை ஓதிக்கொண்டுவர, அதுகேட்ட ஷை ஸ்திரீ மரங்கள் சாபநீங்கி யுண்டும் ஷை தெய்வ கன்னியர்களாய் நான்காமத்தியாயத்தை யுபதேசிக்கக்கேட்டு அந்த சிரவண பக்தியினாலே முத்திபெற்றார்கள்.

கோதாவரி யென்னும் புண்ணிய நதியையுடைய கோதாவரி க்ஷேத்திரத்திலே தேவசன்ம னென்னுமோர் அந்தணன், அவ்விடத்துள்ள கானகத்திடையுலவிய யாதவனொருவனால் அக்காட்டின் கற்பாறையிற் பட்டியுள்ள பகவத்கீதை 2-ம் அத்தியாயத்தைத் தெரிவிக்கக்கேட்டு ஆங்கேசென்று அக்கீதாவாக்கியத்தைக் கற்றுணர்ந்து பாராயணஞ்செய்த விசேடத்தால் முத்திசித்திக்கப் பெற்றனன்.

தக்ஷிணதேயத்தின்கணுள்ள ஆமர்த்தன பட்டினவாசியான பாவசன்மா வென்னும் பெயருள்ள ஓர் பிராமண சீலன் சென்மாந்தர பாவ விசேஷத்தால் பனைமரமாக ஜன்மித்து நின்றனன். அவ்விடம் பிராப்தமான பிரம ராக்ஷத ஸ்திரீ புருஷர்களிருவர் ஆத்மஞான விஷயமாய் சம்பாஷணைசெய்த விவாதத்தில் கீதையின் 8-ம் அத்தியாய முதற் சுலோகத்தைச் சொலக்கேட்ட அம்மரவடிவப் பிராமணன் சாபநீங்கப்பெற்றுக் காசியிற் பிறந்து அவ்வாக்கிய பாராயணத்தால் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் பிரசன்னம்பெற்று வைகுண்டத்தை யடைந்தனன்.

கோதாவரிஜில்லா அபிஷ்டணி புரத்திலேயுள்ள சாநுசாரதி யென்னுமோர் அரசன், காஸ்மீர தேசத்துள்ள மணிபுர வாசியாகிய ஒரு முனிவரின் பிரபாவத்தைக் கேள்வியுற்று அவர்பாற் சென்று சரணடைந்து கீதையின் 6-வது அத்தியாயத்தை உபதேசிக்கப்பெற்று அவ்வாக்கிய பாராயணத்தின் காரணமாக விதேகமுத்தி யடைந்தனன்.

மகாபாவியான மத்துவதேசப் பிராமணனொருவன் பூர்வ சாப பாவத்தால் பருந்துபக்ஷியாயும், வியபிசாரதோஷந்தாங்கிய அவன்மனைவி கிளிப்பரவையாயும் பிறந்து, சாதியில் வேற்றுமை பற்றியும் பூர்வவிரோதங் காரணமாகவும், "கீதா 5-ம் அத்தியாயம் பாராயணஞ்செய்து முத்தியடைந்த பிராமணனது கபாலத்தில் நிறைந்துள்ள ஜலத்தில்" மேற்படி இரண்டு பக்ஷிகளும் ஒன்றோடொன்று சண்டையிட்டு இறந்த விசேஷத்தால் வைகுண்டத்திலே பூர்வமான பிராமண ஜென்மத்திலேயே பிறந்தனர்.

பாடலி புரத்திலே சங்குகர்னனென்னும் பிராமணனொருவன் தன்னிடமுள்ள திரவியத்தைத் திருடர்களுக்குப் பயந்து புதைத்து வைத்திருக்கும்போது தற்செயலாய் அப்பிராமணன் சர்ப்பந்தீண்டியிறந்து மீண்டும் ஏதோ பாவவிசேஷத்தால் பாம்பாய்ப்பிறந்து மேற்படி புதையலைக் காத்திருந்தான். இங்ஙனம் நிகழ்ந்தபின்னர் ஓர் சமயம் இப்பாம்புவடிவப் பிராமணனது குமாரர்களுக்குச் சொப்பனத்திலே "பகவத்கீதை 7-ம் அத்தியாயம் பாராயணஞ்செய்த பிராமணனுக்கு அன்னமளிப்பீரேல் உங்கள் பிதா சொர்க்க மடையவும், அவர் புதைத்து வைத்திருக்குந் திரவியம் உங்கட்குக் கிடைக்கவும் நேரும்" என்றுதெரிந்து அவ்வாறே செய்துமுடித்துப் பிதாவைச் சொர்க்கத்துக்கேற்றிப் புதைபொருளையும் பெற்றுச் சுகஜீவியாயிருந்தனர்.

கோலவாபுரி யென்னும் பட்டினத்தில் வசித்த சித்தசமாதி யென்ற வேதிய ரொருவர் கீதாமிர்தத்தின் 12-ம் அத்தியாயத்தைப் பாராயணஞ்செய்த விசேஷத்தால், இராஜகுமார னொருவன் கேட்டுக்கொண்டவண்ணம் தேவர்களா லபகரிக்கப்பட்ட யாகக்குதிரையை மீண்டும் வரவழைத்துக் கொடுத்துத் தேகவியோகமான அந்த இராஜனது பிதாவையும் உயிர்ப்பித்து அவனுக்கும் 12-ம் அத்தியாயத்தையே யுபதேசித்து முத்திபெறச் செய்தனர்.

கௌடதேசத் தரசனான கிருபால ராசிமன் என்பான் நாட்டைவிட்டுக் காட்டைநாடி வேட்டைக்குச் சென்றபோது அவ்வன விருக்ஷத்தின் ஓரிலையில் தீட்டியிருந்த கீதாசுலோகத்தைச் சப்தத்தோடு வாசிக்க, அருகிருந்த அஸ்வம் மேற்படி சுலோகத்தைக் கேட்ட விசேஷத்தால் மோக்ஷமடைந்ததை அம்மன்னன்கண் டதிசயித்துத் தானும் 15-ம் அத்தியாயத்

தின் சுலோகத்தைப் பெரியோர்வாயிலாக உபதேசிக்கவுணர்ந்து அப்பாராயண காரணமாகவே காலாந்தத்தில் மோக்ஷமெய்தினன்.

இந்த பரமார்த்ததரிசனத்துள்ள 18 - ம் அத்தியாயத்தின் சுலோகங்களில் 6 - சுலோகங்களை மட்டும் ஓதியுணர்ந்தனுட்டித்த விசேடத்தால் பொன்னுலகாக்ஷி கிடைக்கப்பெற்றனனேரிந்திரன். இவ்விசேஷத்தினை நன்குணர்ந்த மற்றுமோரிந்திரன் காலேசுரனென்னும் பிராமணோத்தமர் வாயிலாக ஷை 18 - ம் அத்தியாயத்தையே உபதேசிக்கப்பெற்று அதன்பயனாக வைகுண்டத்திலே ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் திருவடிநீழலைநண்ணினனென்க.

இவைகளன்றி பிற்காலத்தில் சற்றேறக்குறைய 150 - வருடங்களுக்கு முன்னர் இராச்சியபாரஞ் செய்துவந்த மகமதிய பாக்ஷாவொருவர், "இவ்விந்திய தேயத்தவர்கள் முக்கியமாய்க் கைக்கொண் டனுட்டித்துவரும் சத்துவபோதநூல் இக்கீதையென்றே இந்திய சிரேட்டரான அப்பாஜியவர்களால் கேட்டறிந்து" பிரதிதினமும் பகவத்கீதா பாராயணஞ்செய் தனுட்டித்துச் சீவன்முத்தராயினர்.

இன்னுஞ் சிலகாலத்துக்குமுன்னே இவ்விந்தியா தேசத்தைப் பரிபாலிக்கவந்த ஐரோப்பிய கனவானும் கெவர்னர் ஜனரலுமான வாரன் ஹேஸ்டிங்ஸ் துரையவர்கள், இந்து மதத்தவரால் கொண்டாடப்படும் உண்மையான நூலெதுவெனத் தக்கார் குழாத்தினரை நன்கு விசாரித்தறிந்து பகவத் பிரேரணையால் கிருஷ்ணார்ச்சுன சம்வாதமாகிய இப்பகவத் கீதையே மிகச் சிறந்ததெனவறிந்து இந்தியர்களைப்போலவே தன்றேயத்தவர்களும் ஆராய்ந்தறிந் தனுட்டித்துச் சுகம்பெறக்கருதி இதனை அங்கிலேய பாஷையிலும் மொழிபெயர்த்துத் தரவேண்டிய பொருளுதவிசெய்து வடமொழியில்வல்ல அறிஞர்கள் வாயிலாகச் சாராம்சங்களைத் தெளிவுறத்தெரிந்து இங்கிலீஷில் மொழிபெயர்த்துத் தற்போதும் ஐரோப்பாக் கண்டத்தினரு ளனேகர் பாராயணஞ்செய்து வருகின்றனர். இதுநிற்க; மற்றும் ஹிப்ரு, லத்தின், தெலுங்கு, இந்துஸ்தான், தமிழ் முதலிய பற்பல பாஷைகளிலும் பல மதத்தினரும் தத்தமக்குரிய சாஸ்திரப் பயிர்ச்சியின் பேருதவியால் இந்நூலையும் பாராயணஞ்செய்து கிடைத்தற்கரிய தர்மார்த்த காமமோக்ஷமென்கின்ற புருஷார்த்தங்களைப்பெ ற்றுப் பெருவாழ் வெய்துகின்றன ரென்பது சொல்லாமலே விளங்கும்.

இக்கீதாமிர்தத்தைப்பற்றிய மகாத்மியங்கள் இன்னும் பலவுளவேனும் இங்கு அவைகளனைத்தையுங் கூறாது முக்கியமான சிலவற்றைமட்டுங்கூறி மற்றதை விரிவஞ்சிவிடப்பட்டது.

பத்மபுராணத்துள்ள பகவத்கீதாமகாத்மிய

முற்றிற்று.

# கீதா சாரசங்கிரகம்.

இந்த கீதை 18 - அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இதில் 1 - முதல் 6 - அத்தியாயங்கள்வரையில் சத்கன்மங்களைப் பற்றியும், 7 - முதல் 12 - அத்தியாயங்கள்வரையில் பக்தியோகத்தைப்பற்றியும், 13 - முதல் 18 - அத்தியாயங்கள் வரையில் ஞானயோகத்தைப்பற்றியும் சாங்கோபாங்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இன்னும் இக்கீதைமுதல் 6 - அத்தியாயங்களிலும் தொம்பத பரிசீலனையால் லக்ஷியார்த்தமும், மத்தியிலுள்ள 6 - அத்தியாயங்களிலும் தற்பதபரிசீலனையால் லக்ஷியார்த்தமும் கடையாயுள்ள 6 - அத்தியாயங்களிலும் இலக்ஷியார்த்தசப் பரிசீலனையால் ஐக்கியத்தைப்பற்றியும் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இங்ஙனம் விவரித்துள்ள உத்தமகீதையைக் கைக்கொண்டு பத்திசிரத்தையோடும் ஆசிரியர்வாயிலாக நன்குகேட்டுணர்ந்து இதிற்கூறிய வண்ணம் அநுட்டித்துவரு மகா உத்தமபுருஷர்கள் யெவ்விதத்தும் ஞானமோக்ஷங்களை யடைவரென்பது நிச்சயம்.

# விஷய அட்டவணை.


| எண் | அத்தியாயங்களின் பெயர். | பக்கம் |
|---|---|---|
| 1 | அர்ச்சுனவிஷாதயோக அத்தியாயம். | 11 |
| 2 | சாங்கியயோக அத்தியாயம். | 22 |
| 3 | கர்மயோக அத்தியாயம். | 52 |
| 4 | ஞானயோக அத்தியாயம். | 71 |
| 5 | சந்நியாசயோக அத்தியாயம். | 90 |
| 6 | தியான அப்பியாசயோக அத்தியாயம். | 104 |
| 7 | விக்ஞானயோகமெனப்படும் பத்தியோக அத்தியாயம். | 120 |
| 8 | அக்ஷரப்பிரமயோக அத்தியாயம். | 133 |
| 9 | இராசகுய்யயோக அத்தியாயம். | 142 |
| 10 | விபூதிவிஸ்தாரயோக அத்தியாயம். | 156 |
| 11 | விசுவரூப அத்தியாயம். | 166 |
| 12 | பத்தியோக அத்தியாயம். | 177 |
| 13 | பிரகிருதிபுருஷயோக அத்தியாயம். | 183 |
| 14 | குணத்திரயயோக அத்தியாயம். | 195 |
| 15 | புருஷோத்தமயோக அத்தியாயம். | 204 |
| 16 | தெய்வ அசுரசம்பத்தியோக அத்தியாயம். | 212 |
| 17 | சிரத்தாத்திரயயோக அத்தியாயம். | 221 |
| 18 | சஞ்சேபயோக அத்தியாயம். | 230 |

ஓம்

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ணாய பரப்பிரம்மணே நம:

# ஸ்ரீபகவத்கீதா நவநீத வசனம்.

### கணேசர் துதி.

நீங்காத மலமொன்று நீண்டதூக் குடைத்தும்பி
யாங்கார மெனுந்தறியை யடியோமிற் பறித்தோடத்
தூங்காத வொருகோடி சூரியர்க டோற்றாக
வோங்காரக் கயமுனியை யுளக்கூடத் திருத்துவாம்.

### ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸ்தோத்திரம்.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா

வண்டாரும்பூந்துளப மாலையனை வானோர்கள்
கொண்டாடுங்கீர்த்தியனைக் கோவலர்பாடித்தயிர்நெய்
உண்டாடுசீதரனை யொப்பிலாவற்புதனைக்
கண்டாருமென்பருளுங் காதலிக்கும்புண்ணியனைத்
தொண்டாவென்றியெனச் சொல்லித்துதிமூழ்கிக்
கொண்டாடியனைக்கொண் டுயர்வீருலகீரே.

## முதலாவது அத்தியாயம்.

# அருச்சுன விஷாதயோகம்.

பாண்டவகுல திலகனும், சோக மோக போக வசந்தனும், சம்சார சாகரத்திலாழ்ந்து தனது குலதருமமாகிய க்ஷத்திரியதருமத்திற் சிறிதும் பற்றில்லாதவனும் விளங்கிய அருச்சுனனுக்குச் சர்வபூத பௌதிகங்களிடத்தும் பரிபூரணமாய் வியாபித்துள்ள ஸ்ரீகிருஷ்ணபகவான் அடியில்வருமாறு உபதேசித்தருளிய பரமார்த்த ஞானத்தையே பகவத்கீதையென்று மகாபிரமுகர்களாலே வழங்கிவிளங்குகின்றது.

இவ்வரியபெரிய கீதாமிர்தத்தையே வியாசமக[illegible] 'பரமார்த்ததரிசன' மெனப் பெயரிட்டு 700-சுலோ[illegible] மாய்த் திருவாய்மலர்ந்தருளப்பட்டது.

இந்தகீதார்த்தத்தைத் திரிகாலவர்த்தமானியாகிய [illegible]சஞ்சயர் என்பவரால் திரிதராஷ்டிர மகாராஜனுக்குச் சொல்[illegible]த்து. அங்ஙனம் திரிதராஷ்டிர மகாராஜனைநோக்கிச் சஞ்சயர் கூற வேண்டிய அவசரம் என்னெனில், துரியோதனாதியர்களுடைய சேனாசைனியங்களும் தருமர் முதலியோர்களுடைய சேனைகளும் யுத்தசந்நத்தர்களா யிருக்குஞ்சமயத்திலே திரிதராஷ்டிர மகாராஜன் அகமுகச்சிந்தனையாக அசைவற்று நின்றனன். அப்போது ஸ்ரீவேத வியாசபகவான் பிராப்தமாகி திரிதராஷ்டிரனை நோக்கி ஏ இராஜமகிப! பூமிபாரந் தீர்த்தருளவேண்டி ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே ஸ்ரீகிருஷ்ணபகவானாக அவதரித்துள்ளார். இப்போது நேர்ந்துள்ள யுத்தத்தின்பொருட்டு இந்தப்போர்க்களத்தில் யுத்தசந்நத்தர்களாக வந்திருக்கிற சைனியங்களெல்லாம் நீண்டகாலமிருக்கிறற்கும் ஏதுவில்லை. இனி எவராலும் யுத்தத்தைத் தடைசெய்யவு முடியாது. ஆகையால் நீர் ஏதோ சிந்தித்துக்கொண்டு காலதாமதஞ்செய்வதில் யாதும்பிரயோசனமில்லை. ஆகவே தினமானம் நடக்கும் யுத்தவிர்த்தாந்தங்களைப் பற்றி உமக்குத் தெரிவிக்கும்படி நாம் கட்டளையிட்டவண்ணம் சஞ்சயரால் சொல்லத் தெரிந்துகொள்ளும் என்று திருவாய்மலர்ந்தருளித் தம்மாச்சிரமத்துக்குச் சென்றனர். பிறகு சஞ்சயர் திரிதராட்டிர மகாராஜரிடம் அணுகலும், சஞ்சயரை நோக்கி இராஜன் வினவுகின்றான். முக்காலமுணர்ந்த ஏ முனிபுங்கவ! தற்காலம் தர்மாபிவிர்த்திக்கு ஆஸ்தானமாயுள்ள * குருக்ஷேத்திரத்திலே போர்க்கோலங்கொண்டு அணிவகுத்து நிற்கும் பாண்டவர்களும் நமது துரியோதனாதியர்களும் இப்போது என்ன நிலைமையிலிருக்கிறார்களென்பதை எனக்கு வியக்தமாகக் கூறக்கடவீர் என்றனன்,

---

* குருக்ஷேத்திரம் இதற்கு அஸ்தினாபுரியென்றும் பிரசித்தமாய் வழங்கப்படும். இதனைத் துரியோதனன் முன்னாளில் ஆண்டிருந்தனன் யானை சேனை மிகுதியாயிருந்ததுபற்றி இப்பெயர் பெற்றதென ஓர் சாராரும், ஹஸ்தி யெனும் அரசனால் முதலில் ஏற்படுத்தப்பட்டமையால் இப்பெயர் பெற்றதென ஓர் சாராரும் கூறத்தெரிகிறது. இது இக்காலத்தில் டில்லியென வழங்கப்படுகின்றது. இங்கேயே துவாபரயுக முடிவில் துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் பாரதயுத்தம் நடந்ததென்க.

ஸ்ரீசங்கர பகவத்பாதர் விவரணம்செய்தலில் முதலில் விஷய சந்தர்ப்பந்தெரியும்பொருட்டு திரிதராட்டிரனுடையகேள்வி ஆரம்பித்ததென்க. இன்னும் திரிதராட்டிரன் ஞானமென்னும் அகக்கண்ணுடையவனாயினும் வெளிப் பொருள்களைப் பார்த்தற்கு முகக்கண்ணில்லாத பிறவிக் குருடனானதால் யுத்தரங்கத்தில் நடக்கும் எல்லாவிஷயங்களையுந் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற சந்தோஷத்தை யுடையவனாய்த் தனக்கிதோபதேசஞ் செய்பவராகிய சஞ்சயரை நோக்கி வினவினனென்க.

### சஞ்சயர் வசனம்.

ஏ இராஜமகிப! தமது புத்திரனான துரியோதனன், அணிவகுத்துள்ள பாண்டவர்களின் சேனையைப்பார்த்துப் பின் துரோணாசாரியரையணுகி அவர்பால் பின்வருமாறு சொல்வானாயினன். 2

ஆசாரிய! தமது சிடனும், த்ருபதராஜனுடைய புத்திரனுமான த்ருஷ்டத்யும்னனால் யுத்தாரம்பத்துக்கு அணிவகுத்துத் தயார் செய்யப்பட்டுள்ள இந்த பாண்டவர்களுடைய ஏராளமான சைனியங்களைப் பார்ப்பீராக. 3

இந்த யுத்தகளத்தில் பீமன், அருச்சுனன் இவர்களுக்குச் சமமான தீரர்களுமிருக்கிறதாகத் தெரிகிறது. அவர்கள் யாவரெனில் விராடன், துருபதன், சாத்யகி என்பவர்களாம். 4

இன்னும், திருஷ்டகேதனன் என்னும் இராஜனும், பராக்கிரமசாலியான காசிராஜனும், சேகிதானனும், புருஜித்து என்னும் மன்னனும், குந்திபோஜன், நரசிரேட்டனாயதொரு சைப்பியன் ஆகிய இவர்களுமிருக்கிறார்கள். 5

இன்னும் மகாவீரசிகாமணியான யுதாமன்னியன், பராக்கிரம உத்தமௌஜன், சுபத்திரா புத்திரனான அபிமன்யு * உபபாண்டவர்கள் ஆகிய இவர்கள் வெற்றிகொள்ளத்தக்க யுத்தமுறைமையில்வல்ல † மகாரதர்களாய்க் காணப்பட்டிருக்கிறார்கள்.

ஏ உத்தமாசார்ய! நமது சேனையின் தலைவர்களைத் தாமறியும்வண்ணம் இனிவிவரிக்கிறேன் கேட்பீராக. 7

* உபபாண்டவர்களாவார்—பிரதிவிந்தியன், ச்ருதசோமன், ச்ருதகீர்த்தி, சதாநீகன், ச்ருதஸேநன் என்னும் ஐவர்.

† மகாரதன் பதினோராயிரம் வில்லாளிகளோடு யுத்தஞ்செய்யத்தக்க சாமர்த்தியமுள்ளவனும், வாள்வித்தையில் மிகவும் சமர்த்தனுமானவன்.

தாரும் வீஷ்டுமரும், கர்னனும், கிருபாசாரியரும், சமத்திஞ்யனும், அசுவத்தாமாவும், விகர்ணனும், சோமதத்தனது புத்திரனாகிய பூரிசிரவனும். 8

பின்னும், அநேக சூரர்களும் பலவித அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகிக்கும் முறைதெரிந்தவர்களாய் என்னிமித்தம் தமது பிராணனிடத்தில் ஆசையில்லாதவர்களாய்க் காணப்படுகிறார்கள். 9

ஆயினும் வீட்டுமரால் காக்கப்பட்டுள்ள நமமுடைய சைனியபலம் அபரிமிதமாய்க்காணப்படுகிறது. பீமனால் நடத்தப்பட்டுவரும் பாண்டவர்கள்சேனையோ மிதமாகக்காணப்படுகிறது.

நுண்ணறிவும் பெருமையுமுடையவராகிய பீஷ்மாசாரியர் தன் சேனைத் தலைவரென்றும், மகாசபல சுபாவமுள்ள பீமன் பாண்டவ சேனைத் தலைவனென்றும், தனக்கே வெற்றியுண்டாகுமென்றுந் துரியோதனன் எண்ணியதாகவுந் தோன்றுகின்றது.

ஆகையால் நீங்களனைவர்களும் அட்டதிக்கிலும் சாவதானமாயிருந்துகொண்டு வீட்டுமரைக் காத்துக்கொள்ளவேண்டுமென்று துரியோதனன் சொன்ன வார்த்தையைக்கேட்டு. 11

துரியோதனனுக்குச் சந்தோஷமுண்டாகும்படி வீஷ்டுமர் அட்டகாசஞ்செய்து சங்கத்வனியை முழக்கினார். 12

பீஷ்மர் இவ்வாறு செய்யவே கவுரவசேனைகள் சங்கம், பேரிகை முதலிய அநேக யுத்தகோஷங்களை முழக்கின. ஆனால் அந்தச்சத்தம் பெரும் ஆர்ப்பாடத் தொனியாகக் கேட்கப்பட்டது. 13

உடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் வெண்ணிறக் குதிரைகள்பூட்டியுள்ள மிகப்பெரிய ரதத்திலாரோகணித்துத் தமது சங்கையெடுத்து முழக்கினார் அப்போதே அருச்சுனனும் தனது சிறந்த சங்கத்தைப் பூரித்தனன். 14

சேனாவீரர்களனைவரும் தேரின்மேலிருப்பது தெரிந்தவிஷயமேயாயினும், அருச்சுனனால் செலுத்தப்பட்ட ரதம் அக்கினி தேவனால் தரப்பட்டதென்றும், அதன்மீதேறியுள்ள கிருஷ்ணார்ச்சுனர்கள் பிறரால்வெல்லப்படாரென்றும் அறிவிக்கும் பொருட்டே தேரின்மே லிருப்பவர்களென்று சொல்லலாயிற்று. மேலுங்கிருஷ்ணார்ச்சுனர்கள் நரநாராயணர்களாத

னால் சாமானியனே அநுசரித்துப் பிரவிர்த்திக்கத்தக்கவரல்லரென்றும், பாண்டவசேனையின் முகப்பில் கிருஷ்ணார்ச்சுனர்களேயிருக்கின்றார்களென்றும் அறிவிக்கும்பொருட்டே கிருஷ்ணார்ச்சுனர்கள் சங்கங்களை ஊதினார்களென்று முன்னே சொல்லப்பட்டதாய்த் தோன்றுகின்றது.

மேலேகோஷிக்கப்பட்ட சங்கங்களின் பிரதாபமும் பெயரும்கூறவேண்டுவ தவசியமாகத் தோன்றுவதாலே சொல்வோம். ஸ்ரீகிருஷ்ணன் தமது ஒப்பற்ற * பாஞ்சசன்யமும், தனஞ்செயன் என்னும் அருச்சுனன் தேவதத்தம் என்னும் சங்கையும், எதிரிகள் நடுங்கத்தக்கவனையாதொரு பீமசேனன் பவுண்டரசங்கத்தையும் பூரித்தனர்கள். 15

பின்னும், தருமராஜன் அநந்தவிஜயமென்னும் சங்கத்தையும், நகுலன் சுகோஷம் என்னும் சங்கத்தையும், சகாதேவன் மணிபுஷ்பகம் என்னும் சங்கத்தையும்கோஷித்தார்கள்.

இன்னும் சிரேஷ்டமான வில்லைத்தாங்கிய காசிராஜனும், மகாவீரர்களான சிகண்டி, துஷ்டத்துய்மன், விராடராஜன், மகாவீரனான சாத்தியகி ஆகிய இவர்களெல்லாம் வெவ்வேறாகிய தங்கள்தங்கள் சங்கங்களைப் பூரித்தார்கள். 17

மேலும், திரிதராட்டிரமகாராஜனே! கேளும் துருபதன் உபபாண்டவர்கள், புஜபலவானான அபிமந்நியுமுதலாகியசேனாதிபதிகள் தங்கடங்கள் சங்கங்களையும் தனித்தனியே பூரித்தார்கள். 18

மேலே கூறப்பட்டுள்ள மகாபராக்கிரமிகளாகிய எல்லாருடைய சங்கங்களையுந் தனித்தனியாகக் கோஷிக்கப்பட்ட தொனியானது ஆகாசம் பூமிமுதலிய எல்லாத்திசைகளிலும் நிறம்பித் திரிதராட்டிரன்புத்திரர்களைக் கலங்கும்படிச்செய்தது.

உடனே அருச்சுனன் யுத்தரங்கத்தில்வந்திருந்த துரியோதனாதியர்களைப்பார்த்து நல்லசமயம் இதுவேயென்று வில்லைவளைத்து நாணேற்றிப் பாணங்களைத்தொடுக்க ஆரம்பித்தான்.

பின்னும் அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ண பகவானைநோக்கி ஏ அச்சுதா! இங்கே பிராப்தமாகியுள்ள இருவகைச் சேனைசைனியங்களுக்கிடையே எனது ரதத்தை நிறுத்துவீராக என்றனன்.

---

* பாஞ்சஜன்யம்—சங்கம் இது பஞ்சஜனனென்னும் இராக்கதனால் உண்டானதால் அப்பெயர் தாங்கியது.

எதற்காகவென்னில், இந்தரணரங்கத்தில் தயாராயுள்ளவர்களில் நாம் யாரோடே யுத்தஞ்செய்யவேண்டுமோ அவர்களைப் பார்க்கவேண்டுமென்பதே யென்றான். 22

இந்தவாக்கியத்தால், "அருச்சுன! நீயோ யுத்தஞ்செய்யவந்தவன்; ஆகையால் யுத்தஞ் செய்யவேண்டுமே தவிர பார்க்க வேண்டிய அவசியமுனக்கில்லை. தவிர பார்த்தற்காக வந்தவனுமல்ல" என்று கிருஷ்ணமூர்த்திக் கேட்பரோவென்றெண்ணி உறவினரோடு யுத்தஞ்செய்ய நேர்ந்ததால் நான் யாருடனே போர்செய்யவேண்டுமென்றும், யுத்தத்துக்கு யாரார் வந்தார்களோவென்று தெரிந்துகொள்ளவேண்டுமென்னுஞ் சந்தோஷமுடையவனுயிருக்கிறேனேயன்றி அச்சத்தால் நான் பார்க்க நினைத்துத் தேரை நிறுத்தக்கடவையென்று சொல்லவில்லையென அறிவிக்கும் பொருட்டுச் சொன்னதாகத்தெரிகிறது.

துர்ப்புத்தியைக்கொண்ட துரியோதனனுக்குத் துணைபலமாகக்கூடியிருக்கிற சேனுவீரர்கள் யாரோ அவர்களையும் இன்னமும் பார்க்கவேண்டுமென்று அருச்சுனன் பின்னும் வேண்டிக்கொள்ள. 23

அருச்சுனன் வேண்டுகோட்கிசைந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அவ்விருதிறத்தவரது சைன்னியவகுப்பின் நடுவில் இரதத்தைநிறுத்தினர். 24

பின்னும் பீஷ்மர், துரோணர் முதலாயினோர்க்கும், சகல அரசர்களுக்கும் எதிரில் நிறுத்தி ஏ அருச்சுன! இந்த கவுரவ சேனைகளைப்பாராய் என்றுகூறுநின்றார். 25

இரணரங்க வீரசிம்மமாகிய யாதொரு அருச்சுனனவன் போர்க்களத்தில் வந்திருக்கிற சிறியதகப்பன், பெரியதகப்பன், பாட்டன்மார், ஆசிரியர்கள், மாமன்; சகோதரர்கள், புத்திர பௌத்திரர், மித்திரர்முதலானவர்களைத் தனதிருகண்களினுலுங் கண்டனன். 26

மேற்கூறிய சமஸ்த பந்துமித்திரர்களையும்பார்த்த யாதொரு பார்த்தனுனவன் அதிக தயாபரனுயும் துக்காக்கிராந்தனுயும் அடியில்வருமாறு கிருஷ்ணபகவானிடங் கூறுவானுயினன். 27

மீண்டும் அருச்சுனன் கிருஷ்ணபரமாத்மனைநோக்கி ஏ தீனதயாளோ! ஈண்டு போர்க்கோலம்பூண்டு நிற்கின்ற என்னுரிமை



யுள்ள சர்வ பந்துமித்திரர்களையும்பார்த்த என்மனமும் சரீரமும் நடுங்குகின்றதே! அவயவாதிகளெல்லாம் நிர்ப்பலமாகின்றதே! என்றும், 28

இந்தவாக்கியத்தால் அருச்சுனன் பிறரைவருத்துவது மிகவும் அநர்த்த ஏதுவான காரியமென்று நினைத்ததாகவும், போர்த்தொழில் க்ஷத்திரியர்களுக்கு இயல்பான தர்மமாயினும், ஞானத்துக்குத் தடையாகிய மமகாரத்தாலும் சோகமோகங்களாலும் உறவினர் மரணமடைவார்களென்கிற விசாரத்தாலுண்டாகிய மனோதுக்கத்தாலும் தம்மவர்களிடத்தில் தயையுடையவனாயிருந்தானென்றும், இப்போது சத்துருபக்ஷத்திலும் தயையுள்ளவனாயிருக்கின்றானென்றுந் தோன்றுவதோடு "விசனமடைந் திவ்வாறுகூறினான்" னென்பதால் கண்ணீ ரொழுகவிட்டுக்கொண்டு தழுதழுத்த குரலோடு பேசினானென்றுந் தோன்றுகின்றது.

அன்றியும் வாய் உலர்கின்றதே! மயிர்க்கூச்செறிகின்றதே! அல்லாமலும் என்காண்டீவம் கையினின்றும் நழுவுகின்றதே! * சருமம் மகாதாபமடைகின்றதே! என்றும். 29

மனமோ என்னைத் தன்வயப்படுத்திக் குலைகின்றது; மற்றும் இரதத்திலிருத்தற்குங் கூடவில்லையே! யாதுசெய்வேன். 30

அன்றியும் ஏ கேசவ! அவசகுனங்கள் பற்பலவிதமாகக் காணப்படுகின்றதே! தவிர இங்கே யுத்த சந்நத்தர்களாய் வந்திருப்பவர்களான ஆசிரியர், பந்துஜனங்கள் முதலானவர்களை சம்ஹாரம் செய்வதால் எனக்குவரக்கூடிய பெருமையென்ன, ஐஸ்வரியமென்ன, சுகமென்ன இவைகள்யாவும் எனக்குப் பிரிய மற்றனவாயிருக்கிறதே! 31

சுவாமின்! வெற்றியையாவது அல்லது இராச்சியத்தையாவது அல்லது சுகத்தையாவது யான் கோறினவனே யல்லவென்பது தங்களுக்குவிதிதமல்லவா? யாவரையும் சம்ஹரித்து நான் பிராணனை வைத்துக்கொண்டனுபவிப்பதில் என்ன பிரயோசனம்! 32

ஏ ஜனார்த்தனா! நான் யாரை உத்தேசித்து இராச்சியமும் பொருள் போகங்களையும் சம்பாதிக்கவேண்டுமோ அவர்களெல்

* சருமம் - தோல்.

லாம் இராச்சியத்தையும் பொருளையும் உத்தேசித்துப் பிராணனைத் திருணமாக நினைத்துவந்து நிற்கின்றார்களே! 33

அவ்வித திடவீரத்தன்மையோடுங்கூடி வந்திருப்பவர்களைப் பார்க்கும்போது குருமார்களும் பிதாக்களும் பாட்டன்மார்களும் புத்திரர்களும் மாமன், மாமனார், பேரப்பிள்ளைகளும் சம்பந்திகளாயுமிருக்கின்றார்களே! 34

ஏ மதுசூதன! இவ்வாறான பிராண விசுவாச பந்துமித்திரர்களை நான் கொன்று வாழ்வதைப்பார்க்கிலும் அவர்கள் கையால் யான் மரணமடைதல் மிக நலமென நினைக்கின்றேன். இப்படி இவர்களை நாசஞ்செய்வதில் திரிலோகாதிபத்தியம் வருகிறதாயிருந்தாலும் எனக்கு மனமில்லை. கேவலம் அநித்தியபூமி போகங்களைக் கவர்ந்து நானடையப்போகிற சிலாக்கியமானது எதையுங்காணோம். 35

வாக்கிய உள்ளுரை. "அருச்சுன! ஒருக்கால் நீ தயையினாலே இவர்களைக் கொல்லாவிடினும் இவர்கள்மாத்திரம் இராச்சியத்தின்மேலுள்ள ஆசையினால் உங்களைக் கொல்லாமற் போகார்களாகையால் நீ சும்மாயிராமல் இவர்களைக்கொல்லக் கடவாய். (கொல்லவந்தோனைக் கொல்லவேண்டும்) என்கிற நியாயத்தின்படி நீ இவர்களைக் கொல்வதால் பாபியாகமாட்டாய். ஆகையாலே நீ இவர்களைக்கொன்று இராச்சியத்தைச் சம்பாதிக்கக்கடவாயென்று கிருஷ்ணபகவான் சொல்வரோ" வென்றெண்ணியே யெனக்கு மூன்றுலக ஆக்ஷியிலும் ஆசையில்லையென்றும், அப்படிப்பட்ட நான் பூலோகத்தாக்ஷியின் பொருட்டுக் கொல்லமாட்டேனென்றும் சொன்னதாகத் தோன்றுகின்றது.

ஏ மாதவ! இந்த துரியோதனாதியரைக்கொன்று அதனால் எனக்குவரப்போகிற சந்தோஷமின்னதென்றுந் தெரியவில்லை. அல்லாமலும் * ஆததாயிகளாயிருந்தபோதிலும் பந்துமித்திரர்களைக்கொன்றால் அதனால் எனக்குவருவது மகாபாவமேயல்லது வேறில்லை. ஆகவே இராச்சியத்தைப் பட்டங்கட்டிக்கொள்வதற்கு முன்னதாக மகாபாவியென்னும் பட்டம் யாதொரு தடையுமின்றி கிடைத்துவிடுமே! 36

* ஆததாயிகள்—தனத்தை யபகரிப்பவன், பிறர்மனைவியை யபகரிப்பவன், பூமியை யபகரிப்பவன், விஷமிட்டுக் கொல்ல எத்தனிப்பவன், வீட்டில் தீமூட்டுபவன், கொலைபுரிய ஆயுதபாணியாய்வந்து நிற்பவன் ஆகிய இவர்கள்.

ஏ பிரபோ! ஆகையினாலே திரிதராட்டிர புத்திரர்களான ஆப்தபந்துவர்க்கத்தவர்களைக் கொல்லக்கூடியவனேயல்ல. பந்துஜனர்களைத் துலைத்துவிட்டு இனியாரிடத்தே சுகமும் பெருமையும் அடைவேன். 37

அல்லாமலும் இந்த துரியோதனாதியர்கள் * உலோபகுணாகிர்தியர்களாயும் தியவர்களாயும் விளங்கிக் குலத்தை நாசஞ்செய்வதால்வரும் பாவத்தையும், மித்திரதுரோகத்தினாலுடையும பாவத்தையும் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாயில்லை. 38

வாக்கிய உள்ளுரை: "அருச்சுன! துரியோதனாதியர்களும் பீஷ்மாதியர்களும் உங்களைப்போல பந்துவர்க்க வதையைக் குறித்து விசனப்படாது யுத்தஞ்செய்கையில் நீயேன் யுத்தஞ் செய்யக்கூடாதென்று கிருஷ்ணமூர்த்தி கேட்பரோ" வென்றெண்ணிச் சொன்னதாகவும், மேலும் 'லோபித்தனமுடையவர்கள்' என்றதாலே "துரியோதனாதிகள் இராச்சியத்தின்மீதுள்ள ஆசையால் யுத்தாரம்பஞ் செய்கிறார்களென்றும், அவர்களது சோற்றையுண்ட பீஷ்மாதியர்களும் அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு உபபலமாய் வந்தார்களென்றும், எனக்கு அவ்வித லோபமின்மையால் நான்யுத்தத்தில் பிரவிர்த்திக்கமாட்டே" னென்றும் சொன்னதாகத் தோன்றுகின்றது.

ஏ இராகவ! குலநாசஞ்செய்வதால் வரும் பாவத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிற நாம் எவ்விதத்திலும் அதினின்றுந் தப்பித்துக்கொள்வதே தகுதியாகும். 39

ஏ வாசுதேவ! இந்த இராஜ இராஜாக்களென்ன இவர்களுடைய சந்ததிகளென்ன மற்றுமுள்ள ஆசிரியர்கள் மித்துருக்கள் முதலிய அனைவருடைய பூண்டற்றுப்போய் விடுமானால் பூர்வீகமாயுள்ள குலதருமங்களெல்லாம் நாசமடையுமன்றோ? அங்ஙனங் குலதருமங்கள் நாசமுறவே எல்லோரும் அதர்மத்திலே பிரவிர்த்திப்பார்களே! அவ்வாறு அதர்மம் விர்த்தியாகி அதனால் அளவில்லாத பாவத்துக்கு ஆளாக நேருமென்பதிற் சந்தேகமுமுண்டோ; இல்லை. 40

ஏ உருக்மணீசமேத! இன்னும் அதர்மம் அதிகப்படவே குலஸ்திரீகள்கெட ஏதுவாமே; அவர்கள் கெடுவதனால் வருணங்கள் ஒன்றுக்கொன்று தாரதம்மியமின்றிச் சர்வமும் சங்கரமாகுமல்லவோ? 41

* உலோபகுணாகிர்தியர்—உலோபித்தனமே சொருபமாகவுடையவர்.

சுவாமின்! மேற்கூறிய வருணசங்கிரகத்தினால் அவர்கள் நரகத்தையடைவதோடு நில்லாமல் அவர்களுடைய பிதுர்க்களுக்கும் பிண்டோதகக் கிரியைசெய்ய யோக்கியமின்றி யெல்லோருக்கும் நரகமேகதியாய் முடியுமே; ஆகவே இவ்வழி பாதகத்துக்கு நானல்லவோ ஆளாகவேண்டும். 42

ஏ கிருஷ்ண! மற்றுங் குலதருமங்கள் கெடுவதுமின்றி நல்ல வருணத்தவர்களோடு சேர்ந்து அவர்களையுங் கெடச்செய்கிறதினாலே வரும்பாவம் அதிகமாகும். இவ்விஷயத்தை அறிஞர்கள் ஒப்புக்கொள்ள கொஞ்சமும் சம்மதிக்கமாட்டார்கள். அன்றியுங் கெட்டகுலத்தவர்களுக்கு நரகவாசம் உண்மையென்று சாஸ்திராதிகளில் சொல்லப்படுவதை நான்பலமுறையுங் கேட்டிருந்து இப்போது அவர்களைச் சமரில் கொல்வேனாயின் நானே மேற்கூறிய குலத்துரோகியும் நரகபோகியுமாய்விடுவேன். 43, 44.

அந்தோ! அந்தோ! ஈதென்ன ஆச்சரியம்! கஷ்டமாயிருக்கிறதே! மட்டற்றதான பாவத்தைச்செய்ய முன் வந்துவிட்டோமே! எக்காரணத்தினால் இராச்சியத்திலும் சுகபோகத்திலும் ஆசைகொண்டு நமது பந்துஜனங்களைக் கொல்லத் தயாரானோமோ ஆ! ஆ! இதென்னவிபரீதம்! 45

இந்த வாக்கியத்தால் பந்துஜனக் கொலை செய்வது மகாபாவ கிருத்தியமென்று யுத்தாரம்பஞ் செய்தபோது யோசியாமல் பிறகு தனக்குத்தானே தோன்றி விசாரத்தையடைந்ததாக அறிதல் வேண்டும்.

ஏ என்குலதெய்வமே! எதிர்த்து யுத்தஞ்செய்ய மனமில்லாமல் நிராயுதபாணியாயிருக்கிற என்னை அஸ்திர சஸ்திர ஆயுதபாணிகளாகவந்து நிற்கிற துரியோதனாதிகள் மகா கோபாவேசத்தோடும் சம்மாரிப்பார்களானால் அது எனக்குப் பெருத்த க்ஷேமகரமாயிருக்குமே! என்று 46

சஞ்சயர் கூறுகின்றார்.

இவ்வாறாக அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவினிடத்தில் விண்ணப்பித்துத் துக்காக்கிராந்தனாகிச் சோகமுற்றுக் கண்ணீர் ததும்பக் கைப்பிடிவில்லையும் அம்பையும் விடுத்து இருவிதச் சேனைகளுக்கு மிடையில் நிறுத்தியுள்ள இரதத்தின்பேரில் மெய்சோர்ந்திருந்தானென்று திரிதராட்டிர மகாராஜனுக்குச் சஞ்சயர் கூறினர். 47

**வாக்கிய உள்ளுரை:**—பிறகு நடந்த செய்தியென்னவென்று திரிதராட்டிரன் கேட்பானென்றெண்ணி, சஞ்சயர் இந்த வாக்கியத்தைச் சொன்னாரென்று தோன்றுகின்றது. இன்னும், துக்கத்தால் சலனமடைந்த மனமுடையவனாய் வில்லையும் பாணங்களையும்விட்டுத் தேரின்மேல் உட்கார்ந்தானென்று சொல்லுதலால், அருச்சுனன் சுருதி ஸ்மிருதி யுக்திகளால் நன்காராய்ந்து இகபரலோக சுகங்களிரண்டுந் தனக்கு வேண்டியதில்லையென்று முன்னமே சொன்னவனாகிறானதால் வைராக்கியத்தை மேற்கொண்டு சந்நியாசமே மிக மேலானதென்றெண்ணி வில்லையும் பாணத்தையும்விட்டு நான் யுத்தஞ்செய்யமாட்டேனென்று தேரின் மேலுட்கார்ந்தானென்றுந் தோன்றுகின்றது.

அருச்சுன விஷாதயோக அத்தியாய

முற்றிற்று.

# இரண்டாம் அத்தியாயம்

# சாங்கிய யோகம்.

---

தயை நிரம்பியவனும், கண்ணீர்சோரத் துக்கசாகரத்தில் மூழ்கியவனுமுள்ள அருச்சுனனைப்பார்த்துப் பின்வருமாறு ஸ்ரீகிருஷ்ணபகவான் ஓர் வாக்கியம் கூறுவாராயினர். 1

அருச்சுன! யுத்தஞ்செய்ய ஆரம்பிக்கும் இந்த நல்லசமயத்தில் வீரத்தனத்துக்கு அழகில்லாததும், சுவர்க்கானுபவத்துக்கு விரோதமானதும் அபக்கியாதிக்கு ஏதுவானதுமான பேதமைத் துக்கம் உனக்கெப்படியுண்டாயிற்று? 2

அருச்சுன! நீ பயமும் அதன்மமுமடையாதே; க்ஷத்திரியர்களுக்கடுத்ததல்ல; மனக்கோழையாலுண்டான துர்ப்பலத்தை விட்டுச் சுயமான குலதர்மாசாரப்படி யுத்தஞ்செய்ய யெத்தனி யென்ற கண்ணனைநோக்கிப் பின்வருமாறு கூறுவான். 3

சுவாமின்! இந்தயுத்தகளத்தில் வந்திராநின்ற வீட்டுமர், துரோணர் முதலியோர் யான்வழிபட்டுப்பூசைசெய்ய யோக்கியமானவர்கள். இப்படிப்பட்டவர்களை வதைக்க அதிதீக்ஷண்யமான பாணங்களைக்கொண்டு நான் எவ்வாறு பிரையோகிப்பேன்; அஷ்ட பாக்கியங்களைச் சம்பாதித்துத் தன்னாசிரியர்களுக்கும் இனத்தவர்களுக்கும் அர்ப்பணஞ்செய்யவேண்டுவது நியாயமாயிருக்க, அதைவிட்டு எதை யெய்த வதைசெய்வது? ஆகையால் முற்றிலும் நியாய விரோதமான காரியத்தைச் செய்ய வல்லேனல்லேன். மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஆசிரியர்களை மலர்கொண்டு பூசிக்கவேண்டிய நியாயமிருக்க, அங்ஙனஞ் செய்யாதுவிடினும் வில் வாள் முதலியவைகளால் வதம்செய்வதோ உத்தமனுக்கழகு? நன்று நன்று! என்றிரங்கினனென்று தோன்றுகின்றது.

பெரியதான கீர்த்திவந்தாலைக் கொல்வதைக்காட்டிலும் இவ்வுலகில் வாழ்தற் கேதுவான இடம் பொருளேவல் இல்லையெனினும் பிச்சையேற்றுண்ணுதல் மா நன்றாம். தவிர அவர்களைத் துவம்சஞ்செய்து நாடு நகரங்களைக் கைப்பற்றி நான் அநுபவிக்கும் போகானுபவங்களை நோக்க, அவர்களுடைய இரத்தத்தைக்கலந்து புசிப்பதற்கொப்பாமெனத் தோன்றுகிறது.

யுத்தஞ்செய்வோமானால் எதிரிகளான துரியோதனாதியரை நாம் வெல்வோமோ அல்லது அவர்கள்தான் நம்மை வெல்வார்களோ தெரியவில்லை. எந்த துரியோதனாதியரைக்கொன்று நாம் சீவித்திருக்க பிரியமற்றிருப்போமோ அவர்களைச்சேர்ந்த பீஷ்மத் துரோணாதியர்களும் நேராகவந்து நின்றுகொண்டிருக்கிறார்கள். 6

சுவாமின்! இதுநல்லது இதுதீயது என்று தெரிந்துநடக்கக் கூடாதவனாயிருக்கிற என் கிருபணசித்தத்துக்கேற்ற இதமான உண்மைப்பொருளை நானறியும்படி கிருபைசெய்வீராக. அன்றியும் தேவரீர் ஆசிரியரும் யான் சீடனுமாயிருக்கிறபடியால் கெதியற்றவனாகிய என்னை எப்படியும் இரக்ஷித்தருளவேண்டும்.

எவன் அக்ஷரமாகிய பிரமத்தை யறியாமலே இந்தவுலகத்திருந்து மரணமடைகிறானோ அவன் * கிருபணன் எனப்படுவான். என்று சுருதியில்சொல்லப்பட்டபிரகாரம் அருச்சுனனுக்குப் பிரம்மஞான மில்லையென்றும், ஆகையாலேயே தான் கிருபணத்துவமுள்ளவனென்றும் சொன்னதாகத் தெரிகின்றது.

தவிர, என் பஞ்சேந்திரியங்களையும் ஒழிக்க விருக்கும் இத்துக்கத்தை எந்த வுபாயத்தால் விலக்கக்கூடுமோ அந்தக்காரியம் இன்னதெனத் தெரிந்திலன். பூமண்டலாதிபத்தியமும் தேவேந்திரத்துவமும் தந்தாலும் இத்துயரை நீக்கவல்ல தல்லவெனத் தோற்றுகிறதே. 8

சஞ்சயர் திரிதராட்டிரமகாராஜனைப் பார்த்துச் சத்துருசம்ஹார வல்லவனாகிய யாதொரு அருச்சுனனானவன் மேற்கண்டவாறுகூறிப் பின் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து இனி நான் யுத்தஞ்செய்யும் எண்ணமற்றவனாயிருக்கிறேனென்றான். இவ்வாறு கூறிய அருச்சுனனை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி நோக்கிப் புன்னகையுடன் பின்வருமாறு சொல்வாராயினார். 9, 10

ஸ்ரீ கிருஷ்ண வாக்கியம்.

அருச்சுன! துக்கிக்கத் தகாதவர்களைக்குறித்து நீ துக்கிக்கிறாய்; சர்வமும் அறிந்தவன்போலவும் பேசுகிறாய்; ஆத்மஞானிகள் காலஞ்சென்றவர்களைக் குறித்தாவது ஜீவந்தர்களைப்பற்றி யாவது விசாரப்படார்கள். 11

* கிருபணன் - நீசன்.

பின்னும் துக்கப்பட அருகனல்லவென்பதற்கு ஏது யாதெனில், கூறுதும்: பகவத் குணானுபவங்களோடுகூடிய யான் அநித்தியனேயல்ல. முக்காலங்களிலும் நிரந்தரமாயிருப்பவன். நீயும் இந்தயுத்தரங்கத்தில் வந்துள்ள சர்வ மன்னராதியர்களும் நித்தியர்கள்தான். இனியும் சாஸ்வதமாயே யிருப்பீர்கள். எவ்வாறெனின், எல்லா சீவகோடிகளும் எம்மது அம்சமாகவே யிருக்கிறபடியால் இனிப் பிறக்கிறோமென்ற எண்ணமேவேண்டாம். நாம் எப்போதும் சாந்நித்தியர்களாயிருக்கும்போது நீ துக்கிக்கக் காரணமில்லை யல்லவா? ஆகவே பேதைத்தனமான துக்கத்தை விட்டுச் சுயகுல விர்த்தியாகிய யுத்தத்தில் பிரவிர்த்திப்பாயாக வெனக் கூறுவாராயினர். 12

சங்கர பாஷ்ய தாத்பரியம். அருச்சுன! மரணமடையாநின்ற பீஷ்மத் துரோணாதியரைக் குறித்து, நான் எப்படி விசாரப்படாமலிருப்பேனென்று நினையாதே. பீஷ்மாதி சப்தங்களுக்கு லக்ஷியார்த்தங்களான ஜீவர்கள் நித்தியர்களாயிருப்பவர்களேயன்றி நசிப்பவர்களல்ல. நித்தியர்களென்று தெரிந்த பிறகு விசனப்படவேண்டிய அவசியமில்லை யல்லவா? ஆகையால் விசனப்படவேண்டாமென்றும், நித்தியத்துவபுத்தி விசனப்படாதிருப்பதற்குக் காரணமென்றும் நாராயணர் இந்த வாக்கியத்தால் தெரிவிக்கிறார். மேலும், அருச்சுன! நித்தியத்வம் பிரமாணமில்லையாதலால் சம்பவிக்காதென்று நினையாதே. எப்படியென்றால், முக்காலங்களிலுமில்லாத முயற்கொம்பு உண்டாகாததுபோல முக்காலங்களிலுமிருக்கிற ஆத்மா பிறக்கமாட்டாது. ஆத்மா முன்னில்லாமல் இப்போதுண்டானால் பிறப்பானென்று சொல்லாமலேயன்றி முன்பும் இப்போதும் இருக்கையாலே பிறப்பானென்று சொல்லக்கூடாது. நித்தியனைச் சால்குடம் ஆடைமுதலானவைகள் போலப் பிறப்புள்ளனவல்ல.

நித்தியவஸ்துவாய் விளங்கும் ஏ உத்தமபுருஷ! மேலே கூறிவந்த நித்தியத்துவம் தமக்குரியனவேயன்றி என்போன்ற பேதை மனிதப் பிறப்பினர்களுக்குஞ் சொல்லலாகுமோ? ஆகாது; அருச்சுன! தேகத்துக்குப் பால்யம் யவ்வனம் வயோதிகமென்னும் இப்பருவங்கள் வந்தாலும் அல்லது சரீர மடிந்தாலும் தேகத்தை நடத்தும் ஆன்மா ஒருபோதும் அழிவின்றி மீண்டும் நூதனதேகத்தைப்பெற்றுவிடுகிறான். ஆகையால் இது

**களையெல்லாம் அறிந்த தேகாத்ம விவேகிகள் இது விஷயத்தில் சற்றேனும் பிரமிக்கமாட்டார்கள். 13**

சங்கர பாஷ்யம்:—ஆத்மா இச்சரீரத்தைவிட்டு மற்றோர் சரீரத்தையடையுமென்று சொன்னபக்ஷத்தில் ஆத்மாவுக்கு வரவு போக்குகள் உண்டென்று சொன்னபடி யாயிற்று. வரவு போக்குகள் விகாரங்களே யல்லவா? அப்படியாகுமாயின் ஆத்மாவுக்கு விகார முண்டென்று சொல்லவேண்டிவரும். ஆத்மாவுக்கு விகாரமுண்டென்று ஒப்புக்கொண்ட பக்ஷத்தில் விகாரமுள்ள சரீரத்துக்கு ஜனன மரணங்கள் எப்படியோ அப்படியே ஆத்மாவுக்கு ஜனன மரணங்கள் உண்டென்று சொல்லவேண்டும். அப்படி சொன்ன பக்ஷத்தில் ஆத்மா நித்தியன் என்கிற வார்த்தை பொய்யாய்ப் போகின்றது. ஆத்மா நித்தியனல்லன் ஆதலால் ஆத்மாவுக்கு நாசமுண்டாகும்போது துக்கத்தை யடையவேண்டியதே. ஆதலால் வியசனத்தை யடையக்கூடாதென்று சொல்லுதல் உசிதமா யில்லையென்று சங்கையுண்டாக, ஆத்மாவுக்கு அவஸ்தா பேதங்க ளிருக்கிறதாகத் தோன்றினாலும் உண்மையாக இல்லை யாதலால் ஆத்மாவுக்கு விகாரமில்லை. ஆதலால் நித்தியன் என்றுசொல்லலாமென்றும், நித்தியன் என்கிற வார்த்தை பொய்யல்லவென்றும் திருஷ்டாந்தத்தோடு சமாதானஞ் சொல்லுகிறார். அதெப்படியென்றால், ஆத்மா நித்தியன் என்றும், தேகத்தைக்காட்டிலும் பின்னமானவனென்றும் வேதம்கூறுகின்றது. வேதத்திற் சொல்லப்படுதலேயன்றி பாலியத்துக்கும்கிழத்தனத்துக்கும் அதிகமான பேதமிருந்தாலும், பாலியத்தில் நடந்த சங்கதிகள் கிழத்தனத்தில் நினைப்புக்கு வருகிறதுபோல பூர்வ ஜன்மத்தின் பழக்கத்தாலேயே சிசுக்கள் ஸ்தனத்தில் வாய்வைத்துப்பால் பருகுகின்ற சுபாவம் உண்டாயிற்றென்கிற யுத்தியாலும் ஆத்மா நித்தியனென்று தோன்றுகின்றது.

இன்னும் ஒவ்வொரு மனிதனுக்கும் சரீரத்தில்நேரிட்ட விரோதங்களான பால்ய கௌமார விருத்தத்துவங்கள் முறையே வந்துகொண்டிருக்கின்றன வல்லவா? இந்த மூன்றவஸ்தைகளும் ஒன்று கழிந்தாலன்றி மற்றொன்று வாராது. அப்படிப்பட்ட மூன்றவஸ்தைகளுள் ஒவ்வொரு அவஸ்தையிலும் சரீரம் மாறுதலடைகின்றது. அப்படிச் சரீரம் மாறுதலடையினும் ஆத்மாமாத்திரம் மாறுபடாதிருக்கிறது. ஆகையாற்றான் பாலியத்தில் நிகழ்ந்தசங்கதிகளைமுதுமைப்பருவத்தில் நினைக்கிறான். இவ்விதமாகவே ஆத்மா மற்றோர்தேகத்தில்

பிரவேசிக்கும்போதும் விகாரமில்லாதவனாயிருக்கிறனென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகவே ஆத்மா நசிக்குமென்னுந் துக்கத்தையடையா திருமென்று சொல்லுதல் தகுதியேயாகுமென்று அறியவேண்டும்.

சுவாமின்! யான் சரீரத்தினூடேயுள்ள ஆன்மாவைக் குறித்து விசாரப்பட்டேனல்லேன். என்னால்பூசித்து வழிபடக் கூடிய குருஜனர்களுடையதேகம் மலினமாய்ப்போகிறதை யுத்தேசித்தே துக்கித்தேனன்; சரி. அருச்சுனா கேட்பாய்: ஒவ்வொரு தேகங்களும மாயையினது விசேடத்தால் காரியமாய்வந்து அழிவனவுந் தோன்றுவனவுமாயுள்ள தியர்க்கையாம். அந்ததேகத்துள்ள யாரோ ஒருபோதும் ஜனன மரணமுடையவனல்லன். ஆகவே துக்கப்பட நியாயமேயில்லை. இங்கே சுகதுக்கங்களுக்குப் பாத்தியப்படுவதெதுவென்னில், பஞ்சேந்திரியங்களானவை விஷயநுகர்ச்சியி லுள்ளபோது சீதோஷ்ணத்தின் ஏற்றத்தாழ்வைப்போலவே சுகதுக்கங்களும் ஏற்பட்டு தொந்திக்குமேயொழிய உண்மையில் நித்தியமுள்ளன வல்லவென்று நிச்சயமாயறிவாயாக. 14

ஆசாரிய சிரேஷ்ட! சுகதுக்கங்கள் உண்மையானவை யல்லவென்று தாங்கள் கூறினும் அவைகள் எனக்குமட்டும் நித்தியமானவையென்றே தோன்றுகின்றன. ஆகையால் அவைகள் என்னைச் சாராதவண்ணஞ் செய்விக்க யாதானும் ஓர் உபாயமில்லையா? எனில் அருச்சுனா! கேட்பாய்: பிரதமத்தில் வாராமைக்கு வழிதேடுவதைவிட வந்த யிந்த சுக துக்கங்களை அநுபவிக்கிறது நாமல்லவென வறிந்து தள்ளுவதே அவசியமாகும். இன்னும் சுகதுக்கங்களின் வயப்படாது சந்தோஷத்தையும் துக்கத்தையும் சமபாவனைசெய்து வருகிறவன் எந்த மகாபுருஷனோ அவனே மோக்ஷாதிகாரியாவன். ஆகவே மோக்ஷாபேக்ஷைகொண்டுள்ள நீயும் சுகதுக்கங்களைச் சமமாகப் பாவித்து நிரந்தரமுடன் உனது யுத்தவிர்த்தியைச் செய்வாயாயின் மோக்ஷந் தானே சித்திக்குமென்பதில் சம்சயம்வேண்டாம். 15

சுவாமின்! சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிப்பதெப்படி? அருச்சுனா! மண்ணில்லையானால் * கடமுமில்லைபோல ஆத்மாவைத்தவிர சுகதுக்கமு மில்லையென்றும், அநித்தியமான சரீரத்துக்கு ஒருபோதும் நித்தியத்துவமில்லையென்றும், நித்தியமான

* கடம - மட்குடம்.

ஆன்மாவுக்கு எப்போதும் அழிவேயில்லையென்றும், இல்லாததொன்று முக்காலத்தினு மிருக்கிறதில்லை. இருக்கிறதொன்று முக்காலத்திலும் அழியாதென்றும் தத்துவ தரிசனிகளாயுள்ள ஞானிகள் இவ்விரு விஷயங்களைப்பற்றியும் சாஸ்திர விசாரணையைக்கொண்டு சுவானுபூதிகளா யறிந்திருப்பார்கள். ஆகவே அவ்வித விவேக முதிர்ச்சியைக்கொண்டு நீயும் சகிக்கவேண்டுமென்பதே திண்ணம். 16

சுவாமின்! தேவரீர் கூறியவாறு அநித்தியமானவை போகட்டும்; நித்தியவஸ்துவான ஆன்மாவுக்கு என்றும் அழிவில்லையென்பதற்குத் தக்க பிரமாணமுளதேல் கூறுக. அருச்சுன! சர்வவியாபியாயுள்ள பரமாத்மாவானது தேகேந்திரியங்களிலெல்லாம் வியாபிக்கப்பட்டு அவைகளையெல்லாம் அதனதன் போகங்களில் செலுத்தி வருகின்றதான அவ்வான்மாவுக்கு நாசமென்பது என்றுமில்லை. அவ்வாறு நாசமற்றதான பொருளை நாசமடையச்செய்ய யாதானுங் கூடாவாம். எவ்வாறெனின் * பிரகிருதி குணங்களினால் வியாபிக்கும்படியான வஸ்துவானது குணங்களுக்குப் புறம்பானவர்களை யொழிக்க வியலாவாம். சுவாமின்! சரியே; சரீரமானது அழிகிறதும் மீண்டும் தோன்றுவதும் உண்மையாகவே யெனக்குந் தோன்றுகிறதே; அருச்சுன! மூலப்பிரகிருதியினா லுண்டான மனசுக்குப் பஞ்சேந்திரிய முதலியவைகளா லறியக்கூடாததும், என்றும் ஒரேபடித்தாயும், நித்தியமானதாயும், வரம்பில்லாததாயும், இன்னவிதமென்று சொல்லப்படாததாயு மிருக்கிற தேகியென்னும் ஆன்மாவுக்குத் தேகமானது வருகிறதும் போகிறதும்போலத் தோற்றமாத்திரமேயல்லாமல் ஜடமயமான சரீரம் உண்மையிலுள்ளதல்ல. மற்றும் அவ்வான்மா எத்தன்மைத்தென்றால், ஆதியந்தஞ் சொல்ல முடியாத அநாதிவஸ்துவாய், எக்காலத்திலும் நாசமாகாது அதிசூக்கும வஸ்துவாய் விளங்கிக்கொண் டிருப்பதாகும். இவ்வாறாக தத்துவஞானிகள் நன்கறிந்திருக்கிறார்கள். ஆகவே ஆன்மாவுக்குச் சுகதுக்கமும் அழிவுங் கிடையாதாம் இனி நீ அஞ்ஞானத்தின் விசேஷமான சந்தேக விபரீதத்தையும் துக்கத்தையும் விட்டுக் குலாசார விர்த்தியாகிய யுத்தத்தை ஆரம்பிப்பாயாக. 17

உள்ளுரை: 'ப்ரம்மத்துக்குக் காரியங்களும் இந்திரியங்களுமில்லை' என்கிற சுருதிப்பிரமாணத்து ஸாரமாக பிரம்மத்தாலுண்டாவதெதுவுமில்லை யாதலால் காரியம் நசிப்பதாலே

* பிரகிருதி - பிரபஞ்ச காரணமாயை.

நாசமுண்டாகுமென்று சொல்லுதலும் உசிதமல்லவென்று அறிதல்வேண்டும். ஆகையால் சத்ரூபமான ஆத்மாவுக்கு எவ்விதமாய் விசாரித்தாலும் நாசமுண்டாவதற்கு இடமில்லையென்றும், நாசமில்லாதவனும் எக்காலங்களிலுமிருப்பவனுமாகிய பிரம்மத்துக்கு நாசத்தைக் கற்பிப்பதற்கு எவனும் சமர்த்தனல்லனென்றுமறிதல்வேண்டும். மேலும் உலகத்தில் எவன் பிரம்மத்துக்கு நாசமுண்டாகுமென்று சொல்வானோ அவனே தன்னை இல்லையென்று தனக்கே அபாவத்தைச் சொல்லிக்கொள்ள வேண்டிவரும், தவிர சுருதிகளுக்கும் பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கும் விரோதமுண்டாகும். ஆகையால் சத்ரூபமான ஆத்மா முழுதும் நசிக்குமென்றாகிலும், குறைநாசத்தால் கொஞ்சமிருந்து கொஞ்சம் நசிக்குமென்றாகிலும் சொல்வதற்கு எவனுக்கும சாமர்த்தியமில்லையென்று அறிதல்வேண்டும்.

சங்கரபாஷ்யம்; "இதுகாறும் சத்தசத்துக்களென்கிற இரண்டில் சத்து என்பது உண்மையானதென்று சொன்னாயல்லவா? இப்போது அசத்தென்பதை நிர்ணயித்துச் சொல்லவேண்டுமென்று அருச்சுனன் கேட்பனோ" என்று விசாரிக்கையில் எது இல்லாமற் போகின்றதோ அது அசத்தென்றும் அறிதல்வேண்டும். ஆனால் தேகாதி பிரபஞ்சமுழுதும் அசத்தேயென்று சொல்லப்பட்டிருக்கும்போது இல்லாததைச்சொல்லும் என்கிற வினையெப்படி யுண்டாகுமென்று கேட்கலாகாது. ஏனென்றால் தேகாதிபிரபஞ்சமுழுதும் முயற்கொம்பு போலே இல்லாததல்லவென்று இதுவரைக்குமே சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் ஆத்மா தேகியென்று சொல்லப்படுதலால் ஆகாசமுதலானவைகளைக் காட்டிலும் வேறென்றறிதல்வேண்டும். நாசமற்றது என்று சொல்லுதலால், லோகரூபமாய்ப் பரிணமிக்கிற மாயையைப்போலே காலத்தோடுகூட நசிக்கிறதல்லவென்று அறிதல்வேண்டும். பிரத்தியக்ஷ முதலாயுள்ள பிரமாணங்களால் அறியவொண்ணாதென்று சொல்லுதலால், பிருதிவிமுதலானவற்றைப்போல காணப்படுவது அல்லவென்று அறிந்து யுத்தஞ்செய்வாயாகவென்று சொல்லுதலால், தேகாதிகள் அவஸ்துக்களென்றும், ஆத்மாவொன்றே ஏகரூபமாயிருக்கிற வஸ்துவென்றும், சுதர்மத்தை யாசரிக்கிறபோது இம்சாதி தோஷ விசாரம் பண்ணவேண்டியதில்லையென்றும்' தெரிந்து கொள்ள வேண்டுமென்பது தோன்றநின்றது.

**தேசிகோத்தம! தேவரீர் கூறியவாற்றால் சரீராதிகளைக் குறித்து எனக்கேற்பட்டிருந்ததுக்கம் நிவர்த்தியாயிற்று. ஆனால்**

நான் கொல்லுகிறேனென்ற துக்கம் நீங்காமலிருக்கிறதே! கேட்பாய் அருச்சுன: நான் கொல்கிறேனென்றும், மற்றொருவனால் கொல்லப்படுகிறேனென்றும், அவனைக் கொன்றேனென்றும், இவனாற் கொல்ல நேர்ந்ததென்றும் எவன்சொல்கிறானோ அவன் தத்துவ சோதனை செய்தறிந்தவனே யல்ல. நித்தியமாயுள்ள ஆன்மாவானது மற்றவனைக் கொல்லுவதுமில்லை, தான் ஒருவனாலே கொலையுண்பதுமில்லை. ஆகவே கொல்வானும் கொல்லப் படுவானு மில்லையென்றே தீர்மானமாயறிகுதி. 18, 19

குருநாத! சொல்லிவந்ததில் ஓர் சம்சயம்: அதாவது ஒருவனைக் கொல்லாமலும் மற்றொருவனாற் கொலையுண்ணாமலுமிருக்கிறதென்பது விளங்கவில்லை. விஜய! ஆன்மா * அறுவகை விகாரங்களில் கட்டுப்படாததாகும். செனிப்பும் மரிப்பும் ஆன்மாவுக்கில்லை. ஒருகாலத்திற் பிறந்திருந்ததென்பதும் மற்றோர் காலத்தில் இறந்ததென்பதும் கிடையாவாம். பின்னும் சென்மமில்லாததாயும் என்றும் சாஸ்வதமாயும், ஆதியில்லாததாயுமுள்ள ஆத்மாவானது, தானொன்றியுள்ள சரீரமானது மரித்தாலும் தான் மரியாதுள்ளதாகும். ஆதலால் அதனை ஒருவர் கொல்லவும் தான் மற்றவரைக்கொல்லவும் ஏதுவில்லையென அறிவதுந் தவிர, 20

பார்த்தனே! ஆன்மாவானது பிறந்ததென்பதும் இறந்ததென்பது மில்லாமல் நித்தியமென்றும் நாசமற்றதென்றும் யாதொருகுறைவு மில்லாததென்றும் சந்தேக விபரீதமின்றி அறிந்தவனெவனோ அவனை எவனையுங் கொல்லப்போகிறதே யில்லை. எவனும் அவனைக் கொல்லப்போகிறது மில்லை. ஆகையினாலேதான் கொல்லுகிறவனுமில்லை; கொல்லப்படுகிறவனு மில்லையென உண்மையாய்ச் சொல்லப்பட்டது. 21

சுவாமின்! தேவரீர் ஆன்மாவுக்கு நாசமில்லையென்று சொன்னது நியாயமென்றே வைத்துக்கொள்ளினும், அவ்வான்மா குடியிருக்கும் சரீரத்துக்கு நாசம்வரும்போது அவர்களுக்குண்டாகுந் துக்கத்தைப்பற்றி யோசிக்க எனக்குந் துக்கமுண்டாகின்றது. அருச்சுன! ஓர் விவேகியானவன் பழமைப் பட்ட வஸ்திரத்தைப் போட்டுவிட்டுப் புதுவஸ்திரத்தை யெவ்

* அறுவகை விகாரங்கள்: பிறத்தல், இருத்தல், மாறுபடல், வளர்தல், குறைதல், மரித்தல்.

வாறு சந்தோஷத்தோடு தரித்துக்கொள்ளானோ அப்படிப் போலவே ஆன்மாவும் கெட்டுப்போன சரீரத்தைவிட்டு நூதன சரீரத்தைப் பெற்றுவருவது இயர்க்கையாதலால் நீ கூறிய விஷயத்திலும் விவேகியாயிருப்பவன் விசாரப்பட ஏதுவில்லையாம்.

சுவாமின்! தேவரீர் திருவாய் மலர்ந்தருளுவது நிச்சயமாகவே தோன்றினும் ஆன்மா யாதொன்றாலும் உபாதிக்கப் படாமைக்குக் காரணமாத்திரந் தெரிந்திலன். அருச்சுன! கேட்பாய்: பரமாணுப் பிரமாணமாயுள்ள ஆன்மாவை பாணங்களினாலும், ஆயுதங்களினாலும், அக்கினியினாலும், சலத்தினாலும், காற்றினாலும் மற்றெவைகளாலும் கொஞ்சமேனும் உபாதிக்க முடியாததாகும். 23

உள்ளுரை: சுவாமின்! "வீடு வெந்துபோகும்போது வீட்டிலுள்ள புருஷனும் வெந்துபோவதுபோல, சரீரம் நசிக்கும்போது அதிலுள்ள ஆத்மாவும் நசிக்கமாட்டாதா" என்று அருச்சுனன் கேட்பனோவென்றெண்ணி, ஆத்மா அவயவங்களில்லாதவனாதலால் நசிக்கமாட்டானென்று தெரிவிக்கும் பொருட்டு கிருஷ்ணபகவான் இந்தசுலோகத்தைச் சொன்னாரென்று அறிதல்வேண்டும். ஆனால் நசிக்கச்செய்யத்தகுந்த வஸ்துக்களுள் எதுவும் ஆத்மாவைநசிப்பிக்கமாட்டாதென்று சொல்லத்தகுந்ததாயிருக்க, சஸ்திரங்களைமட்டுமே சொல்வதற்குக் காரணமென்னவென்று கேட்பாயானால், தற்காலத்தில் யுத்தக்கருவிகளைத் தரித்திருப்பதனால் சஸ்திரங்களைக் கூறினாரென்று அறியவேண்டும்.

சீவனை வெட்டவும் தகிக்கவும் நனைக்கவும் சுருங்கச்செய்யவுங் கூடாதென்றது எதனாலென்றால் எக்காலத்திலும் அழிவின்றி நித்தியவஸ்துவாயும், எங்குமுள்ளவனாயும், சலனமற்றவனாயும், அநாதியாயும், உருமாறுதலற்றவனாயும் நன்மையில் கூடுதல் குறைதலில்லாதவனாயு மிருத்தலாலேயே யென்க. 24

இன்னுங் கட்புலனுக்குத் தோற்ற மாகாததாயும், மனசினாலே நினைக்க வியலாததாயும், அறுவகை விகாரங்களற்றதாயும், கையாடக் கூடாததாயு மிருக்கிறபடியினாலே அந்த சீவனை எந்த விதமாக எந்த கருவியைக்கொண்டு இம்சிக்கக்கூடும்; இவ்வாறாக வேதோபநிஷத்தாதிகளெல்லாம் முழக்குகின்றதுமல்லாமல் மகா பிரமுகர்களாயிருக்கிற உண்மை யறிவாளிகளு மிவ்வாறே

கூறுகின்றார்கள். ஆகவே இத்தன்மைத்தாய ஆன்மாவைக் குறித்து நீ துக்கப்படுவது பிரயோசனமற்றதும் அறியாமையு மாகும். 25

அருச்சுன! இதுகாறும், ஆத்மாவுக்குத் தோற்றமும் லயமுமில்லாததால் துன்பமில்லையென்று கூறினோம். இனி இத்தேகத்தோடுங்கூடிய சீவனுக்கும் துக்கமில்லை யென்பதைப் பக்குவமாய்க் கேட்பாயாக. ஆன்மாவென்கிற தேகியானவன் எப்போதும் பிறக்கிறதும் இறக்கிறதும் சகசமென்றுணர்ந்த விவேகியாயுள்ள நீயுங் கிலேசப்படக் காரணமில்லையே! 26

அருச்சுன! சனனமெடுத்தவன் மரிப்பதும் மரித்தவன் மறுபடியும் சனிப்பதும் நிச்சயத்திலும் நிச்சயமாம். இதை எவர்களாலுந் தள்ளக்கூடாததால் இயல்பானதுபற்றிக் கவலைப் பட காரணமில்லை. தேகாதி விஷயமாய் ஆழ்ந்து ஆலோசிக்கும் போதும் விசாரப்பட நியாயமில்லையாம். 27

இன்னமுங்கேள் அருச்சுன! சர்வாத்ம கோடிகளும் பூர் வத்தில் மகாமாயையினிடத்தில் வியர்பகமின்றி யிருந்தபோதும் யாதொரு உணர்ச்சியு மற்றவர்களாயிருந்தார்கள். பிறகு மரண காலத்திலு மவ்வாறே யிருந்து மத்தியகாலத்தில் மட்டும் சொப் பனமொப்ப ஏதோ நடக்கிறதுபோலும் கிடக்கிறதுபோலும் இருக்கிறதுபோலும் நானென்றுந் தானென்றும் துக்கமென்றுஞ் சுகமென்றும் நாமிவைகளையெல்லாம் அநுபவிக்கிறோமென்றும் பிரமிக்கத்தக்கனவாயிருந்து மாயாவசத்தர்களாய் அஞ்ஞானியர் கட்குமட்டும் நித்தியமான போகங்கள் என்கிற திடமான பிரியத் துவமா யிருக்கிற வழக்கம். இவ்வாறாகிய இந்திரஜால கோல விவரங்களைச் சிறிதுந் தேற விசாரித்தறியாமல் பிரியமுள்ள பந்துசனங்களைச் சொப்பனத்திற்கண்டு விழித்தபின் காணேமே யெனத் துக்கிப்பவனைப்போன்று நீயும் இத்தனுகரணங்களைக் குறித்து விசனிக்கின்றாயல்லவா! 28

உள்ளுரை :—இதுகாறும் அநேகவிதங்களால் ஆத்மாவைக் குறித்துத் துக்கமடையவேண்டிய அவசிய மில்லையென்று கூறிய கிருஷ்ணபகவான் இந்த சுலோகத்தால் பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களுடையவும், அபஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களுடையவும், சமுதாயமே சொரூபமாயுள்ள சரீரங்

களைக் குறித்தும் விசனமடைதல் தகாதெனச் சொல்கிறாரென்று அறிதல்வேண்டும். மேலும் இந்தச் சரீரங்கள் சொப்பன காலத்திலுள்ள பந்துசரீராதிகள் போன்றனவென்றும், முத்துச்சிப்பியில் வெள்ளியென்கிற நினைவுபோலே முன்னும் பின்னுமாகிய காலங்களில் இல்லாமல் மத்தியகாலத்திலிருப்பதுபோலக் காணப்படுகின்றன வென்றும் அறிய வேண்டும்.

ஜனார்த்தன! தாங்கள் கூறியவண்ணம் அடியேனுக் கவ்வாறுள்ளதுண்மையே; புத்தியிற் சிறந்துள்ள உத்தமவித்துவ சிரோமணிகளும் ஒவ்வோ ரமயங்களில் சம்பவிக்குங் காரியங்களில் ஆழ்ந்தி வருந்துகின்றார்களே! அஃது ஏதனு லென்பதை யறியவிருப்பம். அருச்சுன! இவ்வாறல்லவோ விசாரிக்கவேண்டும்; கேட்பாய்: ஆத்மாவின் யதார்த்த சொரூபத்தை உண்மையானவர்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆற்றலில்லாதவரையில் துக்கநிக்கிரகஞ் செய்யவியலாவாம். அன்றியும் அறிந்தவர்போல வாசாஞானம் பேசுவாருமுளர். அவர்கள் ஆன்மசொரூப நிச்சயத்தைக் குருமுகாந்தரமாயும் சாஸ்திரமூலமாயும் அறியாது பரோக்ஷமா யறிந்துள்ள ஞானிகள் ஆத்மாவினிடம் ஆநந்தாதி குணங்களுண்டா யிருப்பதுபோலக் கூறுவர்கள். மற்றும் ஓர் சாரார் ஆத்மாவை யோகசாதனையால் தரிசித்து வருவதாகவும் வசனித்துவருவர். பின்னுஞ் சிலபக்தர்கள் அவ் வாத்மாவினிடத்தில் அநேக மகிமைகளும் அநந்த கல்யாண குணங்களுமுண்டாயிருப்பது போலக் கொண்டாடியும் வருவர்கள். மற்றுஞ் சில கிரியாகன்மத்தர் வைகுண்டமுதலான தலங்களில்தான் பகவான் விளங்குகிறாரென்று சாஸ்திர புராணங்களிற் கேட்டறிந்தவண்ணம் மகாபக்தியுடன் பூசா கைங்கரியங்கள் செய்து வருவர்கள். ஆகவே இன்னோர் யாவரும் ஆத்ம சொரூபத்தை உண்மையானபடி அறிந்தவர்களேயல்ல. இவ்வாறாக யிவர்கள் அறியாதிருப்பதற்கு ஏது பலவுள; அதாவது குருமுன்னிலையில் விசாரித்திடினும் பற்பல சாஸ்திரங்களை விஸ்தாரமாக வுணர்ந்திருந்தாலும் அங்ஙனங் கற்றுங்கேட்டு மறிந்தனவற்றைப் பிறர்க்கெடுத்தோதப் பிரபல சக்தியிருப்பினும் தங்களிடத்துள்ள சமுசயவாசனை, அசம்பாவித பாவனை, விபரீதபாவனை யென்னுமிவைகள் நீங்குகிறதில்லை யாதலாலும், தேகமேதான் போகமே மோக்ஷமென்னும் அசத்திய புத்தியினாலே ஆத்ம சேவைசெய்தற்கு அருகராதலில்லை. மற்றும் அறிவார் யாவர்தாமென்னில்,

மேற்கூறியவர்கட்கெல்லாம் சிரேஷ்டமான அதிசூக்ஷ்ம ப்ரம்ம
வித்யாவந்தர்களான எந்த புண்ணிய புருஷனுண்டோ அன்
னோனலன்றிப் பின்னோரா லறியத்தரம். 29

புஜபலவிஜய! சர்வசரீரத்தினுள்ளும் வியாபித்துள்ள ஆத்
மாவை யெவர்களாலும் அழித்திட முடியாதாகலின் பற்பல ஜீவர்
களைக்குறித்து நீ துக்கப்பட நியாய மில்லையெனச் சொல்லிய
கிருஷ்ணமூர்த்தியை நோக்கிப் பின்னுங் கூறுவான். 30

குருபர! அநேகமான அரியஞான விஷயங்களையெல்லாம்
தயைபுரிந்து விளைந்து பரிந்தோதிடினும் யுத்தஞ்செய்கிற விஷய
மென்றால் சித்தங்கலங்கி உடல் நடுங்குகின்றதே! என்செய்
வேன்! அருச்சுன! குலதருமத்தைக் குறித்து நீயேன் அஞ்ச
வேண்டும்! அக்கிரமாதி கிர்த்தியமென்றால் அஞ்சவேண்டிய
தவசியந்தான். க்ஷத்திரிய தருமமாகிய உன் குலத்தொழிலைப்
பார்க்கிலும் வேறே நீ யென்னகாரியஞ் செய்யப்போகிறாய்?
தானாகவே உன்னைத் தேடிவருகிற நன்மையான காரியத்தை
நீயேன் பயந்து கைவிட நினைக்கிறாய். 31

சங்கரபாஷ்யம்: அருச்சுன! உண்மையாக ஆலோசிக்கும்போது
ஆத்மா கொல்லப்படாத தாகையாலும், சரீரம் நசித்துப்
போவதாகையாலு மாத்திரமே நீ விசனப்படுதல் உசிதமல்ல
வென்று நினைக்க வேண்டாமென்றும், யுத்தம் க்ஷத்திரிய
குலத்துக்குச் சுதர்மமாகையாலும், யுத்தத்தைச் செய்ய
வேண்டி வந்ததேயென்று விசனமடைதல் உசித மல்ல
வென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் இந்த சுலோகத்தால் தெரி
விக்கிறாரென்று அறியவேண்டும்.

குந்தியின்மைந்த! ஒப்பற்றதான சுவர்க்கத்தைப் பெற
வேண்டிய தெய்வகதியால் நேர்ந்திருக்கிற யுத்தசந்தர்ப்பத்தைப்
பாக்கியவான்களாயுள்ள க்ஷத்திரியர்க ளடையவேண்டுவ தவசிய
மன்றோ? அவ்வாறு யுத்தம்புரியாவிடினும் பாபமல்லவோ நின்
னைச்சாரும். 32

அதனையுங் கூறக்கேட்பாய்: தர்மாஸ்பதமாயுள்ள யுத்தம்
புரியச் சித்தங் குவியாவிட்டால் க்ஷத்திரிய தரும பக்ஷிதனாய்
அபக்கியாதிக் காட்பட்டு பாவத்தை யடைவது நிச்சயம். 33

இதுவுமன்றி நீண்ட காலம்வரை அவகீர்த்திக் காளாவாய்;
மிகமானஸ்தனாய் வாழ்ந்து வருகிற உத்தம புருஷனுக்கு மரணத்
தைக்காட்டிலும் அபகீர்த்தி மிக்க துன்பஞ்செய்வதாகும். 34

காண்டீப! இன்னும் வீட்டுமர் முதலானவர்க ளெல்லாம் பயத்தினாலே யுத்தஞ்செய்யாது பதுங்கிக் கொண்டானென்று இழிவாக பேசுவார்கள். யாரார் உன்னை வெகுமானமாக வெண்ணினார்களோ அவர்களெல்லாம் அவமானமாக எண்ணுவார்கள். அது உத்தமமான க்ஷத்திரியனுக் கழகல்ல. 35

இன்னும் உனக்கு விரோதிகளாகிய எதிரிகளெல்லாம் உன்னுடைய சாமர்த்தியத்தை நிந்தைசெய்து சொல்லத்தகாத அநேக இழிவுரைகளெல்லாம் கூறுவார்கள். அதைக்கேட்டுப் பின் துக்கிப்பதில் என்னபிரயோஜனம்? இதைவிட வேறே துக்கமு முண்டோ! 36

சுவாமின்! யுத்தஞ்செய்வதில் ஜெயம் வருமோ அல்லது அபஜெயம் வருமோவென்பது எனக்கே சந்தேகமாயிருக்கிறது; அருச்சுன! யுத்தத்தில் ஜெயித்தாலும் இராச்சியமும் கீர்த்தியு முண்டு; அல்லது மரித்தாலும் வீரசுவர்க்க முண்டென்பது சத்தியம். ஆகவே எவ்விதத்திலும் பலனில்லாமற் போகிறதில்லையே, நீயேன் மயங்குகிறாய்? தைரியத்தோ டெழுந்திரு. 37

சுவாமின்! எங்கே பாவம்வந்து சேருமோ வென்று பயமாயிருக்கின்றதே! அருச்சுன! பாவம் உனக்கேன் வரப்போகிறது, ஆத்மஞான சித்தாந்தியாய் லாபம் பாவம் சேதம் ஜெயம் அபஜெயம் ஆகிய இவைகளைச் செய்கிறவன் நானல்லவென்ற வெண்ணத்தோடு சமத்துவமாய் பாவனைகொண்டு யுத்தஞ்செய்வாயாகில் பாவமென்பது உன்னையும் பற்றுமோ? 38

கேளாய் அருச்சுன! இந்த யுத்தமானது நமது சுயகுல தருமமேயன்றி வேறன்றென்று உன்புத்தியினாலே திடஞ்செய்து துடங்குவையேயானால் ஜனன மரணமின்றி ஒப்பற்ற பரமபதத்தை நிச்சயமா யடைவாய். இதுவரையில் சாங்கிய சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் ஞானயோக மார்க்கத்தைக் குறித்துச் சவிஸ்தாரமாக உபதேசித்துவந்தேன். அதை நீ தெரிந்துகொள்ளாமல் மயங்கிய மனமுடையவனா யிருக்கின்றாய்; இனி உனக்கு அந்தக்கரண சுத்தி வரவேண்டும்; அவ்வித சுத்தியை யடைவதற்குப் பகவத் பிரீதியாக ஏதும் பூஜை அர்ப்பணமுதலியவைகள் செய்வாயானால் பகவத் கடாக்ஷ முண்டாகப்பெற்று அதனால் சித்தசுத்தியும், சித்தசுத்தியால் ஞானமும், ஞானத்தால் மோக்ஷமு மடையவரும்; ஆகையினாலே,

இனிக் கர்மயோகத்தைக் குறித்து நான் சொல்லாநின்ற யுத்தியைக்கொண்டு நல்லபுத்தியைப்பெற்று கர்ம பந்தங்களினின்றும் விடுபட வேண்டி அவைகளையுங் கூறக் கேட்பாய் : 39

சங்கரபாஷ்யம் :—'ஸ்வதர்ம மபிசாவேக்ஷ்ய' என்பதாதியாய சுலோகமுதலானவைகளால்பந்துக்கள்மரணமடைவார்களே யென்றும், குருக்களைக் கொல்லவேண்டி வருமேயென்றும் உண்டாகிற சந்தேகமே காரணமாயுள்ளனவும், ஆத்மஞ் ஞானத்துக்குப் பிரதிபந்த மானவையுமாகிய சோக மோகங்களை நீக்கிக் கொள்ளும்பொருட்டு வருணாசிரமாசாரங்களை நன்றாய் அசரித்தபக்ஷத்தில் சுவர்க்காதிகள் உண்டாகாவென்றும் சொல்லப்பட்டதேயன்றி, வருணாசிரமா சாரங்களே முக்கியமானவைகளென்று சொல்லப்படவில்லையென்று அறிதல்வேண்டும்.

சுவாமின் ! விவசாய விர்த்தியில் பலவித விக்கினங்கள் ஏற்படுவதுபோலவே நம்மாற்செய்யப்படும் சத்கன்மங்களுங்கெட்டு பலம் சூன்யமாய்விடாதோ ? அவ்வாறு சத்கன்மங்கள் கெடும்போது எங்கேயென்று பாவமும்வந்து லபிக்குமே ; ஆதலினாலே பகவத் பிரீதியாகிய சத்கர்மாவைச் செய்வதெப்படி ? யெப்படி யென்ற அருச்சுன ! செப்புவன் கேளாய் : தேவார்ப்பணமாகச் செய்யப்படும் எவ்வித கார்யங்களினும் அநேகமாய் விக்கினங்கள் நேராதாகும் ; அங்ஙனம் ஏதும் சொற்பமாக நேர்ந்தாலும் அதனால் நம்மைப் பாவம்வந் தடையமாட்டா ; அன்றியும் இவைமுதலான சத்கர்மாக்களை யார்யார் எந்தெந்தமட்டுக்கும் சிரத்தாபக்தியுடன்செய்வார்களோ அந்தந்தமட்டும் பிரதிப்பிரயோஜனமடையாமற் போகார்கள். அன்றியும் காமிகமாகச் செய்யப்படும் கர்மங்களிற் சற்றே சிரத்தை குன்றியக்கால் பலமுங் குன்றுவதுபோல நிஷ்பலமாய்ப் போகமாட்டாது. 40

இன்னும் ஈஸ்வரப் பிரீதிவிஷயமாய் நிஷ்காமிய பக்தியோடு சத்கன்மானுட்டானங்களை யாவனொருவன் செய்கின்றானோ அவனது விவேகமானது, காமியபோகா பேக்ஷையால் பகவத்பிரீதி செய்கிறவனுடைய புத்தியைவிட விசாலமாயும் மங்களகரமாயுங் காணப்படுமென் றறியக்கடவை. 41

சுவாமின் ! சம்சார துக்கங்களுக்கு ஆஸ்பதமாயுள்ள மரணவாதனைக் கேதுவான காமிய கர்மங்களைவிட்டு பகவத் பிரீதியாகிய சத்கர்மாக்களை, வேதோபநிடத இதிகாசாதிகளை யெல்லாங்

குறைவறக் கற்றுணர்ந்த வித்வ சிரோமணிகளா யுள்ளவர்கள் ஏன் செய்கிறார்களில்லை? அருச்சுன! உன்னாற் கூறப்பட்ட வித்வசிரோமணிகளெல்லாம் நித்திய போகங்களைத் தராநின்ற உத்தம வேதார்த்தங்களைச் சிறிது மாராய்ந் தனுட்டியாது சாமானிய அநித்திய போக போக்கியங்களும் புராணேதிகாச வின்யாசப் பிரகடனங்களுந் தவிர வேறொன்றையுங் காணோமென்று கூறும் வாசாகைங்கர்யர்களாவர். இதன்றியும் சுவர்க்கபோகத்தையடைவதே புருஷார்த்தம்; மற்றவை வியர்த்தமென்றும் கற்றகேள்விகளைக்கொண்டு மனதில் எண்ணமாத்திர முடையவர்களாய், அநுஷ்டானத்தில் உலக இச்சையை யுடையவர்களாய்க் காணப்பட்ட அவர்கள், மலர்மணம்போன்ற மனோகரமாகிய வாக்கியார்த்த கற்பனாவசனங்களையே வசனித்துக்கொண்டுகாலங் கழிப்பார்கள். ஆகவே இன்னோர்க்குத் தெய்வபக்தி யென்பது சிறிதும் பிறவாதாகும். 42, 43

அருச்சுன! இன்னு மிவர்கள் மேற்கூறியவாறாகவே விரிந்த வசனகோஷங்களில் தங்கடங்கள் மனசைப் பறிகொடுத்து அநித்தியானுபவங்களிலேயே காலமுற்றுங் கழித்து வருவோர்க்குப் பகவத் கைங்கரியத்திலும் தியானத்திலும் எவ்வாறு புத்தி பிரவிர்த்தியாகப்போகிறது, இல்லை யில்லை ஒருபோதுமில்லை. ஆகையால் நீ அவர்களைப்பற்றிச் சிறிதும் சிந்தியாதிருப்பாயாக. 44

உள்ளுரை:—"சுவாமின்! பார்ப்பதற்குமட்டும் ரம்மியமாயிருக்கிற புஷ்பித்த முருக்கமரம்போன்ற அர்த்தவாத வாக்கியங்களில் நம்பிக்கை யுண்டாயிருப்பதா லேற்படும் அநர்த்தம் என்ன"வென்று அருச்சுனன கேட்பனேவென்றுநினைத்து, அப்படிப்பட்டவர்களுக்கு உண்டாகும் அநர்த்தத்தைக் கிருஷ்ணபகவான் இந்த சுலோகத்தால தெரிவிக்கிறாரென்றறிதல்வேண்டும். மேலும், அர்த்தவாதங்களால் மோசத்தையடைந்தவர்களுக்கு சமாதியில் ஈசுராராதனத்தால் சம்சாரத்தைத் தாண்டக்கடவோம் என்கிற நிச்சயமாகிலும், ஆத்மதத்துவ ஞானத்தால் சம்சாரத்தைத் தாண்டக்கடவோமென்கிற நிச்சயமாகிலும் உண்டாகமாட்டாதென்றறியவேண்டும். மேலும் வாசனாத்மகமாய் சர்வமும் அந்தக்கரணத்தில் இருக்குமாதலால், அந்தக்கரணம் சமாதியென்று சொல்லப்படுமென்ச் சிலர் சொல்லுவார்களென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

சுவாமின் கூறியதுணர்ந்தேன்; ஆனால் அந்த வேதாகம புராண பரிசீலனையால் சுவர்க்காதி பரமபதங் கிடையாதென்னில் அவ்வித கருமங்களைப்பற்றி வேதங்கள் ஏனோமுழங்கவேண்டும்? கேளாயருச்சுனா: வேதங்களின் கர்மகாண்டமானது ஸத்வ ரஜஸ் தமோவென்று முக்குணங்களை விஷயமாகக்கொண்டிருக்கின்றன. ஆகையால் மூவித குணங்களில்லாதவனாகவும், குளிர், உஷ்ண முதலான தொந்தங்களில்லாதவனாகவும், ஸத்வ குணத்தையே சதா ஆசிரயித்தவனாகவும் ஆத்மஞான முள்ளவனாகவு மாகக் கடவை. மேற்கூறிய முக்குணங்களின் சம்பந்தா சம்பந்தங் களினால் புண்ணியபாவ கர்மங்களும், இவற்றால் வரும் பயன் களும் சம்சாரமோயுண்டாகின்றன. ஆதலால் நீ முக்குணங்களைக் கடந்து வாழக்கடவை. (அதாவது நிராசையாயிருப்பாய்.) சுகதுக்கங்களுக்குக் காரணமாகிய தொந்தங்களில் எப்பொழுதும் உள்ளாகாதே. 45

உள்ளுரை: இல்லாததைச் சம்பாதிக்கவும், சம்பாதித்தபின் அதைக் காப்பாற்றவும் விரும்புபவனுக்குத் தர்மமார்க்கம் பிடிபடாது. மேலும் ஆத்மாவையறிய அரிதப்படும். பஞ்சேந்திரிய அநுபவங்களுக்குச் சிறிது மிணங்காதே; ஜாக்கிரதையாயிருப்பாயாக. உனக்குரியகடமை காரியங்களைத் துடங்குங்கால் இப்போது கூறிய இன்னுரையைக் கருதி நடத்தல்வேண்டும் என்பது தோன்றுகின்றது.

சுவாமின்! வேதங்களில் பிரதிபாதிக்கின்ற கனம் பலன் களைவிட்டு இதரகன்மங்களைச்செய்வது நியாயவிரோதமாகுமே? அருச்சுனா! அப்படியல்ல; மிகுந்த பிரயாசையுடன் பற்பல தீர்த்தங்களையடைந்து ஸ்நானாதிகள்செய்து அநேகமான பலன் களைப்பெறுவதைவிட மகா விசாலமாயுள்ள சமுத்திரத்திலே ஸ்நானாதிகள் செய்வானாயின் சிரேஷ்டமானபலனும் இஷ்டகாமி யார்த்தங்களுங் கைகூடும்; அதுபோலவும், பற்பலவிதமாய்க் கூறப்பட்ட வேதசாஸ்திர புராணாதிகளை யாராய்ந்து அதிற் கூறியவாறு அநுட்டித்துப் பலனடைவதைப்பார்க்கிலும் பிரம நிஷ்டாள் முன்னிலையில் கேட்டறிந்து அவ்வாறு நடக்கிறதினால் லகுவான பிரயாசைக்கு விசேடமான பலன்கிடைக்கும். அது போலவும், அநேகவிதமான தேவதைகளைப் பூசை பலி முதலிய வைகளினால்கொண்டாடி இஷ்டகாமியார்த்தங்களையடைகிறதைப் பார்க்கிலும் ஒப்பற்ற பகவானைக்குறித்து நிஷ்காமமாய்ச்செய்

யப்பட்ட சத்கைங்கரியங்களினாலே அதிக சிரமமின்றிச் சித்த சுத்திபிறந்து அதன்மூலமாக சிரேஷ்டமானஞானத்தையடைந்து ஈற்றில் மோக்ஷமடையப் பெறுவானானதால் அவ்வாறாய பகவத் பக்திசெய்யும் புத்தி கெட்டதல்ல; ஆகவே நீயெவ்விதத்திலும் சத்வகுண சம்பிரதாயத்திலேயே யிருத்தல்வேண்டும். 46

சுவாமின்! மகாபிரயாசையுடனே சத்கன்மங்களைச்செய்து அதன் பலத்தைக்கொண்டு பகவத்பிரீதியாகச் செய்யவேண்டிய * அவலம்பிதம் எதன்பொருட்டு? எப்போதும் சித்தத்தைப் பகவத்தியானத்திலேயே செலுத்திவரின் ஏன்மோக்ஷங்கிடைக்க மாட்டாது? அருச்சுன! நீ கூறியது சர்வசாஸ்திர சித்தாந்த மாகும்; ஆனால் அவ்வாறாய ஆரியதியானயோக வலிமையானது ஒப்பற்ற பிரமநிஷ்டாளுக்கன்றி யேனையோர்களுக் கியலாவாம். ஆனால் க்ஷத்திரிய குலதிலகனான உனக்கு இவ்விஷயம் ஏற்ற தல்ல; இல்லை சாதிக்கவே வேண்டுமென்னும் அபேக்ஷையிருக்கு மானால் அதற்குப் பக்குவமான சித்தசுத்தி உன்னிடமில்லை. அவ்வித சித்தசுத்தி வரவேண்டுமானால் நிஷ்காமியதவமேசெய்ய வேண்டும். அவ்வாறுசெய்ய உன்னால் இயலாதாகையினாலே தேகத்தையே நானென்றபிமானித்துத் † கிரிசியவிஷயங்களில் சமாதானவுணர்ச்சியின்றி விஷயாதிகளில் இச்சையுமுண்டாய் விடும். அவ்விச்சையினாலே ஜனன மரணபந்தம் வந்துறும்; ஆகையினால் மோக்ஷத்துக்குச் சாதனமாயுள்ள நிஷ்காமிய கன் மத்தையே செய்வாயாக. 47

சங்கரபாஷ்யம்:—"சுவாமின்! தேவரீர் இப்போது யோகமார்க் கம் சித்தசுத்திவழியாக ஞானத்தையுண்டுபண்ணி மோக்ஷத் துக்குச் சாதனமாகுமென்று கூறினீர்கள்; அவ்வாறானால் அதைவிட்டு சாக்ஷாத்தாய் மோக்ஷத்துக்குச் சாதனமான ஞானமார்க்கத்தையே யெனக் குபதேசிக்கவேண்டுமென்று அருச்சுனன்கேட்பனோ" வென்று கிருஷ்ணபகவான் கர்மங் களைச் செய்தபக்ஷத்தில் அந்தக் கர்மங்களுக்குப் பலமான சொர்க்காதி சுகங்களையும் விரும்பவேண்டி வருமேயென்று அருச்சுனன் கேட்காதிருக்கும்பொருட்டு கர்மங்களின்பலன் களில் அபேக்ஷை உனக்கெப்போதும் வேண்டாமென்று சொல்லினரென்று அறிதல்வேண்டும்.

* அவலம்பிதம் - சார்பு.

† கிரிசியம் - பார்க்கப்படுவன.

சுவாமின்! தேவரீர் கூறிவந்தவண்ணம் நிஷ்காமியமாகக் கன்மங்களைச் செய்தாலும் அதற்கீடாக பலன் ஏதும் வந்தே தீருமே; அதனை யெப்படி யிச்சியாமலிருப்பது? அருச்சுன! உன்மனதைப் பகவத்சொரூபத்திற்பூட்டி எல்லாக்காரியங்களும் எல்லாக்காரணங்களும் அவரையன்றியில்லை; நமது புத்தியில் அவரே அந்தரியாமியாயிருந்து சர்வகாரியங்களையும் செய்விக்கின்றார்; அவரைத் தவிர நாமாக நடத்துவ தொன்றுமில்லை யென்ற எண்ணத்தையேயுடையவனாயிரு; இன்னும் யுத்தத்தில் ஜெயம்பெற்றபோது சந்தோஷமும் அபஜெயம் நேர்ந்தபோது துக்கமுமின்றி எப்போதும் ஓரேநிலைமையாயிருத்தலே சத்துவ நிலையாம். யாதொரு கன்மத்தை நீ செய்யும்போதெல்லாம் பிரயோஜனத்தை யெதிர்பாராதவண்ணம்செய்து அதனால் மனச்சுத்தியெய்தி ஞானமுண்டாகப்பெறுதலே நன்னிலையாகும். 48

உள்ளுறை:—இதன்றியும் உனதுதேசம், பந்துஜனர்கள், அன்னியர்கள் முதலானவர்களிடத்து அபிமானமின்றிச் சமத்துவமாக நினைத்துவரவேண்டும். இலாப நட்டத்துக்கு மிப்படியே. இவ்வாறு நிலைத்த சமாதானம் பிறந்தபோதே யோகம் நிலைத்ததென்றறியக் கடவை.

சுவாமின்! கூறியயாவுங் கருத்திற்கொண்டேன். பலனை யுத்தேசமுஞ் செய்யாதே; பலன் வந்துவிடுமேயென்று கன்மஞ் செய்யாமலுமிராதே யென்கிறீர்கள்; பின்னுமியான் செய்வதென்னோ வறிவிக்கவேண்டும். அருச்சுன! கவனமாகக்கேட்க வேண்டும்: பகவானிடத்திலேமனதைப்பதித்து நான்செய்தேன் என்னும் அபிமான வார்த்தையைவிட்டு நிஷ்காரிய கருமத்தின் பலனாகிய ஞானமடைதலையே கடைப்பிடியாகக்கொண்டு கன்மங்களைச்செய்க. பிரயோசனத்தை யெதிர்பார்த்த கன்மம் சுகர்மமல்ல; அவ்வாறு தாழ்ந்த புத்தியினர்களே செய்வார்களாதலால் நீ அவ்வாறுசெய்ய உத்தேசியாதே. 49

உள்ளுறை:—இன்றும், யோகவிஷயமான புத்தியையாவது அதன் பரிபக்குவத்தினாலுண்டாகும் ஸாங்கிய புத்தியையாவது பெற யெதிர்நோக்கமாயிருந்து முடிவில் பரமார்த்த ஞானத்தையடையவேண்டி அவாவி நிற்பாயாக.

இவ்வுலகத்திலே ஞானஸ்தனுவான் தொந்தமாகிய புண்ணியபாவங்களுக் கேதுவான காரியத்தைச் செய்யாது விடுவான். அப்படிவிட்டவனுக்கு மேற்கூறிய சமத்துவ புத்தியினால், பிற

வித்துன்பத்துக்கு உட்படுத்துந் தன்மையுள்ள துர்க்கன்மங்களும் நீங்கப்பெற்று மோக்ஷத்துக் கனுகூலமாகிய நற்கன்மங்களாகின்றன. ஆதலின் மனதில் ஏற்றதாழ்வின்றிச் சமபாவனையைக்கொண்டே எக்கர்மங்களையும் செய்து வருவாயாக. 50

சுவாமின்! இப்படிச் செய்வதான பாவனாகன்மம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடுமாவென ஐயப்பா டுண்டாகிறது; அருச்சுன! பலனையெதிர்பாராத கன்மாவை நீ ஈசுரப்பிரீதியாகச் செய்வையேயாயின் அது மோக்ஷத்தை நிச்சயமாய்க்கொடுக்கும். இப்படிச்செய்து அநேகர்கள் துன்பத்தைத் துறந்து ஞானஸ்தர்களாகிச் சென்மமாகிற பந்தம்நீங்கி மோக்ஷ பிராப்தியை யடைந்திருக்கிறார்கள். 51

சங்கரபாஷ்யம்:—"சுவாமின்! சித்தி அசித்தியென்கிற இரண்டிலும் சமபுத்தியாயிருப்பவன் புண்ணியபாவங்களிரண்டையும் விட்டுவிடுவானென்று சொன்னீரல்லவா! மோக்ஷமென்பது எப்படி யுண்டாகுமென்று அருச்சுனன் கேட்பனே" என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் இந்த சுலோகத்தைக் கூறினாரென்று தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் சமத்துவ புத்தியால் செய்யப்படுகிற கர்மம் புண்ணிய பாவங்களைப் போக்கடிக்குமாகையால், சமத்துவபுத்தியால் ஈசுரார்ப்பணமாகச் செய்யப்படுகிறகர்மம், சித்தசுத்திவாயிலாக மோக்ஷத்துக்கு ஏதுவாகின்றதென்று அறிதல்வேண்டும்.

சுவாமின்! நான் இவ்வாறான சந்தேகங்களையெல்லாம் எப்போதொழித்து மோக்ஷசுகத்தையடைவேனோ தெரியவில்லையே! அருச்சுனனே! இனி நீ அஞ்சவேண்டாம்; சர்வமும் என்னையன்றி வேறே யாதொன்றுங் கிடையாதென்கின்ற திடபுத்தி வரவேண்டும்; அந்த திடபுத்தி வந்தவுடனே தேகமே நாமென்கிற அஞ்ஞானக்காட்டை யெப்போது கடப்பாயோ அப்போதும், நாம் மெத்தவும் அறிந்தவனாய்விட்டோம் என்கிற அகங்காரத்தை யெப்போ தொழிப்பையோ அப்போதும், நானுபதேசிக்கும் விஷயங்களில் இன்னும் சந்தேக விபரீதங்களுண்டாகிப் பிறரிடத்தே விசாரிக்கவேண்டுமென்கிறதும் எப்போது நீங்குமோ அப்போதே கேட்டவைக்கும் கேட்கவேண்டியதற்கும் ஓர் உத்தமமுடிவை யடையப்போகிறாய். 52

இன்னும் நீ முன்கேட்ட நானாவிதமான கேள்விகளினாலே * விக்ஷேபமடைந்திருக்கிற உன்புத்தியானது ஆன்மாவினிடத்து

* விக்ஷேபம் - சந்தேககுற்றம்.

† மக்கினமாகி விஷய வாசனையில் செல்லாதிருக்கும்; அந்த ஒரே அப்பியாசத்தினாலே தத்துவஞான முதயமாகி மோக்ஷத்தையே யடைவாயென்று அநுக்கிரகஞ்செய்த பகவானை நோக்கிப் பின்னும் கேட்பானாயினன். 53

உள்ளுரை:— ‡ பிரவிருத்தி ¶ நிவிருத்தி லக்ஷணங்களமைந்த அநேக சாத்திய சாதன சம்பந்தங்களைக் குறித்துக் கேட்டிருப்பதால் கலக்கமுற்றிராநின்ற அவனது மனமானது, தான் தியானிக்கின்ற ஆத்மாவினிடத்து, குற்றங்களிலும் சந்தேகத்திலும் அகப்பட்டுத்தடுமாறாமல் உறுதியாய்நின்றால் அப்போது யோகமோ அல்லது ஞானமோ அதையடையலாம் என்ற தாத்பரிய மாகின்றது.

அவ்வாறான ஞானஸ்தர்களுடைய லக்ஷணங்களெல்லாம் தேவரீர்க்கு நன்கு விளங்குமாகையால் அவர்கள் எப்படிப் பேசுவார்கள்? எவ்விதமா யிருப்பார்கள்? எவ்வாறாய் நடப்பார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள இச்சையுடையவனா யிருப்பதால் அநுக்கிரகஞ் செய்யவேண்டுகிறேன். 54

பார்த்தனே! ப்ரம்மாநந்த சொரூபமாயிருக்கிற தன்னிடத்திலேயே சந்தோஷத்தை யுடையவனா யெப்போதாகிறானோ, மனதினிடமாக யாதொரு இச்சையுமின்றி எப்போது சுத்தமாகத் துறவற ஆசிரமமடையப் பெறுவானோ அப்போதுதான் அவனை ஞானியென்று கொள்ளப்படும். 55

உள்ளுரை:—மனப்பிரதேசத்திற் குடிகொண்டிராநின்ற இச்சாவிசேஷங்களையெல்லாம் பற்றறத்துறந்து உலகலாபங்களில் விருப்பின்றி பரமார்த்தலாபமடைந்தவனாய்மற்றுமோர்தெய்வத்தினிடத்தில் விருப்பின்றித் தனது பிரத்திய காத்மசொரூபத்தினிடத்தே எவன் சந்துஷ்டியுடையவனாகிறானோ அவனே நிலவரமான யோகநிஷ்டாபரனாவன் என்பது தோன்றுகின்றது.

அருச்சுனா! இன்னுந் துக்கம் வந்தபோது க்லேசமும், சுகப்படும்போது சந்தோஷமு மடையாது, குரோதம், பயம், இலாபம் இவைகளைச் சுத்தமாகவிட்டுச் சலனமுறா மனதுடையவனா யெப்போதாகிறானோ அப்போதவனை ஞானியென்று சொல்லப்படும். 56

---

†. மக்கினம் - லயப்படல்.

‡ பிரவிருத்தி - அப்பியசிப்பது.

¶ நிவிருத்தி - ஒழிப்பது.

சங்கரபாஷ்யம்:- ஸ்ரீ கிருஷ்ணபகவான் இந்த சுலோகத்தாலும் * ஸ்திதப்ரஜ்ஞனுடைய வேறு சில லக்ஷணங்களைச் சொல்லிக்கொண்டே பிரம்மஞானத்தை யடைய விரும்பியவன் செய்யத்தகுந்த காரியத்தைத் தெரிவிக்கின்றாரென்று அறிதல் வேண்டும். "மேலும் சுரம், தலைநோய் முதலானவைகளாலுண்டாகிற ஆதியாத்மிகங்களும், புலி, சர்ப்பம் முதலான ஜந்துக்களாலுண்டாகிற ஆதிபௌதிகங்களும், † அதிவிருஷ்டி, ‡ அநாவிருஷ்டி, இடிவிழுதல் முதலானவைகளாலுண்டாகிற ஆதிதெய்விகங்களும்," என்று சொல்லப்படுகிற துக்கங்கள் நேரிட்டபோது ஆத்மானாத்ம விவேகமுள்ளவன் மனதில் க்ஷோபத்தை யடையமாட்டானென்று அறிதல்வேண்டும்.

இன்னும் பிராரத்த கன்மவசத்தினாலே வராநின்ற நன்மை தீமைகளால் ஏற்படும் சந்தோஷ துக்கங்களைக் கொண்டாடாமலும், மற்றும் பந்து மித்திர பெண்டுபிள்ளைகளிடத்தில் பிரிய வாசனையை நாளடைவி லொழித்தும் வருகிற சாதனை நிலைத்த போது தான் ஞானம் நிலைபெறும். 57

இந்த வாக்கியத்தால் ¶ வாசனா மோசனஞ் செய்யவேண்டுமென்பது விளங்குகின்றது.

பார்த்தனே! இன்னும், சாதாரண சீவசெந்துவாகிய ஆமையானது தான் மற்றொருசீவனைப் பார்த்தமாத்திரத்திலே தன்னுடைய அவயவங்களைச் சுருக்கிக்கொள்வதுபோல எவன் தனது பஞ்சேந்திரியங்களை விஷயங்களிற் செலுத்தாமல் திடப்புத்தியோடு நிறுத்திக்கொள்வானோ அவனே ஞானியாவான். இதனால் பஞ்சேந்திரியங்களை விஷயங்களினின்றுந் திருப்பி மனதை ஆத்ம ஆராய்ச்சியில் செலுத்தவேண்டுமெனத்தோன்றுகின்றது. இதற்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறிய 'ஒருமையுளாமைபோ லைந்தடக்கலாற்றின் எழுமையுமேமாப்புடைத்து' என்றகுறளே போதிய சான்றாம். 58

உள்ளுரை:- விசாரிக்கும்போது ஞானநிட்டை சித்திப்பதற்கு மிகவும் உறுதியான வைராக்கியம், தீவிரமான மோக்ஷ விருப்பம், ஆத்மபரனாயிருத்தல் என்பவை முக்கியகாரணங்

---

* ஸ்திதப்ரஜ்ஞன்-நிலைபெற்றஞானி.

† அதிவிருஷ்டி-கன்மழை.

‡ அநாவிருஷ்டி-மழையின்மை.

¶ வாசனாமோசனம்-சொந்தஜன அந்நிய ஜனவாஞ்சை நீக்கம்.

(ளாயினும் இந்திரியங்களை செயிக்காதபக்ஷத்தில் வைராக்கியாதி ஞானநிஷ்டை சித்திக்காதாகையால் சாதகனான * யதியானவன் ஞானசித்தியின் பொருட்டு முன்னே இந்திரியங்களை செயிக்கவேண்டுமென்கிற விஷயத்தை கிருஷ்ண பகவான் இந்த சுலோகத்தால் தெரிவிக்கின்றாரென்று தோன்றுகின்றது.

சுவாமின்! விஷய நாசஞ்செய்வதே ஞானமுறுதற்கேற்ற சாதனமென்று கூறியது சத்தியமானால் நோயாளிகளும், தேவோபாசனை செய்பவர்களும், விரதங் காக்கிறவர்களும், சித்தபிரமைகொண்டவர்களும் ஞானியென்றேபாவிக்கலாகுமா? அருச்சுன! அவ்வாறன்று; தேகமே தானென்றும் உலகம் நித்தியமென்றும் எண்ணும் எண்ணமுள்ளவர்கள், வியாதி விரத முதலானவைகளால் தொந்தப்பட்ட அந்த சமயங்களில் மட்டும் விஷயங்களைக் கிரகியாமல் நிறுத்துகின்றார்களே தவிர மற்றைப் போது விஷயங்களின் மேல்வைத்த ஆசாபாசங்கள் அவர்களை விட்டு நீங்கினபாடில்லை. நிற்க; நாமகூறிய ஞானியோவென்றால், ஒப்பற்றவரான பரமான்மாவே தானென்றறிந்து அநுபவிக்கிற சந்தோஷ விர்த்தியினாலே விஷயங்களிலேயுண்டாம் ஆசையை நிவர்த்தித்திருப்பான். ஆகவே பரமார்த்த சொரூபமாக விளங்கும் நம்மை அடைபவன் இவனேயாகும். (இதனால் ஞானாஞ்ஞானியின்பேதம் நன்கு விளங்குகின்றது) சான்றாக திருமூலர் திருமந்திரத்தும் காண்க. 59

ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னாமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. 8

நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்தபி ணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்
றிண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. 9

சுவாமின்! ஞானியாகவேண்டிய அவாவுடையவன் விஷய நிக்ரக அப்பியாசஞ் செய்கிறகாலத்தில் சுத்தமாக பஞ்சேந்திரிய நிக்கிரகஞ் செய்யாமைக்கு ஏதுந் தோஷமுண்டோவென்கிற சந்தேகம்; அருச்சுன! ஞானாப்பியாசத்துக்கு இடையறாமல் பிர

* யதி - பிராமணசந்நியாசி.

யத்தனஞ்செய்து வாராநின்ற திடச்சித்தமுடையவனைக் கூட இந்திரியங்களானவை அவனுடைய மனதைப் பலாத்காரமாய்க் கெடுக்குஞ் சுபாவத்தோடுகூடிய தாகையால் அவசியம் இந்திரிய நிக்கிரகஞ் செய்யவேண்டு மென்பதாயிற்று. பஞ்சேந்திரியவழிச் சஞ்சாரஞ் செய்தவரையில் அதனால வரும் சுகதுக்கங்களே தோஷமாமென் றறிகுதி. 60

உள்ளுரை—இந்திரிய நிக்கிரக மில்லாத பக்ஷத்தில் ஆத்ம ஞானம் ஸ்திரமா யிராதாகையால் ஆத்ம ஞானம் ஸ்திரமா யிருக்கும்படி செய்துகொள்ளவேண்டுமென்று பிரயத்தனஞ் செய்துகொண்டிருப்பவன் இந்திரியநிக்கிரகத்தைக்குறித்து அதிகமான பிரயத்தனம் செய்யவேண்டுமென்று தெரிகிறது. இன்னும், * பிரஜ்ஞை யென்பது ஸ்திரமாயிருப்பதற்கு இந்திரிய நிக்கிரகம் மனோநிக்கிரகம் என்னும் இரண்டும் முக்கிய காரணங்களென்றும், இந்த இரண்டுமில்லாத பக்ஷத்தில் பிரஜ்ஞையென்பது ஸ்திரமாயிராதென்றுஞ்சொல்லிப்போகிறவராய முன்னே பாகியேந்திரிய நிக்கிரகமில்லாதபோது உண்டாகிற தோஷத்தை ஸ்ரீகிருஷ்ணபகவான் இந்த ச்லோகத்தால் தெரிவிக்கின்றாரென்று தோன்றுகின்றது.

சுவாமின்! தேவரீர் கூறிய துணர்ந்தேன்; ஞானியாவான் இந்திரிய நிக்கிரகஞ் செய்துகொண் டிருப்பதெப்படி? அருச்சுனா! கேட்பாய்: மேற்கூறிய ஞானியென்பான் பஞ்சேந்திரியங்களாகிற மெய் வாய் கண் மூக்குச் செவியென்பவைகளின் வழியாக விஷயங்களில் செல்லுகின்ற மனதைத் தடுத்து வாசுதேவரூப நானே சிரேஷ்டமானவனென்றுணர்ந்து என்னையே பக்தி பூர்வமாக இடைவிடாமல் தியானித்துக் கொண்டிருப்பான். இந்திரியங்களை எவன் தன்வசப்படுத்தி ஒப்பற்ற மெஞ்ஞான நிஷ்டையி லிருப்பனோ அவன் புத்தியே ஸ்திரப்பட்டதாம், அவனே ஞானியாகும். 61

அருச்சுனா! நாமிதுகாறும் உனக்கு † பாகியேந்திரிய நிக்கிரகங்களைப்பற்றிக் கூறினோம்; இனி ‡ ஆந்தரேந்திரியத்தையும் நிக்கிரகஞ் செய்யவேண்டிய விவரத்தையும், அது செய்யாவிடத்துண்டாகுந் தீங்குகளையுங் கூறுவோங் கேட்பாய்: மனதினாலே விஷயங்களையே நன்மையாகப்பாவித்து அவைகளைத் தியா

---

* பிரஜ்ஞை - அறிவு.

† பாகியேந்திரியம் - புறக்கரணம்.

‡ ஆந்தரேந்திரியம் - அந்தக்கரணம்.

...ஞ்செய்கிறவனுக்கு விஷயப்பற்றுதலேயன்றி மற்றொன்றின்றாம். அப்பற்றினாலே ஆசையுண்டாகும்; அவ்வாசையைநிறைவேற்றாவழி கோபம்பிறக்கும். 62

அது பிறக்கவே திடமான * மோகமுண்டாம்; அதுவுண்டாகவே இன்னகாரியஞ் செய்யலாம், இன்னகாரியஞ் செய்யத்தகாதென்கிற பாகுபாடின்றி நடக்க வேதுவாகும். இன்னும் ஆசாரியர் வாயிலாகக் கேட்டுணர்ந்ததும் உபதேசிக்கப்பெற்றதின் உட்பொருளும் அறுதியாய் மறதியாகும். இதனால் அவனுக்கு அறிவுங் குறைவாமெனவறிக. 63

உள்ளுரை:-அக்கினியை அவித்தும் அவியாதசேடமும், சத்துருவை ஜெயித்தும் ஜெயிக்காதசேடமும், கடனைக்கொடுத்தும் கொடாத சேடமும் மீளவும் விருத்தியாதல்போலப்புறக்கரணங்களைமாட்டுப்படுத்தினாலும் அந்தக்கரணங்களைச்சுதந்தரியாவிடில் மீண்டும் ஒவ்வோர் விஷயங்களாக யாவும் விருத்தியாகி சற்றில விஷயவியாபாரியாய் விடுவான் என்பது தோன்றுகின்றது.

சுவாமின்! இந்த பஞ்சேந்திரியங்களும் அதனதன்விஷயங்களிலே செல்லுதல் இயல்பேயாகும்; அவ்வாறு இயல்பாந்தன்மையை யெவ்வாறு நிறுத்துவது? அங்ஙனம் நிறுத்தாவழி ஞானம் நிலையுறுமோ? அருச்சுனா! மோக்ஷாபேக்ஷை கொண்ட ஞானியென்பான் முதலாவது சாதனத்தில் சாக்ஷாத்கார ஸ்வரூபத்தைத்தவிர அன்னியமாய்க்காணப்பட்ட ஜெகத்தை † மித்தையென்றே நிர்மானித்து அதன்மேல் இரண்டாஞ் சாதனத்தால் இச்சையையும் கட்டோடே விட்டிருப்பதால் அவனுக்கு மனமுதலாகிய அந்தக்கரணங்கள் சுவாதீனமாகவேயிருக்கும். அவ்வாறு சுவாதீனஞ்செய்துகொண்ட இந்திரியத்தோடுங்கூடிய ஞானியாவான் ‡ இராகத்துவேஷங்களின்றி விஷயங்களைக் கிரகித்தானாயினும் அவைகளில் § ஆசக்தியில்லாதவனாகவே யிருப்பன். ஆகவே நமது பிரசாதத்தை யெவரிதத்தும் நிச்சயமாயடையத் தடையின்று. 64

* மோகம் - அவிவேகபிராந்தி

† மித்தை - பொய்

‡ இராகத்துவேஷம் - விருப்புவெறுப்பு.

§ ஆசக்தி - விருப்பம்

சுவாமி... வரீரது திருவருட் பிரசாதம் ஞானிக்கெவ்வாறுண்டாகும்? அருச்சுன! * நிர்மலமான மனமுடைய ஞானிக்கு இயல்பாகவே ஒருவித சந்தோஷமுண்டாம். அவ்வித சந்தோஷத்தினாலே துக்கங்களெல்லாந் தொலைந்திடும். இவ்வாறாகச் சித்த சுத்தி செய்துகொண்ட ஞானியென்பான் விரைவில் முதிர்ந்த ஞானமுண்டாகப்பெற்று முடிவில் நம்முருவெய்துவானென்க. 65

உள்ளுரை —எவனுடைய இருதயம் சுத்தமாயும் நிலையுள்ளதாயுமிருக்கின்றதோ அவனுடைய விருப்பம் நிறைவேறும் ஆகையினால் ஞானவான் புலன்களின் சம்பந்தமான விருப்பும் வெறுப்புமற்றுத் தனக்கு வசியமானதும் சாஸ்திரங்களால் தள்ளப்படாததுமான விஷயங்களைமாத்திரம் அநுபவிக்க வேண்டுமென்பது தோன்றுகின்றது.

இன்னும் பஞ்சேந்திரியங்களையுந் † துஞ்சுதல் செய்யாவொருவனுக்கு ஆன்மதரிசனஞ் செய்யவேண்டுமென்கிறதிற் சிறிதும் புத்தி புகுவதில்லையாம். ஓர்சமயம் அதிஷ்டமாக புத்திபிறந்திடினும் தியானஞ்செய்யவேண்டி மனம் ஒருமைப்படுவதில்லை. எப்போது தியானார்த்தம் மனம் சுவியமில்லையோ அது ‡ உபசாந்தியடைவதில்லை, உபசாந்தியடையாதபோது மோக்ஷசுகந்துக்கும் எதுவில்லையென்க. 66

சங்கரபாஷ்யம் — சித்தசுத்தியினாலேயும் ஆத்மானாத்மவிவேகத்தினாலும் உண்டாம் ஞானம் ஸ்திரமாயிருக்குமோவென்று நினையாமல் திடமாக அந்த ஞானத்துக்குச் சாதகமாகின்றதாகையால் சித்தசுத்தி சர்வோத்தமமானதென்று சொல்லப்பட்டதாக அறிதல்வேண்டும். இனிச் சித்தசுத்தியில்லாதவனுக்கும் சாமானியமாக வேதாந்த வாக்கியங்களைக் கேட்பதனாலே நான் பிரமமமானேனென்கிற புத்தியுண்டாயிருந்தாலும், நிச்சயமாய நான் பிரமமமானேனென்கிற நிச்சயபுத்தி யுண்டாகமாட்டாதென்றும் அறிதல் வேண்டும். மேலும், பாவனையால் பிரமம ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்று உறுதிப்பாடாக அடிக்கடி தன்னைப் பிரம்மமாகத் தியானிப்பதனால் ஆத்மசாக்ஷாத்காரம் உண்டாகுமென்றுந் தெரிந்துகொள்ளவேண்டும்.

---

* நிர்மலம் - அழுக்கின்மை.

† துஞ்சுதல் - வாடுதல்.

‡ உபசாந்தி சலனமற்றிருத்தல்.

உள்ளுரை:—சித்தத்தை வெல்[illegible]ச் சிரவண மனனங்கள் என்கிற வேதாந்த[illegible]ண்டான ஆத்மஞானமும், வேறான பாகி[illegible] விஷயமான ஞானமில்லாதிருக்கும்படி எல்லாக் காலங்களிலும் இடைவிடாமல் தன்னை ஆத்மாவாகவே நினைத்துக்கொண்டிருத்தல் என்கிற நிதித்தியாசனமும் உண்டாகாதென்றும், நிதித்தியாசனமில்லாதவனுக்கு பிரம்மாத்ம ஐக்கிய சாக்ஷாத்கார ஞானம் உண்டாகாதென்றும், அந்த ஞானம் உண்டாகாமற் போவதுமாத்திரமேயல்லாமல் அவித்தையும் போகமாட்டாதென்றும், ஆத்ம சாக்ஷாத்காரமில்லாதவனுக்கு மோக்ஷானந்தம் உண்டாகாதென்றும் இந்த சுலோகப் பொழிப்புரையால் அருச்சுனனுக்குத் தெரிவித்தாரென்று தோன்றுகின்றது.

சுவாமின்! ஒருவன் புருஷனாகப்பிறந்து மிவ்வாறு பிரயோஜனமில்லாது போதற்குக்காரணந் தெரியவில்லையே! அருச்சுனா! விஷயவழியிற் சென்ற ஓர் இந்திரியத்தோடு மனமும் கூடிச் செல்லுமாயின், அம்மனதோடுகூடிய இந்திரியம் யோகபரனுடைய ஞானத்தையும் அபகரிக்கும். இவ்வாறிருக்க, சர்வேந்திரியங்களோடும் மனதை செலுத்தி வருவானேல் அவனுக்கு வருந் தீங்குகளுக் களவேயில்லை. திருஷ்டாந்தமாக போதை வசத்தனாய்ச்சித்த சுவாதீனமில்லாத வொருவன் ஓடக்காரனாக ஏற்பட்டுவிடுவானாயின் காற்று செல்வழி ஓடமுஞ்சென்று சமுத்திரம்போய்ச் சேர்ந்து திசைதவறி திண்டாட்டப்படுவதுபோல இராகாதி விருத்திகளுண்டாகி * விக்ஷேபங்களை யடைந்து சனன மரணமாகிய சமுத்திரத்தினின்றுங் கரையேற முடியாது அலக்கழிவன் என்க. 67

ஆகையினாலே ஏ புஜபலபார்த்தனே! எவனுடைய இந்திரியங்கள் விஷயங்களினின்றும் பூரணமாய் நிக்கிரகிக்கப்பட்டனவோ அவனுடைய புத்தி ஸ்திரம்பெற்று ஞானவானாய் † கிருதகிருதியனென்றும் சொல்லப்படுவன். (இதனால் எவ்வாறாயினும் பஞ்சேந்திரிய விஷய வியாபாரமற்றுப் போதல் வேண்டுமெனத் தோன்றுகின்றது.) இக்கருத்துகொண்டே திருவள்ளுவ நாயனாரும் 'ஐந்தவித்தானாற்ற' லாதிய குறட்பாக்களால் கூறியனவும் பிறவுங் கண்டுணர்க. 68

* விக்ஷேபம் - கலக்கம்.

† கிருதகிருதியன் - சகிருத்தியன்.

சுவாமின்! சாக்[illegible]பனங்களைக் கடந்து உறங்குவோனுக்கு யாதொன்று[illegible]மலும் சலனமில்லாமலும் எப்படியிருக்கிறதோ [illegible]ப்படியிருக்[illegible]வனைத் தேவரீர் சொல்கிறபடி ஞானியென்று [illegible]கொள்ளப்படுமானால் அந்தப்பிரகாரம் எவருமிருப்பது அரி[illegible]லு மரிதாமென நினைக்கிறேன். அருச்சுன! உலக விவகார ஜீவர்களுக்கெல்லாம் ஆத்மஞானமானது நித்திரையைப்போலக் காணப்பட்டும், ஆத்ம ஞானார்த்தமாக இந்திரியங்களை ஒக்க அடைத்த யோகியானவன் விழித்தேயிருப்பன். இன்னும், சம்சாரங்களுக் கேதுவாகிய விஷயங்களில் சர்வ ஜீவர்களும் எவ்வாறு விழித்திருப்பார்களோ அவ்வாறே யோகியாவான் கோட்டானைப்போன்று நித்திரைசெய்துகொண்டு விஷயவாசனையின்றி ஆத்மாவையே ஆராய்ந்துகொண் டிருப்பன் என்றறிவாயாக. (இதனால் ஜீவர்களுக்கெல்லாம் இரவு பரமார்த்த தத்துவமென்றும், ஞானிக்கு இரவு வைதிக லௌகிக விவகாரங்களென்றும் நன்கு புலப்பட்டது.) 69

சங்கரபாஷ்யம்:—ஆத்மஞானிக்குச் சர்வகர்ம பரித்தியாகத்தில் (அதாவது சந்நியாசத்தில்) அதிகாரமென்றும், ஆத்மஞானியல்லாத அவிவேகிக்குக் கர்மத்தில் அதிகாரமென்றும், லௌகிகம் வைதிகம் என்கிற விவகாரம் அஞ்ஞான காரியமாகையால் விவேக விஜ்ஞானங்களுள்ள ஸ்திதப் பிரஜ்ஞனுக்கு ‡ அவித்யை நிவர்த்தித்துப் போகுமென்றும், அவித்தைக்கு வித்தை சத்துருவானதால் ¶ வித்தையென்பது நசித்தவுடனே அவித்தையென்பது நிவர்த்தித்துப் போகுமென்றும் தெரிவிக்கும் பொருட்டு பகவான் இந்த சுலோகத்தைக் கூறினாரென்று தெரிகிறது. இன்னும் ஸ்திதப்பிரஜ்ஞனுக்கு விஷயமாகிய $ (கோசரமான) பரமார்த்த தத்துவம் அவிவேகமுள்ள எல்லாப் பூதங்களுக்கும் இருளே சொரூபமாயுள்ள தாகையால் சகல பதார்த்தங்களையும் காணப்படாதிருக்கும்படிசெய்கிற இரவு போன்றதென்றும் அறியவேண்டும்.

சுவாமின்! கூறியதறிந்தனன். ஆயின் இவ்வாறு அவர்கள் சதா சர்வகாலமும் நிஷ்டையிலிருந்துகொண்டே யிருப்பார்களானால் அவர்களுக்குத் தேகபோஷணை நடப்பதெப்படி? யெவ்

‡ அவித்யை - அஞ்ஞானம்.

¶ வித்தை - ஞானம்.

$ கோசரம் - அறியத்தக்க[illegible].

புசிப்பார்களென்ற சந்தேகம் வருகின்றது. அருச்சுன! பூர்ணமாயும் அசலமாயுமிருக்கிற ஜலம் நிறைந்த சமுத்திரத்தினுள் சலனத்தோடுங்கூடிய நதிகள் எவ்வாறு பிரவேசிக்கின்றனவோ அவ்வாறே அந்தயோக ஞானிகளுக்குப் பிராரத்தானுகுணமாய் சர்வவிஷயங்களும் தாமேவந்தடையும். அவ்வாறாயினும், சலனத்தோடுங்கூடிய நதிகள் எவ்வாறு அந்தச் சமுத்திர நிலவரத்தைக் கலங்கச்செய்கிறதில்லையோ அவ்வாறே அந்தர்முகமாயுள்ள அந்த யோகஞானிகளினது ஸ்திரமான புத்திக்குச் சலனத்துவத்தை யுண்டுபண்ணுறதாம். அவர்களொவ் விதத்து மோக்ஷமேயடைவர்கள். (இதனால், எவனொருவன் ஆத்ம தரிசனத்தாலுண்டாகும் திருப்தியை யெதிர்பார்த்துள்ளானோ அவனுக்குச் சப்தஸ்பரிச முதலிய விஷயங்கள் புலப்படினும் புலப்படாவிடினும் விகாரப்படாது உறுதியாய் நிற்பானாயின் அவனே விருப்புவெறுப்பற்ற ஞானியாகு மென்பது விளங்கிற்று.) 70

சங்கரபாஷ்யம்: "சுவாமின்! சந்நியாசத்தையடையாமற்போயினும் வித்யாவந்துகுமாதுதிரமா யிருப்பானேல் வித்யாபலமான மோக்ஷமுண்டாகலாமல்லவா? வித்யாவந்தனுனவன் சந்நியாசத்தை யடைந்தே தீரவேண்டுமென்று சொல்வதற்குக் காரணமென்ன" வென்று அருச்சுனன் கேட்டானென்றெண்ணிச் சாமானியமாய் நான் பிரம்மமானேனென்கிற ஞானமுள்ளவனும், விவேக வைராக்கிய முள்ளவனும், திரவியம், மனையாள, புத்திரர் இவர்களிடத்து விருப்பமில்லாதவனும், * சிரவண மனன நிதித்தியாசனங்களால் திடமான ஆத்ம சாக்ஷாத்கார முள்ளவனுமாகிய முக்கிய சந்நியாசிக்கே மோக்ஷமுண்டாகுமன்றி, விஷயங்களில் லம்படனாயுள்ளவனுக்கும் சந்நியாசத்தைப் பெறுதவனுக்கும் மோக்ஷமுண்டாகமாட்டாதாகையாலேயே சந்நியாசம் அவசியம் பெறுதல் வேண்டுமென்பதாயிற்று.

உள்ளுரை: உலகத்திலே கன்னிகையானவள் குருமதியான பிரகு யாதாபிதாக்களையும் சகோதராதி பந்துஜனங்களையும் விட்டு நாயகனொருவனையே கதியெனவடைந்து அவனிடத்திலேயே ரமிப்பாள். அந்த நாயகனுலேயே திருப்தியை யடைவாள். சந்தோஷிப்பாள். ஆநந்தத்தை யடைவாள். அன்னியன்சொல்லைக் கேட்கமாட்டாள்; அவனைப் பார்க்கவுமாட்டாள்; நினைக்கவுமாட்டாள்; தீண்டவுமாட்டாள்;

---

* சிரவண மனன நிதித்தியாசனம் - கேட்டல் சிந்தித்தல் தெளிதல்.

இத்தகைய பதிவிரதையாய் அந்த தன்னாயகனிடத்திலேயே சர்வகாலங்களிலும் பிரியாமலிருப்பாள். இவ்வாறாகவே பிரமஞானியாவான் சமாதியினால் மிகஸ்திரத்துவமாக தேகேந்திரிய பிராணன்களைத் தானாயாயவிட்டு சச்சிதானந்த சொரூபமான பரப்பிரமத்தையே ஆசிரயித்து அதையே தனக்கின்றியமையாவாதாரமாகக்கொண்டு அதனிடமாகவே ரமிப்பும், கிரீடிப்பும், சந்தோஷமுமெய்தி இதரவிஷயங்களைக் கேட்காமலும், பார்க்காமலும், ஆலோசிக்காமலும் சதாசர்வகாலங்களிலும் பிரமமசொரூபத்தையே யடைந்திருக்குமென்கிற கருத்துள்ளதாக மேற்கூறிய வாக்கியத்தைக் கூறினாரென்று தெரிகிறது.

சுவாமின்! ஞானமோக்ஷங்களென்பன இத்தன்மையனவென்பதும், அதையடைந்த மகான்களுடைய இலக்ஷணங்கள் இத்தன்மையனவென்பதும், அதையடைய அபேக்ஷிக்கிறவர்கள் அநுஷ்டிக்கவேண்டிய இலக்ஷணங்களும், அவ்வாறு அநுட்டியாவிட்டதுண்டாம் துன்பங்களைப்பற்றியும் அநேகவிதமாக இதுகாறும் அநுக்கிரகஞ்செய்தீர்கள்; யோசிக்குமிடத்து அவைகளெல்லாம் * தாரணைக்குவர வருத்தப்படும்போலக் காணப்படுகிறதாகையால் மோக்ஷமெய்துவதற் கநுகூலமான சுலபசாத்திய மார்க்கத்தை வெளியிட்டு அனுக்கிரகிக்கவேண்டுமென்றுகேட்ட அருச்சுனனை நோக்கிப் பகவான் கூறுகின்றார்: ஏ பார்த்தனே! விஷயபோகங்களை அபேக்ஷிக்கிற புருஷனுக்கு மோக்ஷமென்பது ஒருபோதும் சித்திக்கவேமாட்டாது. ஆதலினாலே யாதொரு புருஷனாவன் பிராரத்துவ விசேடமாக வலுவில்வந்த விஷய போகங்களில் விருப்பு வெறுப்பின்றி, வராத போகங்களிற் கோரிக்கையற்று; புத்திராதியர்களிடத்து வாஞ்சையின்றி, யெனதென்கிற மமதையை யொழித்து, நானென்கிற அகங்காரத்தையடையாது, இந்திரியாதிகளெல்லாம் காமானபடியினாலே விட்டோம்மற்றயாவர்விடப்போகிறார்களென்கிற நினைப்பை நீக்கி ஆத்மாவினிடத்தில் ஏகமனதோடுமாத்திரம் நிற்கின்றானோ அவனே மோக்ஷமடைவன். ஆகையால் நீயும் அவ்வழியைத் தழுவுவாயாக. 71

அருச்சுனா! பிரமஞானியினுடைய நிஷ்டா கிரமங்களைப் பற்றி இதுவரையிலுங் கூறினோம்; இன்னிட்டையை யநுட்டித்தவன் எக்காலமும் மோகத்திலும் துக்கத்திலும் லயப்படமாட்டான். அதுபற்றியே நாம் உனக்கு அநுக்கிரகஞ்செய்

* தாரணை - மனதிற்படிதல.

தாம்; இன்னிட்டையை மரண தருவாயில் எவனாவது ஒருக்ஷண மாத்திரம் நினைத்தானாயினும் நிச்சயமாய் மோக்ஷ ப்ராப்தியடைவான். என்றால் நெடுநாள்வரையில் யோக மோக்ஷானுட்டான பரனாயுள்ளவன் மோக்ஷமடைதலைப்பற்றி நான் கூறவும் வேண்டுமோ. 72

உள்ளுரை: பூர்வ சென்மத்திலே பிரசித்தமான சாதனங்கள் உள்ளவனும, சந்நியாசத்தை யடைந்து வேதாந்த மகாவாக்கியங்களைக் கேட்டதனாலுண்டான புண்ணிய விசேஷத்தால் வித்வாம்சனானவனும் ஒருவேளை பிராரத்த கன்மவசத்தால் கொஞ்சகாலம் சம்சாரத்தில் பந்தப்பட்டிருந்தானாயினும பூர்வ சென்மத்திற்செய்த சுகிர்தவிசேஷத்தால் வயோதிகபருவத்தில் அல்லது மரணகாலத்திலாயினும் பிரம்ம நிட்டையை யனுட்டிப்பானாயின் மோக்ஷத்தையடைவானாதலால் கைவல்யத்தை விரும்புகிறவன் பாகியவிஷயங்களில் பிரவிர்த்திப்பதைவிட்டு எக்காலங்களிலும் பிரமநிட்டையை யனுட்டிக்க வேண்டுமென்று தோன்றக்கிடக்கின்றன.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வாறு சம்சார பந்தமோகங்களாலேற்பட்ட துக்க சமாதானமாக அநேக இதோப தேசமாகிற சாங்கிய ஓடத்தில் அருச்சுனனையேற்றிக் கரையேறும்படிச்செய்தனரென்க. 73

சாங்கியயோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 2-க்கு-சுலோகப் பொழிப்பு-119.

## மூன்றாவது அத்தியாயம்

# கர்ம யோகம்.

அவதாரிகை. ஸ்ரீகிருஷ்ணபரமாத்மனிடம் ஞானயோகம் கன்மயோகமென்னும் இருவித யோகங்களைப்பற்றியுங் கேட்டுணர்ந்த அருச்சுனன், கன்மயோகத்தைக் காட்டிலும் ஞானயோகமானது மிகச் சிரேட்டமாயிருக்க அதைவிட்டுக் கோரமயமாயிருக்கிற யுத்தவிருத்தியாகுங் கன்மத்தைச் செய்யும்படி ஏன் வற்புறுத்துகிறீரென்கிற அபிப்பிராயத்துடன் தனக்கேற்பட்டுள்ள சந்தேக விபரீதங்களைப்பற்றி நிவர்த்தி செய்துகொள்ளத் தொடங்குகின்றான் :

சுவாமின்! தேவரீர் திருவாய் மலர்ந்தருளினவற்றை யாராய்ந் தறிந்தமட்டில் ஞானயோகமே மிகமேலாயதாயிருக்க அதனை யோதுவதொழிந்து சாமானியமான யுத்தவிர்த்தியில் ஏன் என்புத்தியை நுழைக்கின்றீர்களோ தெரியவில்லை. 1

சுவாமின்! ஆராயுமிடத்து கன்மத்தை யோர்சமயம் சிரேட்டமாகவும் ஞானத்தை யோர்சமயம் சிரேட்டமாகவும் மாறிமாறிக்கூறி வருகின்றீர்கள் இவ்வித கலப்பான வாக்கியங்களைக் கொண்டு நான் திடமாயொன்றைச் சாதிக்கக்கூடியதா யிராமல் மெய்மயங்கி திகைப்புறுகின்றது. ஆகையினாலே என்புத்திக்கு நன்றாய் விளங்குமாறு மோக்ஷசுகத்தைப் பெற்றடையலாகுமோ அந்த உத்தம மோக்ஷமார்க்கத்தைப்பற்றித் தயைகூர்ந்து உபதேசிக்கவேண்டுகிறேன். அப்படியாயின் கேட்பாயருச்சுன! 2

உலகின்கணுள்ள ஜீவபேதங்களுள் முதன்மையரான மானிடப்பிறவியினர் உணர்ந்துய்யுமாறு அருளிச்செய்யப்பட்டது வேதாகமங்களாம். இங்கேமானிடர்கள் பெரும்பாலும் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையராதலின் அவரவர்களது பக்குவாபக்குவநிலைமைக்கேற்ப உதவல்வேண்டுமாதலின் அவ்வேதம் கர்மகாண்டம் ஞானகாண்டமென இருவகைப் பாகுபாடாயமைந்துள்ளன. இவ்விரண்டில் உத்தமர்களான சாங்கியர்கள் அநுட்டிக்கப்பாலது ஞானநிட்டையென்றும், மத்திமரான கன்மயோகிக

[illegible]க்கப்பாலது கன்மநிட்டையென்றும் விவரிக்கப்பட்டிருக்கிறது. யெவ்வாறென்னில் அந்தக்கரண சுத்தமுடையோர்க்கு மோக்ஷ சாதனமான ஞானத்தையும், அந்தக்கரண சுத்தமில்லாதவர்கட்கு அதுசுத்தமுறுங் காரணமாயுள்ள கன்மயோகத்தையு முறையிட்டுள்ளது. ஆகவே அவரவர்களது வருணாசிரமத்துக்கேற்ற முறையினின்று வற்ற நிஷ்காம கன்மங்களை செய்தல் வேண்டும். அவ்வாறு முறைதெரிந்து செய்யா தொழிவரேல் ஞானம் பிறவாதாகும். அங்ஙனம் மோனமேயுருவான ஞானமானது ஈனமாகவே முத்தியென்பது சித்தியாதென்க. 3

உள்ளுரை: இங்கே சாங்கியயோகம், கன்மயோகம் என்னும் இரண்டினையும்பற்றி விசாரிப்பாம். "ஸங்க்ய" வென்னும் வடசொல்லுக்குப் 'புத்தி' யெனப் பொருள் படுகின்றது. ஆகவே மேலான * புத்தியை யுடையவர் சாங்கியரென்னும் ஞானியர். இவர்கள் ஆத்மா ஒன்றையே பொருளாகக் காண்பவர். இந்த ஆத்ம ஞானத்துக் கருகரல்லாத கன்மயோகாதிகாரிகளா யிருப்பவர்கள் யோகிகளாவர். இந்த யோகிகளாவார் மேற்கூறிய ஆத்ம தரிசனானுபவமில்லையென்று தூக்கிப்போராதலின் கன்மயோகத்தில் அதிகாரமுடையவர்களெனக் கொள்ளப்பட்டது. திருஷ்டாந்தமாக 'சனகர்' முதலானவர்களைப்போல இல்லறமுதலிய கர்மங்களையொழித்து ஞானநிஷ்டர்களாயிருப்பவர் சாங்கியர்களாவர். 'ஜனகமகாராஜர்' முதலானவர்களைப்போல இல்லறமுதலிய கர்மங்களைச் செய்துகொண்டே ஞான நிஷ்டர்களாயிருப்பவர்கள் யோகிகளெனப்படுவர்.

சுவாமின்! கன்மஞ்செய்து முடிவுபெறுத வோர் புருஷன் ஞானமடையானெனின் சர்வகன்மங்களையும் விட்டவனாகிய சந்நியாசிக்குமட்டும் மோக்ஷமெப்படி சித்தியாகும்? அருச்சுன! இங்கே சந்நியாசி யென்னுஞ் சொல்லுக்குச் சர்வகன்மாதுபய ஆசைகளையும் விட்டவனெனப் பொருளாகுமல்லவா? ஆகவே ஈண்டு புண்ணிய கன்மங்கள்செய்து பலனைவிரும்பாது பகவானுக்கர்ப்பணஞ் செய்கிறதையே 'விடுகிற' தெனக. இதைத்தவிர கன்மங்களைச் செய்யாமலே விட்டிருக்கிறதல்ல. இன்னுந் தேகமே தானென்றுஞ் செகத்து சத்தியமென்று மெண்ணிய திண்ணிய அறிவினன் கன்மங்களை யெப்போது செய்யாது

* புத்தி - இங்கே ஆத்மதரிசனவிவேகம்.

விட்டானே அவன் ஒருபோதும் மோக்ஷமடையவே மாட்டான். ஆகையால் நீ கன்மங்களைச்செய்யாது விடுதலடாது. 4

அருச்சுன! ஞானுஞ்ஞானிகளிருவரும் கன்மஞ் செய்யாது க்ஷணப்பொழுதேனுங் காலங்கழிப்பது முறையன்றாம். எவ்வாறெனில், சென்மம்வந்ததே கன்மத்தாலாகும். எவ்வெத்தேகம் எவ்வெக்கன்மங்கள் செய்யவேண்டுமோ அந்தந்ததேகம் அதற்குரிய கருமங்களைச்செய்தே தீரவேண்டியதாகையாலும், மாயாசத்தியினால் விர்த்தியான குணங்களுக்கு இணங்கிய புருஷர்கள் எவ்விதமுங் கருமங்கள்செய்யாதுவிட நியாயமின்று. ஆகவே சுதந்தரதத்துவ மகான்கள்கூட சுதந்தர ஈனர்கள்போலிருந்து கருமங்கள் செய்துவருவார்களாயின் அப்பியாசியாகிய நீ யெப்படிச்செய்யாது விடக்கூடும். இதனால் யெவ்விதத்தும் கருமஞ்செய்தே தீரவேண்டுமென்பது கருத்தாம். 5

சுவாமின்! கன்மங்கள்செய்யாத சிலர் பெரியோர்களென்று அங்குமிங்கு மோடித்திரிகின்றார்களே, அவர்களுடைய கதியென்ன? அருச்சுன! அவர்களுக்குக் கதியென்ன, அதோகதிதான்; அஞ்ஞானமே சொரூபமாகக் கொண்டு கன்மஞ்செய்யமுடியாத சோம்பேறிகளாய்ப் பொய்வேடம் பூண்டு பிறர் பொருளை அபகரிக்கவேண்டுமென்னும் அவாக்கொண்டு வெளிக்குப் பகவானைத் தியானஞ் செய்கிறவனைப்போலப் புறக்கரணங்களாகிற கன்மேந்திரியங்களை மட்டும் நிக்கிரகஞ் செய்து விஷய இச்சையை மனதில் வைத்துக் கொண்டே யிருப்பார்கள். இவர்களே சுத்த மூடாத்மாவாவர்; இடம்பத்தோடு மகிமையையும்பெறப் பிரியமுள்ள இவர்களுக்குக் கதி சகதியேயாம். 6

சுவாமின்! நற்கதியடைய வேண்டுமென்னும் ஆசையையுடையவன் கருமங்கள் செய்யவேண்டுவ தெப்படி? அருச்சுன! மனமுதலாகிய அந்தக்கரணங்களை விஷயங்களிற் செல்லாதடக்கி பலனை யபேக்ஷியாமல் கன்மேந்திரியங்களினாலே வருணாச்சிரம தன்மத்துக்கேற்ற கன்மத்தைச் செய்துகொண்டு வருவன். இவ்வாறு கிரமமாக கன்மஞ்செய்துவரின் சித்தம் சுத்தமாம். இதனால் ஞானமும் * லப்தமாம். பிறகு ஞானத்தால் மோக்ஷங் கிட்டுமென்றறிவாயாக. 7

* லப்தம் - லபிததல.

அருச்சுன! சாங்கியர்களென்கிற ஞானயோகியாவார் கன்மஞ்செய்வது பந்தத்தை விளைவிக்குமென்று சொல்லுவார்கள். ஆனாலது சரியல்ல; எவ்வாறெனின், அவர்கள்சொல்வது † நிஷேதமாகிய காமிய கன்மங்களைப்பற்றியேயன்றி நிஷ்காம கன்மங்களைப்பற்றிக் கூறினார்களில்லை. ஆகையால் கன்மப்பிரதி பிரயோஜனத்தை யெதிர்நோக்காது ஈசுரார்ப்பணமாகவே புண்ணிய கன்மங்களனைத்தையும் நீசெய்தே வரவேண்டும் அவ்வாறுசெய்யாவிடின் இந்த அருமையான சரீரமெடுத்ததா லடையவேண்டிய ஆத்மலாபம் லோபமாகும். எப்போது ஆத்மலாப மில்லையோ அதனால் சென்மங்கள் அநந்தமாகவரும். இதனாலேயே பேதாபேதங்கடந்த பெரியோர்களென்கிற மகான்களும் நிஷ்காமிய கன்மங்களை உலகத்தோடுகூடியே அவ்வப்போதுசெய்து வருவார்கள். ஆகவே பேதபுத்தி வசத்தனாகிய நீ யெப்படி கன்மத்தைச் செய்யாம லிருக்கக்கூடும்? 8

* சாங்கியகன்மயோகியாவான் தான்கொண்ட சாதனங்கள் ஒருவாறு முற்றுப்பெறும் வரையில் தன்சரீரத்தை மிகச்சாக்கிரதையாகக் காப்பாற்றி வரவேண்டிய தவசியமாகும். எனனெனில், ஸ்தூலத்தைக்கொண்டே சூக்ஷுமத்தைக் காணவேண்டுவது சாஸ்திரோக்தமும் அநுபூதிசியாயமுமாகவிருத்தலால் எவ்விதத்தும் உடல்காப்பில் இலக்ஷியம் வைத்தே வரவேண்டும். இதன்றி, தேகவிர்த்தியால் ஆயுள் விர்த்தியும் ஆயுள்விர்த்தியால் யோகஞானானுபூதி விர்த்தியுமுண்டாமென்பதற்கும் போதியசான்றாகக்காட்டிய திருமூலர் திருமந்திரத்தானுமுணர்க.

### திருமந்திரம்.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே. 1

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயிற்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. 2

இன்னும் புண்ணியவழியால் வந்த பொருளைக்கொண்டே மேற்கூறிய ஐவகை யக்கியங்களையும் வேத சாஸ்திர விதிப்படிச் செய்துமுடித்து மிஞ்சியபொருள்கொண்டே உடல்காப்புக்

† நிஷேதம் - விடக்கூடியது.

குபயோகப்படுத்தல் நீதியாகும். எக்கியசேஷத்தாலே சரீரத்தைக்காப்பாற்றாதவன் ராசததாமதகுணங்கள் நீங்கப்பட்டு ஆத்ம தரிசனத்துக்குப் பக்குவப்படமாட்டானாதுபற்றியேயென்க. இந்தசாங்கியர்கள் தவிர ஞானயோகியரும் தங்கள் தங்களுக்குரிய நித்திய நைமித்திக கர்மங்களும், எக்கியாதியனவும் முறையே செய்யவேண்டுவ தவசியமேயாம். மற்றும் மாயாசம்பந்தனாகிய கன்மயோகிக்குக் கன்மயோகம் மிகவும் சாத்தியமானதாக முடியுமேயன்றி அசாத்தியமாகாது. ஞான நிஷ்டாபரனுக்குமப்படியே சர்வசாதாரணமாய் முடியுமேயன்றி அசாத்தியமாகமாட்டாது. இதனால் நீ யெவ்விதத்தும் கர்மயோகஞ் செய்யவேண்டுமென்க.

இன்னும் இக்கன்மங்களுள் 'யஞ்ஞார்த்த கன்ம' மென்கிற ஈசுரப்பிரீதியாயுள்ள சத்கன்மங்களைச் செய்வதும் அதற்கென புண்ணியவழியாகப் பொருளசம்பாதிப்பதும் முக்கியமானதே தவிர ஆத்மார்த்தமாக (அதாவது சொந்தபிரயோசனத்தைக் குறித்த) எந்தக் கன்மசம்பாத்தியமும் உலகபந்தத்துக் கேதுவான கன்மத்தையு மல்லவென் றறியவேண்டும். இவ்வாறு தெரிந்து கன்மம் புரிந்தவன் எவனோ அவன் மோக்ஷத்துக் கருகனாவன். 9

உள்ளுரை:—எக்கியாதிய கர்மயோகியானவன் தான்கொண்ட சத்கர்மாக்களினிது முடியும்படி நன்மார்க்கத்தால் பொருளைத் தேடும்போதே 'இதை நம்பிரயோசனத்துக் குபயோகிப்போ' மென்றெண்ணாது யஞ்ஞாதிகளைச் செய்துவருவானேல் அதனால் பகவான் ஆராதனையடைந்து அன்புமீதூற, அவனது அநாதிகால சம்பந்தமாயுள்ள கர்மவாசனையையொழித்து மோகமற்றதான † ஆத்மாவலோகனத்தையு முண்டுபண்ணுவனென்க.

இன்னுங் கேட்பாய் அருச்சுன! இந்தகைய உத்தம கன்மத்தைப்பற்றி பூர்வம் பிரம்மதேவரால் சொல்லப்பட்ட சிலாக்கியமான வாக்கியங்களையும் ஈண்டெடுத்துக் கூறுதும்: கன்ம பந்த சகிதமான ஜீவர்களைச் சிருட்டிசெய்த பிரமன் அவர்களை நோக்கி ஜீவர்களே. நீங்கள் விட்டுணு ரூபமாயுள்ள யக்கியகன்மங்களைச் செய்வித்து விருத்தியடையுங்கள். அதனாலுங்களுக்கு இஷ்டகாமியார்த்தங்களெல்லாம் எளிதில் கைகூடும். 10

† ஆத்மாவலோகனம் - ஆன்மதரிசனம.

எப்படியென்றால் அந்த யெக்கியத்தினாலே தேவப்பிரீதியாக ஆராதனைசெய்து வருவீர்களாயின் அதன் பிரயோசனமாக உங்களுக்கு அந்தத்தேவர்கள் மழைபெய்யச்செய்து சுபிக்ஷத்தையுண்டுபண்ணுவார்கள். ஆகவே அந்தத்தேவர்களும் நீங்களும் பரஸ்பரம் விருத்தியடைந்து மேன்மையை யடையுங்களென்று கூறியவாறு நாளதுவரையிலும் நடந்தேறி வருகின்றது. 11

அருச்சுன! ஜீவகோடிகள்செய்து வராநின்ற இவ்வித எக்கிய கன்மங்களினாலே தேவர்களெல்லாம் சந்தோஷசித்தத்தோடு மழைமூலமாக அனைவர்க்கும் இஷ்ட காமியார்த்தங்களைக்கொடுத்தருளும்போது அந்தப்பதார்த்தங்களைத் திரும்பவும் எக்கிய மூலமாய் அத்தேவர்கட்கு ஆராதனைசெய்வித்துப் பிரசாத பலனைப்புசியாது, சுதந்தரமாகத்தானே புசிக்கிறபாவியாயல் உட்கொள்பவன் எவனோ அவன் மகான்களாலே தூஷிக்கப்படுவதுமன்றி பரமமூடனும் திருடனுமாவானென்றறிகுதி. (இங்கே திருடனென்றது தேவர்களாற் றரப்பட்ட பொருளைக் கொண்டு அவர்களுக் கர்ப்பணஞ்செய்யாது தானே யனுபவிப்பவனுக்காகுமென்க.) 12

இன்னும் மேற்கூறிய எக்கியங்களானவை பஞ்ச எக்கியங்களாகும்; இவ்வித பஞ்ச எக்கியங்களையுஞ் செய்து மிஞ்சிய அன்னபானாதிகளைத் தெய்வப்பிரசாதமாகக் கொள்ளக்கூடிய மகாவிவேகியானவன் பஞ்சமகாபாவங்களினின்றும் விடுபடுவான். இவ்வாறன்றித் தன் சொந்த குடும்பத்தார்களோடுமட்டும் புசிப்பானாயின் அந்த துராசாரன் பாபரூபமாகிய அன்னபானாதிகளைப் புசிக்கின்றானென்றறியக்கடவாய். ஒப்பற்ற புண்ணிய கன்மங்களாலே லோகமெல்லாம் இரக்ஷிக்கப்படுகிறபடியால் நீயும் கன்மங்களை செய்யவேண்டுமென்றறிவாயாக. 13

பஞ்சமகா எக்கியங்களாவன:—தேவ எக்கியம், பிரம்ம எக்கியம், பிதுர் எக்கியம், மனுஷிய எக்கியம், பூதஎக்கியம் என ஐந்து வகைப்படும் இவைகளுள் தேவயெக்கியமாவது அக்கினியில் ஓமஞ்செய்தல்; பிரம்ம எக்கியமாவது வேதாத்தியயனஞ் செய்தல்; பிதுர் எக்கியம் பிதுர்த்தேவதைகளுக்குத் திருப்தி செய்தல்; மனுஷ எக்கியம் வந்த ‡ அதிதிகளுக்கு அன்ன வஸ்திராதியன கொடுத்தல்; பூதஎக்கியம் இதரசெந்துக்களுக்கு இசைந்த ஆகாரங்கொடுத்தல் என்பனவாம்.

‡ அதிதி - சந்நியாசி.

இன்னும் உலகங்கள்யாவும் கன்மங்களாலேயே விளங்குகின்றதெவ்வாறெனின், பிராணிகள் சுக்கில சுரோணிதத்தாலே விருத்தியடைந்ததற்குக் காரணம் அன்ன காரங்களாம்; அன்ன காரங்களுக்குக் காரணமாயுள்ளதுமழையும், அம்மழைக்குயேது இந்திரனும், இந்திரனது ஏவுதற் பிரசாதத்துக்குக் காரணம் எக்கியங்களும், எக்கியங்களுக் கேதுவானது கன்மமுமாகுமென்க. 14

சர்வாதாரமாயுள்ள அந்த சத்கர்மங்களைப்பற்றி வேதங்களிற் சொல்லப்பட்டுள்ளன. அந்த வேதங்கள் கடவுளாலே அருளிச்செய்யப்பட்டன. அக்கடவுள் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருந்தாலும் முக்கியமாய் எக்கியத்தினிடமாகச் சுதந்தரமாய் விளங்குவர். எவ்வாறெனின். 15

அருச்சுன! பிராணிகளுக்கெல்லாம் அறம்பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் விளைத்தற்குக் காரணமாயுள்ள கன்மசக்கரத்தைக் கடவுளா லேற்படுத்தப்பட்டிருந்தும் அதன்படி கன்மஞ் செய்யாதவனுக்குப் பிழைப்பு இழப்பாகும்; எவ்வாறெனின் கடவுள் வாக்காகிய வேதத்தினாலே புருஷர்களுக்குக் கன்மத்திலே முயற்சியுண்டாம். அக்கன்ம முயற்சியால் மழையும், அம்மழையால் அன்ன மூலப்பொருள்களும், அப்பொருள்களால் சீவர்களும் உண்டாகின்றார்கள். இந்தச் சீவர்களுக்குக் கன்மத்திலே உளக்கப்பாடுண்டாம். இவ்வாறாய் வருகிற கன்மசக்கரத்தை அநுட்டியாதவன் பாவரூபமாயிருக்கிற ஆயுளையுடையவனவன். அன்றியும் கன்மேந்திரியங்களினாலே விஷயங்களில் வீழ்ந்து வீண்காலங்கழிப்பன். இவனே சுத்த அஞ்ஞானியாகும். இவனுக்கு யாதொரு நற்கதியுங்கிடையாதாகையால் கன்மங்களை க்ஷணப்போதும் விடக்கூடாவாம். அவ்வாறுவிடாது செய்பவனுக்குச் சித்தசுத்தியும், அச்சுத்தியால் முத்தியும் லபிக்குமென்று நிச்சயமா யறிவாயாக. 16

ஒருவன் கன்மயோகியாயினும் ஞானயோகியாயினும் எச்கியஞ் செய்த மிச்சத்தைக்கொண்டு வயிறுவளர்த்தல் வேண்டும். அங்ஙனஞ்செய்யாது சுயப்பிரயோசனத்தையே நாடிவருவானேல் தான் பிரவிர்த்தித்த யோகசித்தியும் மேல்பெற வேண்டிய ஞானசித்தியு முண்டாகாதென்க. அன்றியும் அவன்சரீரபோஷணையானதுபாவபோஷணையாகவும், பாவங்

களைச்செய்யும்பொருட்டாகவே ஆயுருள்ளவனுகவாவது இவ் விருவகையாய் அலக்கழியும் ஆயுருள்ளவனுகவாவது ஆய் விடுவன். இன்னும், மேற்கூறிய எக்கிய கன்மங்களை முக் கியமாகவேசெய்யவேண்டுவதென்னெனின், எக்கியமானது சூரியனது பல அபிவிர்த்திக்கும் அன்றி மேகவிர்த்திக்கும் ஏதுவாதலாலும், மேகவிர்த்தியே உலகஜீவியத்துக் காதார மாயிருப்பதாலும் அவசியமாகத் தேவப்பிரீதியான ஓமங்கள் செய்யவேண்டுமென்பதாயிற்று.)

அருச்சுன! சாங்கியயோக ஞானிக்கு மேற்கூறிய கன்ம மில்லையாகும். என்னெனில், இந்தஞானி புத்திர மித்திர களத் திராதிய பிரபஞ்சத்தில் சற்றும் பற்றற்றவனாய் ஆத்மானுபவத் திலும் ஆத்மதரிசனத்திலேயும் எப்போதும் பிரயத்நவ சதா நந்த * சம்யோகிக்கு இதையன்றி வேறுவிசேடம் ஒன்றுமில்லை யாதலால் இவன் கன்ம பாத்தியனேயல்ல. 17

இன்னும் இந்த ஞானியாவான் உலகத்திருப்பதினாலே தனக்கிஷ்டமானபோது யேதேனும் சத்கருமங்கள் செய்து கொண்டிருப்பன். அதனாலிவனுக்குப் புண்ணியமுமில்லை பாவமு மில்லையாகும். மற்றும் உலகத்திலொட்டாத ஞானியென்பவன் கன்மஞ் செய்யாமலுமிருப்பன். அதனாலவனுக்கு இன்பமும் துன்பமுமில்லையாகும். ஆனால் மோக்ஷசுகத்துக்கு ஏதும் விரோ தம் வருமெனத் தேவர்களை யனுசரிக்கவேண்டாவோ வெனின், வேண்டாம். அது இந்த ஞானிகளது அப்பியாசதிசையிலேயே யன்றி முற்றுப்பெற்றதிசையில் வாராது. அவ்வாறு வரினும் அதனாற் பாதகமில்லை. இன்னும் எறும்புமுதல் பிரமதேவர் பரி யந்தமுள்ள எந்த ஜீவபேதங்களாலும் ஞானிக்காகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையாதலின் ஒருகன்மமும் செய்யவேண்டுவ தில்லை. அன்றி ஒருசமயம் செய்வார்களாயின் அதுவும் உல கோபகாரமாகும். 18

ஆகையினாலே ஏ அருச்சுன! பலனை யெதிர் நோக்காது செய்யவேண்டிய கன்மங்களை அவ்வப்போது நீசெய்யக்கடவாய். ஆகவே மனிதன் பற்றின்றிச் சத்கன்மஞ் செய்துவருவானாயின் ஈற்றில் பரப்பிரமத்தைச் சேர்வன் என்பது திண்ணம். 19

சுவாமின்! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய இத்தகைய உத்தமகன்மத்தைச் செய்து அதனால் மேலான ஞானயோகத்

* சம்யோகம் - சேர்க்கை.

தைப் பெற்றவரு முளரோ? கேளாயருச்சுன! பூர்வம் சனகாதியர் முதலா யநேகர்கள் இக்கன்மங்களை வேதத்தில் விதித்தவாறு மனஞ்சலியாது பலப்ரீதியின்றிப் பகவத் பிரீதியாகச் செய்து மோக்ஷமடைந் திருக்கிறார்கள். இதுநிற்க; இக்கன்மத்தைவிட மேலான ஞானமென்ப துனக்குச் சித்தித்திருப்பினும் புண்ணியகன்மங்கள் செய்கிறதற்கு யோக்கியனானதால். லோகோபகாரத்தைக் கருதியாவது எப்படியும் நீ செய்தே தீரவேண்டும். 20

*திருஷ்டாந்தமாக, சனகர் முதலானவர்களுக்கு மெஞ்ஞானம் பிறந்தும், அவர்கள் க்ஷத்திரியகுலத்திற் பிறந்த காரணத்தால் சந்நியாச ஆச்ரமத்தைப்பெற ஏதுவில்லை அவர்கள் க்ஷத்திரியர்களாய்ப் பிறந்ததற்கேதுவான ப்ராப்தகர்மத்திற் கிணங்க கர்மத்தைவிடாது தங்களுடைய ஞானயோகத்தையுஞ் சாதித்துவந்தார்கள். இவர்களைப்பார்த்த பாமரஜனங்களும் அவர்களைப்போலவே நடப்பார்களாதலால்மற்றவர்களையும் நல்வழிப்படுத்தும்பொருட்டே இவ்வாறுசெய்தார்களாயினும் யதார்த்தமான அவர்களது ஞானத்துக்கு முத்தி சித்தித்தது.*

சுவாமின்! இப்போது கூறிய கன்மயோகத்தை அப்பியாசியாயுள்ள ஒருவன் செய்யவேண்டியது நியாயமே. அதைவிட்டு * ஆரூடதிசையிலுள்ளவர்களும் தாங்கள்செய்கிற கன்மங்களினால் எப்படி லோகோபகாரமாகும்? அருச்சுன! கேட்பாய்: ஆரூடதிசையை யடைந்த யாதொரு சிரேட்டர்கள் அநுட்டிக்குங் கன்மங்களையே சாதாரண சனங்களும் அநுசரிப்பார்கள். அன்றி, எந்த சாஸ்திரத்தைப் பெரியோர்கள் பிரமாணமாகக் கொள்வார்களோ அதையே சிறியோர்களும் கைக்கொள்வார்கள். இது உலகியல்பாதலின் உலோகோபகாரத்திற் கென்றே யறிவாயாக. 21

சுவாமின்! ஞானயோகம் சித்திபெற்ற பின்னர் லோகோபகாரமாகக் கன்மஞ்செய்தவர்கள் வேறுயாருமுண்டோ? உண்டு, சுவர்க்கமத்திய பாதாளமென்கிற மூன்றுலோகங்களிலும் எனக்காகச் செய்யவேண்டுவனவும் நான் பின்னே அடையவேண்டுவனவும், முன்னே அடையாததும் ஒன்றுமில்லையாம். அவ்வாறிருந்தும் சத்கருமங்களை மிகப் பிரீதியுடன் நானேசெய்து வருகிற

* ஆரூடதிசை - பக்குவஞானதிசை.

போது அப்பியாசியாயுள்ள நீ எப்படி செய்யாதுவிடலாம்? ஆனால் நாம் இன்னகருமங்கள் செய்தோமென்பதை உனக்குத் தெரிவிக்கவேண்டிய தவசியமாதலின் அவைவும் கேட்பாய்: சாஸ்திரோக்தமாக விவாகமுதலியனவுஞ் செய்துகொண்டோம்; சற்குருவாகிய சாந்திபிரிஷியினிடமாகச் சென்று உபதேசமும் பெற்றோம். மற்றும் அந்தக் குருமூர்த்திக்கும் அவர்க்குச் சமானநிராான குசேலர்முதலான மகாப்பிரபதிகளுக்கும் பணிவிடை முதலானவையுஞ் செய்து இன்னும் அன்னவர்போன்ற மஹாத்துக்களின் பாதரேணுக்காகப் பின்றொடர்ந்து திரிந்தும், மற்றும் வேதோக்தமான சத்கருமங்களையும் நான்செய்து வருகிறது உனக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்திருந்தும் தெரியாதவன்போற் கேட்டனையே! 22

சுவாமின்! தேவரீர் எனக்கெடுத்தோதிய உத்தம கன்மத்தை லோகோபகாரமாகச் செய்யாவிடின் யேதும் தோஷமுண்டோ? ஆம்; அருச்சுன! நாம் கன்மஞ்செய்து காட்டாதவரையில் உலகத்தார் கன்மஞ்செய்யு முறைதெரிந்து நடத்தவும், அதனிடத்தில் விருப்பமுமற்றவர்களாய் விடுவார்களன்றோ? ஆதலின் அதநிமித்தம் நாமும் செய்யவேண்டியதா யிருக்கிறது. இவ்வாறு கன்மஞ்செய்யாது விடுவேனேயாயின் யாவரும் என்யதார்த்த மார்க்கத்தையே யனுசரிப்பார்கள். ஆகையிறுலென்க. (இதனால் வருணம், ஆசிரமம் என்னு மிரண்டையும் அனுசரித்தே கன்மஞ்செய்ய வேண்டுமென்பது பெறப்பட்டது.)

இன்னும் உலகம் உய்யும்பொருட்டாக நாம் கன்மஞ்செய்து காட்டாதவரையில் வீணே வருணாசிரம தருமங்கள் செய்யு முறையறியார்களாய்க் கண்டபடி கன்மங்களைச்செய்து நியமமாவதன்றிப் பாவத்துக்காளாகி நரகத்தையடைவார்கள். இவர்கள் இவ்வாறு கெடுதற்கும் நாமே காரணபூதரானோம். ஆகையினாலேதான் பிரம்மஞானியா யிருப்பினும் இவ்வடிகள் உய்யுமாறு காருண்யமாகக் கன்மஞ்செய்து வரவேண்டுமென்று வேதாதிகள் ஓதாநிற்கும். 24

ஆயின், அந்த பிரமஞானிகள் கன்மஞ்செய்ய வேண்டிய விதத்தையும் விவரிப்பக்கேட்பாய்: அஞ்ஞான வசத்தர்களாயுள்ளவர்கள் சுயப்பிரயோசனத்தை யெதிர்நோக்கிக் கன்மஞ்செய்வதுபோலல்லாது நிராசையாய் லோகோப காரார்த்த

மாகவே தற்சுதந்தரமன்றியும் செய்து வருவார்களென்றறிய வேண்டும். 25

சுவாமின்! கூறியதறிந்தேன்; அவ்வாறாயின், சர்வஜீவ தயாசொரூபர்களான பிரம ஞானியர்கள் அபக்குவர்களுக்கு நேரே இதோபதேசமும் தத்துவமார்க்கத்தைப் பற்றியும ஏன் உபதேசிக்கக்கூடாது? அருச்சுன! சுயப்பிரயோசனத்தைக் கருதி கன்மஞ்செய்யும் அஞ்ஞானியர்களுக்குப் பிரம்மஞானியர் 'நிஷ்காமியமாகக் கன்மஞ் செய்யவேண்டு' மென்று கூறின் அவர்கள் புத்தியில் பேதகந்தோன்றும். அதனாலதுகூடாதாம்; ஏனெனில், இவர்களில் காமியமாயினும் புண்ணிய கன்மங்களைச் செய்யுந்தவர்களுங் கலந்திருப்பார்களாதலால் அவர்கட்கு எவ்வாறு தத்துவ உபதேசஞ் செய்யலாகும்? ஆதலினாலேயே ஞானிகள் தங்கள் வருணாசிரமத்துக்குரிய கன்மங்களசெய்து மற்றவர்களையும் அவரவர்கன்மத்தில் ஊக்கப்படச்செய்யவேண்டுமேயன்றி தத்துவ உபதேசஞ்செய்ய நியாயமில்லையெனக. அன்றி, உபதேசிப்பார்களாயின் அவாகளது நன்மையைக்கருதித் தீமைசெய்ததேயாகும். 26

ஆதலால் ¶ அஞ்ஞானிகள்செயயவேண்டிய கன்மததை ஞானியானவான் நனறாயும் ஊக்கமாயுஞ்செயது அவர்களையும் அக்கன்மத்தையே அநுசரிககுமாறு செயதல்வேண்டுமென்பது நன்கு விளங்குகின்றது.

சுவாமின்! ஞானியர்செய்யுங் கன்மத்துக்கும் அஞ்ஞானிகள்செய்யுங் கன்மத்துக்கும் பேதமென்ன அருள்செய்க; அருச்சுன! மாயாசம்பந்தமான மூவிதகுணங்களோடுங்கூடிய தேகேந்திரியாதிகளே நாமென்கிற அகங்காரத்துடன்கூடிய அஞ்ஞானியானவன் அந்தமாயையினாலேமறையப்பட்டுள்ள அபுத்தியினாலே [illegible] கன்மங்களெல்லாம் நான் செய்கிறேனென்றெண்ணுவன் [illegible] பிராரசித்தமாய்வந்த பிரதகன்மத்தில்பந்தமேவினையுமெனக. 27

மற்றும் ஞானியானவன், தான் கன்மஞ்செய்யும்போது "தேகேந்திரியாதிகளும் நாமல்ல; கன்மங்களும் நமக்கல்லவென்றுந், தன்னைத்தானறிந்தவனுய் மாயாசம்பந்தமானதேகேந்

¶ சுலோ - அஞ்ஞானியென்றது, ஆத்மஞானம் பூர்த்தியாயுணராத கன்மிகளையெனக

கிரியாதிகளாலே செய்யப்படுகிறகன்மம் திரிவித காரணங்களாலேயே செய்யப்படுகிறதென்றும், ஒருகன்மமும் தான் தனக்காகச் செய்கிறதில்லையென்றுந் திடமான நிச்சயஞ் செய்திருப்பான். இந்த நிச்சயத்தாலேயே மோக்ஷமெய்துவனென்றறிக.

மாயா விசேஷத்தினாலே உண்மையறியாத மந்தரபுத்தியுடையோர்கள் தங்களிஷ்டமெவ்வாறோ அவ்வாறெல்லாம் கன்மங்களைச்செய்வார்கள். எல்லாமுணர்ந்த ஞானிகளால் அவர்களது புத்தியை மாற்றலாகாது; இவ்வாறு ஞானியர் முதலினோரும் கன்மங்கள் செய்யவேண்டுவது அவசியமாயிருப்பதால் நீயிப்போது பிரமஞானியுமல்லவாதலின் கன்மத்தையேசெய்யவேண்டும். 29

முக்குணகாரிய மின்னனவென்று வுனக்குத் தெரிவிக்கின்றோம் கேட்பாய்:—மூலப்பிரகிருதியென்கிற மாயையில் ஆடும் சத்திகள் மூன்றென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அம்மூன்றையுமே யிங்கே முக்குணங்களென்றது. அவை 1-சத்வம், 2-ராசதம், 3-தாமதம் என்பனவாம் அவைகளில் சத்வம் — நன்மையுற்றது; ராசதம் — சுருசுருப்புற்றது; தாமதம் — தீமையுற்றது; இக்குணங்கள் தனித்தனியே சேடிப்பதில்லை; எப்போதுங்கலந்தே வியாபிக்கும் சுபாவத்தோடுங்கூடியன. இவையொன்றுக்கொன்று சமமாய்க் கலந்திருப்பதில்லை. சாதாரணமாய் மூன்றில் ஏதோ ஓர்குணமாத்திரந் தனியாய் நிற்பதுபோலவும், மற்றையிரண்டுகுணங்களு மில்லையெனத்தோற்றும்விதமாயும் அவ்வளவு ஏற்றக்குறைவாயுங் கலந்துநிற்கும்; இவ்வாறிய குணங்கள் சேடித்தலை ஞானிகளறிவார்கள். எவ்வாறெனில், மனதில் ஆசை ஜனித்தால் 2-வது, குணமேலிட்டிருக்கிறதென்றும், மதாசாரக் கன்மங்களைச் செய்ய வெறுப்புண்டாகும்போது 3-வது குணம் மேலிட்டிருக்கிறதென்றும் அக்கடமைகளைச்செய்ய விருப்பமுண்டாயின் முதலாவது குணம் சேடித்திருக்கிறதென்றும் அறிந்துகொண்டு ஞானிகள் அதன்வழி செல்லாதடக்கிநிற்பர். அஞ்ஞானிகளோவென்றால் அதன்வயப்பட்டுத் துன்புற்றுச் சென்மத்துக்குள்ளாவார்களென்பது திண்ணம்.

சுவாமின்! நான் கன்மஞ்செய்யவேண்டிய விஷயத்தை தேவரீர் கிருபாகாரணமாக வற்புறுத்துவதால் எவ்வாறுசெய்ய வேண்டுமோ அந்த விவரத்தைத் தெரிவிக்கக் கோருகின்றேன்.

அருச்சுன! தெய்வாதீனமாயிருக்கிற கன்மத்தைச் செய்கின்றோமென்றெண்ணியும், பஞ்சேந்திரியங்களின் வழிசெல்லாது பலனையும் எதிர்நோக்காது சர்வகன்மங்களையும் நமக்கே அர்ப்பணஞ்செய்து, 'நான்செய்கிறே' னென்கிற அகங்காரத்தையும் விட்டு, 'இந்த கன்மத்தைச் 'செய்யவேண்டுமே' யென்று மனதில் வருத்தமு மடையாது யுத்தத்தையே செய்யக்கடவாய். 30

சுவாமின்! தேவரீர் கூறியவாறு செய்வேனானால் யானடையும்பலன் என்னவோ? அருச்சுன! "ஐயோ! துக்கயேதுவான கன்மத்தைச் செய்யச் சொல்கிறார்களே" யென்றெண்ணாமல் பத்திசிரத்தையுடன் நம்விஷயத்தில் அருவருப்பின்றி யென்னாற் கூறப்பட்டபடி யுத்தகன்மத்தைச் செய்வாயானால் சித்தசுத்தியுண்டாகி அதனால் ஞானமும், ஞானத்தால் கன்மபந்தங்களினின்றும் விடுபட்டு மோக்ஷமு மெய்தப்பெறுவாய். 31

சுவாமின்! இவ்விதமாகக் கன்மஞ்செய்யாதுவிட்டேனானால் எனக்குண்டாந் தோஷமென்ன? அருச்சுன! நாம்மேலேகூறிய நமது * மதத்தில் அருவருப்புற்று யாவர் செய்யாது விடுவார்களோ அவர்கள் பிரம்மஞானமும் கன்மஞானமுமிழந்து கதியடைவதற்குச் சாதகமான யாதொரு ஞானமுமின்றி விவேகங்கெட்டு நாசமடைவர்கள். ஆகையினாலே நீகன்மத்தை விடாது செய்க. 32

சுவாமின்! ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் சுயகன்மங்களாலேயே சுலபமாய் மோக்ஷமடையவேண்டிய நியாயமிருக்க, பலனை விரும்பாமலும், பஞ்சேந்திரியங்களின் விஷயத்தையொழித்தும் யாவரும் ஏன்சுயகன்மங்கள் செய்யவில்லை? அருச்சுன! சரீரத்தின் குணதோஷ முதலானவைகளை யறிந்திருக்கின்ற மகான்கள் முதல் ஏனையவர்களும் அவரவர்கள் முன்செய்துள்ள கன்மானுசாரமாக ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமான கன்மானுபவம் ஏற்பட்டிருக்கிறதுபோல அஞ்ஞானியர்களும் முன்னைய கன்மமிட்டான துர்ப்புத்தியால் துர்க்கன்மங்களை யனுபவிக்கும்போது அவர்களாலே பஞ்சேந்திரியங்களை யெவ்வாறு அடக்கக்கூடும்? அன்றியும் அவர்கட்கு இதுசெய்யவேண்டும், இதுசெய்யா தொழியவேண்டுமென்று சொல்வதும் பிர

* மதம் - சம்மதம் அல்லது அபிப்பிராயம்.

யோசனமற்றதாய் முடியும்; இக்காரணத்தாலேயே அனைவராலும் சுதன்மஞ் செய்யக்கூடியதா யில்லையென்றறிவாயாக. 33

சுவாமின்! யார்யாரும் பூர்வசென்ம வினைக்கீடாக அநுபவிக்கவந்த யிந்தசென்மத்தில் வினைப்பயனை யனுபவித்தலாகிய காரியத்திலிருக்கும்போது பஞ்சேந்திரியங்களையும் எவ்வாறு நிக்ரகஞ் செய்யக்கூடும்? அப்படிக் கூடாதபோது அதனால் விருப்புவெறுப்புண்டாகித் தப்பாமல் பந்தமுண்டாதற்குச் சந்தேகமுமில்லையே. ஆகவே சீவர்களை யெவ்வாறு குற்றங்கூறலாம்? அறிவிற் சிறந்த அருச்சுன! விஷயங்களைக் கிரகிக்கும் பஞ்சேந்திரியங்களானவை நல்லகாரியத்தால் சந்தோஷமும் தீயகாரியத்தால் வெறுப்புமுறுகின்றன, இவ்வாறனுபவித்தல் சந்நியாசிகளுக்கு விரோதமாதலால் அந்த விருப்பு வெறுப்பின்வழி யனுசரித்தல் கூடாவென்று சாஸ்திரங்களாலேயும் பெரியோர்களாலேயும் விளங்குகின்றன. பிராப்தவசத்தினாலே ஆற்றிடை விழுந்துதவிக்கின்ற மனிதனைக் கரையேறவொட்டாமல் அவ்வாற்றுநீரிழுத்து அழுத்துவதுபோலவே சாஸ்திரங்களும் முன்செய்த தீவினைப்பயன்களும், அவனவன் உத்தமகன்மங்களைச் செய்து புண்ணியமேலீட்டினாலே ஈசுர உபாசனையைச் செய்யவொட்டாமல் தடுக்கின்றன. இவ்வாறு சத்கருமந்தடைபடவே விஷயபோகங்களையிச்சித்து அதனால் விருப்புவெறுப்பும் விர்த்தியாகி பாசபந்தங்கள் பற்றும்படிச்செய்விக்கும். இதன்றி, பூர்வம் புண்ணியகன்மங்கள்செய்து பகவானை யுபாசித்திருந்தால், நிவிர்த்திசாஸ்திரங்களில், விருப்புவெறுப்பின்றி ஈசுர உபாசனை செய்து மோக்ஷமடையச் சொல்லியவற்றையே நம்பியுபாசித்து மோக்ஷமடைய வேண்டுமென்னும் பிரியமுள்ளவனைப் பஞ்சேந்திரிய நிக்ரகஞ்செய்யாமல்விடும்படி அவனது பூர்வகன்மமானது ஒருபோது மிழுக்காதாம். ஆகவே அவன் அவ்வாறேசெய்து மோக்ஷமே யடைவன். ஓடமேறியவனை ஆறிழுக்காது கரையேறிச் சுகமாய்ப் போகச்செய்வது போலவே நீயும் அநேக சென்மங்களில் புண்ணிய கன்மங்கள் செய்து அதன் சாக்ஷியாக விஷயபோகங்களில் விருப்பமின்றி மோக்ஷத்தி லிச்சை யுடையவனா யிருப்பதினாலேயே அதை நிறைவேற்றும் பொருட்டுப் பரப்ரம்மசொரூபனான நானே உனக்கு இரதசாரதியாக வந்திருப்பதுமன்றி ஞானோபதேசமுஞ் செய்து வருகிறதினாலே

உன்னைப்போன்றவர்களுக்குப் பஞ்சேந்திரியநிக்ரகஞ் சர்வசாதாரணமாய்க் கூடுமாகையால் இராகத்துவேஷமின்றி க்ஷத்திரிய தருமமான யுத்தஞ்செய்து பகவத்பிரீதி செய்வாயாயின் இந்த ஜென்மத்திலேயே மோக்ஷமடைவாய்; இதைத்தவிர மோக்ஷமடைய வேறுவழியில்லை. 34

(கற்காலத்திற் பெரும்பாலார், "சாஸ்திர ஆராய்ச்சிக்கும் புருஷப் பிரயத்தனத்துக்கும் சவகாசம் எங்கேயிருக்கிறது" என்றுகூறி வீணே சோம்பேறிகளாய்க் காலங்கடத்துகிறார்கள். பிரதமமாக சத்சாஸ்திர ஆராய்ச்சிசெய்ய வெண்ணங்கொண்டபோது துவக்கத்தில் விருப்புவெறுப்பை நாளடைவில் நசித்துவரல்வேண்டும். ஏனெனில், புருடனானவன் மாயாசுபாவ வியல்பானவனாதலால் இராகத்துவேஷங்களின் மூலமாகவே அவனைத் தன்வழியிழுத்து விஷய விவகாரங்களில் நடிப்பேற்றுகின்றது. இதனால் அவன் தனக்குரிய யதார்த்த தர்மங்களைவிட்டு இதரதர்மங்களை விரும்பிச்செய்கிறான். ஆகையால் அவன் இராகத்துவேஷங்களாகிய எண்ணங்களை அவற்றின் சத்துருவாகிய விவேகதிடத்தைக்கொண்டு அடக்கிவருவானேல் காலக்கிரமமாகச் சாஸ்திராராய்ச்சியில் கருத்தொருமித்துவர சாத்தியமாம். ஆதலினாலே யாவரும் இராகத்துவேஷங்களுக் குட்படாதிருத்தல் வேண்டும். இன்னும், அவை புருடனது ஞானவிர்த்திக்கு இடைசத்துருவாகின்றன; சன்மார்க்கத்தில்நடக்க இச்சைகொண்டு செல்லுழி மார்க்கத்திற் கள்ளரைப் போன்று மறிக்குமாதலாலெனக.)

சுவாமின்! மோக்ஷமெய்தற்குச் சாதனம் கன்மமென்றீர்கள்; அப்படியாயின் இந்த யுத்தகன்மத்தையன்றி வேறே சிரேட்டமான எந்த கன்மத்தையாவது ஏன் செய்யலாகாது? அருச்சுனனே! க்ஷத்திரியவம்சத்திற் பிறந்த உன் சொந்தகன்மத்தைக் கைவிட்டு வேறெந்த கன்மத்தையுஞ் செய்தல் சாஸ்திரவிரோதம். அன்றியும், குணமான பிறனது கன்மத்தைக் காட்டிலும் குணமிலாச்சொந்த கன்மமே மிகமேன்மையதாதலால் விருப்பு வெறுப்பின்றிச் சாவதானமாகச் சுதன்மமாகிய யுத்தவிர்த்தியையேசெய்க. இதுவே உனக்குச் சிரேஷ்டத்தைத்தரும். ஒருக்கால் யுத்தவாயிலாக மரணமுறினும் அதனாற் பரலோகமுங்கிடைக்கும்; பிறகன்மங்களைச்செய்தால் இம்மைமறுமைகளில் பயம், துக்கம், குறைவு இவைமுதலியன வுண்

டாகும். இதுவன்றித் தங்கள்தங்கள் சொந்தகன்மங்களி லெந்தக்குறை யிருந்திடினும் அதனாற் சிறிதும் இழிவில்லை. பிறகன்மத்திலோ இழிவுண்டாம். 35

சுவாமின்! ஒருவன் விருப்பு வெறுப்படைந்து பாவகன்மஞ்செய்யாது புண்ணியகன்மமே செய்யவேண்டுமென்றெண்ணி யிருப்பினும், அவ்வாறு செய்யவொட்டாமல் மற்றொருவனால் வற்புறுத்தியேவப்பட்டு சனனமரணங்களுக் கேதுவான பாவகன்மங்களைச் செய்யும்படி ஆக்குவித்தவன் யாவன்? 36

அருச்சுன! சத்கர்மஞ் செய்யக்கூடியவனைப் பாவகன்மஞ் செய்யும்படி ஆக்குபவன் யாவனெனின், இராசதகுணத்திற் றோன்றிய காமனென்பவனேயாம். அந்தக்காமனே தனக்கிச்சையானபதார்த்தங் கிட்டாவிடத்துக் குரோதரூபமாய் மாறுதலடைந்து போகங்கள் எவ்வளவு வரினும் திருப்தியடையாமல் தன்வசப்பட்டாரையெல்லாம் பாவகன்மங்களையே செய்யத்தூண்டியும் வருவான். ஆகவே மகாபாவியும், மோக்ஷமார்க்கத்திற் செல்பவனை வழிமறிக்குங்கொடிய கள்வனுமிவனேயென்றறிக.

ஒருவனால் கொண்டாடப்படுகிற கன்மங்கள் பலவற்றையும் முக்கியமாக விருத்திசெய்ய முன்வருவது காமமேயாம். ஞானயோகியர்களையும் பூர்வவாசனையாக சப்தபரிசாதி விஷயங்களாலிழுத்து தொந்திக்கும்சுபாவமுடையதானால் சாமானியரைச் சென்னையன்னக் கவ்வாதுவிடுமோ! இந்தக் காமமே விஷயங்களிற் செல்லும்போது தடுப்பாரைச்சீறுங் குரோதமாகவுந்திரிந்து அவர்களை வருத்தாநிற்கும். இது இராசதகுணத்தி லுற்பவமாகி யோக ஞானானுபவங்களுக்குச் சகசசத்துருவாகிப் பிரம்மஹத்தி முதலான பெரும் பாவங்களுக்குங் காரண மாதலின் இதை பாவசொரூபமென்றே சொல்லப்படும். அன்றியுந் தர்மார்த்த காம மோக்ஷங்களுக்கு விரோதியாதலின் சத்துருவெனப்பட்டது.

இன்னும் இக்காம்யம்பிறவியைக்கொடுத்தே பெருந்துயராழ்த்துமென்றும், கிட்காமியமே பிறவியைக் கெடுத்துப் பேரின்பத் தாழ்த்துமென்றும் 'மணிமேகலை' யிரண்டாங்காதையிலோர் பாற் காண்டகுசெய்யுட் டுணுக்கையீண்டுக்காண்க.

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவ தறிக.

சுவாமின்! மோக்ஷாபேக்ஷைகொண்டு ஞானமார்க்கத்திற் செல்வோர்க்குக் காமன் விரோதியென்பதெவ்வாறு? அருச்சுன! புகையினால் மறைபட்ட அக்கினியைப்போலவும், அழுக்கினால் மறைபட்ட கண்ணாடியைப்போலவும், தோற்பையினால் மறைபட்ட * பிண்டம் போலவும் யதார்த்தமா யிருக்கிற ஞானத்தை இச்சையென்னுங்காமன் மறைத்துப் புருஷனை நன்மார்க்கத்தில் நடக்கவேண்டுமென் றெண்ணவொட்டாமலும் எவ்விதத்திலும் இவனது ஆத்மசொரூபத்தை யறியவொட்டாமலும் நாசமுறச்செய்வன். 38

அருச்சுன! இன்னுங்கேட்பாய்: ஞானிக்கும் ஞானத்துக்கும் சத்துருவாயும், எவராலும் அறியப்படாதவனாயும், விஷயானுபவத்தில் திருத்தியற்றவனாயும், அக்கினியைப்போன்று தகித்துத் துன்பஞ்செய்கிறவனாயுமுள்ள கொடிய † காமனாலே யதார்த்தமாயுள்ள ஞானம் முற்றிலும் மறைபட்டிருக்கும். 39

சுவாமின்! இத்தனை கொடியகாமன் எவ்விடத்துள்ளான், எவ்வகையாற் காணலாகும் என்பதை அருள்செய்க; அருச்சுன! இக்காமனுக்கு பஞ்சேந்திரியங்கள், மனம், புத்தியென்னு மிவ்விடங்களே யிருப்பிடமெனப்படும். ஆயினுமேற்கூறியவைகளில் சார்புள்ளவனாயிருந்துகொண்டு யதார்த்தமான ஞானத்தை மறைத்துத் தன்னையுங்காட்டாது தன்னை யின்னகாலத்திற் பிறந்தவனென்றும், இன்னகாலத்தில் மரணமடைபவ னென்றும், இன்னானுடைய பிள்ளையென்றும், இன்னகுலத்தவனென்றுந் தெரியக்கூடாமல் பலவிதபிரமைகளுக்கு ஆஸ்பதனாய் தேகியானவனை மோகிக்கச் செய்துகொண்டிருப்பன். 40

சுவாமின்! தேவரீர் திருவாய்மலர்ந்தருளியவாறு காமன் மோக்ஷ ஞானானுபவங்களுக்கு நேர் விரோதியாகையினாலே அப்படிப்பட்ட துட்டனை முதலில் செயிக்கிறதற்குத்தக்க உபாயத்தை அநுக்ரகஞ் செய்தல்வேண்டும்; அருச்சுன! காமனென்பான் உன்னைச்சார்ந்து வசப்படுத்திக் கொள்ளுகிறதற்கு முன்னரே ஆசிரியருடைய கிருபைபெற்று இராகாதிகளைவிட்டுப் பத்தி சிரத்தையுடனே விகிதப்பட்ட புண்ணிய கன்மங்களில் பஞ்சேந்திரியங்களையும் நியமித்துவிட்டால் புத்திமுதலான இந்திரியங்கள்

* பிண்டம் - கர்ப்பப்பையிலுள்ளசிசு.

† இங்கு காம்யம் என்னுங் குணத்தைக் குணியாக உருவகஞ்செய்யப்பட்டது.

[stain]ாவும் நிக்ரகஞ் செய்த [stain] அப்போது சாத்திரங்க ளாலும் ஆசிரியராலுஞ் [stain]க்கிற அர்த்தங்களை ஆராய்ந்து நிச்சயித்திரு[stain] ஞானத்தையும், அவ்வாறு அநுபவமாகிய † அபரோக்ஷ ஞானத்தையும் நாசஞ்செய்யத்தக்க அந்தக்காமனை செயிக்கலாமே தவிர வேறு எவ்வித மார்க்கமு மில்லையென்றறிக. 41

சுவாமின்! ‡ சன்மார்க்கங்களில் புத்திமுதலான இந்திரியங்களை நியமித்துவிட்டால் இந்திரிய நிக்ரகமுண்டாகி அதனாற் காமனை செயிக்கலாமென்றீர்கள்; அந்த புத்திமுதலானதுகளைத் தவிர வேறே ஒருவனிருந்தல்லோ அவ்வாறுசெய்தல்வேண்டும். ஆதலினாலே அநதத் தனிமையானவனை நானறியும்படி அநுக்கிரகஞ் செய்தல்வேண்டும்; அருச்சுன! தூலபூதத் தொகுதிகளான தேகங்களைவிட சூக்ஷுமமான இந்திரியங்கள் பல; அப்பல யிந்திரியங்களிலும் மனம் சூக்ஷுமம். சங்கற்ப விகற்பங்களுக் கேதுவான அந்தமனதைவிட நிச்சயஞ்செய்கிற புத்தியே சூக்ஷுமமும சிரேட்டமுமாம். அப்புத்திக்கும் சிரேட்டமாயும சாக்ஷியாயுமிருக்கிறவரே தேகியென்கிற ஆன்மா. அவர்தான் உனது உண்மைவடிவம். அவரையே தொம்பதலக்ஷியார்த்தமான கூடஸ்தரென்றும், பிரத்தியேகான்மாவென்றும், அவரே தற்பதலக்ஷியார்த்தமான பரமாத்மா வென்றுஞ் சொல்லப்படும். அருச்சுன! இந்தநிச்சயத்தினாலே $ சஞ்சிதமும் ¶ ஆகாமியமும் நீங்கினும் 0 பிராரத்த முள்ளவரையில் திரிவித காணங்களைக்கொண்டு புண்ணியகன்மங்களையே செய்துவருவாயாகில் காமனைச் செயித்தவனாவாய்; 42

தொம்பதம், தற்பதம், அசிபதம் என மூன்றுபதமாம். இவைகளில் தொம்பதார்த்தம் - சீவன்; தற்பதார்த்தம்-ஈசுரன்; அசிபதாரததம் - அயிக்கியம்; இதுவே பதார்த்தமெனறு சொல்லப்படும,

---

* பரோக்ஷஞானம - பிரமனைசதனனிபருனை ந விசாரி தறிதல்.

† அபரோக்ஷஞானம - பிரமனைசதனனியதனதை அநநாமுகமாகநேரே தரிசித்தல்.

‡ சனமாாககம - ஈணடு மேலேகூறிவநத பஞ்ச யெஞ்ஞிய காரியங்களைச் செய்துவரல்.

$ சஞ்சிதம - நமமால் அநுபவிக்கபபடாது எஞ்சிககிடக்கும் புண்ணிய பாவக் கூட்டம.

¶ ஆகாமியம - நாம் இப்போதுசெயயும இருவினைகள்

0 பிராரத்தம - நாம இபபோது அனுபவிககிற நலவினைப்பயன தீவினைப் பயன்கள்

தொம்பதார்த்த பூதனான சீவசொரூப மெவ்வாறு தோன்றிய தெனின், அவித்தையும், அதிஷ்டான சைதன்னியமும், சைதன்னிய கற்பிதமான அபஞ்சீகிருத பூதகாரிய லிங்க சரீரமும், அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசனும், சிதாபாச தர்மமான கிஞ்சிக்ஞத்வ கர்த்ருத்வ போக்தருததுவாதி களுங்கூடிச சீவசொரூபமென்று சொல்லப்படும்.

தற்பதார்த்த பூதனான பரசொரூபம் தோன்றிய தெவ்வாறெனின், மாயையும், அதிட்டான சைதன்யமும், அதிற் பிரதி பிம்பித்த ஈசுரனும், ஈசுர தர்மமான சர்வஞ்ஞத்வாதி குணங் களுஙகூடி ஈசுர சொரூபமென்று சொல்லப்படும.

அசிபதசொரூப மெவ்வாறு தோன்றியதென்னில், கூடஸ் தனேபிரமம், பிரமமே கூடஸ்தனென்னும அயிககியார்தத மாயறிவதே அசிபதசொரூபமாம்.

அருச்சுன! கன்மங்களெல்லாம் புத்திக்கே யென்றும், ஆன்மா நிர்விகாரியென்றும், புத்திக்குச் சாக்ஷியென்றும் அறிந்து, இவ்வாறு விசாரித்த புத்தியினாலே மனதை நிக்கிரகஞ்செய்து யெவராலுஞ் செயிக்கக்கூடாத இச்சாரூபமான விரோதியாகிய காமனை செயித்துச் சந்தோஷமாயிருப்பாயாக. 43

கர்மயோக அத்தியாய

முற்றிற்று.

ஆ அத்தியாயம் 3-க்கு-சுலோகப் பொழிப்பு-162.

# நான்காவது அத்தியாயம்

# ஞான யோகம்

அத்யாயவகை : மேற்கூறிவந்த இரண்டு அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டதும், கன்மயோகத்தைச் சாதனமாகவும் ஞான நிட்டையை லக்ஷணமாகவுங்கொண்ட சந்நியாசயோகமென்னப்படுவதும பிரவிருத்தி நிவிர்த்தியென்னும் வேதார்த்தமுடிவுகளடங்கியதுமாகிய இந்தயோகத்தையே ஸ்ரீகிருஷ்ணபகவான் இந்த கீதைமுற்றிலும் போதிக்க நினைத்தாராகையால் வேதார்த்தத்தை முடிவுசெய்ததாய் நினைத்துக்கொண்டு அதன் வம்சாவளியைக் கூறித்துதிக்கின்றார்.

அருச்சுன! நித்தியத்துவமும, உத்தமமாயதும், அறிவாலறியக்கூடியதும், மோக்ஷ சுகத்துக் கேதுவாயுமிருக்கிற இந்த ஞான யோக மார்க்கத்தைப் பூர்வம் நாம் சூரியனுக்கு உபதேசித்தோம. அந்தச் சூரியன் தன்புதல்வனான வைவசுதன் மனுவுக்குபதேசித்தனன். அந்தமனு இக்ஷுவாகு மகாராசனுக் குபதேசித்தனா. 1

இவ்வாறு பரம்பரையாய் விருத்தியாகிவந்த இந்த ஞான யோகத்தைப் பிரம்மரிஷிகளும் இராஜரிஷிகளும் மற்றைய அரசர்களும் தங்கடங்கள் பிதாக்களா லுபதேசிக்கப்பெற்று அநுட்டித்து வந்தார்கள். அக்காலத்திற்கும் தற்காலத்திற்கு மிடையில் அநேக ஆயிரவருடங்கள் கழிந்தன. அவ்வளவு காலஞ் சென்றதினாலே ஆன்மகோடிகள் இந்த ஒப்பற்ற யோகத்தைக் கைப்பற்றாது நாளடையில் காமன் என்பவனைப் பின்பற்றி அவனையே குருவாகவுங்கொண்டு அவனிஷ்டமபோற் கூததாடவே, இந்தயோகம் பிரபலப்படாமற் குன்றியது. இனி இந்தயோகம் நின்றாற் பிரகாசிக்கவேண்டுமென்றே முன்னைய இரண்டத்தியாயங்களினாலுங் கூறினேம். இனிநீ நிடப்படுமாறு அந்த ஞானயோகத்தையே கூறிவருவோம கேட்பாயாக. 2

அருச்சுன! இத்தகைய யோகரகசியார்த்தங்களை மெத்தவும் பரிந்து நினக்குபதேசிக்கவந்த தேதுகொண்டென்னில், தற்போது நீ நம்முடைய அத்யந்தபக்தனா யிருப்பதுமன்றித்

தோழமையுடையவனுதலாலும், விஷயபோகங்களிற் சிறிதும் விருப்பமற்றவனு யிருப்பதாலும், இவர்களிடத்திற் காருண்ய மும் மோக்ஷத்திலிச்சையு முடையவனு யிருப்பதாலுமே புராதன உத்தம அதிரகசியமாயிருக்கிற இந்த யோகசாதனையை உனக்குச்சாதிக்க முன்வந்தோம். 3

சுவாமின்! தேவரீர் இத்துணைப்பிரியத்துவத்தோடும் எளியேனை ஒருபொருட்டாக வெண்ணிப் பரிந்து பரிந்து விரைந்து விரைந்து தயைபுரிந்து அருட்டிறமையை யென்னென்றுகருதி யென்னென்று துதிப்பேன்! அருட்கடன் மடைதிறந்த வென் ஆண்டவ! எளியேற் குபதேசித்தமைக்குக் கைம்மாறுகச் சிசுருஷைசெய்ய ஜென்மமிதொன்றும் போராதே! என்செய்வாம்! நிற்க; பிரபோ! இப்போது சொற்பகாலங்களுக்குமுன் வசுதேவர்பாற்றோன்றிய தேவரீர், அளவில் நெடுங்காலமாய் விளங்கி வருகிற ஆதித்தனுக்கு எவ்வாறு உபதேசித்தீர்கள்? இதை யோசிக்குமிடத்து முன்பின் விரோதமாயிருக்கிறதே! 4

அருச்சுன! நீகேட்பது ஒருவாறு சரியே; ஆனாலும், நமக்குமுனக்கும் அநேகஜென்மங்கள் கடந்திருக்கின்றன; அந்த ஒவ்வொரு ஜென்மங்களிலேயும் நடந்தகாரியங்களும் இருந்த ஜீவர்களையும் நாம் மாயாசுவாதீனத்தைக்கொண்டும் * சர்வக்ஞத்துவத்தைக்கொண்டுந தெரிந்திருக்கிறோம். நீயோ அஞ்ஞான வசத்தனுய் ஸ்தூலதேகத்தி லபிமானம்வைத்துக் காணப்பட்டவைகளிலெல்லாம் ஆசையுறுஞ்சீவனுயிருப்பதால் யாதொன்று மறியாய்; ஆகவே நாம் பூர்வஜென்மத்தி லோதினேமென் றறியக்கடவை. 5

சுவாமின்! தேவரீர் புண்ணியம் பாவம் ஜனனம் மரணமாகிய இவைகள் யாதொன்றுமின்றி யென்றும் உருவமற்றவனுயிருக்கின்றேனென்று முன்னே அநுக்கிரகஞ் செய்தீர்கள்; யானும் அதைநம்பியேயிருக்கின்றேன். இப்போது சாதாரண சீவர்களைப்போன்று தேவரீருக்கு ஜென்மங்களுண்டென்று கூறிவருகிறீர்கள்; இது எவ்வாறுண்டாயிற்று? அருச்சுன! சர்வ லோகாதிககியனுயுள்ள நாம்பிறந்து வளர்ந்து பரமபத மடைந்தோமென்றும், இன்னும் பலவித லீலாவிநோதங்கள் செய்வித்தோமென்றும் கற்றறிந்த அநேக மேதாவிகளுக்கும்

* சர்வக்ஞத்துவம் - பேரறிவுடைமை

இச்சந்தேகமிருப்பதால் அதனுண்மை வெளியாகும்பொருட்டு வ பார்த்தா? நீ நல்லசமயம் பார்த்தாய்; நல்லது! கேட்பாய்: முன்னேகூறியபடி நான் சனனமரண புண்ணியபாவங்களின்றி யெப்போதும் * அவ்வியக்தமாயிருப்பது தண்மையே; சற்றும் அதில் சந்தேகம் வேண்டாம்; ஆனால் அவதாரஞ் செய்தது போலத் தோற்றுகிறதேயென்றால், சுத்த † சத்துவரூபியாகிய நம்முடைய சுத்தசங்கற்பமென்னு மகாமாயை இடைவிடாத ஞானம், வைராக்கியம், எயசு, அஷ்டஐஸ்வரியம், பலமென்கிற வீரியம், லக்ஷிமீகரமென்னும் ஆறுகுணங்களோடுங்கூடி யுண்டாயிருப்பதுபோலவுஞ் செய்வித்திருக்கிறதேதவிர, நான்யதார்த்தமாய்ப்பிறக்கவேயில்லை. ஆனால் மகா மேதாவிகளெல்லாம் நாம் அவதாரஞ்செய்ததுபோல அநுமானமின்றிக்கொண்டாடுகின்றார்களேயென்றால், அஞ்ஞானவசமாய் சனனமரணங்களுக்குட்பட்டிருக்கிற சீவர்களுக்குமாத்திரம் நாம் அவதாரஞ் செய்திருக்கிறோமென்றும், சர்வவிநோதங்களும் நடத்துகின்றோமென்றும் உண்மைபோலவே தோற்றிப் பலவிதமாக அவரவர் மனசில் தோன்றியவண்ணம் வசனித்துக் கொண்டிருப்பார்கள்; இது நிற்க; சாஸ்திர புராணாதிகளிலும் விளங்குகின்றபோது இவ்வாறு கூறலாமோவெனின், அருச்சுன! அதுவும் இச்சீவர்கள் இவ்வாறாகவாவது கடைத்தேறட்டுமென்று சொன்னதேயன்றி யதார்த்தமன்று; ஆனால் இவைகளின் யதார்த்தமானது நம்முடைய மாயையைக்கடந்து நம்மை தரிசித்துள்ள மகான்களுக்கு மட்டுந் தெரியுமேயன்றி மற்றையோர்க்குத் தெரியத்தக்க தல்லவாம். 6

சுவாமின்! தேவரீர் துஷ்டநிக்ரக. சிஷ்டபரிபாலனார்த்தம் அநேக அவதாரங்க ளெடுத்துவந்ததாகக் கூறியதுபோல் இனி மானிடர்களுக்குத் தோற்றுமாறு எவ்வெப்போது அவதரிப்பீர்கள்? அருச்சுன! புண்ணியகன்மங்குறைந்து பாவகிருத்தியங்கள் எப்போது விருத்தியாகுமோ அவ்வப்போது ஒவ்வொருயுகத்திலு மவதரிப்போம். இதுநிற்க; சுவாமின்! தர்மங்குறைந்ததனாலும் அதர்மம் விருத்தியடைந்ததாலும் தேவரீர்க்குண்டாயதென்னையோ? 7

---

* அவ்வியக்தம - சூக்ஷமமானது

† சத்துவரூபம - சுத்தஞானசொரூபம்

அருச்சுன! சர்வான்மாக்களும் நம்முடைய அம்சமானதினாலே அவர்கள் நன்மைதீமையறிந்து நற்கருமங்களைப் புரிந்து ஈற்றில் நமது திருவடிக்காளாகுமாறு நம்மாலேற்படுத்தியுள்ள வேதாகமங்களில் விதித்தபிரகாரம் நடவாது அக்கிரமாதி கிருத்தியங்களைப்புரியுந் துட்டபாவிகளைச் சம்ஹரிக்கவும் நான் ஒருவனுள்ளேனென்பதை யுள்ளபடியறிந்து உள்ளன்போடு பத்திசெய்து மனவாக்குக் காயங்களால் புண்ணியகன்மங்களைப்புரிந்துவருஞ் சத்துவகுண உத்தமர்களைக் காத்தற்பொருட்டும் சமய நேர்ந்தபோது அவதரிப்போமென்க. 8

சிஷ்டபரிபாலனமும் துஷ்ட நிக்ரகமுங் கைக்கொண்ட தேவரீரால் இரக்ஷிக்கப்படுதற்கு யோக்கியமான சன்மார்க்கர்களானோரும், அடியேற்குக் குருமூர்த்தியா யிருந்தோருமாகிய துரியோதனாதியர்களோடு யான் யுத்தம்புரிதல் யுக்தமல்லவென்றால் தேவரீர் செய்தேதீரவேண்டுமென்கிறீர்கள்! இன்னுந் தேவரீர்க்கு எப்போதுஞ் சனனமேயில்லையென்றும், தேவரீரைத்தவிர அன்னியமேயில்லையென்று முன்னேசொல்லிவந்து இப்போது சற்சனரை இரக்ஷிக்கவும் துர்ச்சனரை சிக்ஷிக்கவும் அவதரிப்பதாயுங் கூறிவருகிறீர்களே! இது, சீவர்கண்மாட்டுப் பற்றுண்டாயிருத்தலுக் கேதுவாகுமோ? அறிவிற்சிறந்த அருச்சுன! உனக்குக் குருவாயுள்ளார் சாதுசன்மார்க்கிகளென்றதுண்மையே; அன்னோர் உன்னுடைய சத்துருவொடு மித்திரங்கொண்டு யுத்தம்புரிய சம்பவித்து வந்திருப்பதனாலே நீ அவர்களோடு யுத்தம்புரிதல் உத்தமமேயென்றோம்; நாம் அவதாரஞ்செய்ததாகவே நீ ஒப்புக்கொண்டால் அப்போதும் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனமான இவ்விரண்டு காரியங்களையும் லோகோபசாரமாச் செய்கிறதேதவிர நமக்கு அதனால் யாதொரு பிரயோசனமும் சந்தோஷமுங்கிடையாதாம். ஆகவே மேற்கூறிப்போந்தவைகட்கு நம்மைத்தவிர அன்னியமேயில்லாததனாலும், இந்த உலகம் கானல்நீருக்குச் சமமாகத்தோற்றுவதாலும் எட்டுணையும் பற்றுதலுண்டாதற்குக் காரணமேயில்லையாம். மற்றும் மகா சிரேஷ்டமாய் விளங்குகின்ற நம்முடைய அவதாரங்களும் உலக ரக்ஷணையை யுத்தேசித்து நம்மாற் செய்யப்படுங் கன்மங்களும் நாம் செய்பவனேயில்லையென்றும், நம்முடைய மாயாசத்தியே இவைகளைச் செய்வித்திருக்கிறதென்றும் உண்மைநூலிற்கூறும் உண்மைஞானத்தால் எவன் அறிவானோ அவன் அந்தப்பிறவி

பிலேயே தன் தேகாபிமானத்தைவிட்டு நம் சாயுச்சியபதவியைத்தவறாமலடைவானாயின் நமக்குப்பற்றுதலு முளவாமோ? இல்லையில்லை ஒருபோதுமில்லை. 9

தேவரீருடைய உண்மைவடிவத்தை யறிபவன் மோக்ஷமடைவதெவ்வாறு? அருச்சுன! விருப்பு வெறுப்பற்று குரோதம் பயமுதலியவைகளின்றி யெம்மைத்தவிர வேறே யாதொன்றுமில்லையென்று நம்பாலன்புபூண்டு மனவாக்குக் காயங்களால் புண்ணியகன்மங்களைச் செய்துவந்த முனிபுங்கவர்களான அநேக மகான்கள் நம்மனுக்கிரகத்தால் ஆத்மஞானமுற்று சாயுச்சிய பதவியை யடைந்திருக்கிறார்கள். சுவாமின்! தேவரீரையுள்ளபடி யுபாசிப்பவர் மோக்ஷமும் மற்றையோர் நரகமுமெய்துவரென்றால் அது ஏன் பக்ஷபாதமாகமாட்டா? கிருபைசெய்க. 10

அருச்சுன! மோக்ஷாபேக்ஷை கொண்டுள்ள ஒருவன் நம்மை யுபாசிப்பானாயின் அவனுக்கந்தபலமும், மற்றும் இந்திராதி தேவர்களை யுத்தேசித்துத் தேவபோகார்த்தம் உபாசித்தால் நாமே அத்தேவர்கள்பால் அந்தரியாமியாயிருந்து அவர்களிச்சித்த தேவபோகங்களையு மனுபவிக்கக் கிருபைசெய்கின்றோம். ஆகவே யிதனால் பக்ஷபாதம் எவ்வாறுண்டாகும்? அருச்சுன! எவரெவருடைய பிரார்த்தனை யெத்தன்மைத்தோ அவரவர்களும் அததற்குரிய பலன்களை யடைகிறார்களேதவிர, கற்பக விருக்ஷம்போன்றுள்ள யெமக்கு யார்பாலும் பக்ஷபாத மின்றாம். எமக்கு யாவரும் சமமே. நீ நம்மிடம் பக்ஷபாதமுண்டாயிருப்பதாகச்சொல்வது அசம்பாவித வார்த்தையென்க. இதுநிற்க; சுவாமின்! மோக்ஷார்த்தயாகவே யாவரும் ஏன் உபாசிக்கிறார்களில்லை? 11

அருச்சுன! இப்பூவுலகின்கண் வாழாநின்ற சீவர்கள் இயல்பாகவே யநுபவித்துவருகிற அநித்திய வுலகபோகத்தைவிட மோக்ஷத்தி லென்னசுக முண்டாகப்போகிறதென்றும், இந்திராதியரைக்குறித்துக் காமிய கன்மங்களைச் செய்யின் சுவர்க்காதி போகங்களைச் சீக்கிரத்திலடையலாமென்றும் எண்ணிக் காமிய கன்மங்களையேசெய்து அவ்வப்போது அவ்வப்பலனையு மனுபவித்துச் சனனமரணத்தையு மடைந்துவருகிறார்கள்; இதற்கு யாமோ காரணன்? நிற்க; சுவாமின்! இவர்களை யிவ்வாறுஉபாசிக்கச்செய்யும் ஏவுதற்கருத்தா யாவரென்று பார்க்குமிடத்து ஆண்டுந் தேவரீரென் றேற்படுகின்றதே? 12

அருச்சுன! பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்னும் நான்கு வருணத்தவர்களும், அவ்வருணத்தினர்கட்கேற்ற குணங்களும், அவர்கள் கடைத்தேறுதற் கேதுவான கன்ம தன்மங்களும், அதனைத்தெரிந்து, நடத்தற் காதாரமான வேதாகமங்களும் அமைத்துக் கொடுத்தோம். இவைகட்கு நாமே கர்த்தாவாகத் தோற்றினும், யாதொன்றும் நாம செய்யவில்லையென்றும், எப்போதும் அகர்த்தாவாகவே ஒரேபடித்தா யிருக்கிறோமென்றும் நீயறிதல் வேண்டும். சுவாமின்! தேவரீர் கூறியவண்ணம் எல்லாவற்றையும் திட்டமாய்ச் செய்துவைத்த தேவரீர்க்கு அவைகளா லேற்படக்கூடிய யேற்றக்குறையும் கன்மபந்தங் களுஞ்சாராது யெவ்வாறு அகர்த்தாவாயிருக்கக் கூடும்? இதன்றி படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களும் தேவரீரே நடத்திவருகிறதாக வேதங்களிலும் விளம்பியிருக்கின்றதே! 13

அருச்சுன! எல்லாம் நான்செய்வதாகவே வேதங்களிற் கூறினும் அது உபசார வசனமேயன்றி நாம் செய்வதேயில்லை. ஆனால் செய்ததாகவே காணப்படுகிறதே யென்றால், சூரியனது சந்நிதானத்திலே உலகமெல்லாம் எப்படி சேஷ்டிக்கின்றனவோ அவ்வாறே நம் சந்நிதான மகிமையைக்கொண்டு மாயையினாலே இந்த உலகமுதலிய சரவ கிருத்தியங்களும தோன்றி சேஷ்டிக்கின்றன. இங்ஙனம மாயையாலுண்டாய * சமட்டிபூதங்களும் சூரியசந்திர நக்ஷத்திரங்களுமே சீவகோடிகளுக்கெல்லாம் சவுக்கியமாகவும சமமாகவும் இடங்கொடுத்துச் சீவர்களாலேசெய்து வருகிற நல்வினை தீவினைகளால் யாதொரு விரோத பாவபுண்ணியங்களும் அடையாமலிருக்கும்போது அம்மாயைக்கும் † அதிட்டானமாயிருக்கிற நம்மை யெவ்வாறு சாரும்? ஆகவே அக்கருமங்களில் எமக்கு யாதொரு விருப்பமுமின்று. இவ்விதமாக நம்மையறிந்தார் யாவரோ அவர்களும் தாங்கள் செய்துவருகிற கன்மங்களாற் பந்தமுறாமல் மோக்ஷமேயடைந்திருக்கிறார்களென்றால் நமக்குப் பந்தமுண்டென்பது விந்தையிலும் விந்தையே. 14

அருச்சுன! சர்வகன்மங்களையும் நான் செய்திடினும் செய்யாதவனாயும், ‡ அசங்கனாயு மிருக்கின்றேனோ அவ்வாறே பூர்

* சமட்டி - எல்லாம

† அதிட்டானம் - காரணம—இதுநிற்க; சுவாமின? இதுகாறுங் கூறியனபோனறு கனமஞ்செய்தாருளராயின அருளிச்செய்க.

‡ அசங்கன் - ஒன்றினுமொட்டாதவன

வீகரான ஜனகாதி முதலிய மகான்களும் கன்மஞ்செய்தே மோக்ஷமடைந்திருக்கிறார்கள். அதேபோல நீயும் உனக்குரிமையான கன்மங்களையே செய்துவரவேண்டும். ஆனால் ஒருவரைப் பார்த்தொருவர் செய்கிறதுபோலவும், தனக்குத் தோன்றியபடி செய்கிற பாமரரைப்போலவுஞ் செய்தலாகா. யதார்த்தமான நம்மைத் தெரிந்துகொண்டு அதுதானாகவே யனுபவிக்கின்ற மகான்களைத்தேடி அவர்கட்குப் பக்திபூர்வமாகச் செய்யவேண்டிய தொண்டுகளைச்செய்து அவராற்றெரிந்துகொண்டு கன்மமே செய்தொழுகுவாயாக. 15

சுவாமின்! தேவரீர் இதுகாறும் எவ்வளவோ சந்தேகவிபரீதங்கட்கெல்லாம் தக்கசமாதானங் கூறிவந்து இப்போது யேதோ ஓர்மகானையடுத்துத் தெரிந்து கன்மஞ்செய்கவென்று கூறுவது தர்மமல்ல! தேவரீரது திருவடித் தாமரையைத்தவிர அடியேற்கு கதியில்லையாதலால் நம்பியிருக்கின்ற யெனக்கு இந்த கன்மதன்ம விவரங்களைத் தேவரீரே அநுக்கிரகஞ்செய்தல்வேண்டுமென்றுகேட்க, பகவான் சொல்லத் தொடங்குகின்றார்: ஏ அநுமத்துவஜ! கன்மமாவது இது, அகன்மமாவதிது, எக்கன்மத்தைச்செய்யின் பந்தத்தைத்தரும்? மற்றெக்கன்மத்தைச்செய்யின் மோக்ஷந்தருமென்றும் இந்தவிவரங்களைத் தெரிந்துகொள்ளுகிற விஷயத்தில் மகா வித்வசிரோமணிகளாயுள்ளவர்களுங்கூட விசாரமுஞ் சந்தேகமுங்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நான் உனக்கு எவ்வித கன்மங்கள் செய்யின் பந்த சம்சாரம் விடுபடுமோ அக்கன்மங்களையேகூறுவேன் கேட்பாய்: சுவாமின்! தேகேந்திரியாதிகளாலே செய்யப்படுவன கன்மமென்றும், அவைகளாலுஞ் செய்யாதொழிவது அகன்மமென்றுஞ் சொல்லாநின்ற அர்த்தத்தில் மகாபண்டிதமணிகளுமயங்கவேண்டுவதென்ன? 16

அருச்சுன! நான்கு வருணங்களுக்கும் ஏற்றகருமமின்னதென்றும, பாவத்துக்குயேதுவான தீயகன்மமின்னதெனவும், மோக்ஷத்திற்கேதுவான சத்கருமமின்னதென்றும், உரிமையான கன்மஞ்செய்யும்போது தவறுதலுண்டான பாவகன்மங்களின்னதென்றும், இன்னின்னகன்மங்களாகாதென்றும், எத்தனை கன்மங்கள் செய்யினும் அவைகள் கன்மமேயல்லவென்றும இன்னும் பலவிதமான கன்மங்களின் எல்லையையெவராலு மறிதலரி

தாம். அவ்வாறறிவதானால் மிகச் சூட்சுமமாயும் அதிரகசிய மாயு மிருக்குமாகையால் யாவருஞ் சகசமாயறிதல் கூடாவாம். அருச்சுன! இவ்விதகன்மங்களில் உனக்கெவ்வளவு உபயோகமோ அவ்வளவுமட்டுங் கூறுவோங் கேட்பாய்: 17

அருச்சுன! கன்மமென்றும், விகன்மமென்றும், அகன்மமென்றும் கிர்ச்சனகன்மமென்றும் நான்குவகையாற் கூறப்படும். இவற்றுள் கன்மமாவது சுவர்க்கபோகங்களைக் குறித்துக் காமியமாகச்செய்வனவாம். இதற்குப் பயன் சுவர்க்கபோகம். இந்த சொர்க்கபோகம் எவ்வளவோ அவ்வளவும் அநுபவித்தவுடன் திரும்பவும் பிறப்புண்டு. விகன்மமாவது, 'தேகியென்னும் ஆன்மா ஒன்றிலுமெட்டாதது, தேகேந்திரியாதிகள் அழிவுள்ளன, இவைகளால் கன்மங்களைச்செய்து பயனை ஈசுரார்ப்பணஞ் செய்வானேன்' என்று சில வித்யாவாதிகள்கூறித் தத்தம் வருணத்துக்குரிய புண்ணிய கன்மங்களைச்செய்யாது மனமாதி இந்திரியங்களை யிச்சையானவழியில்செலுத்திவராநின்ற புருஷர்கள் சகல பாவ கன்மங்களுஞ் செய்தவர்களென்று சொல்லப்படும்; இதன்பயன் நரகமும் சனனமரணங்களும்துக்கமுமாம். அகன்மமாவது, கன்மங்களெல்லாம் தேகேந்திரியாதிகளாலேயே செய்யப்படுகிறதென்றும், ஆத்மா ஒன்றிலு மொட்டாததென்றும், அது யாதொருகன்மமுஞ் செய்வதுமல்ல செய்யத்தக்கது மல்லவென்றும், குருமுகமாக நன்றாய்த் தெரிந்துகொண்டு மனவாக்குக்காயங்களினாலே அவனவன் வருணத்துக்குரிய நித்தியநைமித்திய பிராயச்சித்தமாகிய உத்தமகன்மங்களைச்செய்து அதனால் விளையும்பயனையும் ஈசுரார்ப்பணஞ் செய்துவரும் முமுக்ஷுவுக்குச் சித்தசுத்திதுவாரா ஞானோதயமாகி மோக்ஷத்தைத் தருதலினாலே இக்கன்மங்களை மோக்ஷரூபமென்றுஞ் சொல்லப்படும். ஆகையாலிதனை ஒருபோதும் கன்மங்களென்று சொல்லவொண்ணாது. இவ்வகையானகன்மங்கள் எவ்வளவுசெய்யினும் யாதொரு கன்மமுஞ் செய்யாதவனென்று இவனையே சொல்லப்படும். இக்கன்மபயன் துக்கநிவர்த்தி, ஆநந்தம், மோக்ஷம் என்னு மிவைகளாம். அருச்சுன! இந்த மோக்ஷரூப கன்மங்களைக்கொண்டு சீவன்முத்தியைப்பெற்று * ஆரூடராயிருக்கும் மகாபுருஷன் மோக்ஷரூபமான கன்மங்களைச் செய்பினும் செய்யாவிடினும் யாதொரு பிரயோசனமும் பாதகமுமில்லையென்க. பிராரத்

* ஆரூடன் - ஆத்மதரிசனஞ்செய்த ஞானி.

தானுகுணமா யெந்தவேளையி லென்னபோகங்கள் வலுவில்வரு மோ அவைகளிலிச்சையுந் துவேஷமுமின்றிச் (சூரியன் எல்லா ரசங்களையுங் கிரகித்தாலும் எவ்வாறு ஒன்றிலும் பற்றுமலிருக் குமோ அவ்வாறே) சமமாகக்கொண்டனுபவிப்பன். இவனையே யோகியென்றும் கிருதகிருத்தியனென்றும் பண்டிதனென்றுஞ் சொல்லப்படும். சுவர்க்கநரக மோக்ஷமென்னு மிவைகளைத் தரா நின்ற திரிவிதகன்மங்கள் செய்தானேனும் செய்தவனல்லவென் றேசொல்லுவன். இம்மகாபுருஷனையே மோக்ஷரூபியென்றுஞ் சொல்லப்படும். இத்தகையமகாபுருடனுக்கு விதிவிலக்கும் கன் மமுமில்லையென்று சொல்லிவருகிற அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமல், தேகமேதானென்றும் உலகம் நித்தியமென்றும் எண்ணியிருக்கிற பாமரனும் இவ்வாறுநடப்பானேல் சகலபாவங் களுக்கும் சாவநரகங்களுக்கும் பாத்தியஸ்தனாவனென் றறிவா யாக. கருத்திற்கொண்டேன். சுவாமின்! விதிவிலக்கென்பதும் கன்மமும் ஆருடனுக்கு ஏன் இல்லையென்கிறீர்கள்? 18

அருச்சுன! சர்வகன்மங்களையும் காமியசங்கற்பமில்லாமல் ஞானாக்கினியினால் தகிக்கச்செய்து ஏகாந்தசித்தத்தோடுங் கூடி னவனாயிருக்கிறவன் யெவனோ அவனுக்கு அவனேதவிர அன் னியமொன்றுமில்லை யாதலாலும், மற்றும் இந்தப்பதார்த்தம் நல்லது இந்தப்பதார்த்தம் தீயதென்றுசொல்ல நியாயமில்லாத தாலும் அவனையே மகாவிவேகியானால் † மகாபண்டிதன் என்று கொண்டாடப்படும். 19

இன்னமும், தன்னால் செய்யப்படுகிற கன்மங்களின் பயனை விரும்பாது சொருபாநந்தத்திலே திருப்தியுள்ளவனாய் வேறொன் றையும் விரும்பாதிருப்பவன் எவனோ அவன் கன்மங்களைத் தும் செய்தானேனும் உள்ளபடிசெய்தவனல்ல; என்னெனில், எந்தபதார்த்தமாயினும் தனக்கன்னியமா யில்லையென்று நன் றாய்த்தெரிந்ததனால் அதிலாசையற்றவனாயும் ஸ்திரபுத்தி யுள் ளவனாயும் சர்வசங்க பரித்தியாகியுமான அந்தமகாபுருஷன் சரீர சம்ரக்ஷணையைக் குறித்தாவது சாதிக்கேற்ற கன்மங்களையோ அல்லது அவனது தேகபிராரத்தானுகுணமாக வேறு எவ்வித கன்மங்களையோ செய்தானேனும் பாவமெய்தப் பெறானென் றறிக. 20

† மகாபண்டிதன - எணடு சாவசஙக பரித்தியாகியை (அதாவது சந்யா சியை) யெனக.

இன்னும் விருப்புவெறுப்பில்லாதவனாய் மனமாதி யிந்திரியங்களைத் தன்வசமதாக்கிக்கொண்டு தன்முன் தோன்றியவைகளில் மமதையற்றவனாயுமிருக்கிற மகாபுருஷன் கேவலமான சரீரசம்ரக்ஷணைக்காகச் செய்யப்பட்டதான கன்மங்களினாலே பாவமடையானென்றறிக. 21

மற்றுந் தனக்கியல்பாய்க்கிடைத்தமட்டில்திருப்தியடைந்து சுகதுக்க சீதோஷ்ணாதிகளைச் சமத்துவமாகப் பாவனைசெய்து யெவரிடத்தும் விரோதங் கொள்ளாது லாபலோபங்களையும் இயல்பாயெய்தப்பெறும் விஷயங்களையும் சமத்துவமாய்ப் பார்ப்பவன் தேகசம்பந்தமான கன்மங்கள்செய்தாலும் ‡ பந்தமெய்தானென்றறிக. கருத்திற்கொண்டேன்; சுவாமின்! மேற்கூறிய மகாபுருஷன் பந்தமெய்தாமைக்குக்காரணம் யாதோ? 22

அருச்சுன! தன்னாற்செய்யாநின்ற யாதொரு கன்மப்பிரதிபிரயோசனத்திலும் இச்சையின்றியும், காமக்குரோத லோப மோக மதமாற்சரியமென்கிற தோஷங்களுமற்று ஞானத்தால் ஒருமையுற்ற உத்தமஞானியாற் செய்யாநின்ற கன்மங்களும் அக்கன்மங்களின்போகமும் சொரூபத்திலேயே லயமாகுமேயன்றிப் பந்தத்தளையைத் தந்திடாதென்றறிக. கருத்திற்கொண்டேன்; சுவாமின்! சொரூபத்திலே லயமாகக்கூடிய கருமங்களெவைகள்? அவைகளை யெவ்வாறு செய்யப்படும்? 23

அருச்சுன! அநித்தியமாகக் காணப்படுகின்ற இந்தவுலகத்தைச் சத்தியமென்றும், இதில் தேகத்தையே தானென்றபிமானித்திராநின்ற புருஷனுக்கு மோக்ஷாபேக்ஷையிருக்குமாயின் நிஷ்காமகருமங்கள்செய்து அதனாலே மோக்ஷமெய்தக்கூடுமென்றுங் கூறினோமல்லவா? இனி அக்கன்மங்களே பிரமசொரூபமென்றும், அவ்வாறு சங்கற்பித்தே மகாபுருஷர்களாலே † எக்கியஞ் செய்யப்படுமென்கிற விவரத்தையுங்கூறுதும்: அருச்சுன! எக்கியாதிகளுக் கேதுவானபதார்த்தங்கள் வைக்கப்பட்டுள்ள பாத்திரங்களும் பிரமசொரூபமே. அன்றியப்பாத்திரங்களிலுள்ள பதார்த்தங்களும் பிரமசொரூபமேயாம்! எக்கியாக்கினியும் பிரமசொரூபம்; எக்கியஞ்செய்கிற தன்னையும் பிரமசொரூபமாகவேயெண்ணிச் செய்வார்கள். இவ்வாறு செய்யாநின்ற மகோத்

‡ பந்தம் - வினைபயனாகியகட்டு.

† எக்கியம - தேவபபிரீதியான ஓமம.

**தவர்கள் பிரமசொரூபர்களென்பதற்குச் சந்தேகமுமுண்டோ? இதையே ஞானயெக்கியமென்றும் மகாசிரேஷ்ட எக்கியமென்றுங் கூறுவர்கள்.** 24

'ஓமசாதனங்களும்பிரம'மென்பதெவ்வாறெனின், அவைபிரமத்துக்குரிய சததுடையவைகளாயிருக்கின்றன. பகவான் ஒருவரே சுவதந்திரமுள்ளவர், மற்றவைகள் யாவும் அவருக்கடங்கினவை, என்கிற இந்த ஞானமுள்ளவனே ஞானத்தில் நிலையுற்றமனமுள்ளவனென்றுசொல்லப்படுவன். பிரமத்தையறிந்தவன் எக்கியமுதலாகிய ஓமங்கள்செய்யும் விதமும் அதற்குச் சாதனங்களும் பிரம்மத்தையன்றி வேறல்லவென்று காண்கிறான்; எவ்வாறெனின், முத்துச்சிப்பியினிடத்துவெள்ளியில்லாததுபோல, அவற்றிற்குப் பிரம்மத்தையன்றி வேறுசொரூபமில்லையென்று காண்கின்றான். வெள்ளியாகத் தோற்றுவது முத்துச சிப்பியேயன்றி வேறன்று. ஓமஞ்செய்யும்விதமென்றும் ஓமசாதனமென்றும் மற்றசனங்கள் எவைகளை நினைக்கிறார்களோ அவைகள் யாவும் பிரமசொரூபத்தை யறிந்தவனுக்குப் பிரமமேயாகுமென்று இதனாற்சொல்லப்பட்டது.

அருச்சுன! ஒப்புயர்வில்லாத இப்பிரமயெக்கியத்தை யாவரும் ஏன்செய்கிறார்களில்லையென்றால், தன்னைத்தவிர அன்னியமில்லையெனக் கண்டவர்களும், நித்யானந்தத்தையே யநுபாலனமாகக்கொண்டவர்களும் பரோபகாரமாக இந்த எக்கியஞ்செய்வார்களேதவிர ஏனைய அந்தக்கரண சுத்தியில்லாதவர்களாற் செய்யத்தக்கதல்லவாம். ஆயின், அந்தக்கரண சுத்தமில்லாத யாவரும் எவ்வாறு கரையேறுவார்களெனின், சித்தசுத்தியின் பொருட்டு அவரவர்களது பக்குவாதிகாரத்துக்குத்தக்கயெக்கியங்கள் வேதத்திலே விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிற் சிரேட்டமான ஞானயெக்கியம் சித்திப்பதற்குச் சாதனமாகவு முக்கியமாகவுமுள்ள 12-எக்கியங்களை யீண்டுகூறுவோங் கேட்பாய்: தனஞ்சயா! தேவேந்திராதியர்களுக்குத் திருப்தியுண்டாமாறு சிலகன்மயோகிகள் காமியமின்றிச் செய்யாநின்ற எக்கியங்களிலேயுண்டான அக்கினியில் திரிசியவிஷயங்களை யோமஞ் செய்வார்கள். மற்றுஞ்சில ஞானியர் எந்தக்காரியங்களையும் காமியமின்றிச் செய்துகொண்டு பிரமசொரூபமே விளங்குகிறதென்னும் நிச்சயத்தினாலே மீண்டுந் தோன்றும் விஷயங்களைச் சொரூபத்திலேயே ஐக்கியஞ்செய்வித்து வளராநின்ற நிச்சய

மான ஞானாக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். இன்னுஞ்சிலர் திரிகரணங்களினாலே நிஷ்காம கன்மங்கள் செய்துகொண்டு சிரவண மனன நிதித்தியாசனமென்னு மிவைகளையெப்போதுஞ் செய்துவருதலினாலுண்டான நிச்சயமாகிற அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். பின்னுஞ்சிலர் துறவாசிரமத்தையுடையவர்களாய் போசனகாலந்தவிரச் சதாசமாதியிலுண்டான நிச்சயமாகிற அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். மற்றும் * நயிட்டிகப்பிரமசாரிகள் † சுரோத்திராதி யிந்திரியங்களை நிக்ரகஞ்செய்து அதனாலுண்டான நிச்சயமாகிற அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். இன்னுஞ்சில இல்லறமார்க்கத்தார் நல்லதுதீயது என்னும் சப்தாதி விஷயங்கள் யாவையும் இந்திரியங்களாகிய அக்கினியில் ஈசுரார்ப்பணமாக ஓமஞ்செய்வார்கள். 25, 26

இங்கே பிரமசரிய விதியாவது தரிசனம், பரிசனம், கேளி, கீர்த்தனம், குய்யபாஷணம், சஙகற்பம், அத்தியாவசாயம், கிரியாநிவர்த்தியென்கிற வெண்வகையிலும் நிராசையாயிருப்பதே பிரமசரியத்துவமென்னப்படும். இவைகளுள் தரிசனமாவது ஒருஸ்திரீயை ஆசையாகப் பார்த்தலாம். பரிசனமாவது ஒருஸ்திரீயை ஆசையாகத் தீண்டுவதாம். கேளியாவது ஒருஸ்திரீயோடு ஆசையாகச் சரசமாய் விளையாடுவதாம். கீர்த்தனமாவது ஒருஸ்திரீயை அப்படிப்பட்டவளிப்படிப் பட்டவளென்று ஆசையால் வர்ணித்தலாம். குய்யபாஷணமாவது ஒருஸ்திரீயோடு ஆசையாய ஏகாந்தத்தில் வசனிக்கிறதாம். சங்கற்பமாவது ஒருஸ்திரீயை ஆசையாய் மனதில் நினைத்தலாம். அத்தியாவசாயமாவது ஒருஸ்திரீயைச் சேரவேண்டுமென்று ஆசையாய் மனசில் தீர்மானித்தலாம். கிரியாநிவிர்த்தியாவது ஒருஸ்திரீயை ஆசையாற்கூடியனுபவித்தலாம். ஆக இவ்வெண்வகை விஷயங்களும் பிரமசரிய ஆசிரமத்தன் காக்கவேண்டுமென்றபடியாயிற்று.

சிலநியானநிஷ்டர்கள், இந்திரியங்கள், பஞ்சப்பிராணன் இவைகளினா லியற்றப்படுங் கன்மங்களெல்லாம் வெறுக்கும்போது அதனாலேற்படும் நிச்சயமாகிய ஞானாக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். பஞ்சப்பிராணன், பிராணாதிபஞ்சம், அதாவது, பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், என்பவைகள். 27

* நயிட்டிகபபிரமசாரியாவான - பிரமசரியவிதிதவருது நிறபவன.

† சுரோத்திரம் - காது.

சில கிரகஸ்தர்கள், 'நாம் தானஞ் செய்தோமென்றும், இன்னவர் ஏற்றனரென்றும் தனக்குள் யாதொரு அபிமானமுமின்றி எல்லாம் கடவுளாலேயே நடந்துவருகிறதென்று' அபிமானமில்லாத காரியங்களினாலுண்டாகும் நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். வேறுசிலர், தவமென்று கூறப்படும். * கிருச்சிரம் † சாந்திராயணம் இவைமுதலான விரதமனுட்டித்தல், புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தல் இவைகளாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். சிலர் அஷ்டாங்கயோகத்தினாலுண்டாகும் நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். சிலர் பிராணன் அபானன் முதலியவைகளை அசபாமந்திரரூபமாக மகாவாக்கிய அர்த்தத்தினாலே ஐக்கியமான ‡ உச்சுவாச நிச்சுவாசரூபமா யெப்போதும் அநுசந்தானஞ்செய்வதாலேற்படும் நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். சிலர், வேதாகமாதிகளைக் குருமுகமாக எப்போதும் பாராயணஞ்செய்வதாலேற்படும் நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். சிலர், வேதோபநிடத இதிகாசாதிகளையெல்லாங் கற்றுணர்ந்து அவைகளின் பொருளை விசாரித்தறிவதாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள், சிலர், மேற்கூறிய விசாரணையாலுண்டான யாதொருபயனையுமிச்சியாது ஈசுரப்பிரீதியாகவே யெப்போதும் பிறர்க்கோதிவருவதாலேற்படும் நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். அட்டாங்கயோகம். இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண்வகையாம். 28

அசபாமந்திரம். அசபாகாயத்திரி, மந்திரங்களுள் விசேடித்தது. அது ஹம்சம் ஸோஹம் என்னும் இருவகைத்தாய் விளங்கும். அசபா காயத்திரி யெனினும், அசபை யெனினும், சீவமந்திரம் எனினும், அங்குச மந்திரம் எனினும் பொருந்தும். இது முதலிற் சிவபெருமானிடத்தினின்று நந்திதேவ

* கிருச்சிரம்—அதாவது சாந்தபனவிரதம். இது பஞ்சாமிர்தத்தோடு ஆறுதினமுண்டு எழாம்நாளுபாசிப்பது.

† சாந்திராயணம்—இது ஓர் அரியவிரதம். - அதாவது: பௌரணைதொடங்கி அமாவாசைவரையில் ஒவ்வொருபிடியன்னங் குறைத்தும், அமாவாசைதொடங்கி ஒவ்வொருபிடியன்னம் அதிகமாகப்புசித்தும் அநுட்டிக்கும் விசேஷவிரதமென்பார்.

‡ உச்சுவாச நிச்சுவாசம் சுவாசம்விடுதலும் பந்தனஞ் செய்தலும்.

ரும், அவரிடத்தினின்றும் பிரமதேவரும், அவரிடத்தி னின்று சுக்கிரனும், அவரிடமிருந்து கயமுனிவரும், அவர் பால் வியாழப்புத்தேளும்பெற்றுப் பூமியிற்பரந்தது: இதனை அன்புடன் செபிக்கின் 'இறந்தவர் துயிலினின்றும் எழுவார் போல் எழுந்திருப்பர்' அன்றி நினைந்தவெலாங் கைகூடும். முத்தியுஞ் சித்திக்கும். இதற்கு அதிதேவதை சிவபெருமான். தேவதை, விநாயகக் கடவுளாகிய பராமாங்குசனே. பீசம் – ஓம் சத்தி - சுவாகா என்பதாம். கீலகம்—ஸோகம் ஆகும். கரநியாசஞ்செய்து, உரிய பல்லவத்தால் அங்கநியாசஞ்செய்து அருணோதய காலத்திற் செபிக்கத் தொடங்கி அஸ்தமயனத்திற்குள் இருபதினாயிரத்து அறுநூறு உருச் செபிக்க கணபதிக்கு 600-பிரமற்கும் விட்டுணுவுக்கும் அவ்வளவே. உமாபதிக்கு 6000-சீவான்மாவிற்கு 1000-பரமான்மாவிற்கு-1000- ஞானசிரியருக்கு-1000-ஆக "அசபா காயத்திரி மந்திரசெபம் நிவேதியாமி" என்று செபிக்க. இதனை மௌனமாகவேயிருந்து செபிக்க. "உன்னுமனுன்னு ரை மந்திரம்" என்று வில்லிபுத்தூரார் பாரதத்தில் கூறினரென்க.

சிலர், பிராணன், அபானன் என்பனவற்றை * ரேசக † பூரக ‡ கும்பகங்களாலே ஐக்கியஞ் செய்வதாலேற்படும் நிச்சயமாகிய அக்கினியில் விஷயாதிகளை ஓமஞ்செய்வர்கள். 29

சிலர், நாடோறும் உண்ணும் உணவினைக்குறைத்தும், அநுபவாதி விஷயங்களிலிச்சையையொடுக்கியும், அரைப்பங்கு அன்னம் காற்பங்குஜலம் காற்பங்கு வாயுசஞ்சாரத்துக்குமாகத் திட்டஞ்செய்துகொண்டு அநுட்டிப்பதாலேற்படும் நிஷ்டையாகிய அக்கினியில் விஷயாதிகளை ஓமஞ்செய்வார்கள். 30

அருச்சுனா! மேலேகூறிய இவர்களெல்லாம் எக்கியங்களையறிந்தவர்களேயாவர். இன்னோர் தினமும் புசிக்கும் எக்கிய அன்னசேடம் தேவாமிர்தத்தை நிகர்க்குமென்க. இன்னுமிவர்கட்குரிய பாவங்களியாவுந் தொலைந்து ஞானவந்தர்களாய் $ அபூர்வமாயுள்ள பரப்பிரம்மசொரூபத்தையே யடைவர்கள். இவைகளிலொன்றையேனு மனுட்டித்துக் கரையேறாமல் பாவமயமாகிய அன்னத்தைப்புசித்து கேவலவிஷயானுபவத்திலேயே

* ரேசகம் - சுவாசவிடுகை.

† பூரகம் - சுவாசத்தை உட்பூரித்தல்.

‡ கும்பகம் - பூரித்தவாயுவை உள்ளேநிறுத்துதல்.

$ அபூர்வம் - அநாதி.

தங்கள் காலமெல்லாங்கழித்து வாழ்நாளை வீணாளாக்கும் பெரும் பாவிகளுக்கு இம்மையிலேயே துலையாத துக்கசொரூபிகளாய் விடுவோர்களானால் மறுமையி லின்பமெவ்வாறு பெறுவர்! 31

அருச்சுன! இவ்வாறாக வேதங்களில் அநேக எக்கியங்களைக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள்யாவு மிக்கபிரயாசையுடன் கூடினதாகவும் நிர்மலசித்தார்த்தமாகவு முடிபுமேயன்றி இப்போதுகூறிய ஞான எத்கியத்திற்குச் சமமாகாதென்க. அது கொண்டே பிரியாசையின்றி யனுட்டிக்கற்கு மிகச்சுலபசாத்தியமாயுள்ள இந்த ஞான எக்கியத்தை மோக்ஷார்த்தமாக நாம் உனக்குக் கூறினோம். முற்கூறிய எக்கியங்கள்யாவும் மனவாக்குக் காயங்களாற் செய்யத்தக்கனவேயன்றி ஆன்மாவுக்குப்பயன் படாதென்று நீ அறிவாயானால் முத்தனேயாவாய். 32

சர்வகன்மங்களுக்கும் ஞானமே ஆதாரமா யிருப்பதுபற்றியும், அந்த ஞானத்தின்பொருட்டே எல்லாக்கன்மங்களும் செய்யப்படுகிறதாகையாலும் முன்னேகூறிய எக்கியங்களைவிட மேன்மையது ஞானஎக்கியமேயாகும். சுவாமின்! அத்தகையஞானம் எத்தகைய முயற்சியாற் கிடைக்கப்பெறும்? 33

அருச்சுன! நீ இயல்பாக † சாதன சதுஷ்டயங்களைப் பெற்றவனாய், பிரமவித்யாபாரங்கதராளாயுள்ள மகானையணுகிச்சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து "சுவாமின்! சம்சாரசாகரத்திலே கரை தெரியாமல் முழுகிக்கிடக்கும் அடியேனைத் தேவரீர் கிருபைகூர்ந்து இரக்ஷித்தருளல் வேண்டு' மென்று மிகவணக்கமாய்ப்

† சாதனசதுஷ்டயமாவது, நித்தியாநித்தியவஸ்துவிவேகம், இகவுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிஷட்கசம்பத்தி, முமூக்ஷுத்துவம் எனநான்குவகைப்படும். இதில் நித்தியாநித்திய வஸ்துவிவேகமாவது, பிரமமே நித்தியமென்றும், பஞ்சபூத பௌதிகமுதலிய சகத்தெல்லாம் அநித்தியமென்றும் முழுமுகாந்தரமாயறிதல்.

இகவுத்திரார்த்த பலபோக விராகமாவது, இம்மையில் அநித்தியமான சற்சந்தனவனிதாதி விஷயபோகங்களிடத்திலும், பரலோகத்தி லடையக்கூடிய அநித்தியமான ரம்பாசம்போக அமிர்தாதிகளிடத்திலும் வாந்திசெய்த ஆகாரம், மலம், மூத்திராதிகளைப்போல ஆசையில்லாமல் வெறுத்து சத்தியக்ஞானாநந்த நித்திய நிர்மலமான பரப்ரம்மத்தினிடத்தே பதிந்த பக்தியோடிருத்தலாம்.

சமாதி ஷட்க சம்பத்தியாவது, சமை, தமை, உபரதி, திதிக்ஷை, சமாதி, சிரத்தையென்னு மறுவகையையும் சாதித்திருத்தலாம்.

முமூக்ஷுத்துவமாவது, மோக்ஷத்தையறிந்து அடையவேண்டுமென்கிற அதி தீவிரமாகிய மனதுடனே கூடியிருத்தலாம்.

பிரார்த்தித்து அவர்கட்குச் சமயம்நேர்ந்தழி தொண்டுசெய் து கொண்டுவந்தால் நாளடைவில் உன் நன்னடக்கையையும் பக்குவத் தையுமறிந்து உன்விஷயத்தில் கிருபையுண்டாகி அவர்களது சுவாநுபூதியாய ‡ அபரோக்ஷஞானத்தை யுனக்கெடுத்துபதேசிப் பார்கள். சுவாமின்! அவ்வாறாகிய அரியபெரிய உபதேசவுண் மையையும் அதனாலெய்தும் பயனையும் தேவரீரே அநுக்கிரகஞ் செய்தருளப் பிரார்த்திக்கிறேன். 34

மகாபுருஷ! கேட்பாய்: சர்வான்மகோடிகளும் பரமாத்மா வாகிய யென்னைத்தவிர வேறல்லவென்றும், அவ்வாறாகிய என்னை உன்னுடைய லக்ஷியார்த்தத்தைத்தவிர வேறில்லை யென்றும் நீயெதனாற் றெரிந்துகொள்வையோ அதனையே ஞானமென்று சொல்லப்படும். அந்தஞானம் உனக்கு லபிக்குமானால், 'பந் துக்களெல்லாம் இப்போது மடிந்தும்பாவார்களே' என்று துக் கப்படுவதுபோல ஒருபோதுந் துக்கப்படமாட்டாய். அன்றி அவ்வாறு துக்கிப்பது மித்தையென்றே தெரியவரும். அதனால் நீயாதுசெய்யினும் நீசெய்யாததாகவேதெரியவரும். ஆகையால் அந்தஞானத்தைத் தெரிந்துகொண்டு அப்பியாசஞ் செய்வா யானால் இந்தசென்மத்திலேயே மோக்ஷம்பெறுவாய். 35

அந்தஞானத்தின் பெருமையும் அதனாலெய்தும் பயனையும் இன்னமுஞ் சொல்லக்கேட்பாய்: நீபாவங்களைச்செய்தவனைக் காட்டிலு மகாபாவியாயினும் அப்பாவரூபமாகிய சமுத்திரத்தை ஞானமெனுந்தெப்பத்தினால் மிக எளிதாய்க்கடப்பாய்; அது எவ் வாறெனில், சொப்பனத்திற்கண்ட பாவபுண்ணியங்களெல்லாம் விழித்தவுடன் எப்படி இல்லாமற்போகுமோ அவ்வாறேயென்று நீயறிந்து கொள்வாயாக. சுவாமின்! பாவவிமோசனத்துக்கு ஏது இந்தஞானத்தைத்தவிர வேறுவித உபாயங்களில்லையா? 36

அருச்சுன! அக்கினியானது தான்பற்றிய விறகைத் தக னஞ்செய்து எவ்வாறு சூன்யப்படுத்துமோ அதேபோல ஞானாக் கினியானது யாரைப்பற்றியுள்ளதோ அவனுடைய பிராரத்த கன்மத்தைநிறுத்திச் சஞ்சித ஆகாமிய கன்மங்களை யெல்லாந் தகித்துச் சுத்தஞானேதயமாகப் பெறுவான். ஆகவே யிந்த ஞானத்தைவிட மற்றியாதும் பரிகரியாதெனக. சுவாமின்!

‡ அபரோக்ஷஞானம் - பிரம்மசைதன்னிய தரிசனம்.

தேவரீர் கூறியவாறாயின் ஏன் அனைவரும் இந்த ஞானத்தை அப்பியாசிப்பதில்லை? 37

அருச்சுனா! பந்தமென்கிற சம்சாரமாகிய கடலைத்தாண்டி ஞானமாகிற கரையேறத்தகுந்த மரக்கலம் இந்த ஞானமேயாம். இதற்குச் சமத்துவம் வேறொன்றுமில்லை. ஆகையால் இந்த ஒப் பற்ற ஞானத்தோணியை, விருப்பு வெறுப்பற்று ஈசுரார்ப்பண மாகக் கன்மயோகங்களைச்செய்து அதன் பலப்ராப்தமாகக்கொள் ளலாமென்றறிவாயாக. இவ்வாறு பற்றறச்செய்யும் நற்றவர்க் கன்றி மற்றவர்க்கெங்ஙனஞ் செய்யக்கூடும்? கூடாமைபற்றியே யென்றறிக. 38

பின்னும், ஞானாபேக்ஷைகொண்ட ஒருவன் எவ்வாறு அந்த ஞானப்பொருளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றால், சற்குரு வையடைந்து அவரது கருணைக்குரிய பணியைப்புரிந்து அவர் பால் சந்தேகவிபரீதமறக் கற்றுத்தெளிந்து அத்தெளிவினாலே சிரத்தாபத்தியோடு பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து இடையறா மல் ஞானமார்க்கத்திலேயே தன்புத்தியைச்செலுத்தி மற்றொரு ஞானாப்பியாசியின் கூட்டுறவைத்தவிர மற்றெவர்பாலும் பற்றுத லொழித்து வரவேண்டும். அவ்வாறுசெய்யின் நாளடைவில் அப் பியாசஞ்செய்த ஞானமானது பூர்த்தியடைந்து சீக்கிரத்தில் முத்திசித்திக்கச்செய்யும். இவ்வாறின்றிச் சோம்பேறியாயும் அபுத்திபூர்வமாயுமுள்ள ஏனையோர்களுக்கு ஞானமெவ்வாறு சித்திப்பதாகும்? இதற்குச்சான்றாக. 39

திருமூலர் திருமந்திரம்.

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னாற்
றனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே.

வாசியு மூசியும் பேசி வகையினாற்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையு மன்பு மறுமி னறுத்தபின்
ஈச னிருந்த விடமெளி தாமே.

ஆசை யறுமின்க ளாசை யறுமின்கள்
ஈசனோ டாயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வானந்த மாமே.

**சிவஞானவள்ளலார்.**

ஆசையாற் சந்திர னங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சவுபரி யறிவை நீங்கினன்
ஆசையா லிராவண னாவி போக்கினன்
ஆசையால் வாலியு மழிந்து போயினன்.

பூசையால் விரதந்தன்றாற் புண்ணிய தீர்த்தந்தன்றா
லாசிலாத் திருமந்தன்றா லளவறு வேள்விதன்றாற்
பாசங்க டங்கள்பொன்று பூரிடை நம்போல்வந்த
தேசிகனருளுஞான தீக்கையாற் பொன்றுமன்றே.

ஞானத்தைத் தவிரப்பாவக் குழாங்களை நாசஞ்செய்யு
ஞானம்வே றில்லையிந்த ஞானம்போ னலனென்றில்லை
ஞானசாதகத்தையன்றி நவையுறு குடும்பம்போக்கு
ஞானசாதனம்வேறில்லை நன்னெறி யறிமாணாக்கா.

சத்தியமு நோன்புந் தவமு மிளஞ்சொல்லு
முத்தமருக் குள்ளகுண மொன்றின்றி—மத்திமராய்
மைத்துனமுஞ் சோறுமாய் மாயுமளவும் புசிக்கும்
வைதவர்க்கு முண்டோ கதி.

அருச்சுன! மேற்கூறிவந்த ஞானம் சித்தியாமைக்குக் காரணம் பலவுள. இங்கே அவைகளையும் யெடுத்துக் கூறுவோம் கேட்பாய்: மேலேகூறியவாறு சிறிதேனும் விசாரணைசெய்யாது தேகபோஷணையிலேயே புத்தியைச்செலுத்தி உலகானுபவமே சதமெனவெண்ணிக் கண்டனவெல்லாங் கொண்டனுபவிக்கு மிச்சையே மிச்சமாக்கொண்ட அவிவேகத்தினாலும், நல்லுரையல்லது சொல்லுதலில்லா உத்தம புத்தியுள்ள வுயர்ந்தோரிடத்துங் கடவுளிடத்தும் உள்ளும் புறமுமெத்த பத்தியில்லாமையாலும், பஞ்சேந்திரியங்களையும் அந்தக்காரணங்களையும் தன் வசஞ்செய்ய ஆற்றலற்று அதன்வசப்படுவதினாலும், எந்தவிஷயத்தினாலும் சந்தேகம்பிறந்து ஒன்றினுமொன்றாத மந்தமதியினாலும், ஏதேச்சையாகத் தன் காதிற்கெட்டியவோர் நல்லவிஷயத்தை[illegible] கவனியாத பாமரத் தன்மையாலும், எவரேனுமிதோப[illegible]மாக ஏக்தேசத்திற் கூறுவாராயினும் நமக்கும் ஞானத்[illegible] வெகுதூரமென்று வெகுதூரம் போவதாலும், ஞான[illegible]மாக்ஷமாவது, இவைகளை யார்கண்டது? இவைகளெ[illegible]த்தண்டிகளுடைய சொற்கட்டேயென்று பி[illegible]ண்டிப் புத்தியினாலும், குடும்பிக்கேன் ஞான[illegible]டு ஞானத்தாலும் பெரும்பாலார் மெஞ்

ஞானமெய்தப்பெறாது அஞ்ஞானத்துக்கடைக்கலமாகின்றார்கள். ஆகவே இன்னோரெல்லாம் இகபர சுகயீனர்களா யிவர்களைச் சேர்ந்துள்ள மற்றையோர்களுங்கெட்டு முடிவில் தீயநரகத்தாழ் வதே திண்ணமென் றெண்ணுவாயாக. 40

அருச்சுன! எம்மாலுனக்கு முன்னேகூறியதான சாங்கியம், கன்மம் என்னு மிருவித யோகத்தைப்பற்றியும் இங்கே சிறிது சுருக்கிக்கூறுவாம். கேட்பாய்: பகவத் சிரேஷ்டனை என்னிடத்திற் சர்வகன்ம பலனையுஞ் சமர்ப்பித்து அதனால் ஞானப்பேற்றைக்கைக்கொண்டு சர்வசந்தேகங்களையும் * பரித்தியாகஞ்செய்து தேகாபிமானமும்விட்டுத் † தானதுவானமகான்களாவார் யாதொரு கன்மங்களுஞ் செய்யவேண்டுவதேயில்லை. ஏகதேசம் உலகோபகாரமாகக் கன்மஞ் செய்தார்களாயினும் அக்கன்மத்தால் பந்தம் விளையாவாம். 41

சிவஞானவள்ளலார்.

அரியணையிலிருந்துலகவரசாக்ஷிபுரிந்தாலுமங்கையேறறுத்
தெருவுதொறுந்திரிந்துரந்துதின்றாலுமிளம்பருவத்தெரிவைமாரைப்
பிரியாமலிருந்தாலும்பிரிந்துதவம்புரிந்தாலும்பேசிற்றெல்லாம்
விரிசீவன்முத்தனுக்கிங்குடம்பாடேயன்றியொன்றும்விரோதமின்றே

அருச்சுன! உன்னிடமின்னமுஞ் சொரூபநிச்சயம் பிறவாமையால் உனக்குளோற்பட்டுள்ள அஞ்ஞான சந்தேகத்தை இதுகாறு மென்னாலெடுத்துக்கூறிய ஞானமென்னும் வாளால் வீசி கன்மயோகமாகிய உன் சென்மயுத்தத்தைச்செய்ய விரைவி லெழுந்திருப்பாயாக. 42

ஞானயோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 4-க்கு-சுலோகப் பொழிப்பு-204.

---

* பரித்தியாகம் - விட்டுவிடல்.

† தானதுவாதல் - தான்என்கிற சீவான்மா அதுஎன்கிற பரமாத்ம தன்மையுறல். மேற்கூறிப்போந்தமைக்குச் சானறாகக்கூறியதுங்காண்க.

# ஐந்தாம் அத்தியாயம்

# சந்நியாச யோகம்.

அவதாரிகை, 'அஞ்ஞானத்தி லேற்பட்ட சந்தேக விபரீதத்தை ஞானமெனும் வாளினால் மாய்த்தல் வேண்டும் என்னும் அபிப்பிராயத்தைநோக்க, எந்தக்கன்மமுஞ்செய்யவேண்டிய அவசரமில்லையே; அவ்வாறாயின் ஈண்டும் போர்புரிய மீண்டுந்தூண்டுவதென்னோ' வென்னும் ஐயப்பாட்டினை மெய்யகங்கொண்ட அருச்சுனன் வினவுகின்றான் :

சுவாமின்! முன்னே கன்மஞ்செய்ய வேண்டு மென்று சாதித்தீர்கள்; பின்னே அதுகூடாதென் றுபதேசித்தீர்கள்; இவ்வாறு உபதேச கர்த்தாவே சந்தேக விபரீதக்குழியில் தள்ளின், யான் ஒன்றை நிச்சயிப்பதெங்ஙனம? ஆகவின் செய்தல் விடுதலென்னு மிரண்டினில் உறுதியான வொன்றை வுறுதியாக் கூறப்பிரார்த்திக்கின்றேன். 1

அருச்சுன! சந்நியாசமென்பது சன்மத்துக் கேதுவான கன்மத்தைவிடுதலேயாம். இங்கே கன்மயோகமென்பது பலனை நசக்கென விரும்பாது ஈசுரார்ப்பணமாகச் செய்தலாம். இவ்விரண்டினாலும் எய்தப்பெறும் பயனாகியமோக்ஷமொன்றே. "இவ்வாறாயின் ஒருபயனைக்குறித்து இருவகையாகக் கூறியதெது கொண்" டென்றுதோன்றலாம். சமாதானமாகச், சித்தசுத்தியில்லார்க்குக் கன்மயோக அதிகாரமும், அஃதுள்ளார்க்கு ஞானயோக அதிகாரமுமாக அதிகாரவிதியை யனுசரித்ததேயன்றி முன்பின் விரோதமாகக்கூறியதன்று. அல்லாமலும் அடையப்பெறும் மோக்ஷத்தை யிருவித அதிகாரிகளும் அடைதற்குப்பாத்தியமுடையவர்களே. தவிர இவ்விரண்டுமார்க்கமும் சமத்துவமுள்ளதேயன்றி உயர்வுதாழ்வென்ப திவைகட்கில்லை. இதனால் உனக்குப் பேதம்நீங்கிய பாடில்லையாதலால் நீ அவசியமாக நிஷ்காமங்களைச் செய்யவேவேண்டும். 2

அருச்சுன! இன்னும் கன்மதிரஸ்காரியான உத்தமபுருஷனது விசேடத்தையும் இலக்ஷணத்தையும் பற்றிக் கூறுவேன் கேட்பாய் : கன்மத்தைவிட்டஞானிக்கு யாதொரு சுகதுக்க சம்பவங்கள் இயல்பாகவே வந்தெய்துமாயினும் அவைகளாலவன்

சிறிதுஞ் சந்தோஷமும் சஞ்சலமுமெய்தான். மற்றும் வெப்புக்குளிர்ச்சிகளால் ஏற்படும் உபாதையுமில்லை. பரிசுத்தமனதையுடையவனும் பேதாபேத மற்றவனுமுள்ள மஹோத்தம புருஷனுக்கே நித்திய சந்நியாசியென்று வழங்கப்படும். இன்னும் சம்சார சாகரத்தைத்தாண்டிய சத்புருஷனென்று எல்லாராலும் வணங்கப்பெறும் பெருமையையுடையவனாதலாலும், அவனுக்குரிய பெருமையைக் கணித்தற்கு அருமையாதலாலும் அத்தகைய சீலாலயமாகிய முத்தனுக்கே கன்மமில்லையென்று முன்னே நான்சொன்னதுண்மையே. ஆனாலும் அந்தஞானி யென்பானும் முன்னே நிஷ்காம கன்மங்கள் செய்ததினாலேயே இப்போதிந்த ஞானமெய்தப் பெற்றதேதவிர கன்மங்கள் செய்யாமலே பெறவில்லையாதலாலும், அவ்வாறு ஞானமெய்திய பின்னரும் லோகோபகாரமாகவே கன்மஞ்செய்து வருவதினாலேயும் அன்னோர்க்குக் கன்மமில்லையென்று கூறப்பட்டது. உனக்கோ அவ்வித உத்தமஞானம் இன்னமும் பிறவாமையினாலே நீ கன்மஞ்செய்யின் அதனால் சித்தசுத்தியடைந்து எளிதாக சம்சார பந்தம் நீங்கி ஞானமும் பெறுவாயென்று நாம் கருணையினாலுபதேசித்ததை யுற்றுணருமாற்றலற்றவனாய் "இருகருமத்திலும் நன்மையான ஒருகருமத்தைச் சொல்லவேண்டும்" என்றது தவறாம். 3

உள்ளுரை:—கர்மயோகம், உண்மையான கன்ம சந்நியாசத்தை விட மேலானதென்று பகவான் சொல்லினாரில்லை. உண்மையான கர்ம சந்நியாசம் அதாவது ஞானத்துடன் கூடிய கர்ம சந்நியாசமானது கர்மயோகத்தைவிட மிகமேலான மார்க்கமாகும். ஆனால் கர்மயோகமானது கர்ம சந்நியாசத்தைவிட சாத்தியமானதாயும் ஞானமில்லாத கர்ம சந்நியாசத்தைவிடமேன்மையதாயுமிருக்கின்றது. இதன்றி, ஞானயோகம் கன்மயோகமென்னுமிரண்டும் ஒன்றுக்கொன்று சார்பில்லாமல் தனித்தனியாகவே மோக்ஷமளித்தற்கேதுவாயிருக்கின்றனவாம்.

அருச்சுன! சந்நியாசம் கன்மம் என்னுமிரண்டும் ஆசிரம வேற்றுமையாலன்றிக் கன்மவேற்றுமையாலும் இருவித பாகுபாடாய்க் காணப்படினும் அதனாலே யெய்தப் பெறும்பயனை நோக்கச் சமத்துவமாகவே மதிக்கத்தக்க இவ்விரண்டில் உயர் தாழ்வெதுவென அஞ்ஞானியரன்றி மெஞ்ஞானியர் சங்கிக்காரென்க. என்னெனின், சாங்கிய விசாரத்தினாலே ஒருவன்

பெறப்படும் ஞானத்தையே நிஷ்காம கன்மத்தைச் செய்கிறவனு மெய்துவன். ஆகவே மேற்கூறிய இரண்டிலொன்றை யனுட்டித்தவன் இருவகையாலுமடையப் பெறும்பயனெதுவோ அதையே பெறப்படுவதால் இரண்டில் நல்லதானவொன்றைச் சொல்லவேண்டுமென்று யெவ்வாறு சங்கிக்கலாம்? 4

அருச்சுனா! எந்தஞானி யெந்தபலனை யெந்தஞானத்தாலடைவனோ அந்தஞானத்தால் அந்தபலனையடையவே கன்மயோகியும் கன்மயோகத்தைச் செய்கிறான். ஆதலால் இரண்டு பாகுபாட்டாலுண்டாம்பலன் ஒன்றேயென்றும், அதுவே தான் யென்றும் அறிந்துள்ள மகாபுருஷனே அறியவேண்டியவைகளை யறிந்தவனென்றும், அடையவேண்டுமவைகளை யடைந்தவனென்றுஞ் சொல்லப்படும். சுவாமின்! மேற்கூறிய உபயமார்க்கத்தாலுமெய்தப்படும் பலமொன்றாயிருப்பதால் கன்மங்களனைத்தையும்விட்டுச் சந்நியாசியாகவே யிருந்திடலென்னும்? 5

அருச்சுனா! சித்தசுத்தியின்பொருட்டு நிஷ்காம கன்மங்கள் செய்து ஞானோதயமாகி அதனால் தனது தேகாபிமானமுமின்றிச் சதா சமாதிகூடாநின்ற யாதொரு புருடோத்தமனுக்கே சந்நியாசம் சித்தியாமேயன்றி மற்றையோர்க்குப் பொருந்தாவாம். என்னெனில், கன்மயோகத்தைப் பூர்த்திசெய்யாத வொருவன் சந்நியாசம்பெற் றனுட்டிப்பானாயின் மூவகை வாசனைகளும் அவனை யிடையிடையே வாதிக்கும். அதனால் விஷயானுபவங்களிலிச்சையை யெழுப்பியும் பஞ்சேந்திரிய நிக்கிரகமில்லாமல் எப்போதும் விஷயவியாபாரங்களிலேயே பிரவிர்த்தித்துக்கொண்டிருக்குமாதலால் அநந்த சென்மங்களுக்குங் காரணமுந் துக்கமுமுண்டாமேயன்றி சுகமென்கிற ஞானமென்பது சிறிதும் அமையாவாம். ஆகவே இவ்விதசந்நியாசத்தைப் பெறுவதைப் பார்க்கிலும் நிஷ்காமியமான கன்மங்களை அநுட்டித்துவருவதே மிகச் சுலப சாத்தியமாகும். இவ்வா றனுட்டியாநின்ற முனிபுங்கவனவான் சித்தசுத்தியைப்பெற்று வெகுசீக்கிரத்தில் ஞானாக்கினியினாலே அநந்தசென்மங்களுக் கேதுவாயிருக்கிற சஞ்சிதவினையைத் தகிக்கச்செய்து மோக்ஷமடைய அதிகாரியாவான். சுவாமின்! ஞானமெய்தப்பெற்ற ஒருவன் அதனாலேமோக்ஷத்துக்குப் பாத்தியஸ்தனான பின்பும் மேற்கூறிய ஞானஸ்தன் கன்மஞ் செய்து வருவானென்றுங் கூறுகின்றீர்கள். அந்தக் கன்மத்தினாலே அவனுக்கு மறுபடியும் ஏன்பாசபந்தம் சம்பவியாது? 6

அருச்சுன! அந்த ஞான கன்மியாவான் சுயநலம் பாராட்டாத கன்மத்தையே செய்வதினாலும், அக்கன்மத்தால் பரிசுத்தமான மனமுடையவனாய் சரீராதி பஞ்சேந்திரியங்களைத் தன் வசப்படுத்தியவனாயும், பிரம்மதேவன்முதல் அணுவீறாகவுள்ள சர்வப்பிராணிகளிடத்தும் விளங்காநின்ற ஆன்மா ஒன்றேயென்றும் தான் அதுவேயென்றும் ஆராய்ந்தறிந்து அநுசந்தானஞ் செய்துவரும் மகாபுருஷன், கருணையினாலேயே லோகோபகாரமாகத் தன் வருணத்துக்கேற்ற கன்மத்தைச்செய்வானாயினும், அல்லது தன் சுபாவமாக வேறு கன்மங்களைச் செய்திடினும் தானசெய்த தானபாவனை அவனுக்கில்லை. ஆதலினாலே அவன் பந்தமடைவானென்பது எந்தவகையானும் பொருந்தாவாம. சுவாமின்! எந்தவிதமாகவாவது கன்மத்தைச் செய்தானேனும் ஏன்பந்தமவந தடையமாட்டான்? 7

அருச்சுன! அவ்வாறான ஞானகன்மியாவான் யாதொன்றை நேத்திரங்களாலே பார்க்கினும், காதினாற்கேட்கினும், சரீரத்தால் பரிசிக்கினும், மூக்கினால் மணமுவந்திடினும், நாக்கினால் இரசவர்க்கங்களை கிரகிக்கினும், பாதங்களால் நடந்து செல்லினும், கைகளினாலே கொடுத்து வாங்கினும், மனோலயப்பட்டு நித்திரைசெய்யினும், பிராணவாயுவினாலே சுவாசம விடினும், வாக்கினால் வசனிக்கினும், அபானவாசல் சலத்துவாரங்களால் மலசலங்கழிக்கினும், கூர்மன் என்கிற வாயுவினால் கண்மூடிவிழிக்கினும் ஆகிய இவைகளெல்லாம் அந்தந்த கருவிகரணங்கள் அததற்கான இயல்பாய் நடத்திவருகிறதேயன்றித் தானொன்றும்நடத்துவதான அபிப்பிராயமுடையவனல்லவென்றும், தான் ஒன்றிலும் பற்றாத நிலைமையனென்றும் பகாதிடமான நிச்சயஞ்செய்துள்ள அத்திடவீரன் செய்துவருங் கன்மங்களினாலே பாசபந்தமடையப்பெறாது மோக்ஷத்தையே யடைவனெனக. சுவாமின்! கூறியதுணர்ந்தேன். இவ்வாறாய தத்துவத்தோடுங்கூடிய யாதொரு ஞானியினாற்செய்யப்பட்ட கன்மங்கள்மட்டும் பாசபந்தங்களை விளைக்காதென்று கூறினால், அவ்விதமாகத் தெரிந்துகொண்டு கன்மஞ்செய்யாதவர்களுக்கு மோக்ஷத்தில் மாத்திரமிச்சையுண்டானால் அவர்கள் பந்தசாகரத்தைக்கடந்து எந்தவிதமாகக் கரையேறுவார்களென்பதைத் தெரியவிரும்புகின்றேன்.

அருச்சுன! யாதொரு விவேகமுமில்லாத மந்தமதியினனாயினும், கன்மபயனைத் தானடைய விரும்பாமலும், தான்செய்

கிறதென்கிற அபிமானமின்றி ஈசுரப்பிரீதியாகக் கன்மங்களை மாத்திரஞ்செய்து வருவானாயின், தண்ணீரானது தாமரையிலையி லொட்டாதது போலச் சனனமரணங்களைக் கொடுக்காநின்ற பாவத்துக்குப் பாத்தியப்படான். ஆகவே சித்த நிர்மல விசேஷத்தால் ஞானமெய்தப்பெற்று ஈற்றில் மோக்ஷமு மெய்துவ னென்றறியக்கடவாய். 10

அருச்சுன! இன்னுங்கேளாய்: சித்தநிர்மலப்பட்ட அத் தகைய உத்தமபுருஷனென்பான் சரீராதி யிந்திரியங்களையும், மனம் புத்தி முதலியவைகளையும் யாதொரு ஈசுரப்பிரீதியான சத்கன்மங்களிலே சேர்ப்பித்து கேவலமான இதரவிஷய வியா பாரங்களில் பற்றுவையாமல் சித்தசுத்திவரும்பொருட்டு யாதொ ருகன்மப்பிரயோசனத்தையும் எதிர்பாராது தான்செய்யாநின்ற கன்மபலன்களை யெல்லாம் ஈசுரப்பிரீதிக்கே செலுத்தி வருவதி னாலே இயல்பாய் ஞானத்தின்மூலமாக மோக்ஷத்துக்கதிகாரியாய் விடுவான். இவ்விதமார்க்கத்தினால் யாவருங் கரையேறலாமென் றறிக. சுவாமின்! அப்படியாயின் கன்மமொன்றே பந்தத்தையு மோக்ஷத்தையு மெவ்வாறுகொடுத்திடும்? 11

அருச்சுன! ஈசுரப்பிரீதியாகவே கன்மஞ்செய்துவராநின்ற யாதொரு கன்மயோகியாவான் ஈசுரபக்தனாயிருந்துகொண்டு சத் கன்மங்களாகிற புண்ணியங்களைச்செய்து அதனால் தனக்கென பலனையெதிர்பாராமல், இந்தக்காரியாதிகளை நான்செய்து முடித் தேன் என்கிற அபிமானமின்றி எல்லாம் ஈசுரனாலேயே உண்டு பண்ணப்பட்டதென்னும் விவேகத்தையடைந்து அதனால் வினை யும்பயன்களெல்லாம் அவனுக்கே ஆக்கவேண்டுமென்னும் உறு திப்பாடாய்நின்று கன்மங்களைச் செய்துவருகிறதினாலே சென்ம முடிவில் சுவர்க்கத்தையடைவன். இவ்வாறின்றிக் கன்மங்களைப் பகவத்பிரீதியாகச் செய்யாது, நான்செய்கிறேனென்கிற அகம் பாவத்தோடும் இடம்பத்தோடும், சுயநலங்கொண்டும், மற்று மனேகமான பிரியகாரணார்த்தமாகவும் செய்யாநின்ற கன்மி யாவான் அநேகம் பிறவிகளுக்கேதுவான பந்தபாசத்தையே யடைவன். அஞ்ஞானியென்பவனுமிவனே. சுவாமின்! மகா விசேடமாகிய நிராசாகன்மமேசெய்தல் வேண்டுமென்று தேவ ரீர்கூறுங்கால் கன்மங்களைச் செய்யாமலே சுத்தமாக விட்டுவிட வேண்டுமென்று வேதத்திற் கூறவேண்டியதென்ன? 12

அருச்சுன! அவ்வாறு வேதங்கூறியது நீதமே; ஆனாலும் அவ்வாறுகூறிய தெந்த உத்தமபுருஷனைக் குறித்ததோ அந்த விவேகியின் இலக்ஷண தன்மத்தைப்பற்றிக் கூறுவோம் கேட்பாய்: ஏற்கனவேயெடுத்த அநேகசென்மங்களில் நிராசாகன்ம தன்மங்கள் செய்தவனாயும், இந்த சென்மத்திலு மவ்வாறேசெய்துவந்து அந்த விசேஷத்தால் விருப்புவெறுப்புக் காஸ்பதமான காரியங்கள் யாவும் கட்டோடே விட்டுவிட்டுப் பரிசுத்தமான சித்தத்தைக்கொண்டு சாதன சதுஷ்டயங்களையடைந்து உத்தமமான ஆசிரியரைநேசித்து உபதேசிக்கப்பெற்றுச் சிரவணாதியண முடித்து வரும்போது பேத விவேகத்துக்குக் காரணமாயுள்ள உலகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனை யென்னும் பலவித வாசனையெல்லாங் கழிந்தபின் அபேதபுத்தி யேற்பட்டு விளங்கும் மகாபுருஷன் எங்கும் வியாபித்துள்ள தற்பதலக்ஷியமான பரமாத்மாவே தொம்பதலக்ஷியார்த்தமான கூடஸ்தரென்கிற நிச்சயத்தினாலே சுகானுபவத்தி லிருக்கும்போது யேர்க்கனவே தான் செய்ததுபோல மனவாக்குக் காயங்களினாலே சத்கன்மங்களைச் செய்விக்கிறதில் அந்தச் சுகத்துக்கு அந்த சொற்பகாலங்களும் பிரதிபந்தமா யிருக்கிறதென்றும், அதனால் அந்தகாலத்தையுஞ் சுகமாகவே அநுபவிக்கலாமேயென்றால, இல்லற தருமத்திலுள்ள காலம்வரையும் உலகோபகாரமாகச் சத்கன்மங்களைச் செய்யவேண்டிய விதியானதாலும், அக்கன்மங்களுக் கென்ன பலமோ அந்தப்பலனை தானென்றறிந்திருக்கிற தன்மையாலும், அந்த கன்மங்கள் செய்ததுபோதும் இனிச் சுகமே யனுபவிக்கலாமென்னு சமயத்திலே இல்லறதர்மத்தைவிட்டுத் துரியாசிரமத்தையடைந்த மகாவல்லபனுக்குக் கன்மஞ்செய்ய வேண்டுவதில்லையெனச் சொல்லவந்ததேயன்றி யேனையோரைக் குறித்துச்சொன்ன கருத்தன்று. இன்னும், அருச்சுன! அருமைவாய்ந்த அந்த பெருமையாளனுக்கு யாதொரு கன்மமுஞ் செய்யக் காரணமிராதெனபதற்குத்தக்க திருட்டாந்தமுங் கேட்பாயாக: அஞ்ஞானனுட்டான சாதாரண சீவர்களும மூன்றுமவஸ்தையாகிய சுழுத்தியவஸ்தையில் சர்வேந்திரியங்களும் ஓய்வடைந்து எந்தக்கருமமுஞ்செய்ய யேதுவில்லாதபோது அந்தச் சுழுத்திக்கு அப்பாற்பட்ட நான்காம் அவஸ்தையான * துரி

---

* துரியாச்சிரமம - சுததநிலை. அல்லது மேலானஞானம அதாவது நினமலாவத்தையிலே தற்சொரூப தரிசனந தோன்றுவது.

யாச்சிரமத்தையடைந்துள்ள அந்தப்புருஷன் எந்த இந்திரியங்களைக்கொண்டு யெக்கருமங்களைச்செய்ய யேதுவாகும்? ஆகவே யிவ்வாறான யேதுக்களால் எல்லாக்கன்மங்களையும் நிராகரித்தே யிருப்பானென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மர்மதர்மங்களைச் சிறிதுமறியாமலும், இவ்வாறனுட்டியாமலும் ஆசிரமங்களைமட்டும் வேறெக்காரணங்களினாலாவது பெற்றுக்கொள்வானேயாயின் அவனை விஷயவாசனைவிடாமல் அவைகளாலுண்டாம் இச்சை மிச்சமாகுமேயொழிய நீங்கமாட்டா. அது எதுவரையிலும் நீங்கவில்லையோ அதுபரியந்தம் இந்திரிய நிக்கிரகம்வரமாட்டாது அது எதுவரையிலும் வரவில்லையே அதுவரையிலும் அவனதுமனம் அந்தரங்கமாக அநேகங் கற்பனைகளைக் கற்பித்துக்கொண்டு வருவதோடுங்கூட புறக்காரணவியாபாரங்களையும் நடத்திக்கொண்டேவரும். இப்படியாக படிப் டியாய் விஷயவியாபாரமலிந்த அக்கணத்தே மேற்கூறிய சுத்தானுபவம் அநுபவிக்கவியலாததாலும், ஓர்சமயம் அநுபவிக்கநேரினும் கிரகஸ்தாசிரமத்தனைப்போ லனுபவிக்கக் கூடாமையாலும் அநேகதுக்கங்களுக்கும் அநேக பிறவிகளுக்கும் ஏதுவாகி, "ஏனிந்த ஆசிரமத்தைப்பெற்றோம்" மென்னுங் கவலையுறுவதைவிட இயல்பானயில்லறத்திலேயேயிருந்து விதிப்படி விவாகாதிகளையெல்லாஞ் செய்துகொண்டு நிராசையாகப் புண்ணிய கருமங்கள் செய்துவருதலே மிகச்சிலாக்கியமாகும். ஆனால் முன்னே நாம சொல்லிவந்த மகாபுருஷன் இத்தன்மையானவனல்ல. அந்த விசேடபுருஷனானவன் எவ்விடத்தில் எவ்வாறு பொருந்தியிருப்பனெனாறால், நவத்துவாரத்தோடுங்கூடிய தேகமென்கிற பிரதேசத்திலேயே வாசஞ்செய்துகொண்டிருப்பன். சுவாமின்! இதுகாறுங் கூறியதொருபாலிருக்கட்டும்; சர்வ சீவான்மாக்களுக்கும் ஆதாரபூதனும் நடுநிலைமை யுடையவனுமிருக்கிற சர்வேசுரன் சிலருக்கு ஞானத்தையும் சிலருக்கு அஞ்ஞானத்தையுங் கொடுத்தல் பக்ஷபாதமும் அதனால் வரும் புண்ணிய பாவமும் அவரைச்
சாராதா? 13

அருச்சுன! மனவாக்குக்கெட்டாத அந்தசர்வவல்லப பிரபுவானவர் இந்த அநித்திய சீவாத்மாவைப்போன்ற விகாரியல்ல; நிர்விகாரி. இந்த சீவர்களைப்போல அவருக்கு யாதொரு கர்த்தத்துவமுமில்லை. ஆகவேயிந்தச் சீவர்களுக்கேற்பட்ட கர்த்தத்துவமும இவர்கள்செய்யாநின்ற கன்மங்களும் அக்கன்மங்

களுக்குத்தக்க பயனை இவர்களனுபவிக்கிறதையும் அந்தபகவான் கற்பிக்கவேயில்லை. ஆகவே அவர் பக்ஷபாதியல்ல. அல்லாமலும் இந்தச் சீவர்களாற் செய்யப்படும் நல்வினை தீவினைகளின் பயனும் பாவபுண்ணியங்களும் அவரைச்சாரா. இந்தச் சீவர்களாற் செய்யப்படுகிற கன்மபயன்களை இந்தச் சீவர்களே யனுபவிக்கச்செய்கிறதாம். இவ்வாறாக இந்த சீவான்மாக்களுக்கு அநாதிகாலந்தொடங்கி அஞ்ஞானத்தினாலே நடந்தேறிவருகின்றது. இதையறியாது ஈசுரன்மேலேற்றுவது அஞ்ஞானம்நிறைந்த பாமராள்வழக்காம். மூலப்பிரகிருதியென்கிற மகாமாயையினாலுண்டான சிருட்டிமுதலிய பஞ்சகிர்த்தியங்களை ஈசுரனேசெய்தனரென்று அவர்மேலேற்றித் துக்காஸ்பதமான சனனமரணத்தையேயடைகிறார்கள். ஈசுரன் கற்பகவிருக்ஷகுணத்தை யுடையவர் எவ்வாறெனின், கற்பகவிருக்ஷமானது தன்னையடைந்தவர்கள் அபேக்ஷிப்பதெவையோ அவைகளையீந்துவருவது சுபாவமாம். அதுபோல யார்யார் என்னென்ன கன்மத்தைச் செய்கிறார்களோ அததற்குரியபயன்களையீசுரனளிக்கச்சித்தமாகவிருக்கிறார். (இதற்குச்சான்றாகச் சுவானுபூதிச் செல்வராவார் கூறியதுங்காண்க.) 14

கைவல்லிய நவநீதம்.

இந்தச்சீவனால்வருமறுபகையெலாமிவன்செயலென்றாமலந்தத்தேவனால்வருமென்றமூடர்களதோகதியடைவார்க
ளிந்தச்சீவனால்வறுமறுபகையெலாமிவன்செயலல்லாமலந்தத்தேவனாலென்றெனும்விவேகிகளமலவீடடைவாரே.

அறுபகை=காமக்குரோதாதி பகைகள். அமலவீடு=நின்மலமான மோக்ஷவீடு.

இன்னும் அந்த ஈசுரன் * அகண்டிதாகண்டித குணமுடையவரும், சர்வவியாபியுமானவர். அவரைத்தவிர யாதொன்றும் அன்னிய மில்லாமையால் ஒருவருக்கு ஞானமும் மற்றொருவருக்கு அஞ்ஞானமும்பாலிக்க யேதுவில்லை இத்தன்மைத்தான † பகவான் எங்கும் எப்பொழுதும் நீக்கியாக விளங்குகிறவரென்

* அகண்டிதா கண்டிதகுணம்—தான் பிறரால் கண்டிக்கப்படாதது பிறரைத் தான் கண்டிக்கும் வல்லமையுடைமை.

† பகவான் - நிறைந்தசெல்வம், நிறைந்ததர்மம், நிறைந்தகீர்த்தி, நிறைந்த சம்பத்து, நிறைந்த வைராக்கியம், மோக்ஷசாதனமான நிறைந்த ஞானம், என்னும் ஆறும், 'பக' என்னும் சொல்லிற் பிறந்ததாம். இந்த அறுவகையும் ஸ்ரீகிருஷ்ணனுக்குண்டாயிருத்தலால் பகவானென்று வழங்கப்பெற்றானென்க.

கிற நியாயத்தை, அகந்தையினாலும் மமதையினாலும் மேற்பட்ட அவிவேகத்தினால் மறைபட்டிருக்கின்றது. இவ்வாறாய விவேக சூனியத்தினாலே சீவர்கள் ஈசுரனிடத்திற் குற்றங்கூறிக் கொண்டு வீண்மயக்கத்தினாலே நரகத்துக் காளாகிறார்கள். விவேகிகளாயுள்ளா ரெவரும் இவ்வாறான துக்கத்தையடையா ரென்க. சுவாமின்! எதனாலே துக்கமயக்கத்தை விவேகிகளாவா ரடையமாட்டார்கள்? 15

அருச்சுன! சத்துவகுணத்தவனான விவேகியாவான் நிராசையாற் கன்மங்கள்செய்து பரிசுத்தமான மனசினாலே கிடைக்கப்பெற்ற ஞானத்தோடுங்கூடிய அந்தவிவேகிக்குச், 'சூரிய பிரகாசமானது இருளைநீக்கியதுபோல' அஞ்ஞானமானது நீங்கியவுடனே பிரமசொரூபமே யெங்கும் பிரகாசிக்கிறதென்றும், அதைத்தவிர அன்னியமானது யாதொன்று மில்லையென் றேற்பட்டுள்ள திடநிச்சய ஞானத்தினாலே பயக்கமான துக்கத்தை அஞ்ஞானியைப்போ லொருபோது மடையமாட்டான். 16

இன்னமுங் கேட்பாயருச்சுன! மேலேகூறிய ஞானபுருஷனாயவன் வெளிமுகமாகக் காண்பவைகளையெல்லாம் பரப்பிரமமென்றே கருதித் தானும் அதுவாகவே திடஞ்செய்து கொண்டு சதா பரமநிட்டையையேபுரிந்து மனோமயமற்றுப் பிரமபாவ மயமாகவும், அதைப்பற்றியே வாக்கினால் வசனிக்கிறதுமான விசேட பக்தியோடு கூடியவனாயுமிருப்பன். அப்பெரிய ஞானமகாபுருடனுக்குப் பரமாத்மனுடைய கிருபாபிரசாதத்தால் பிராரத்துவ பாகங்களெல்லாம் சூனியப்பட்டு செனனத்துக் கேதுவின்றிச் சுத்த சாக்ஷாத்கார சொரூபத்திலேயே லயப்படப் பக்குவமாயிருப்பன். சுவாமின்! புண்ணிய பாவ கன்மங்களாலும், அக்கன்மங்களின் தாரதம்மியத்தினாலும் உலகத்திலுள்ள சீவான்மாக்கள் பற்பல பாகுபாடாயிருக்கிறபடியால் அவர்களைத் தாரதம்மியமாகப் பார்க்கவேண்டுவதைவிட்டுச் சித்திமுத்திக்குரியவராகப் பார்ப்பதெப்படி? 17

அருச்சுன! விசேஷமான வித்யாபாரங்கதரனும் வணக்கமுடையவனுமாகிய பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைக்கொன்று அதன்மாமிசத்தைப் புசிப்பவனிடத்தும் சமமாயிருக்கிற பிரமசொரூபத்தைத் தனதுரூபமாகவே பார்ப்பார்கள். ஆகவே அவர்கள் இப்போதே

மோக்ஷரூபமா வமைந்துள்ளாரென் றறிவாயாக. சுவாமின்! இதிலோர்சந்தேகம்: தாழ்மையாயும் கேவலமாயு முள்ளவைகளைச் சமமாய்ப்பார்ப்பது நியாயவிரோதமென்று சாஸ்திரங்களில் கூறியிருக்க மகான்களான ஞானியர் ஒப்பநோக்குவது குற்றமாகாதோ? 18

அருச்சுன! பரப்பிரமசொரூபமே யெங்கும் வியாபித்துள்ளனவென்றும், தானும அந்தச்சொரூபமே யென்றும நிச்சயித்துள்ள மனதோடுங்கூடிய மகாபுருஷன், சமத்துவமாயிருக்கின்ற சொரூபத்திலேயே நிலையாயுள்ள அவர்களாய் சனனமரணமென்னும் சம்சாரத்தைவென்று பிரமசொரூபமாகவே விளங்குவதாலேயும் அவர்களுக்கு யாதொரு குற்றமுஞ் சொல்ல வருவதில்லை. மற்றும் சாதிபேதங்களினாலும் கன்மவிகற்பங்களினாலும் பற்பலபாகுபாடாகத் தோற்றினும் அவைகளெல்லாம் மாயாகாரியமான குணங்களைச் சேர்ந்ததென்றும், அவையனைத்தும் பொய்யேயென்றும் நிச்சயித்துக் குணங்களுக் கப்பாற்பட்டதாயிருக்கிற பிரமசொரூபமே தானென்றும் அநுபவிக்கின்ற மகான்களுக்கு இந்தபேதங்களாலுந் தோஷம்வருதற் கேதுவேயில்லை. முக்குணவசத்தரா யாதொரு நுட்பாநுட்பமுந் தெரிந்திராத சாதாரண சீவபாவமுள்ளபுருஷன், நியதியற்று மனம்போனபடிநடந்து நரகவாதனைக் குள்ளாகாமலிருக்கும்பொருட்டு அவர்கட்காக ஏற்பட்ட நீதிநூல்களின் முறைப்படியத்தை, ய[illegible] படியறிந்த பெரியோர்களிடத்தில் ஏற்றிக்கூறுவது மு[illegible] நியாயவிரோதமாம். ஆயினும் அந்த சீவத்துவன் தவறுமல நீதியோடும் நடத்தல் வேண்டும். சுவாமின்! கூறிய நுணர்ந்தனன். ஆயின் பகிர்முகபாவனையன்றி அந்தர்முகபாவனையாயுள்ளவர்களின் இலக்ஷணங்களைக்கூறின் அறிவதெவ்வாறு? 19

அருச்சுன! பிரமசொரூபம்வேறு, தான்வேறு யென்கிற பேதமின்றி அபேதபோதமாய்த் தானும் பிரமமென்றே யறிந்தனுட்டிக்கின்ற வுத்தமனுக்குப் பிரியமான காரியங்கள் சம்பவிக்கும்போது சந்தோஷமும் பிரியமற்றவிஷயங்கள் சம்பவிக்கும் போது வியாகூலமுமிராது. எவ்வாறெனில், தனக்கு வேறான வொன்றிருக்கிறதான வெண்ணமில்லாததால் அவ்விஷயங்களிலெள்ளளவும் மயங்கமாட்டான். அங்ஙனமாயின் மற்றையர் போல எல்லாவிஷயங்களையு மநுபவிக்கிறதாகத் தெரிகிறதே

யென்னின், பிராரத்த வினையினாலே சரீரத்துக்கு எப்போது என்னென்ன வரக்கூடுமோ அதுகளெல்லாம் வந்துதான் தீருமென்கிற உறுதிப்பாடுள்ளவனானாலும், அவைகளையுஞ் சொப்பனம்போலவே யெண்ணிக் கழிக்கிற சுபாவமுள்ளவனானாலும் அந்தவிஷயங்களிற் சமத்துவபாவனையாகவே புத்தியைச்செலுத்துவன். ஆகவே இவ்வாறாய குணானுபவத்தைக்கொண்டு தானறியவேண்டுவதேதவிர பிறிதன்று. இதுநிற்க; சுவாமின்! பற்பல வேறுபாடான நடபடிக்கைகளைக்கொண்டு அநேகவிதமாகக் காணப்படுகிற இவ்வுலகத்திலே எவ்வாறு சமபாவனை செய்துவரக்கூடும்? 20

பார்த்தா! உலகவிஷய வியாபாரங்களிலே சிறிதேனும் விருப்பமில்லாதவனும், பஞ்சேந்திரியங்களின் றொழிலைப் பற்றாதவனுமுள்ள புருஷனானவன் பரிசுத்தமான தன்மனத்தை ஆத்மாவினிடத்தேசெலுத்திச் சதாநந்தவநுபூதியா யிருப்பதினாலேயும், அந்த அநுபவானந்தமே தனக்குரிய உண்மைவடிவமெனவுணர்ந்த யோகியானதினாலேயும், எப்போதும் பரமாத்மகத்தன்மைக்குப் பாத்தியமுள்ள சந்தோஷத்தோடு சமத்துவபாவனையே புரிவனென்றறிக. இதுநிற்க; சுவாமின்! பகிர்முகவிஷயங்களை யனுபவிக்கிறதாலுண்டாய பிரத்தியக்ஷ சுகத்தைப்பற்றிக்கூறாது ஏதோ மோக்ஷத்தில் சுகமிருப்பதுபோலச் சொல்லிவருகின்றீர்களே, அந்த மோக்ஷசுகம் எத்தன்மைத்து? அன்றியெவ்வாறு சுகோதயமாகும்? 21

அருச்சுன! விஷயவாசனா விருத்திகளால் விளைந்தசுகம் ஆதியந்தமுள்ளதாயும், அநேகமான துக்கங்கட்கும் அநேகமான செனனமரணங்கட்கும் ஏதுவாகும். அவ்வித மகாவிவேகியாயும் மோக்ஷாபேக்ஷையுடையவனுமுள்ளவன் ஒருபோதும் அந்த அநித்தியசுகத்தை விரும்பான். தவிர, மோக்ஷசுகமென்பது நாசமடைவதென்றுமில்லை. இதுவே அநந்தமாயுள்ள அக்ஷயசுகமென்றும், இதனை யடைதலே பரம புருஷார்த்தமென்றும் விவேகிகளறிவார்கள். என்றறிவாயாக. இதுநிற்க; சுவாமின்! இவ்வாறாக மோக்ஷமெய்தவிரும்பிய புருஷனை மேற்கூறியபடி அநட்டியாவாறு தீங்குசெய்யும் பிரதிபந்தமெது? 22

அருச்சுன! மோக்ஷசுக மெய்துவதற்குத் தடைசெய்வாரொருவரிருவரன்று. ஆறுகொடிய துஷ்டர்களுண்டு. ஆனாலந்த

அருவரும் கட்புலனுக்குத் தோன்றுபவரல்லர்; குணமயமான அரூபிகள்; அவர்கள் யாவரெனில், காமன், குரோதன், லோபன், மோகன், மதன், மாற்சரியன் என்னுங் கள்ளர்களாம். இந்த அரூபக்கள்வர்களே ஒவ்வொருமனிதனுடைய சரீரத்திலும் வியாபித்துக்கொண்டு சமயம்வந்தபோது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாமர்த்தியங்களைப் பூரணமாகக்காட்டி அஞ்ஞானத் திருவிழாக் * கொண்டாடித் தனதிருப்பிடமாகிய மனிதர்தேகத்தையுங்கெடுத்து அவனையும் அவனறிவையும் பரிமுதல்செய்து அவனுக்குப் பைத்தியக்காரனென்கிற பட்டமுங் கட்டிவிடுகிறார்கள். அன்றியும் மோக்ஷலோகத்துக்குச் செல்லும் பாட்டையாகிய சன்மார்க்கச் சாலையின் முகப்பில் நிற்பார்கள்; இவர்களுக்கு ஆவேசம் வரும்போது அடையாளமாகக் கண் சிவத்தல், உதடு நடிநதல், முகங் கடுகடுத்தல், மயிர்க்குச்செறிதல், தேகம் நடுங்கல், வியர்த்தல் ஆகிய இவ்வடையாளங்களால் கண்டறியலாம். ஆகவே இந்த மகாவிரோதிகளைத் தேகவியோகமாகிறபரியந்தம் தலைகாட்டாதபடி யெவன் செயிக்கிறானோ அவனே விவேகியென்றும் அநீதமான சுகத்தையனுபவிக்கிறதற்கும் மோக்ஷத்திற்கும் அதிகாரியென்றும் சொல்லப்படும். இவ்வாறாய காமன்முதலான கள்வராறுவரையும் வென்றமாத்திரத்தானே மோக்ஷமெய்தவுஞ் சாத்தியமாகா. ஏனெனில், தத்துவபரிசீலனைசெய்து ஆத்மஞானம்பெற்றாத தானே அவனாய் அவனேதானும் அதீத நிலைவந்தக்கால் அதன்மேல் மோக்ஷ சுகத்துக் காளாகலா மென்றறிக. சுவாமின்! இப்போது கூறிய ஞானம் என்பது எத்தகைமையது? அதைப்பெற்ற உத்தம புருஷாளெவ்வித இலக்ஷணமுடையாரென்பதை விஸ்தாரமாக அனுக்கிரகஞ் செய்தல்வேண்டும். 23

அருச்சுன! விஷயானுபவங்களினா லெய்தப்படும் சுகதுக்கங்களையெல்லாம் பொய்யென வெறுத்தொழித்துச் சாதன *சதுஷ்டய சம்பத்தைப்பெற்று, * பஞ்சகோசங்களுக் கப்பாற்

* பஞ்சகோசமாவன:—அன்னமயகோசம, பிராணமயகோசம, மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம, ஆனந்தமயகோசம என நைதுமாம். இவைகளுள், உடல் அன்னமயகோசம கருமேந்திரியமும பிராணனும பிராணமயகோசம். கருமேந்திரியமும் மனமும மனோமயகோசம ஞானேந்திரியமும புத்தியும விஞ்ஞானமயகோசம், அவித்தை ஆனந்தமயகோசம.

பட்டவரும் † சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியென்கிற அவஸ்தாத்திரயங்களுக்குச் சாக்ஷியுமான சுகசொரூபமே தானென்றும், அதுவே தற்பத லக்ஷியார்த்தமான பரமாத்மனென்னும் ஞானவிவகாரத்தை ஆசிரியர் வாயிலாகக் கேட்டுணர்ந்து அவ்வித விவேக விசேடத்தால் எப்போதும் ஆத்மசொரூபத்திலேயே சிந்தனைசெலுத்தி அதிலேயே பார்வையும் அநுபவமுமுடையவனாய் அந்த சொரூப சாக்ஷியையே யடைந்து சரீராந்தியத்தில் அச்சொரூபத்திலேயே கலப்பன். ஆகவே ஞானமும் ஞானியும் இத்தன்மையதென இதனாற்றெரிந்துகொள்வாயாக.

அருச்சுன! மேற்கூறிய இலக்ஷணத்தோடுங்கூடிய அந்த ஞானஸ்தனென்பவன் விருப்புவெறுப்பினாலெய்தப்படும் பாவ கர்மங்கள் தன்னைச் சாராதவழியினின்று ஆசிரியர் உபதேசஞ்செய்த ஞானார்த்தங்களிற் சிறிதும் சந்தேகவிபரீதமில்லாத நிச்சயபுத்தியோடு இந்திரியங்களையெல்லாம் நிக்கிரகஞ்செய்து எல்லாசீவான்மாக்களிடத்தும் தயவேபாராட்டித் தன்னைத் தாழ்மையாயுள்ளவைகட்கெல்லாந் தாழ்மையாக்கி ஈற்றில் ஒப்பற்ற மோக்ஷத்தி லாக்ஷிசெய்வனென்க. 25

அருச்சுன! முன்னேகூறிய காமக்குரோத முதலான அறுவகை யுபாதைகளி லகப்படாமலும், பேதபாவனையையொழித்து அபேததன்மைவந்தெய்தியதால் தன்னினும் வேறான அன்னியமேயில்லையென்னுந் தெளிவுகொண்டும், தனக்கு ஏர்க்கனவே யுரியதான காரணசரீரத்தையும் சூக்ஷுமசரீரத்தையுமொழித்து நிச்சயமான பிரமசொரூபமே தானென்றனுபவிக்காநின்ற சன்னியாசியுமாவான் தேகத்தோடிருப்பினும் அல்லது தேகம் நீங்கிவிடினும் என்றும் பிரமசொரூபமாயே யிருப்பனென்றறிதல் வேண்டும். சுவாமின்! இவ்வாறாக யாவரும் சாதிக்கவியலாது போலத் தோற்றுகின்றதே! 26

† சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியாவது:-நித்திரைவிட் டெழுந்ததுமுதல் நித்திரை வருகிறபரியந்தம் விஷய விவகாரத்தி லிருப்பதற்குச் சாக்கிர மெனப்படும். சொப்பனமாவது, சாக்கிரமுடிந்து நித்திரைசெய்யத் தொடங்கும்போது மனதினாற் கற்பிக்கப்பட்ட பிரபஞ்சத்தினிடத்திற் கற்பனையாகக் காணப்படுவதும் அநுபவிக்கப்படுவதும் அநித்தியத்தி லனித்தியமானதுமான கனவாம். சுழுத்தியாவது, புறக்கரண வியாபாரமும் அந்தக்கரண வியாபாரமும் தேகேந்திரிய வியாபார பிரக்ஞையுமில்லாமல் சீவன் நிர்ச்சேஷ்டிதனாகி யெந்தமட்டும் நித்திரைசெய்கிறானோ அந்தமட்டுமென்றறிக.

அருச்சுன! ஞானமென்பதும் மோக்ஷமென்பதும் சாமானியமானதன்று; மகாவிசேடானுபவ நிலையாம். அன்றியும் அருமையானவைகளிலெல்லாம் அருமையானவை. எப்போது அருமையாயிற்றோ அதைப்பெறுவாரும் அருமையே; ஆதலால் யாவரும் பெறுதற்கேதுவில்லையென்றறிக. விரதம் தவம், யோக முதலானவைகளினாலும் அடையலாமாயினும் ஈண்டு யோகானுட்டானத்தால் மோக்ஷமெய்து முபாயத்தைக்கூறுவோம் கேட்பாய்: பகிர்முக விஷயானுபவங்களில் இச்சையையொழித்து வைராக்கிய புத்தியுடைத்தாய் புருவமத்தியில் உண்ணோக்கமாக நோக்கி நாசிவழிசெல்லும் பிராணாபானவாயுக்களைக் கும்பித்து நிறுத்த மனம் சமாதானமெய்திச் சொரூபதரிசனஞ் செய்தற்குப் பக்குவமாகுமென்றறிக. 27

சான்றாக திருமூலர் திருமந்திரம்.

மேலை யண்ணவில் விரைந்திரு காலிடிற்
காலனு மில்லை கதவந் திறந்திடு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான பராநந்தி யாணையே.

பின்னும் பஞ்சேந்திரிய வழியையடைத்து ஒப்பற்றதான அந்த பரமாத்ம சொரூபத்தை வாய்கொண்டுவாழ்த்தி மனதில் நினைவுகொண்டு அதனினும் வேறொன்றுமில்லையெனும் உறுதிகொண்டு அதுவே தானாகவெண்ணும் எண்ணததால் ஏகபாவனையுற்று இச்சை பயம குரோதமுதலியனவொழிதது மோக்ஷப்பிரியத்துவமுள்ள தபோதனனும் தேகத்தோடிருப்பினும் அல்லது தேகம நீங்கியவிடதது முத்தியேயெய்துவனென்க. 28

அருசசுன! மற்றுமுள்ள அநேகவித பக்திவிரதானுட்டான தவயெக்கியங்களெல்லாம் நம்முடைய பக்தகோடிகளாலே நம்மையுத்தேசித்துச செய்துவருகிறதினாலும, நம்மையே கதியென்றும், சகலலோகாதிஷ்டான வல்லவனையும், சர்வபூதங்களுக்கும் ஆதாரமானவனையும, புத்திக்குச் சாக்ஷியாயும் அநதாயாமியாயுமுள்ள நம்மையே தானென்றறிந்துமுள்ள மகாயோகீசுரனுக்கு மோக்ஷம் நிசசயமாய் சிததிக்குமென்றறிவாய். 29

சந்நியாசயோக அத்தியாய

முற்றிற்று.

ஆ அத்தியாயம 5-கக-சுலோகப்பொழிப்பு – 233.

# ஆறாவது அத்தியாயம்

# தியான அப்பியாச யோகம்.

**அவதாரிகை :** முந்திய ஐந்தாம் அத்தியாயத்தில் சந்நியாசிக்கு யோக்கியமான நிஷ்காம கன்மங்களாலே சித்தசுத்தி பிறந்து அதனால் ஞானமோக்ஷங்களையெய்தும் விதிகளைச் சாங்கோபாங்கமாகக் கூறினாரேனும், மேற்கூறிய நிராசைக்கன்மஞ் சித்தியாதற்கு ஏதுவாயுள்ளது தியானமாதலால் அதனைக் கடந்த ஐந்தாமத்தியாயத்தினிறுதிக்கண் சூசனமாகக்கூறினும், சர்வசங்கபரித்தியாகஞ்செய்த முனிபுங்கவர்கட்கு விரிவாய்த் தியான யோகத்தைக்கூறி அதற்காதாரமான கன்மயோகத்தையும் அக்கன்மயோகத்துக்கு உறுதிப்பாடாகிய தியான அப்பியாசமும் அவசியமாதலின் இந்த ஆறும் அத்தியாயத்தில் சவிஸ்தாரஞ் செய்கின்றார் :

அருச்சுன ! பரமாத்ம தரிசனமாகிய தியானம் சித்தியாக வேண்டுமானால் முதலில் மனசைப் பரிசுத்தஞ்செய்தல்வேண்டும். அவ்வாறு மனச்சுத்திக்கு ஏது சத்கருமங்களாகையால் யோகியாவான் அக்கன்மங்களைப் பலனையுத்தேசியாது ஈசுரார்ப்பணஞ் செய்வன். அதனாலேயே அவனைச் சந்நியாசியென்றழைக்கப்படும். இந்தச் சந்நியாசியும் தான் துறவற ஆசிரமத்தையடையுமுன்னரே அக்கினிஹோத்திரமுதலான சத்கர்மங்களை ஆசிரியர் விதித்தவாறு முறையேசெய்து முடித்தும், மற்றும் வேதாகமங்களில் விதித்தவாறு உபநயன விவாகாதிய சர்வசமஸ்காரங்களும் கிரமமாகச் செய்துமுடித்துப் பின் சற்குரு கடாக்ஷத்தாலும் வேதாகமசாஸ்திர விசாரணையாலும் அவைகளெல்லாம் கேவலம் துச்சமென்று வெறுப்படைந்து சந்நியாசங்கொள்ளின் அது வேதசம்மதமாகும், அவ்வாறு கிரகஸ்தாசிரமத்துக்குரிய கருமானுட்டானங்களைக் கிரமமாகச்செய்து பிறகு துறவாசிரமத்தை யடையானாயின், * ஈஷணாத்திரயங்களால் பிடிக்கப்பட்டு மனமாதி யிந்திரியங்களெல்லாம் விஷயானுபவங்களிலழுந்தித் துக்கத்தையடைந்து செனனமரணங்களுக் கேதுவாக முடியுமாதலாலென்க. 1

---

* ஈஷணாத்திரயம் - புத்திரன், மனைவி, திரவியம் ஆகிய இம்மூன்றினு மாசையுடைத்தாதல்.

அருச்சுன! சாஸ்திர சம்மதமாயுள்ள நித்திய நைமித்திய பிராயச்சித்தங்களும் மற்றுமுள்ள வைதிக கன்மங்களையும் காலக்கிரமமாக விதிப்படிச்செய்து அவைகளால் எய்தப்படும் பயனைத் தனக்கென கருதாது ஈசுரார்ப்பணமாகவே செய்துவருபவர்களைச் சந்நியாசியெனவும் யோகியெனவுங் கொள்ளப்படுமேயன்றி, 'நான்செய்கிறே'னென்னும் அபிமானங்கொண்டுசங்கல்ப பூர்வமாகச்செய்பவர்களை அங்ஙனங்கூற நியாயமில்லையென்க. 2

அருச்சுன! எவ்வித சத்கருமங்கள் செய்யவேண்டுமோ அவைகளை விருப்புவெறுப்பில்லாமல் ஆத்மார்த்தமின்றி ஈசுரார்ப்பணமாகச்செய்யின் சித்தம் நிர்மலமாம். இந்த பரிசுத்தமான மனதோடு ஆத்மசொரூபத்தைத் தியானஞ்செய்யின்மனம் நாசமெய்தும்; (அதாவது மனதுக்குரிய இயல்பான துர்வியாபாரம் நீங்குதல்) இவ்வாறன்றி யாதொருகன்மத்தைத்தொடங்கி அதன்பலனையுமபேக்ஷித்து விருப்பு வெறுப்போடுங்கூடிய சித்தத்தினாலே சொரூபத்தியானஞ்செய்யின் அத்தியானம் நிறைவேறுவாம். சுவாமின்! சந்நியாசம் பெற்றுக் கொள்வோமெனின் நிஷ்காம்ய கன்மங்கள்செய்து சித்தசுத்தி பெறவேண்டுமென்றும், அதுவரினும் சொரூபத்தியானமின்றி கூடாதென்றும் அநுக்கிரகஞ் செய்தீர்கள்; அத்தியானம் இனிது முடியும்பொருட்டுக் கன்மங்கள் செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பதால் அக்கன்மம் எதுவரையிலுஞ் செய்தல்வேண்டுமென்பதைத்தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன். 3

அருச்சுன! மனம்பரிசுத்தமடைந்து அம்மனதினாலும் அறிவினாலும் பார்க்கப்பட்டதெல்லாம் ஈசுரபாவனையாகத்தோற்றிய பின்னரும் சொரூபத்தியானஞ் செய்துவருகிற பழக்கத்தினால் அப்பரமாத்ம சொரூபந்தானேயென்று இடையறாது அநுபவந்திடப்படும் வரையில் கன்மஞ்செய்தல் அத்தியாவசியமாம். அவ்வாறு அநுபவித்த திடமுள்ள மகானுமேலதான் விஷயங்களினும் கன்மங்களினும் பற்றின்றி * சங்கற்ப விகற்பங்களையெல்லாம் வெற்றிகொள்ள முடியுமென்க. இவ்வாறாய மகாவுத்தமனையே யோகியென்றுஞ் சந்நியாசியென்றுஞ் சொல்லப்படும். இஃதன்றித் தேகமேதானென்றும் உலகம் நித்தியமென்றும் எண்ணும் பேதபுத்தியோடுங் கூடியவர்கட்கு மேற்கூறிய அநுபவம் கிடைக்கமாட்டாதென்றறி. ஆகவே மோக்ஷத்துக் கேதுவான

* சங்கற்ப, விகற்பம் - மனோநிச்சயம், வேற்றுமை.

நிஷ்காம்யகன்மங்களை நீ செய்வாயாயின் எவ்விதத்து மோக்ஷா னுபவமெய்துவாய். சுவாமின்! இத்தகைய ஞானம் எனக்கெவ் வாறுண்டாகுமோ அறிகிலேன்! 4

அருச்சுன! நல்லொழுக்கத்திற் சிறிதுந்தவறாது விவேகத் தன்மையடைவோருக்குநாள் மேன்மையான காரியங்களையே அநு சரித்துவரல்வேண்டும். அவ்வாறு மேன்மையைத் தேடாதொ ழியின் சாமானியர்களைப்போல பிறப்பிறப்பென்னும் சம்சார வியாபாரங்கட்கு அநுகூலமாயிருக்கிற விஷயவாசனையிலழுந்தி அருந்தலைப்படும் வியாகூலங்களால் சமயம் நேர்ந்தபோதெல் லாம் 'நான் பாவியானேனென்றும், கொடிய துஷ்டனென்றும், நான் விர்த்திக்கு வரப்போகிறதே யில்லையென்றும் இன்னுமிவ் வாறாக பலவுஞ்சொல்லித்தன்னைத்தானே தாழ்வுசெய்துகொண்டு துக்கிக்க ஏதுவாம்' எவ்வாறெனில், மனமானது ஓர் சமயம் மித்துருவாகவும் மற்றோர்சமயம் சத்துருவாகவும் முன்வருவ தால் இங்ஙனஞ்சொல்ல நேர்கின்றதென்றறிக. சுவாமின்! சத் துருவான மனத்தினது ஒழுக்கமெவ்வாறும், மித்துருவான மனத்தினதொழுக்கமெவ்வாறும்? தயைசெய்க. 5

அருச்சுன! சித்தசுத்தியின்பொருட்டு நிஷ்காம கன்மங்கள் செய்து பஞ்சேந்திரியங்களையும் வென்று சாதன சதுஷ்டயங்க ளைப்பெற்றுப் பின் ஆசிரியரையடுத்துச் சிரவணமான நிதித்தி யாசனங்களையுஞ்செய்து மோக்ஷானுகுணமாகிய விவேகசம்பந்த மான மனமானது மித்துருவாய் முன்வரும். இவ்வாறின்றி மாயாவிசேஷமாயிருக்கிற "தேகமேதானென்றும் உலகம் நித் திய" மென்றும் திடப்பட்டு இராகாதி விருத்திகளோடுகூடி அநேகமான மரணங்களுக்கும் துக்கங்களுக்கும் காரணமான பாவகன்மங்களைச் செய்வித்து நரகத்துக்காளாக முன்வரும் அவி வேக சம்பந்தமனமானது சத்துருவாகுமென்றறிக. மற்றும் மித்துருவானமனதோடுங் கூடியவர்களின் தன்மையுங் கூறு வோம்: சுகதுக்கம் சம்பவிக்குமாயின் அதனால் விகற்பமெய்தா மலும், அவமான வெகுமானங்களில் சமத்துவமும், உஷ்ண சீத ளங்களில் சமாதானசித்தமாய் நின்றும் இவைகளெல்லாம் சரீர சம்பந்தமேயன்றி ஆத்மசம்பந்தமல்லவென்ற விவேகம் விருத்தி யாகி "இவைகள் யாவும் பிரகிருதியின் விசேட காரியமாகவும் பொய்யாகவுமுள்ளன" வென்றறிந்து கலவரப்படாத மனதோடு

யாதொரு சங்கற்பவிகற்பம் பாராட்டாத சாந்தசீலத்துவசத்துவ
குணத்தினனாயிருந்து முடிவில் பரமாத்மாவின் சாக்ஷாத்காரத்
தையேபெறுவன். 6, 7

இன்னுங்கேட்பாய் அருச்சுன! சித்தசுத்தியின்பொருட்டு
நிஷ்காமகன்மங்கள் செய்தசாதனையால் சற்குருவையடைந்து
அநேகபணிகள்செய்து அவர்பால் கேட்டுணர்ந்தவைகளாலேற்
பட்ட பரோக்ஷஞானத்தினாலும், அவ்வாறனுபவித்துத்தெளிந்த
அபரோக்ஷஞானத்தினாலும் சமாதானமுடையவனா யாதொரு
திரிபில்லாது பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து ஓடும்பொன்னும்
ஒப்பநோக்கும் சமவிவேகியாகவே காணப்படுவன். இத்தகை
மையாளனையே யோகியெனவுஞ் சந்நியாசியெனவுஞ் சொல்லப்
படும். ஆனால் இத்துறவியாவான் தன்மட்டுக்குந் தவஞ்செய்
தலிலே ஊக்கமுடையவனா யிருப்பனேயன்றிப் பரார்த்தமாயன்
னியரையும் நல்வழிப்படுத்துந்தன்மை யில்லாததினாலே தன்னை
யடைந்தாரையுங் காருணியத்தால் கரையேற்றுங் குணமுடைய
வர்களின் இலக்ஷணத்தையுஞ் சிறிதுகேட்பாயாக. 8

அருச்சுன! மேற்கூறியவண்ணம் அபரோக்ஷஞானம் வரை
யில் திடமாய்ச்சம்பாதித்து இல்லற தாமத்தோடு கலந்திருக்
கும் பாவனையாக மன வாக்குக் காயங்களால் கன்மங்கள் யாவுங்
குறைவறச்செய்தும், தன்னையடைந்தவரின் பக்குவாபக்குவ
நோக்கித் தக்கவாறு உபதேசமுதலியனவு மநுக்கிரகஞ்செய்துந்
தானும் யாதொருவிஷயப் பற்றுதலுமின்றிப் பரிசுத்தமனதோடு
கூடியவனாய்ச் சத்துருமித்துருவா யுள்ளவனிடத்தும், உதாசீன
னிடத்தும், நியாயா நியாயந்தெரிந்து மத்தியஸ்தஞ் செய்யக்
கூடிய நடுவுநிலைமை யுள்ளவனிடத்தும், பந்துசன பரிவாரங்க
ளிடத்தும், மற்றும் தன்னையொத்த சாதுக்களிடத்தும், மகா
பாவிகளிடத்தும விருப்பு வெறுப்பின்றிச் சமமாய்ப்பார்த்துவரு
வன். இவ்வாருய யோகாருடாகளுள் இவனே * உத்தமனென
வழங்கப்படுவான். இந்த உத்தமன் என்பான் அவ்வாறு பேத
வாதியாயிராது உண்மையான துவைதாத்வைத வர்ச்சிதமான
சமத்துவத்தை விருப்புற்றனுபவித்துவரு மகானுதலாமென்க.
சுவாமின்! இவ்வாருன ரூசன ஞானமானது எவ்வாறு சித்தி
யாகும்? அநுக்கிரகஞ் செய்தல்வேண்டும். 9

---

* உத்தமன - (சிலர் துவைதவாதிகளாயும், சிலர் அத்வைதவாதிகளாயுமிருப்
பார்கள்)

அருச்சுன! மேற்கூறிய சுஞ்ஞானத்தின் சாதனமாய தியான யோகாப்பியாசத்தினாலே சித்திபெறலாம். அஃதெவ்வாறெனில், தியானாப்பியாசஞ்செய்யப் பிரியமுள்ள யோகியாவான் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் புண்ணியநதி தீரங்களிலுமுள்ள பரிசுத்த ஸ்தானங்களில் யாதொரு ஜனசங்கமு மில்லாவிடத்தில் யோகியாயிருந்து சவ்விஷயங்களிலும் புத்தியைச் செலுத்தாதிருந்து பஞ்சேந்திரிய மனமுதலானவைகளையும் நிக்கிரகித்துத் திடநிலையாயிருந்து மனதை ஆன்மாவினிடத்திற் செலுத்தி நிர்ச்சிந்தையா யிருந்துவருவான். இவ்வாறு அப்பியசித்தற்கு யோக்கியமாக ஆசனங்களுங் கூறுவோங் கேட்க: மேற் கூறியபடி நல்லஸ்தலத்திலுள்ள உத்தமஸ்தானத்திலே மேடுபள்ளமில்லாச் சம நிலத்தில் தர்ப்பைப் புல் பரப்பி அதன்மேல் மான்றோல் விரித்து அதன்மேல் வஸ்திரமடித்திட்டு அதன்மேல் வடதிசை நோக்கியிருந்து மேற்கூறியவண்ணம் சித்தவிருத்தியையும் பஞ்சேந்திரிய வியாபாரங்களையு மடக்கி மனதை அசைவுறாது நிறுத்தித் தியானஞ்செய்துவருவான். இங்ஙனஞ்செய்துவரு மப்பியாசத்தால் சித்தத்தைப்பற்றியுள்ள பேதபுத்திநீங்கிச் சித்தம் நிர்மலமாகும். ஆகவேயிதனால் ஞானத்துக்குயோக்கியமானதும் ஹேதுவானதுமான மனோ நிர்மலத்துவத்தை இந்த தியான யோகமே பாவித்தருளுமானதால் மீண்டும் வியக்தமாகக் கூறுவோங் கேட்பாய்:— 10, 11, 12.

அருச்சுன! மேற்கூறியவண்ணம் ஆசனாதிகளிட்டு அதின் மேலிருந்து பயமற்றுச் சாந்தமனதோடு எப்பக்கங்களிலும் பாராது கோணலின்றி சிரசு உடல் மூலாதாரமவரை நேராயிருந்து அசையாமல் மூக்கு நுனியையுற்று நோக்குவதுபோலும் பாவனையாகநோக்கி அகமுகமாகச் சுழிமுனை மத்தியாக ஆத்மாவைத்தானாகப்பார்த்துக்கொண்டு ஒருநிலையாயிருத்தல்வேண்டும். இவ்வாறு விருப்புவெறுப்பற்ற பரிசுத்தமனதினால் தனக்கன்னியமில்லையெனத் தெரிந்து திடங்கொண்டதனால் பயமுதலானவையும் நீங்கப்பெற்றுப் பிரமசரியவிரத விசேடமுடித்தவனாய் ஈற்றில் என்னையே பிரபுவாய்ப் பார்த்துக்கொண்டு யோகாப்பியாசஞ்செய்துகொண்டு வரவேண்டும். சுவாமின்! இவ்வாறு யோகாப்பியாசஞ் செய்துவருபவன் அடையும்பலனையும் இன்னதெனக்கிருபைசெய்ய வேண்டுகிறேன். 14

அருச்சுன! தியானயோகஞ் செய்பவன் தனது நியமமான மனதால் அந்தக்கரணத்தை யெப்போதுமடக்கி ஒரு நிலையாய் வைத்துக்கொண்டு அன்னிய சங்கற்பமின்றி மோக்ஷமே தனக்குரிய பரமகதியாகவெண்ணி பரப்ரம்மனும் புருஷோத்தமனுமான என்னிடத்தில் லயப்பட்டதால் நிச்சலமான மனமுடையவனையென்னைத் தானாக அறிந்திருப்பதினாலே இவனுக்கு மோக்ஷமேபரமகதியாமென்றறிக. சுவாமின்! தேவரீர் கூறிய துணர்ந்தனன். ஆனால் கூறியவாறு சாதிப்பது துர்பலமாமென்று நினைக்கிறேன்; என்னெனில், அவயவாதிகளுந் தேகமும் அசைவற்றிருப்பதோடு மனமும் அசையவொண்ணா தென்கிறீர்கள். அப்படி சாதிப்பதெப்படி முடியும்? 15

அருச்சுன! மந்தகுணத்தோடுங்கூடிய அதிபோஜனமுடையவனுக்கும், சுத்தமாக ஆகாரங்கிட்டாத பசியாளிக்கும், அதிக நித்திரையுள்ளவனுக்கும், அன்றி நித்திரையே யில்லாதவனுக்கும், விருப்புவெறுப்புற்றுத் தேகத்தைந் தானென்றும், பிரபஞ்சம் நித்தியமென்றும் எண்ணியிருக்கிற மந்ததரனுக்கும் இவ்வித தியான யோகம் சாதிப்பதென்றால் மிகக் கஷ்டமாகவே காணப்படும். 16

அருச்சுன! சூக்ஷ்மகதமான யோகமானது ஒருவனுக்குச் சித்திக்கவேண்டுமானால் அவன் ஏர்க்கனவே கூறியவுண்ணம் சர்வசாதனங்களையுஞ் சாதித்து மோக்ஷமடைவதில் நிரம்பவும் ஆசையுள்ளவனாய்க் குருமூர்த்தியினிடஞ்சென்று யோகாப்பியாசத்துக்குரிய விதிவிலக்குகளை நன்றாகக்கேட்டறிந்து சத்துவகுண ஆகாரங்களைக் காலந்தருந்தி சத்கன்மங்களையும் சமயம் நேர்ந்துழிபுரிந்து சவதானமாகவும் சொற்ப நித்திரையோடுமிருந்து சாதிப்பது உசிதமாம். சுவாமின்! இவ்வாறுகூறிய தியான யோகத்தை எவ்வளவுகாலம்வரை அநுட்டித்து வரல்வேண்டும்?

அருச்சுன! யோகாப்பியாசப் பிரியமுள்ளவனுக்குச் சர்வ விஷயங்களிலுமுள்ள இச்சைவிட்டு சங்கற்பவிகற்பமில்லாது பரிசுத்தமான மனமானது சமுத்திரத்திலே உப்புக்கல் கரைந்தாற்போல ஜீவசாக்ஷியாகிய ஆத்மசொரூபத்திலே பேதமின்றி யெப்போது லயப்படுமோ அதுவரையிலும் இடையறாமலும் மனத்திடங்குன்றாமலும் அப்பியாசித்தே வரல்வேண்டும். இவ்வாறு சதாதியானஞ்செய்து வருகின்றதினாலே இந்த அப்

பியாச யோகியின்மனம் தனக்குரியசலனமாகிய விஷயவியாபார விருத்தியில் நுழையாது நிர்மலமாகவும், காற்றிடைப்பட்டதீபம் போலலைந்த மனமானது அஃதில்லாவிடத்துள்ள தீபம்போல அசைவற்று எப்போதும் ஆன்மசொரூபத்திலேயே பேதமின்றித் தியானித்திருக்கும். அவ்வாறு அசைவற்றிருக்கவே அவ்வான்மாவுக்கு ஞானமென்னும் பிரகாசம் பிறக்குமெனவறிக. சுவாமின்! முன்னே உபதேசித்ததில் நிஷ்காமமான்யஞ் செய்வதே யோகாப்பியாசமென் றனுக்கிரகஞ்செய்தீர்கள்; மறுபடியும் சமாதிசெய்வதே யோகமென்கிறீர்கள்; இதனால் எதையப்பியாசிக்கலாம், எதைவிடலாமென யென்மனம் மயக்கமுறுகின்றது. ஆகையால் இவ்விரண்டில் எது சிலாக்கியமோ அதை உபதேசிக்கவேண்டும். 19

அருச்சுன! இந்த யோகாப்பியாசத்தினாலே வேறுவித விஷயங்களாகவும் வேறுவித சங்கல்பமாகவும் மனமானது கனவைப்போன்று பரிணமிக்காது அவஸ்தைகளற்று எப்போது ஒழிவெய்துமோ அக்காலத்தில் நிர்மலமாயுள்ள அம்மனதினால் தன்னையே ஆன்மாவெனத் தரிசித்துக்கொண்டு ஆநந்தமயமாக அவ்வான்மசுகத்தையே அநுபவித்துக்கொண்டிருப்பன். ஆகவே இத்தன்மையன் கன்மங்கள் செய்தாலும் விட்டாலும் அதனால் யாதொருகெடுதியும் பிரயோசனமுமில்லையாம். இவ்வாறனுட்டிக்கச் சக்தியற்றவனுக்கு மோக்ஷாபேக்ஷையிருக்குமானால் அவனுக்கே கன்மயோகத்தையுங் கூறியிருக்கின்றோம். அந்தகன்மயோகத்தினாலே சித்தசுத்தியுண்டானபிறகு ஞானோதயமாகி மேற்கூறிய மோக்ஷசாதனத்தையே யடையப்படுகிறதினாலே இந்த இருவிதயோகங்களுக்கும் பொதுவிதியாக யோகமென்றே அதிகாரமுறைமையாற் சொல்லப்பட்டதெனவறிக. சுவாமின்! இந்திரியாதிகளின் வயப்பட்டமனமானது விஷயவிகாரங்களை யனுபவிப்பதாற் சுகமேற்பட்டிருக்க, அவைகளைவிட்டு ஓய்வடைந்திருக்குமானால் சுகமுறுவதெப்படி? 20

அருச்சுன! கருவிகரணங்களினாலே அநுபவிக்கப்படும் விஷயபோகங்கள் யாவும் ஜனன மரணங்களையும் துக்கத்தையுந்தரக்கூடிய அநித்தியத்துவமேயன்றி நித்தியத்துவமுள்ளதல்ல; ஆனால் இந்தயோகியானவன் அநுபவிக்கப்படுகிற சுகானுபவம் அப்படிப்போன்றதல்ல; நித்தியத்துவமும் ஆநந்தானுபவமும்

என்றும் நீங்காததுமாயுள்ளதாம். ஆனால் அந்தச்சுகம் எவ்வாறு பெறக்கூடுமென்னில், யதார்த்தமாய்த் தானும் ஏனைச் சீவர்களும் என்றும் நித்தியர்களாயும் ஆநந்தமயமாயுமிருத்தலை யறியாது மறைபட்டாற்போலிருந்ததென்கிறதால் அதியாச்சரியமும், மனம், புத்தி, இந்திரியங்கள் என்னுமிவைகளுக்கு எட்டாதவராகிய பரமாத்மாவே தானாயிருக்கிறேனென்கிற சந்தோஷமும், சரீரமும் மற்றையிந்திரியங்களும் அதனாலனுபவிக்காநின்ற விஷயங்களும் பொய்யேயென்றுணர்ந்து அவைகளிற் சிறிதேனுமாசையின்றி மனம்பரிசுத்தமாம்போதுதான் ஆன்மசுகமென்பது தோன்றப்படும். அந்தமகாபுருஷனையே ஆத்மாநந்தனென்றுஞ் சொல்லப்படும். 21

அருச்சுன! மேற்கூறிய யோகியானவன் அடைந்தலாபமென்னவென்றுகேட்பின், தான் அநுபவியாநின்ற ஆத்மாநந்தமேதானாயினேனென்கிற பெரியதோர் லாபத்தைக் காட்டிலும் பெரியலாபம் வேறொன்றில்லை. மற்றும் அச்சொரூபாநந்த யோகியினது புத்தி முதலாய விந்திரியங்களெல்லாம் எப்போதும் சமாதிநிலைமையாகவே யிருக்கிறபடியால் அவனது தேகத்தில் கத்தியினாலும், பாணங்களினாலும் உபாதைசெய்யினும், அன்றி அடித்திடினும் அவைகளாலேற்படும் துன்பங்களாலே ஏகாத்ம சொரூபமாயிருக்கின்ற மனமானது தான்கூடிய நிட்டையினின்றுங்கலைந்து சலிப்பெய்தாதென்க. இவ்வித இலக்ஷணமுடையவனையே யோகியென்று எல்லாராலுங் கொள்ளப்படும். சுவாமின்! இந்தயோகஞ் சித்திக்க வுபாயமுண்டாயிற்கூறுக. 22

அருச்சுன! யோகியென்பவன் தான் ஆத்மாநந்த சமாதியிலிருக்கும்போது தனக்குற்ற யாதொரு குளிர்வெப்பத்தினாலும் துன்பங்களினாலும் சுகதுக்காதியவைகளாலும் புத்தியானது சமாதிகலைந்து சாக்கிரத்தை யடையாவிடின் அப்போதுதான் யோகஞ் சித்தியானதென்றறியவேண்டும். அவ்வாறு திடப்பட்டயோகமே நிச்சயமான ஆத்மலாபத்தைக் கொடுக்கும். அன்றி மகாயோகமுமாகும். மற்றயோகங்களெல்லாம் மரணயோகத்துக்கொப்பாம். மற்றும் யோகாப்பியாசஞ் செய்துவரும்போது சிலகாலத்துக்குள் யோகமுதிராது ஆத்மதரிசனங்கிடைக்கவில்லையே! சாஸ்திரங்களையும் ஆசாரியருபதேசங்களையும் நம்பி வீணாக போகபோக்கியங்களையும் விட்டு தேகத்தைவாட்டி

யென்னபயன் கண்டோமென்று சலித்தபுத்தியாகிய தமோகுண வயப்பட்டு விட்டுவிடாது ஒவ்வொருதினமும் சாவதானமாக அப்பியாசித்துவரின், குருகடாக்ஷத்தால் நிச்சயமாக ஆன்மதரிசனமடையலாமென்க. இன்னும் மனோசங்கற்ப விகற்பங்களாலுண்டாகின்ற எல்லாவிதநோக்கங்களையும் பகிர்முகமன்றி அந்தர்முக வாசனையிலும் வாராதபடி விடப்பட்டவனையும், இந்திரியாதிகள் விஷயங்களில் வீழாதபடி தடை செய்தவனையும், சாஸ்திர வுணர்ச்சி ஆசிரியருபதேசங்களால் ஆராய்ந்தறிந்த விவேகஸ்தனையுமுள்ளவனது மனோதிடத்தால் ஆத்மசொரூபத் தியானஞ் செய்யின் நிச்சயமாகச் சித்தியாகுமென்க. சுவாமின்? இரஜோகுண விசேடிப்பால் மனஞ்சலித்தற் சுபாவமாயிருக்கிறபோது அதையெவ்வாறு * நிரோதஞ்செய்யக்கூடும்? 23, 24

அருச்சுன! என்றுமுள்ளதாயும் எங்கும் நிறைந்ததாயுமிருக்கிற கூடஸ்தபிரமம் தானேயென்னுந் திடமான வைராக்கியத்தினாற் சஞ்சலியாதுள்ள நிலவரப்பட்ட விவேகத்தினாலே ஆத்மசொரூபத்திலன்றி இந்திரிய விஷயங்களில் மனதைச் செலுத்தாது பையவிழுத்து உபசாந்தியடையுமபடி நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்வதால் அதைவிட அன்னியமாயாதொருவிஷயமு மில்லாமையால் சற்றேனும் வேறொன்றைச் சிந்திப்பதற் கேதுவில்லாமற் போகின்றது. ஆகவே மனம் தன் வசப்பட்டதென்பது திண்ணமாயிற்று. சுவாமின்! தேவரீர் உபதேசித்தவண்ணம செய்யவேண்டுமென்று உறுதியாக அநுட்டிக்கும்போது அந்நெறியிற் கூடாதுபிரிந்து ரஜோகுணச் சார்பினால் மீண்டும் விஷயக்கூட்டத்திலே நாட்டமாகின்றதே! இதற்கென்செய்வது? 25

அருச்சுன! அவ்வாறு பிரிந்து விஷயங்களை நாடினும் அதற்கோருபாயமுண்டு; என்னெனில், நீண்டகாலமாக அநேக சென்ம வாசனுபலத்தினால் சஞ்சலிதமாவந்த அந்த ரஜோகுண சம்பந்த மனமானது எவ்வெவ்வ விஷயங்களில் இச்சை கொண்டு செல்லினும அவ்வவ் விஷயங்களினின்றும் அவ்வப்போது விசாரணை விவேகத்துடன் கூடினதான சத்துவகுணமனதாற்றிருப்பி மீண்டும அவ்வாத்ம சொரூபத்திலேயே சேர்த்தல் வேண்டும். இவ்விதமாக அடுத்தடுத்து இழுத்து முற்கூறிய

* நிரோதம - தடை

வாறு அநுட்டித்துவரின் நாளடைவில் விஷயசம்யோகத்துக் கிசையாது தானே நின்றுவிடும். சுவாமின்! இவ்விதமாக மனதைச் சத்துவகுணவசப்படுத்தி அநுட்டிப்பதாலேற்படும் பயன் யாது? 26

அருச்சுன! இராகாதி விருத்திகளையொழித்த மனதைத் தன்வசப்படுத்தியவனும், தனக்கன்றி வேறெவ்வித சங்கற்பங்களும் செய்யாததால் சாந்தசித்த முடையவனும், அவிவேகாதிய தொந்தமின்றி யிருக்கின்ற யாதொரு யோகீந்திரனவான் தற்பதலக்ஷியார்த்தமானவரோ இந்தத் தொம்பத லக்ஷியார்த்தமான கூடஸ்தரென்று பிரம்ம சைதன்யத்தையடைந்து நித்தியமான சுகசொருபமாகவே விளங்குவன். இன்னும் இவ்வித யோகியானவன் சத்துவகுணகாரமாயுள்ள மனதைத் தன்வசஞ் செய்துகொண்டு அவிவேகா பாசங்களற்றவனாய்க் கஷ்டமேயறியாது பிரமசொருபத்தைச் சுகமாயடைந்து முடிவில்சீவன்முத்தனுவான். இன்னும், திடசித்தனான இந்த யோகாப்பியாசியால் பிரமசொருபமே யெங்கும் வியாபித்திருக்கிறதென்னும் நிலைத்த விவேகத்தினால் பிரமன்முதல் எறும்பீறாகவுடைய சர்வபூதப் பிராணிகளுந் தன்னையன்றி யில்லையென்றும், தானும் எல்லாப் பிராணிகளிடத்து மிருக்கின்றேனென்றும் சமத்துவ திருஷ்டியாயிருப்பனென்க. 27, 28, 29

சுவாமின்! தேவரீர் இதுகாறுங்கூறிய அரிய பெரிய யோக சம்பந்தமானவிஷயங்களில் தொம்பதலக்ஷியார்த்தமான கூடஸ்த பிரமமே தற்பதலக்ஷியார்த்தமான பரமாத்மாவென்றும், அவரைத்தவிர அன்னியமில்லையென்றும் கூறியவண்ணம் அநுட்டித்துப்பார்க்க கேவலம் சாமர்த்தியமினனுயுள்ள புருஷன் எவ்வாறு அநுட்டித்தால் அந்த அநுபவம் வருமோ அதை அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று வினவிய யாதொரு அருச்சுனனை நோக்கி பார்த்தா! நீ எந்தபுருஷனை உத்தேசித்துக் கூறினையோ அந்தபுருஷன் சாக்ஷாத் வாசுதேவனுயுள்ள நம்மை எல்லாப்பிராணிகளிடத்திலும், எல்லாப்பிராணிகளையும் நம்மிடத்திலும் பக்தி வினயமாகப் பார்த்துவருவானாயின் அவனுக்குநானில்லாததொன்றுமில்லையெனத் தெரியவரும்; அவன் என்னையன்றியுமில்லை. இவ்வாறாக அந்தர்முக அபிப்பிராய முடையவனாய்க் கரணமூன்றையும் சத்கருமங்களிற் சேர்த்துத் தற்பத வாச்சியார்த்தமான

பஞ்சபூதமுதலான எல்லாவிஷயங்களும் என்னுடைய பின்னப் பிரகிருதியென்றும், அதுவும் என்னுடைய அபின்னப்பிரகிருதியைத்தவிர வேறில்லையென்றும், அதுவும் என்னைத்தவிர இல்லையென்னும் பக்திசெய்துகொண்டு வருவானாயின் பிரதிதினமும் முன்னே யென்னால்சொன்ன ஆத்மதரிசனமுற்று முடிவில் சொரூப சித்தியடைவன். சுவாமின்! இப்போது கூறியவாறனுட்டிக்கும்போது மனவாக்குக் காயங்களினாற் செய்துவரும் கன்மங்களினாலே பாவபுண்ணியங்கள் வந்தடையுமே! 30

அருச்சுன! தாவரசங்கம ரூபங்களாயுள்ள எல்லாப்பூதங்களிடத்தும் நான் ஒருவனேயுள்ளேனென்றும், அநுதானேயென்றுந் தெரிந்துகொண்டு பக்திபூர்வமாயுள்ள யாதொரு யோகியானவன் ஜனகாதியரைப்போல நிட்காமகன்மங்கள் செய்துகொண்டிருப்பினும், அன்றித் துரியாச்சிரமியான வியாக்கியவர்க்கராதிகளைப்போல விட்டிருப்பினும், அல்லது தத்தாத்திரயர்முதலானவர்களைப்போல விதிவிலக்கான சன்மங்களை அநுட்டிக்கப்பட்டவனாயினும் அவன் என்னிடமேயிருப்பன். 31

அருச்சுன! மேற்கூறிவந்த மகான்களைவிடமேலான ஞானவந்தர்களையுங் கூறுமேன் கேட்பாய்; அந்தரங்கத்தில் தற்பதலக்ஷியார்த்தமான பரமாத்மாவே தானென்னும் நிச்சயஞ்செய்துகொண்டு வெளிமுகமாக மனவாக்குக் காயமென்னு மூன்றையும் சத்கன்மங்களிற் செலுத்திவருகின்ற மகோத்தமனும், பிறனொருவனுக்குவந்த சுகதுக்கங்களைத் தனக்குவந்ததாகவெண்ணிச் சர்வசீவர்களையும் தயவோடு சமமாகப் பார்க்கிறவனுமுள்ளவனே மேலானவனவன்; அவனே மகாயோகி; இவ்வாறனுட்டிக்க வேண்டுமென்பது நமது சித்தாந்தம். இதுவே நமக்குச்சம்மதி; என்னெனில், ஏனையோர்களால் உலக உபகாரமின்மையாலும், இந்த மகாயோகியால் உபகாரவிருத்தி யிருப்பதாலுமே மிகச்சிரேஷ்டமென்றேம். 32

அவதாரிகை: ஒப்பரிய மெஞ்ஞான சித்தியுறுதற் காதாரமான யோகசித்தி செய்யவேண்டுவ தவசியமென்றும், இந்த யோகம் சித்திப்பதற் காதாரமாயுள்ள மனமுதலான இந்திரியங்களை யடக்கவேண்டுமென்றும், இந்த மனமாதி இந்திரியங்களை அநேக சாதனங்களாலும் ஆசன போசன நித்திராதி நியமங்களாலும் சாதிக்கவேண்டுமென்றும் உபதேசித்துவந்தவைகளை

உற்றுநோக்குமிடத்து, "எதையடக்கினும் மனதை லயப்படுத்துவது மகா அருமையாகுமென்கிற கருத்துடைய அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ண பகவானைநோக்கி பிரபோ! எவ்விதத்தும் மனதைப் பரிசுத்தஞ்செய்து சமமாக நிறுத்துதல்செய்வதே பிரதமயோகமென்றுபதேசஞ்செய்தீர்கள்; அவ்வாறு மனதைச் சாதனைக்குக் கொண்டுவரவேண்டுமானால் அதற்குரிய சஞ்சலசுபாவத்தையொழித்துப் பரிசுத்தமாக நிறுத்துவதென்றால் அசாத்தியமாகக் காணப்படுகிறதே! 33

சுவாமின்! மற்றும் இரசோகுண வசப்பட்ட அந்த மனமானது சலனமுற்று சதா விஷயவிவகாரங்களையே அவாவிக்கொண்டு இராகத்துவேஷங்களோடுகூடிக் கோஷஞ்செய்து சரீராதியிந்திரியங்களையெல்லா மொடுக்கத்தக்கதாயும், யாதாமொரு விஷயத்தில் பிரவேசிக்கலாகாதென்று நிச்சயித்திருக்கும்போது மீண்டும் அவ்விஷயத்தையே யவாவித் தூண்டுவதாயும், மற்றுங் கிரியாம்சங்களில் நுழைந்தால் அதைவிட்டு இலேசாகத் திரும்பாது அதிலேயே நிலையாயுள்ளதாயும், இன்னும் விரிதலும் ஒடுங்குதலுமாகி யோர்நிலையுங்கொள்ளாது, குழப்புந்தன்மையாயுள்ள இந்த மனதைச் சமாதானப்படுத்தி நிறுத்துவதென்றால், "கடலைக்கடக்க மரக்கலமின்றிக் கையினால் நீந்தத் துணிந்ததுபோலாகு"மென்றுகூறியயாதொரு அருச்சுனனைநோக்கி ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா மீண்டும் இதோபதேசஞ் செய்கின்றார்: ஏ அருச்சுன! இப்போது நீ கூறிவந்த மனோநிலைமையானது அதற்கு இயல்பாயுரியதல்ல; அது சார்ந்துள்ளதான இரசோகுணத்தின் சம்யோக விசேட மாகையால் மேற்கூறிய தன்மையாம்; ஆயினும் விஷயங்களை விலக்கத்தக்க வைராக்கிய திடத்தினாலும் யோகாப்பியாச முதிர்ச்சியாலும் நிலைபெறச் செய்யவேண்டுமேயன்றிச் சாமானியமாக வேறெவ்வித வுபாயங்களினாலும் மனோநாசஞ்செய்ய வியலாதென்றறிக. 34, 35

அருச்சுன! இவ்வாறு மனோநிச்சயங்கொண்டு அதன் பிறகே யோகாப்பியாசஞ் செய்தற்கு முயலவேண்டுமென்றும், அந்த நிச்சயமான திடமுள்ளவனையும், அதிகாரமுறையால் பக்குவாபக்குவிகளைப்பற்றியுங் கூறிவருவோங் கேட்பாய்: இந்திரஜால கோலமாயுள்ள இந்தவுலகம் நித்தியமானதென்றும், ஸ்தூல பஞ்சபூத மயமாகிய இந்தச் சரீரத்தையே தானாக பாவனைசெய்

தும், பிரியாப்பிரிய விஷயங்களோடுகூடி இந்திரியாதிகள் தனக்குக் கட்டுப்படாமலுமுள்ள அபக்குவியாவான் முற்கூறிய யோகாப்பியாசஞ் செய்யவேண்டுமென்று மாசையுடையவனாயினும் அவனாலது இயலாதாகும் மற்றோர் பக்குவியாவான் பிரதமத்தில் * சாதனசதுஷ்டய சம்பத்தியுடையவனாய் மோக்ஷாபேக்ஷையோடு பஞ்சேந்திரியாதி சித்தமுதலானவைகள் தன் வசம்பெற்ற வைராக்கியதிடத்தோடு யோகாப்பியாச வுபாய சாதனையைக்கொண்டு சாதித்துவருவானேல் மிகச்சுலபமாகமனதைச் சொரூபாகாரஞ் செய்யலாம். அவ்வாறு செய்வதால் மிதமீறுதல் முதலிய விகாரசுபாவங்கள் தடைபட்டு உத்தமமான ஞானோதயமாகி முத்தியைப் பெறுவான். 36

அவதாரிகை: மேற்கூறியவாறு அப்பியசித்துவரும்போது இடையிலே மரணம் சம்பவிக்குமாயின் அவனுடையுங் கதியாதோவெனுஞ் சந்தேகங்கொண்ட அருச்சுனன் தெளிவுறவேண்டிய கருத்துடையவனாய் ஸ்ரீவாசுதேவனை நோக்கிச் சுவாமின்! பிரதமத்தில் சாதனசதுஷ்டய சம்பன்னனாய் ஞானகுருவையடைந்து உபதேசம்பெற்று யோகாப்பியாச விருப்பங்கொண்டு அநுட்டித்துவரும்போது அவன்றன் பூர்வ கர்ம பிராப்தானுகுணமாக அவ்வப்பியாசத்தை விட்டொழிந்து சாக்கிராவஸ்தையயத்தனாய் அநித்திய போகபோக்கியங்கட்கேதுவான பாவ கன்மங்களைச்செய்யாது நிஷ்காமகன்மமாகிய சத்கன்மங்களையுஞ் செய்துகொண்டு யோகத்திலேயே பிரியமுள்ளவனாயு மிருக்கிறவனுக்கு அதுசித்தியாகுமுன்னர் தேகத்துக்கானிவருமேயானால் அவனுக்கு யாதொரு நற்கதியும் கிடையாதென்று எனக்குத் தோன்றுகின்றது. அதைப்பற்றித் தேவரீர் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 37

இன்னும், மேற்கூறிய விஷயத்திலே சந்தேகந்தோன்றற்குக் காரணம் யாதெனில், நிஷ்காமமாகச் சத்கன்மங்கள்செய்து யோகாப்பியாசத்தின் பிரயோசனமான மனோநாசஞ்செய்வது பூர்த்தியடையாமையால்மோக்ஷமடைதற்குமேதுவைக்காணோம்; இதுபோயினும் போகட்டுமென்றுஞ்சுவர்க்காதிபலனைக்குறித்துக் காமியகன்மங்கள் செய்யாததால் சுவர்க்கபலமு மில்லாமற்போகி

* சாதனசதுஷ்டயம் 4-வது ஞானயோக அத்தியாயம் 34-வது வாக்கியத்தின் கீழ்விவரிக்கப்பட்டுள்ளது.

றது. ஆகவே இவ்விரண்டுவகையாலும் நிஷ்பிரயோசனமாய் "ஒருபெரிய மேகப்படலத்தினின்றுஞ் சிதறியதுண்டு மேகமானது மற்றொருபெரிய மேகப்படலத்தைச் சாராமலே மத்தியிலேற்படும் காற்றினால் மொத்துண்டுக் கலைந்து நசிப்பதுபோல" ஆதாரமற்றவனும் ஏன் நாசமடையான்? ஆகையால் சுவாமின்! இச்சந்தேகமானது என்னைவிட்டு நீங்கும்படிச்செய்யத் தேவரீரையன்றி வேறுயாவராலு மாகாதென்று நினைக்கிறேன். எல்லாமுணர்ந்த வல்லவரானதால் எளியேன்மீது கருணைகூர்ந்து சந்தேகத்தை நிவர்த்திப்பீர்களாக. 38, 39

அருச்சுன! நீ யெந்தயோகியைப்பற்றி யெந்த சந்தேகங்கொண்டு கேட்டனையோ அவன் இம்மை மறுமையென்கிற யெப்பொழுதும் சுகமேயல்லாமல் துன்பமடையமாட்டான். மோக்ஷாபேக்ஷையைக்குறித்து விருதபூண்டவன்போலச் சிரத்தையுடன் யோகாரம்பஞ்செய்து அதினின்றுந் தவறியவனுக்கு நற்கதி கிடைக்குமேயன்றித் துர்க்கதியடையான். சுவாமின்! ஆனாலும் மேற்கூறிய சித்திபெறாத யோகியானவனடையும் பலமென்ன?

அருச்சுன! அந்த முற்றுப்பெறா யோகியாவான் "சிரத்தாபத்தியைக் கொண்டும் திரண்டபொருளைக்கொண்டும் அஸ்வமேத முதலான யாகாதிகள் செய்து தேவதிருப்தி செய்தவர்கட்கு யெந்த உத்தமலோகங் கிடைக்குமோ" அந்தவுலகத்திலே சுகமாயிருந்து யோகப்பூர்த்திசெய்வதற்கு யோக்யமான நல்ல குணமும் நல்லதனுஷ்டியமும் சதாசாரமும் பொருந்தியிருக்கின்ற உத்தமகுலத்திற் பிறந்து யோகாப்பியாசப் பூர்த்திசெய்யும் நோக்கமுடையவனாயிருப்பன். 41

அருச்சுன! யோகாப்பியாசம் பூர்த்தியாகாது சிலகாலம் வரை அப்பியாசித்தவனுக்குரியபயனைக் கூறினோம். மற்றும் நீண்டகாலமாக யோகாப்பியாசஞ்செய்து கடைசியாகச் சிலகாலமட்டும் அப்பியாசிக்காது பாக்கியிருக்கும்போது தேகம் நீங்கிய யாதொரு யோகிக்கும் பலனைக்கூறுவோம்: மகாமேதாவியாயும், சத்துவகுணம் நிறைந்துள்ள ஆருடனுயுமுள்ள பிரம்மநிஷ்டனுடைய உத்தமகுலத்திற்றோன்றி மெய்த்தவம்புரிந்து முத்தியைப்பெறுவனென்க. ஆயினும் இவ்வாறான உத்தமோத்தம செனனமுண்டாதல் மிக அருமையாம். 42

சுவாமின்! மிகச்சிரேட்டமான அந்தகுடியிற்பிறந்த அந்த மனுக்குயேற்றகாரியமாக யாதுசெய்துகொண்டிருப்பன்? அருச்சுன! முற்பிறப்பிற்செய்த நல்வினையாகிய யோகப்பயிற்சியின் விசேடத்தால் திரும்ப இந்தயோகத்தையே அப்பியாசித்துப் பூர்த்திசெய்வதில் முன்னிற்பதுமன்றி மோக்ஷ சாதனத்துக் கேற்ற சத்கன்மங்களையே அநுட்டித்து அந்தசென்மத்திலே மோக்ஷமெய்தப்பெறுவன். சுவாமின்! அவ்வாறாயின், தேவரீர் மேற்கூறியவாறு தனவந்தாள் கிரகத்தில் பிறந்திருந்தால் அவனது சத்கன்மங்களாகிற யோகப்பயிர்ச்சிக்கும் நிஷ்காம கன்மங்களுக்கும் விரோதமாகுமே? அருச்சுன! அந்தயோகாப்பியாசி திரும்பவும் பூர்வவாசனையால் யோகாப்பியாசமுஞ்செய்யுங் குறிப்பையே கைக்கொண்டுநின்று அதையே சாதிப்பதுமன்றித் தன்னிடமுள்ள பொருள்களையும் அந்த யோகமார்க்கத்துக்கும் புண்ணிய கன்மங்களுக்கும் ஏற்றதான விநியோகஞ்செய்து கொண்டும் வருவனேயன்றி அதைவிட்டுத் திரவியசெருக்குற்று வீணேகெடமாட்டானென்க. எவ்வாறெனில், சென்மவாசனையை மாற்றுதல் யார்க்கும் அரிதாகையால் இந்தயோகியின் பூர்வ சென்மவாசனையானது தன்வசப்படுத்துமபோது திரவியங்கள் தன் யோகாப்பியாசத்துக்குச் சாதகமான நிடவிருத்திக்குப் போதுமான துணையாய்நின்று தோராகத்தில் கைவல்யமாகிற சித்திமுத்திகளையே கொடுக்குமேயன்றிக் காமியகன்மிகளைப் போலச் செல்வச்செருக்கில் ஒருபோதும அழுந்திவிட ஏதுவாகா. ஆகவே அநேகசென்மங்களிற்செய்த சதகன்மங்களினாலேற்பட்ட சித்தசுத்தி துவாராஞானமுற்ற மகாபுருஷன் அந்த சென்மத்திலேயே மோக்ஷமெய்துவனென்பதற்குச் சந்தேகமுமுண்டோ! 43

அருச்சுன! இன்னும் அந்தயோகத்தினாற் பெறப்படும் பயனையும் அதன்பெருமையையுங் கேட்பாய்: யாதொருவன் யோகாப்பியாசத்தின் பயனாகிய ஆத்மானந்தத்தைக் குறித்து விசாரித்த விவேகதிடத்தால் தனக்கு அப்பயிர்ச்சியில் விருப்பமுண்டானதாலேயே அவனது பாவங்களெல்லாம் நசித்துத் திரிகுணாத்மகமான வேதங்கட்குட்பட்ட காமியகன்ம பலன்களும் தொடராது மோக்ஷானுபவத்துக்கே அதிகாரியாய்விடுவன். 44

அருச்சுன! யோகத்தின் மகிமை யிவ்வாறாயின் அநேக பிறவிகளிற் சம்பாதித்துள்ள புண்ணிய கன்மங்களினால் முயற்சி

யிற்குன்றாது பிரயத்தினஞ்செய்து வரும்போது அதனாற் பாவ கன்மங்கள் நசித்துச் சித்தசுத்தனாகி அந்தசென்மத்திலே பரம கதியைய்டைவனென்பதற் கையமுமுண்டோ? 45

அருச்சுன! சரீராதிய கரணங்களெல்லாம் ஒய்வடையத் தக்க அரியவிரதங்க ளனுட்டித்துவரும் மகாதவசியர்களினும், வேதவித்துக்களான ஞானவந்தர்களினும், தேவபோக போக்கி யங்களை யனுபவிக்கும் மகா புண்ணிய சீலர்களிலும் ஜீவான் மாவைப் பரமான்மாவோடு லயப்படுத்தும் பரம ஞானியாகிய யோகவான் மகாசிரேஷ்டனாதலால் நீயும் அந்த யோக ஞானத் தையே யடையக்கருதுவாயாக. 46

அருச்சுன! அணிமா மகிமா முதலான அஷ்டமா சித்தி களைப் பெறுதற்காகவும், மனதின்காரியமாகிய இராகத்துவேஷத் திற்செல்லாது தன்வசப்படுத்தி நிறுத்துவதற்காகவும், இயமம் நியமமுதலான அட்டாங்கயோகம் புரிகின்ற யோகியர்களைவிட என்னுடைய பக்தயோகிகள் மிகமேன்மை யுடையவர்க ளாவார். எங்ஙனமெனில், எங்கும் நிறைந்தும் எல்லாமாயுமுள்ள நம்மை உள்ளபடி யறிந்து நம்மையே பரப்ரம்மமாகத் தியானித்துச் சகல பிராணிகளிலும் நாமே விளங்குகின்றோமென்கிற பாவனைகொண் டும், நம்மைத்தவிர வேறான தொன்று மில்லையென்றுணர்ந்து சர் வதா நம்மிடத்தில் ஊன்றிய பக்தியோடு உபாசிக்கின்றவனே மேற்கூறிய யோகியர்கட்கெல்லா முயர்ந்தவனென்றும், எனக் குப் பிரியமுள்ளவன் அவனேயென்றும் எனக்குள் நிச்சயமான தால் நீயும் தொம்பத லக்ஷியார்த்தமானவரே தற்பதலக்ஷியார்த்த மென்கின்ற நிச்சயத்தை மனதில்வைத்து வெளிப்படையாக நாம் கூறியவாறு மன வாக்குக் காயங்களாற் பக்திபுரிந்து வரு வையேயாயின் முத்தி சித்திப்பது சத்தியமேயென்க. 47.

தியான அப்பியாசயோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 6-க்கு–சுலோகப் பொழிப்பு–280.

# ஏழாவது அத்தியாயம்

# விக்ஞானயோகமெனப்படு:

# பத்தி யோகம்.

---

அவதாரிகை: மேற்கூறிய அப்பியாச யோக அத்தியாயத்தில் தொம்பத லக்ஷியார்த்தங்களைச் சாங்கோ பாங்கமாகக் கூறியும், அதனினும் வேறாகாத தற்பதலக்ஷியார்த்தமான பரமாத்ம சொரூபியே வியாபித்துள்ளாரென்னும் உண்மை விளங்காமைக்குப் பிரதிபந்தமாகத் தோற்றும் தற்பத வாச்சியார்த்தங்களும் வேறன்றென்றும், பத்தியினாலே அத்திடம் பெறலாமென்றும் அத்தியாய முடிபுரையாக்கூறி யோகியர்களினும் திரிகரணசுத்தியோடு பத்திசெய்யும் அடியவன் மேலானவனென்பதையேஇந்த ஏழாமத்தியாயத்திலும் விரிவாய்க்கூற முன்வந்தமையால் இதற்குப் பத்தியோகமென வழங்கலாயிற்று.

சுவாமின்! சென்ற ஆறும் அத்தியாயத்தின் முடிபுரையாக சர்வவியாபியாகிய தேவரீரையுள்ளன்போடும் பத்தி வினயமாகவும் வழிபடுகின்றவர்கள் யோகியரைவிடச் சிரேட்டரெனக் கூறிவந்தீர்கள்; அது சரியேயாயினும் தேவரீரது உண்மைவடிவ மின்னவாறென்று தெரிந்துகொள்ளாதவரையில் பத்திசெய்வதெப்படி? ஆதலால் சுதந்தரமான சகளரூபத்தையனுக்கிரகஞ்செய்யவேண்டும். ஏனெனின், தேவரீரை வைகுண்டவாசனென்றும், பாற்கடலிற் பள்ளிகொண்டுள்ளானென்றும், இன்னும் மச்சாதி தசாவதாரனென்றும் பலவாறாகப் பற்பல புராணேதிகாசங்களிலெல்லாம் விளங்குவதை யறிந்ததுமல்லாமல் முன் ஓர் சம்சயம் நிவர்த்திக்கும்போது "நான் ஏகனேயன்றி வேறு வொப்புவமையில்லையென்றும், எங்கும் பரிபூரணமாய்ப் பாலில் நெய்போல நிறைந்துள்ளவனென்றும், என்றும் நித்தியத்துவமுள்ளவனேயென்றும், மாயாரகிதனென்றும், நிர்க்குண நிர்விகாரியென்றும் பலவாறாக வுபதேசித்துவந்தீர்கள்; இதனால் ஸ்தான வேறுபாடும் அவதார வேறுபாடுமாயுள்ள அம்சங்களிலே எந்தவிடத்துள்ள எந்த சகளரூபத்தை உத்தேசித்துப் பத்திசெய்கிறதென்கிற சம்சயந்தோன்றுகிறபடியால் அந்த சந்தேகத்தை நிவர்த்திசெய்யப் பிரார்த்திக்கிறேன்" னென்றுகூறிய அருச்சுனனைப்பார்த்து அந்த

பரவாசுதேவன், ஏ பார்த்தா! சர்வலோக சரண்யனுயுள்ள நானே நிஷ்கர்ம நிஷ்கள புஷ்கள நிர்மல நிரந்தர நிராகுல நிராவரண நிராமய நிராதார நிராகார நிரதிசயாநந்தமாகியும், நீதி பர பரஞ்சோதி பரம்ப்ர பரப்ரம்ம பரமேஸ்வர பராபர பரிபூரணமாகியும், புண்ய கண்ய புனித புராதன ஜனுதன புத்த முத்த சுத்த கேவல கைவல்ய பிர்மாநந்த மெஞ்ஞான சின்மய தேசோமய சித்விலாச தேவதேவனுகியும், சர்வமத சம்மதக் கடவுளாகிய பரப்ரம்மமும் நாமேயன்றி வேறொன்றில்லையெனத் துணிந்து நீ பக்திசெய்வாயாக. ஆனல் மாயாவசப்பட்ட முக்குணத்தவர்களான சாமானியர்களாலே பக்திசெய்வதென்றால் மிகக்கஷ்டமாகும்; ஆகவே வைராக்கிய ஞானதிடத்தை * மர்க்கடம்போலக் கைக்கொண்டு நம்மையே பத்திசெய்துகொண்டுவரின் முற்கூறிய நிர்க்குணபக்தி சாதாரணமாய் தானேஜனிக்கும். வைகுண்டம் திருப்பாற்கடலாதியிலிருக்கிறதாகக் கூறிய இதிகாசாதிகளுடைய உண்மையானது மூலப்பிரகிருதி சம்பந்திகளுக்கேயல்லது யேனையோர்களைப்பற்றிக்கூறியதன்றெனவறிக. ஆனுற் ஜீவத்துவபாவனை செய்யும்வரை பரமான்மசொரூபமே அவ்வவ்விடங்களிலும் † சகுணுகிருதியாக விளங்குகின்றாரென்றும், சகலாம்சங்களாயுந் தோற்றப்படுகிறவரு மவரேயென்றும் உள்ளபடியுணர்ந்து உத்தமமான சத்துவபத்திபுரிந் தொழுகும் ஞானவிஞ்ஞானங்களையும் சவிஸ்தாரமாகக் கூறுவோம்கேட்பாய்.

அருச்சுன! இனிக்கூறப்படும் விஞ்ஞான யோகமார்க்க அர்த்தங்களை நம்முடைய பிரசாதமன்றி யாவராலும் அநுட்டிக்க வியலாவாம். என்னெனில், இந்த பக்தியோகமானது மகாவிசேடமுள்ளதாகையால் அநுட்டிப்பது அனைவர்க்கும் சிரமசாத்தியமான விஷயமல்ல; காரணம் யாதோவெனில், நால்வகை யோனியில் எழுவகைத் தோற்றமாகப் பிறந்துள்ள எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளும் அச்சீவர்களுக்காக ஆக்கப்பட்டுள்ள எல்லாப் பண்டு பதார்த்தங்களையெல்லாம் இன்ன யின்னபொருள் இன்ன தன்மையனவென்று கண்டறிந்து அங்ஙனமுணர்ந்தவாறே இவைகளும் இவைகள் தங்கிவாழ்தற்கான புவனபோகங்களுமாகிய காரியத்துக்குக் காரணனொருவனிருக்கவேண்டுமென்றும், அத்தகையோனே சர்வாதார சகத்கர்த்தனென்றும் உணரும்

* மர்க்கடம் - குரங்கு.

† சகுணுகிர்தி - குணசம்பந்தசொரூபம்.

உணர்ச்சி மக்கட் பிறப்பினர்க்கேயன்றி மற்ற சீவராசிகட்கில்லா மையால் இம்மானிடப்பிறவி மிகமேலானதென்க. இம்மானிட கோடிகளுள் பெரும்பாலும் பண்டு பதார்த்தங்களைக்கொண்டு உண்டுடுத்திக் கண்டதேகாக்ஷி கொண்டதேகோலமெனத் தங்கள் காலமெல்லாங் கழிக்கின்றனர். சிறுபான்மையோர்க்கு மட்டும் ஏதோ பூர்வசென்ம நல்லவாசனையினாலே தெய்வமும் பாவபுண்ணியமும் சுவர்க்க நரகங்களும் உண்டென்றுதோன்றி அதனால் சத்கன்மங்களும் தேவோபாசனையும் செய்துவருகின்றார்கள்; இவ்வாறான அநேகர்களுள் சிலரே என்னைத் தியானிப்பார்கள்; அவ்வாறு தியானிப்பவர்களும் பெரும்பாலும் காமிகாதி கன்மங்களே செய்துவருவார்கள். இக்கன்மிகளினு மிகச்சிலரே தெய்வப்பிரீதியாகுமாறு யாகாதிமுதலான கருமங்கள் செய்துவருவார்கள். இவ்வாறான உத்தமகர்மஞ் செய்வாரிற் சிலரே நிஷ்காமியமாகிய புண்ணியகன்மங்கள் செய்யத்தலைப்படுவர்; இப்புண்ணிய கன்மிகளுள் மிகச்சிலரே என்னிடத்தில் அத்தியந்த பற்றுள்ளவர்க ளாவார்கள். இவர்களுள்ளு மிகசசிலரே அதிதீவிரமாகவும் உண்மையாகவுங்கண்டு கதிபெறவேண்டிய கருத்துடனே உத்தம ஆசிரியர்கள்மூலமாக விசாரித்து நீங்காத தியானமேசெய்துவருவர். இவ்வாறான தீவிரபக்குவிகளுள் மிகச்சிலரே என்னைப்பற்றி விசாரித்தறிதலாகிய பரோக்ஷமாயறிந்திருப்பர். இத்தகையோர்களுள் மிகச்சிலரே நம்முடைய யதார்த்தமாயுள்ள சைதன்னியத்தைத் தனிமையாக நின்று நேரே அபரோக்ஷமாயனுபவிப்பர். இவ்வாறு அதிருர்குமமான நுட்பவுணர்ச்சியினாலறிந்து தெளிதலாகிய ஞானமார்க்கத்தை யனுசரிப்பதென்றால் யாவராலும் சாத்தியமான காரியமல்ல; ஆனாலும் நாமிப்போதுகூறிய விஸ்தாரமான ஞானவிவகாரத்தைக்கொண்டு நீசற்றும் மலையாது பூர்வம் உபதேசித்தவாறு திடமாய் நின்று முயன்று வருவையேயானால் நினது அதிதீவிர பக்குவத்திற்கேற்க ஞானசித்தி யுண்டாமென நிச்சயமாய் புத்தியிற்பதிப்பாய். 3

குறிப்புரை—இதனால், தான் வெளிமுகமாகக் காண்பனவனைத்தும் தானேயென்று உண்முகமாய ஞான வுணர்ச்சியாலறிந்து தெளிவுறவேண்டிய தெந்த சதநுவகுண ஞானத்தாலோ அந்த ஞானவிவகாரத்தை யுபதேசிக்கவேண்டி அநேகமாய்க் காணப்படுகிற சிருட்டிதோற்றங்களின் நியதிகளை

யுங்கூ [illegible] இயின்
வி [illegible]

[illegible]
தேயு, வாயு, [illegible] மனம, புத்தி, அகங்கார [illegible]
வகையும் நமது [illegible]ன மாயாவிசேடத்தா லுண்டான [illegible]
வேறன்று. இவையன்றியும், மகாவிசேடம்பொருந்திய [illegible]
மயமானதும் அபின்னமாயுமுள்ள மாயையினாலே எல்லாப்பு
னங்களும் நிலைநிறுத்தப்பட்டு அப்புவனங்களிலே சீவகோடிகளை
யும் மற்றுமுண்டான மேற்கூறிய சடபதார்த்தங்களையும் விவர
மாகத் தெரிந்துகொள்ள ஏதுவாயிருக்கின்றது. 5

அருச்சுன! சமஸ்தமான பூதங்களுந் தோற்றியிருத்தற்கு
ஏதுவாயிருந்தது இருவிதமான மாயாசத்திகளேயாவர். இந்த
இருவகை மாயாசத்திகளாலேயே யாவுஞ்சிருட்டிபெற்றன.
எங்ஙனமெனில், முற்கூறிய பின்னசத்தியென்னு மாயையே
மரஞ்செடி முதலான வுருவங்களாய் விளங்கிநிற்கின்றன. பிற்
கூறிய அபின்னசத்தியாகிய மாயையே சகல சீவதேகங்களாக
விளங்கிநிற்கின்றன. இவ்விருமாயாசத்தியர்களும் எமது சத்தி
யைக்கொண்டே இவ்வாறாயினரகவேயன்றி மற்றன்று. இவ்
வாறாகவே காணப்பட்ட பிரபஞ்சங்களெல்லாம் தோன்றுவதற்
கும் ஒடுங்குவதற்கும் என்னையே காரணமாகக் கூறுநிற்பர்.
ஆகவே இவ்விதவியல்பா யேற்பட்டுள்ளதை முறையாயறிதல்
அறிவாளியாயுள்ள நும்போல்வார் கடமையாம். இதன் மர்ம
தாமத்தை நன்காராய்ந்துணர்ந்து இனியேனும நம்முடைய சங்
கற்பத்தாலேயே விருத்திபெற்றன வென்பதையொழிப்பாய்.
இன்னும பின்னசத்தியைப்பற்றிக் கிரமமாய் விசாரிக்கின அபின்
னசத்தியைத்தவிர வேறினறென்றும், அபின்னசத்தியைக் கிர
மமாக விசாரிக்கின் நமமையன்றியில்லையென்றும் விளங்கும்.
ஆகையால் சந்தேகவிபரீதமின்றி ஆராய்ந்தறிந்து எங்கும் வியா
பித்துள்ளவன் யானேயெனகிற திடங்கொண்டு இனியேனும்
பக்திசெய்தொழுகத தலைப்படுவாயாக. 6

சுவாமின்! கருணையினாலே தேவரீர் எனக்கெடுத்தோதிய
சகலசராசரங்களின் சிருட்டியைப்பற்றியும், அவைகள் முறையே
ஒடுங்குவதைப்பற்றியுந் தெரிந்துகொண்டனன். இனித் தேவ
ரீர் சகலபிராணிகளையுங்காக்குந தன்மையாயுள்ளபோது எந்த

அவசரமா [illegible] எனனைவிட வேறு [illegible] அதை மறை [illegible] பட்ட [illegible] யாலவும், அந்தசுவர் [illegible] ஆக்கப் பட்ட [illegible] ணுதிகளைப்போலவும் இந்த உலகங்களெல்லாம் நம் [illegible] லேயே பொருந்தியிருத்தலினால் ந[illegible]யன்றி உலக [illegible]லையென்றறிவாய். 7

சுவாமின்! முற்கூறியபடி தேவரீர் சர்வவியாபியாயிருப் பது உண்மையெனத் தெரிந்தேன். ஆயினும் ஓர் பசுமாட்டிலே நிறைந்துள்ள பாலானது அதன்முலைக்காம்பின் துவாரரவெளி வருவதுபோலத் தாங்கள் எங்கும நிறைநதிருப்பினும் பிரசன்ன மாய் வியாபித்திருக்கிற திருமேனியின்னதெனக்கூறின் அதை யறிந்து யான் பக்திசெய்வேன். 8

அருச்சுன! எல்லாப் பதார்த்தங்களினுமுள்ள இரசவர்க் கமும், சந்திரசூரியாதிகளிடத்துண்டாயெ தேஜோகுணமும், சதுர்வேதங்களிற் கூறுநிறை பிரணவமந்திரமும், ஆகாயத்தி லேற்படும் சப்தமின்னலாதிகளும், மானிடர்களாற் செய்யப்படு கின்ற புண்ணியமுயற்சிகளும், மற்றும் பூமியிலுற்பத்தியான நானாவித பரிமளங்களும், அக்கினியினிடத்து காணப்படும்சோதி மயமும், சர்வசீவர்களிடத்திலும் வியாபித்துள்ள பிராணனென் கிறவாயுவும், மகாதபோசிரேஷ்டர்களிடத்துள்ள சீதோஷ்ண சமத்துவமான சாந்தநிலையும், இன்னும் சிருட்டிக்கிரமமாயுள்ள எல்லாப் பிராணிகளும் அததன்வகுப்பிலேதவறாது அததுகள் தோன்றுவதற் கேதுவான மூலசத்தியும், அத்தகையசத்திக் குரிய நம்மைச் சாஸ்திரவிசாரணையால் தெளிநது தரிசிப்பதற் கேதுவான புண்ணியகாரியங்களை நிச்சயிக்கின்ற மகாவிவேகி களுடைய விவேகமும, தேவாலயம், மடம், தடம், குளம், தண் ணீர்ப்பந்தர்முதலான உத்தமகைங்கரியங்கள் செய்பவர்களுடைய சக்தி கீர்த்தி, தேயசுமாகிய இவைகளெல்லாமும் நாமாகவே யிருக்கின்றதேயன்றிநம்மினும்வேறானதொன்றுமேயில்லை. 9, 10

அருச்சுன! இன்னமுங்கேள்: பெறுதற்கு அருமையா யுள்ள சுவர்க்கபோக முதலானவைகளில் இரசோகுணமாயுள்ள காமியமென்கிற விரும்பப்படுவனவும், இயல்பாயுள்ளவைகளைக் கொண்டு திருப்தியடையாத தமோகுணமாயுள்ள பிரியத்துவ

மற்ற சத்கன்மங்கள் செய்துவருகின்ற சத்துவகுணவாளருடைய திடமும் நாமேயாகும். சாஸ்திரபிரகாரம் விவாகஞ்செய்து வமச விர்த்திக்கேதுவான சந்தான ஸ்தாபனஞ் செய்தற்குரிய * நிஷேக காரியத்திற் காதாரமாகிய காமமென்கிறதும் நாமே. 11

அருச்சுன! மேற்கூறிவந்தவாறு நாம் எல்லாமாய் விளங்கப்படினும் அவ்வக் காரியாதிகளின் அநுபவப்பற்று அவனவனைச் சார்ந்ததேயன்றி நம்மைச்சார்ந்ததன்று. எங்ஙனமெனில், மாயா விசித்திர கோலாகலமாய் விளங்கிய முக்குணமயமான சீவப்பிரபஞ்சமானது நித்தியமாயெண்ணிக்கொண்டு அவைகளோடும் புண்ணியகிருத்தியங்களையுஞ் செய்துகொண்டுவராநின்ற சத்துவகுணத்தோனும், இன்னும் யாகாதிகளுடனே தானாதியனவுஞ் செய்துகொண்டு வருவதாலேற்படும் அநேகவித குற்றங்களையுடைய இராசோ குணத்தவனும், தேகமே தானென்னும் மூடபுத்தியினாலே பிராகிருதிக்குட்பட்ட தமோகுணவந்தனுமாகிய இம்முக்குணத்தவர்களிடத்துமுள்ள சீவனைப்போலாது பிரபஞ்சாதீதனாகிய பரமாத்மனாய் விளங்குவோமென்க. இதனால்மேற்கூறிய காரியாதிகளெல்லாம் பின்னும்பின்ன சத்திகளினாலும் அவைகளைச்சேர்ந்த புருஷர்களுடையதென்றுமே யறிவாயாக. சுவாமின்! இத்தன்மையான சுபாவத்தோடுகூடிய தேவரீரை யாவருமறியாததென்னோ? 12

அருச்சுன! முக்குணகாரியமாயுள்ள காமக்குரோத லோப மோக மதமாற்சரியமென்னும் அறுபகையினது சம்பந்தத்தால் எல்லாச் சீவர்களும் விவேகமறைப்பெய்தி தேக போகங்களெல்லாம் நித்தியமானதெனும் பிராந்திகொண்டவர்களானதால், இவ்வாறான குணங்களுக் கதீதமாயும், ஏகமாயும், எல்லாமானவராயுமுள்ளவர் எல்லாமல்லாதவராயு மிருப்பரென்னும் விவேகவிளக்கமுமில்லாததால் நம்மையறிதற்கு யேதுவில்லாமற்போகிறார்கள்.

சுவாமின்! இத்தன்மையாக விளங்கிவருகின்ற தேவரீரைப் பின்னையாவர்தான் அறிபவர்கள் அருள்செய்க. அருச்சுன! சத்துவரஜஸ்தமமென்கிற மூவிதகுணங்கட்கு மூலனையும் அதிவிநோத ஆச்சரியாதி திவ்யமங்கள சொரூபமாய் விளங்காநின்ற எமக்கு வேறாகாதுள்ள பரிசுத்தமான சத்துவ சொரூபியும், இயல்பா

---

* நிஷேககாரியம் - நாயகநாயகியின முதற்சேர்க்கை.

பரிசுத்த சங்கற்பமாத்திரமாயெம்மாயையை வேறு எவ்வழியினாலும் விலக்குவதரிதானதாகும். மற்றெவ்வாறு ... கேளாய்மென்னிலோ, நிஷ்காம கன்மங்கள்செய்து சித்தசுத்தமானதின்பிறகு சற்குருகடாக்ஷத்தா லுபதேசிக்கப்பட்டு மெய்மையே சரணாகதியாயடைந்தும் பின்னையோர்தெய்வமுண்டென்னும் பேதபுத்தியின்றி இடைவிடாது உபாசிப்பவர்களே எவராலும் வெல்லுதற்கரியமாயை நசித்து முடிவில் நமது சைதன்ய சொரூபத்தைப் பெறுவர்கள். 14

சுவாமின்? மேற்கூறியபடியே அநேகர் உபாசியாமைக்குக் காரணம் யாது? அருச்சுன! மாயாபின்னமாய்க் காணப்படுகிற விஷயபோகங்களை யனுபவித்து வருதலினாலே தன்னை யின்னானென்பதைமறந்து அதனால் விவேகங்குன்றி மூடமனத்தனாய் பாவகன்மங்களைச் செய்துவரும் பரமாம்பழப் புருஷர்கள் எங்ஙனம் நம்மையுபாசித்துக் கடைதேறப் போகிறார்கள் ஒருபோதுமில்லை. ஆனால் உபாசிப்பவரொருவருமில்லையா? 15

அருச்சுன? ஏன் ஒருவருமில்லையென்கிறாய், அநேகருண்டு; அந்த அநேகருள்ளும் முக்கியமானவர்களான நான்குபேர்களைப் பற்றிக் கூறிவருவேன் கேட்பாய்: தன்னுடைய சரீரத்துக்கும் மற்றும் பந்து மித்திர களத்திர புத்திராதியர்கட்குப் பீடைமுதலானவைகள் சம்பவிக்கும்போது அவ்வியாதி அவர்களைவிட்டு நீங்கவேண்டி யாதாமொரு தெய்வத்தை ஸ்தோத்திரியாமலென்னை ஸ்தோத்திரிப்பவனும், இம்மையிலும் மறுமையிலும் போகபோக்கியங்களை யனுபவிப்பானுண்டா மிச்சையை முன்னிட்டுப் பிறதெய்வாராதனைசெய்யாது என்னையே கோருகிறவனும், என்னை யுள்ளபடியறிந்து என்னையே யடையவேண்டுமென்னும் சத்தியபுத்தியினாலே அதற்குரிய சர்வசாதனைகளைக் கொண்டு சாதிந்துவருகின்ற முமுக்ஷுவென்னும் உத்தமபுருஷனும், யானே யெல்லாவித ஞான ஐஸ்வரியங்களையுடைத்தானவனென்று அதனைப் பெறும்பொருட்டு யென்னை யகமுகமாகவும், அவன்தேகமே யெனக்கிருப்பிடமாகவும்செய்கிற ஞானியும் ஆகஇந்நான்குபேர்களும் என்னையுபாசிப்பார்களென்றறியக்கடவை.

அருச்சுன! ஆனால் மேற்கூறிய நால்வர்கட்குள்ளும் சர்வசாதன்னகத்தில் ஒரேமனதாக என்னையே தியானஞ்செய்து சிந்தையையெனக்கே யாக்கியவனானதால் எனக்கும் அவனுக்கும்

யாதொருபேதமில்லாத சிரேட்டனவனே. அன்றியும் யானும் அவனிடத்திலேயே மிகப்பிரியமுள்ளவனாகவு மிருப்பேன். 17

சுவாமின்! தேவரீர் கூறியதுணர்ந்தேன்; தேவரீர்க்கு அத்யந்தனான ஞானியைத்தவிர மற்றமூவரும் அடையும்பயன்யாது? அருச்சுன; மேற்கூறிய நால்வர்களும் பொதுவகையாய்ப் பார்க்கும்போது உத்தமமானவர்களே; ஆயினும் ஞானமே சொரூபமாகவுள்ள அந்தவொருவன்மட்டும் உலகவாசனை தேகவாசனை சாத்திர வாசனையென்று மூன்று வாசனைகளும் கட்டோடே விட்டவனுயென்றும் நம்மிடத்திலேயே யேகமனதோடு பத்தி பூர்வமாயுபாசித்து வருதலினாலே அவனே நாமென்றும் நாமே யவனென்றும் அபேதமாய்க் கூறப்பட்டது. இத்தகைய பிரபஞ்சாதீதனாகிய ஆத்மானந்தனே மிகமேலானவனாவன். ஏனைய மூவர்களும் மேற்கூறிய வாசனாதிரவியத்தை யுடையவர்களாயினும் சுகாசுக காலங்களிலெல்லாம் எம்மையே தியானித்து சர்வவியாபியாயுள்ள பரமாத்மனே சர்வலோக சம்ரக்ஷணார்த்தம் நிர்க்குணம்நீங்கிச் சகுணமூர்த்தியா யவதரித்துள்ளாரென்னும் சத்தியபுத்தியைக்கொண்டு நம்பால் பத்திசெய்துவருவதாலே அவர்களும் உத்தமர்களேயாவர். 18

அருச்சுன! கனிஷ்டபத்திசெய்துவந்த மேற்கூறிய மூவரும் பலசென்மங்களிலும் வேதசாஸ்திரங்களிற் கூறியவாறு விதிப்படி பத்தியேபுரிந்து வருகின்றகாரணத்தால் நாளடைவில் இராகத்துவேஷாதிகளினின்றும் நீங்கிச் சித்த சுத்தியடைந்து அதன்பின் ஞானமுண்டாகி அந்த ஞானவிசேடத்தினாலே தன் சரீராதிய சகத்தெல்லாம் என்னையன்றி வேறான யாதொன்றுமில்லையெனத் தெரிந்தவர்களாய் முப்போதும் என்னை உபாசனை செய்வதே தனக்கினிய கர்மமாகக்கொண் டிழைப்பார்களானதால் அவர்களும் பலவீனமாகமாட்டார்கள். நிச்சயமாக நமது வைகுண்டத்தையடைந்து நம்மிடமே யிருப்பார்கள். அன்றி இத்தகைய பத்தியே ஞானமெய்தற்கு முதற் சாதனமாதலால் சாமானியமாக எண்ணவொண்ணாது. எவ்வாறென்னில், ஓராலயத்தின் கோபுரவாயிலில் நுழைந்தவன் அவ்வாலயத்துள்ள கடவுளைத்தரிசித்தே திரும்புவனன்றி வீணேவரானம்போல்.

சுவாமின்! இப்போது அநுக்கிரகித்ததில் ஓர் சந்தேகம். அதாவது: பக்திசெய்துவரும் மூவர்களில் இருவர் தேவரீரது

பிரசாதத்துக்குப் பாத்தியப்படுவது ஒருவாறு நியாயமே. "மற்றொருவன் மேற்கூறிய மூவிதவாசனையால் போகபோக்கியங்களை யனுபவித்தலோடு ஏகதேசமாக நினைத்தலால் அவனும் எப்படி பதவியடையப்பெறுவன்? அன்றியும் சுவர்க்கபோகங்களை விரும்புவர்கள் வாசனாக்ஷயம் செய்யாதவரையில் மீண்டும் பிறப்பிறப்பென்னும் பெருங்காற்றி லகப்படுவரென்று முன்னே கூறி வந்தீர்களே" என்று சம்சயங்கொண்ட அருச்சுனனைநோக்கி பரமாத்மா சமாதானங் கூறுகின்றார்: நமக்குத் தாழ்மையான அநேக சாமானிய தேவதைகளை முன்னிட்டு தங்கட்குள்ள புத்திராபேக்ஷை காரணமாகவும், பலவிதகியாதியின் அபேக்ஷயாலும், விரோதிகளைத் துவம்சஞ் செய்யவேண்டுமென்றும் இவ்விதமாக பலவிதபிரார்த்தனைகளைப் பிரார்த்தித்தும், மற்றும் அத்தேவதைகளுக்கு ஏவலாளிகளான பூதபைசாச முதலானவைகளையும் அவரவர்களது ஈனகன்மவசத்தாலேற்பட்ட பிராரத்துவ விசேடத்தால் அந்த ஏவற்றெய்வங்கட் கிசைந்தவாறெல்லாம் வினியோகித்து உபாசிப்பவர்களைவிடச் சுவர்க்காதியபோகங்களைக்கருதி யெத்தேவதைகட்கும் நம்மையே மெய்த்தேவனென்றும், மேற்கூறிய சாமானிய அசட்டுத்தேவதைகளைக் கனவிலும் நினையாமல் நம்மாலேயே போகமோக்ஷங்களையெல்லாம் அடையவேண்டுமென்னும் அவாக்கொண்டு நம்மிடத்து நீங்காத பக்திசெய்வது எவ்வளவோ விசேடமாதலால் அவனுக்கபேக்ஷயான போகபலன்களைக் குறைவறக்கொடுத்து அவனனுபவித்தபின் ஈற்றில் நம்மையடையும்படியாகவுங் கிருபைசெய் வோமென்க. 20

அருச்சுன! பின்னும் நமது மூலாந்தரங்கப் பிரகிருதி விசேடத்தாலே சேடித்துள்ள எவ்வெத்தேவதைகளையும் யார் யார் விரும்பியுபாசிக்க எண்ணுவார்களோ அவ்வத்தேவதைகளை யவரவர்கள் உபாசிக்கப்பத்திவரும்படி யாகவுஞ் செய்விப்போம்.

அருச்சுன! இன்னமும் மேற்கூறிய பற்பல பரிவாரதேவதைகளிடத்திற் பத்தியுடனே யுபாசிப்பதற்கு விரும்புவார்கள். அன்றியும் அவர்கள் எந்தெந்த தேவதைகளைக்குறித்து என்ன விதமாக உபாசிப்பார்களோ அந்தந்த உபாசனைகட்குத் தக்கபலனையும் அவர்களடையும்படி எம்மாலேயே நியமிக்கப்பட்டிருக்கும்; ஆகவே அந்தந்த தேவதைகளாலேயே அந்தந்த பலன்களையடையும்படியும் செய்விப்போம். 22

அருச்சுன! மற்றும் அத்தேவதைகட்கெல்லாம் ஆதார பூதனாக நானே யேற்பட்டு பலத்தைக்கொடுத்துவரினும், அத்தேவதைகளையுபாசிக்கின்ற சாமானியர்கட்கும் நம்மையுபாசிக்கும் பக்தர்கட்கும் எவ்வளவோ பேதமிருக்கின்றன. என்னெனில், அந்தசாமானியர்கள் வேதாகம சாஸ்திரவுணர்ச்சியில்லாததாலும் அன்றி அவைகளைக் கசடற நன்கு கற்றுணர்ந்த விவேகிகள்பால் சார்பில்லாமையாலும் இயல்பாயுள்ள தமோகுணம் சேடித்து நம்மையறிந்துய்யும் வழியறியாது நமக்கன்னியமாயும், நமதுபரிவாரங்கட்கும் பரிவாரமாயமைந்துள்ள துர்த்தேவதைகளையுமுபாசித்து அவைகளாற் கொடுப்பதான கேவலபலனையுங் கைக்கொள்வர்கள். ஆகவே அத்தேவதைகள் ஆதியந்தமுள்ளதாகையால் காலாந்தத்தில் நாசமுறும்போது அவைகளாற்றரப்பட்ட பலனும் நாசமுறுமென்பது நாம் சொல்லாமலேயமையும். மற்றும், ஒன்றுமுள்ளவனும், எங்கும் நிறைந்தவனும், எல்லாம் வல்லவனுமுள்ள நம்மையறிந்து வழிபடும் மெய்யன்பர்களான பக்தர்கள் நம்மைப்போலவே நித்தியமாயனுபவிக்கத்தக்க பதவியையே யடைவார்களாதலின் நீயும் நம்மையே பத்தி செய்து நற்றில் முத்தியையயடைவாய். "தேவதைகட்கெல்லாந் தேவரீரே யாதாரபூதனாயிருந்து பலனைத் தருகிறதானால், அத்தேவதைகளை யாராதிக்கும்போது அதனுள்ளும்புறமும் தேவரீரே வியாபித்திருத்தலால் அந்த ஆராதனை தேவரீருக்குமேன் ஆகமாட்டாது? ஆகவே அத்தேவதைகளை யுபாசித்தவர்கட்கும் உத்தமபலனைத் தருதற்குத் தேவரீர் பாத்தியபட்டவராகின்றதே" என்று வினாதல்செய்யின், கற்பகவிருக்ஷத்துக்கொப்பதாயிருக்கிற நம்மிடத்தில் யார்யார் எவ்வெவ்வித தேவதாபாவனை செய்கிறார்களோ அன்றி என்னென்ன பிரார்த்தனை பிரார்த்திக்கிறார்களோ அவ்வப்பிரகாரம் அவ்வப்பலன்களையும் பெறுகிறார்களேயன்றி நாமாகக்கொடுப்பதுமில்லை யேற்பதுமில்லை (ஆனால் தேவரீரேகொடுக்கிறதாகக் கூறினீர்களே) யென்றால், அதுவும் நமது அபின்னசத்தியினாலே நடந்துவருகிறதாகவறிக. 23

சுவாமின்! தேவரீர் அன்புகூர்ந்தருளிய வருண்மொழியெவையு மின்புறவுவந்து யிருசெவியேற்றனன். ஆயினும், காலாந்தத்தில் நாசமுறுஞ் சிறுதேவதைகளைத்தொழுது நாசமுறும்பலனைப் பெறுவதைப்பார்க்கினும் தேவரீர்க்கே அச்சிரத்தாபத்தியைசசெலுத்தி உத்தமமும் நித்தியமுமாகிய சாக்ஷாத்

கார சொரூபத்தில் பேதமறக் கலத்தலாகிய பெருவாழ்வை யேனோ பெறலாகாது! அருச்சுன! சடசித்துரூபமாயுள்ள யிப் பிரபஞ்சத்துக் கதீதமாயிருக்கின்ற வெம்மை மச்சகூர்மமுதலிய தசாவதாரங்களைப் பெற்றவனென்றும், செத்துப்பிறக்குஞ் சிறு தேவதைகட்குச் சமத்துவமானவ னென்றும், சீவாத்துமாக் களைப்போலவே யோனிவாய்ப்படப்பிறந்து பற்பல கிரியைகளைப் புரியாநின்றவனென்று மெண்ணத்தக்க அறிவிற்குறைந்தவர்க ளாலே யெக்காலத்தும் அழிவில்லாது மெங்கும் வியாபகமாயுள்ள நம்முடைய சத்திய சுத்தசாக்ஷாத்காரசொரூபத்தை யுள்ளபடி பணிந்து உபாசனைசெய்யார்களென்க. 24

சுவாமின்! இவ்வனம் பரத்துவமறிந்து பத்திசெய்யாமைக் குக் காரணமுளதோ? அருச்சுன! அவிவேகப்பிராக்கசமாயுள்ள இவ்வகிலச் சீவான்மாக்களிற் பெரும்பாலார் எமது உண்மை யானவடிவத்தை யுணரார்கள். ஏனென்றால், கயிற்றிலரவைப் போலும், கட்டையிற் கள்வனைப்போலும் மித்தையாகத்தோற் றுந் தேகத்தையே தானென்றும், சகத்தைச் சத்தியமானதென் றும், கானல்சலத்தைப்போற் பொய்யாகவே தோற்றும்பொருள்களிலாசா பாசத்தை விருத்திசெய்கின்ற எமது மாயையினது விசேடிப் பால் ஞானமறைப்புற்று மூடத்துவமே விளக்கமாகக் காணப்படு பவர்கள் நித்திய நிர்மலசொரூபியாயுள்ள வெம்மைச்சிறிதுமறிய யேதுவேயில்லை யென்க. 25

அருச்சுன! இன்னும், பிரபஞ்சத்தை படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் பஞ்சகிருத்தியாதி களால் நடத்திவருதற்கு எதுவாயுள்ள மாயாசத்தியானவள் எமக்குச் சுதந்தரமாயிருப்பதைக்கொண்டு காணப்பட்ட வெல் லாப்பொருள்களிலும் நாம் கலந்திருப்பினும், பஞ்சபூதத்து ளொன்றாய ஆகாயமானது சர்வ உலகசராசரங்களையுந் தனக் குட்படுத்தினும் தான் எப்படி ஒன்றிலும் பற்றற்றிருக்கிறதோ அதுபோலவே பூதபௌஷிய காலவர்த்தமானங்களையும் அவ்வக் காலத்திருந்த சீவாத்மாக்களையும் அவர்களது நடவடிக்கைகளை யுந் தெளிவுறவறிவோம். ஆகலின் அஞ்ஞான சம்பந்தியர்க ளாய்ப் பொய்ப்படுபொருளாகிய தேகாதியவைகளைத் தானென் றும், காண்பனவனைத்தும் உண்மையாயுள்ளனவென்றும் சத்திய புத்தியுடையவர்களாதலால் சர்வபரிபூரண சாக்ஷாத்காரமாயுள்ள நம்மையெவ்வணமறிவர். 26

சுவாமின் ! சர்வவியாபகத்துவமாயும், சர்வசீவர்களது புத்தியாதியவைகட்குச் சாக்ஷிபூதனாயும் விளங்குகின்ற தேவரீரைத் தெரிந்துகொள்வது சர்வசாதாரணமாகுமே ; அங்ஙனமிருக்க, "எவர்களு மென்னையறிதற் கசாத்திய" மென்று கூறுவதென்னோ வறியேன் ? அருச்சுன ! கட்டையைக் கள்வனாகவும், கானலைச் சலமாகவும், கிளிஞ்சிலை வெள்ளியாகவும், கயிற்றைப் பாம்பாகவும், மலடிக்கு மைந்தனுள்ளதாகவுங் காணப்படும் இவ்வொரு பிராந்தியையும் நமது பின்னுசத்தியினாலே நிச்சயமென வெண்ணித் தேகபோகாதிகளுஞ் சத்தியமென்றேகொண்டு, நானின்ன வருடத்திற் பிறந்தேனென்றும், இன்னவருடத்தி லிறப்பேனென்றும் நிலவரமான வெண்ணத்தோடிருந்து தேகானுகூலமாய்வருகின்ற விஷயங்களிற் பிரியமும், பிரதிகூலமாய்வருகின்ற விஷயங்களிற் றுவேஷமும் அவ்வப்போதடைந்தும், அவைகளையே புண்ணியமும் புருஷார்த்தமுமெனவெண்ணி அதன்மயமாகவே காலங்கடத்திவருகின்ற மந்தமதிச்சீவர்கள் எங்ஙனம் நம்மையுள்ளபடி யறிவர்கள் ? ஒருபோதுமில்லை. 27

சுவாமின் ! இன்னோர் இவ்வாறாகல் அறியாரேனும் மற்றுந் தேவரீரைத் தரிசிப்பவர்கள்தான் யாரோ ? அருச்சுன ! எத்தனையோ பிறவிகளிற்செய்த உத்தமமெய்த்தவசியர்கள் தங்கடங்கள் நிஷ்காம காமங்களினாலே சித்தமானது பரிசுத்தமெய்தித் * தநுகரண புவனபோகங்களால் எய்தப்பட்ட பாவங்கள் யாவையும் பரிகரித்து உத்தமமான குருவுபதேசத்தால் நானே தானென்னும் நிச்சய அறிவுதுலங்கிப் பிரபஞ்சாதீதனாகிய பரமாத்மசேவையை அந்தர்முகமாகச் சதாசெய்துகொண்டு பிராரத்தானுகுணத்தால் சர்வசுக துக்காதியவைகளையுஞ் சமத்துவமாயனுபவித்து மனோவாக்குக் காயதிரிகளினாலென்னிடத்தே யெப்போதும் பக்திசெய்பவர்களே யென்னையறியத்தக்கவர்களென் றறிவாயாக. 28

அருச்சுன ! உனக்கிப்போது கூறியவைகளிற் சந்தேக முண்டாகலாம் ; அஃதியாதெனின் (இவ்வாறாய திடப் புத்தியைக் கொண்டு செய்யும் [illegible] யோகியர்களுக்கு மத்தியில் தேகம் நீங்கநேருமாயின் அவர்கள் [illegible] பயனென்ன) வெனச் சங்கிப்பதே. இதற்குஞ் சமாதானங்கூறுதும் : இப்பதியோகியர்

* தநுகரணபுவனபோகம் - தநு - உடம்பு கரணம் - அநுபவகருவி புவனம் - பொருந்தியவுலகம் போகம் - அநுபவம்

களைச் சாமானியமாக அவர்களைப்போல வெண்ணுதல்கூடா, ஏனெனில், இவர்கள் உள்ளம் என்றகாட்டிலே விளைந்துவரும் பஞ்சேந்திரியங்களின் செயல்களாகிய செடிகளைவெட்டிப் பத்தியென்கிற ஏர்கொண்டுழுது அன்பென்கிற நீர்பாய்ச்சி 'நம்மையே' விதையாகவூன்றி நம் தரிசனாநந்தமாகிய பயிரை வளர்த்து அஞ்ஞானமென்கின்ற களையைப்பிடுங்கிச் சாயுச்சியமென்கின்ற பலனைக்கைக்கொண்டு பேரின்பமென்னும் உணவைப் பெறவேண்டிச் சதாகாலமும் மன்றாடும் பத்திபூர்வமானவர்களாதலாலும், அத்யாத்மமென்கிற பரப்ரம்மத்தைத் தானாகவே யறிந்து யெப்போதும் ஆநந்தமயமாகவே யிருத்தல் வேண்டுமென்ற வெண்ணமுடையவர்களாதலாலும், ஒப்பற்றதான மானிடதேகத்தை யெடுத்ததற்குப் பிரதிப் பிரயோசனமாக அடையவேண்டிய சாம்பிராச்சியங்களிலேயே சிந்தையுள்ளவர்களாயுமிருப்பர்கள். 29

அருச்சுன! இத்தகைய உத்தமபத்திமான்கள் பத்திசெய்துவரும்போது அவர்கள் தேகத்துக்கு ஆனிவருமானாலும் அதனாலவர்கள்செய்த உபாசனை ஏதுவாகிய ஞானமென்பது ஒருபோதும் நசிக்கவேமாட்டாதன்றோ! அன்றியும் அவர்கள் தேகாந்தியத்திலும் என்னையே யடைவார்களென்பதையுங் கூறுவோம்: அதாவது: என்னையெவர்கள் அதிபூதமென்னும் பிரகிருதி சம்பந்தத்திற்கும், அதிதெய்வதமென்னும் ஆத்ம சம்பந்தத்திற்கும், அதியக்ஞமென்னும் கர்மசம்பந்தத்திற்கும் ஆதாரபூதனென்றுணர்வார்களோ அந்தபக்தயோகிகள் பிராணப்பிரயாண சமயத்திற்கூட நம்மைமறவார்களாதலால் நம்முடைய சாரூபத்தையே யடைவார்களென்றறிக. 30

இதனால் தொம்பத லக்ஷியார்த்தமானவரே தற்பதலக்ஷியார்த்தமென்கிற விவேகம் பிறத்தற்குப் பிரதிபாதமாயிருக்கின்ற தற்பத வாசியார்த்தங்களையுந் தன்னைத்தவிர வேறிலையென்று இவ்வேழா மத்தியாயத்தில் பத்தியோகமார்க்கமாக விவரிக்கப்பட்டது.

பத்தி யோக அத்தியாய

முற்றிற்று.

ஆ அத்தியாயம் 7–க்கு–சுலோகப் பொழிப்பு-310.

# எட்டாவது அத்தியாயம்

# அக்ஷரப்பிரம யோகம்.

சுவாமின்! இதுகாறுந் தற்பதவாச்சியார்த்தங்களும், தன்னையன்றி வேறாகவொன்றுமில்லையென்பதற்கான அர்த்தங்களைத் தக்கபிரமாணங்களின் மூலமாகவும் திடமாயோதியதுணர்ந்தனன்; மேலேகூறிய பக்தசிரோமணிகள் பிரமசொரூபாதியவைகளை யறிவார்களென்று உபதேசித்ததில் பிரமசொரூபமென்பதும், அத்யாத்மமென்றதும், கன்மமென்றதும், அதிபூதமென்பதும், அதிதெய்வமென்பதும், அதியெக்ஞமென்பதுமாகிய இவைகளின் ருற்பரியங்களையெல்லாம் விளக்கமாக உபதேசிப்பதோடு மனோநாசஞ்செய்தவர்கள் தங்கள் தேகாந்தியகாலத்தில் தேவரீரை யடையுமுபாயத்தையுங்கூறப் பிரார்த்திக்கிறேன். 1, 2

அருச்சுன! நிஷ்கள சகளங்களல்லாததாய், தத்துவாதீதமாய், மலரகிதமாய், அநாதிநித்தியமாய், அகண்டிதமாய், அணுவுக்கணுவாய், மகத்துக்குமகத்தாய், ஆநந்தவுருவாய், ஆன்மகோடிகள் யாவுஞ் சென்றடையப்படும்பேறாய் விளங்கிநிற்பதெதுவோ அதையே ப்ரம்மமென்று சொல்லப்படும். இனி சரீரத்தில் வியாபித்து கர்த்ருத்துவ போக்தத்துவத்தை யடையாததற்குமுன்னேயுள்ள ஆதிசங்கற்பமான சாக்ஷியையே அத்யாத்மமென்று சொல்லப்படும். தேவர்களுக்கு திருப்திசெய்யும் பொருட்டு செய்யப்படுகிற யாகாதிகளினாலே பூதங்களெல்லாம் விருத்தியடையப்படுகிறதுபோலவே மேற்கூறிய ஜீவர்களது கன்மபரிபாகமாக அவரவர்கள் செய்யவேண்டிய கன்மவிருத்திகளையே கன்மங்களென்று சொல்லப்படும். 3

அருச்சுன! அநித்தியமாகக் காணப்படும் சரீராதிகளையே அதிபூதமென்று சொல்லப்பெறும். என்று அம்சக்கலையாக நின்று கர்த்தத்துவம் போக்தத்துவமென்னு மிவைகளைப்பெற்றுள்ள சீவர்களுக்கு அதிதெய்வமென்று சொல்லப்பெறும். எல்லாப்பிராணிகளிடத்துமுள்ள சீவனுக்கு அந்தர்யாமியாகவிருந்து கன்மங்களைச் செய்துவரும்படித்தூண்டி அக்கன்மங்களுக்கான பயனையு மளித்துவருவதை அதியெக்கியமென்று சொல்லப்

பெறும். ஆகவே இவ்வாறுவகையாகப் பிரகாசிப்பதும் நாமே யாதலால் நமது சத்தியையன்றி யாதொருகாரியமு மாகாதென மதித்து நம்மிடத்து நீங்காத மனமுடையவர்களா யுபாசித்து வருவார்கள். 4

அருச்சுன! எமதுபிரிய பக்தர்கள் மரணமுறும்போது வெவ்வாறெம்மைத் தியானிப்பார்களென்று உனக்குச் சந்தேகந் தோன்றிற்றல்லவா? மரணமுறுஞ் சந்தர்ப்பத்திலுள்ளவன் தான் நெடுங்காலமாகச் செய்துவந்தபக்தியை மறந்தானேனும் அந்த உபாசனாவாசனையானது மரணதருவாயில் இயல்பாகவே வந்து முந்துமாதலால் அதனாலவன் நம்மைத் தியானித்துக் கொண்டே உயிர்துறந்து நம்முடைய சொரூபத்தையேயடைவன் என்றறிவாய். 5

இதனால் சிலர் "நாமுள்ளவரையில் தேவோபாசனைசெய்யா விடினும் எவ்வாறாவது மரணகாலத்தில் பகவத்தியானஞ்செய்து விடுவோம்; அதற்காக சதாசிரமப்படுவானேன்" என்றுநினைத்து மனம்போனவாறு பாவகிர்த்தியங்களைச்செய்ய உடன்படுவார்கள். அவர்களதனாலடையும் பலனையுங் கேட்பாய்: எவன் மரணசந் தர்ப்பத்தில் எந்தவிஷயத்தி லிச்சைகொண் டுயிர்துறப்பனோ அந்தவிஷயபலனையே அடைவனென்பது வேதாகமசம்மதமாம். தேவராக்ஷஸ மனிதாதியவர்களில் எவனெவ னெதையபேக்ஷித்து உயிர்துறப்பனோ அவன் தனக்குரிய பூர்வஜன்ம பிராரப்தானு குணமாக அத்தேகத்தையே யடையப்பெறுவானன்றி அவனுக்கு வேறுவிதமான யாதொரு பதவிகளுஞ் சித்தியாதென்க. எவ்வா றெனின், நமது சாரூபபதத்தை யபேக்ஷித்து சகலசாதனங் களையும் எவன் சாதித்துவருவானோ யதார்த்தமாக நம்மைத்தவிர வேறில்லையென்றும், நம்மைத் தன்னுடைய லக்ஷியார்த்தைத் தவிர யாதுமில்லையென்று மனதில் கொஞ்சமும் சந்தேகமின்றி யிடையறாத் தியானத்தையுடையவனுக்கும் பூர்வஜென்மத்திலே னும் அன்றி யதேதஜென்மத்திலேனும் தேகமெடுக்குமாறு வாசனாசேஷமானதுண்டாகிறதும், அதற்காரணமாகச் சாக் கிரத்திலெந்தவாசனை மிகுத்திருந்ததோ அதையே கனவு காண் பதுபோல அந்த புருஷனுடைய சரீரமரிக்கும்போது நம்மைத் தியானிக்கக்கூடாமற்றடுத்து மற்றொன்றைக் கொண்டுவந்து நினைக்கும்படி செய்விப்பதுமன்றி நினைப்பானேனும் வேறு

வாசனைமுடிவில் யேதும் பலமாயிருக்குமானால் நித்திரைசெய்யும் போது அதனை நினைந்தொடுங்கியதோ அதனைச் சொப்பனங் காணமல் நிராகரித்து முன்னே தான் பெலமாய்நினைத்து மர்மமாக மனதில் நின்றதெதுவோ வியாபித்துச் சொப்பனங் காண்பதுபோல முன்னினைவைவிட்டு பெலமாயுள்ளதைப் பற்றுவதுஞ் சுபாவமாதலாலும் முன்கூறிய நடவடிக்கைகளேயன்றி 'மரண தருவாயில் சாதிப்போ' மென இஷ்டம்போல் நடப்பவர்களது விவேகத்தைப் பற்றியும், அவர்களடையப்படும் பலனைக்குறித்தும் சொல்வதொன்றுமில்லை. ஆகையால் ஏ அருச்சுன! நம் விஷயத்தில் வேறுவாசனைகள் யாதுமின்றி அந்தரங்கசுத்தமாயுள்ள உன்னைப்போன்ற உத்தமசிலர்கள் தேக நிரியாணகாலம் வரையிலும் முன்னே நாம்கூறியவண்ணம் இடையறுவுபாசனையிலிருந்து வருவார்களாயின் அவர்களுக்கு எவ்வாற்றானும் நமது ஞாபகம் வந்தேதீருமாதலால் மீண்டும் நமது சொரூபத்தையே பெறுவார்களென்பதற் கையமேயில்லை. 6

அருச்சுன! இதனால் எப்போதும் இராகத்துவேஷமின்றிக் கட்புலனாகுந் தோற்றமனைத்தையுமெல்லாம் நாமாகவே பாவித்தும், அந்நாமே உனது உண்மைரூபமென்னுங் கருத்துடனே புத்தியை நம்மிடத்தில் வைத்தவனாகி வேறுஞாபகமின்றி முற்கூறிய ஓரேஞாபகத்தோடிருந்து நின்குலவிர்த்தியாகிய யுத்தஞ்செய்வாயாயின் எவ்விதத்தும் நீ நம்மையடைவாயென்பதுண்மை. 7

அருச்சுன! நினக்கு இப்போது நாம் கூறிவந்தபிரகாரம் கிடைத்தற்கரிய நமது சாரூபபதத்தைப்பெறுதல் அசாத்தியமாகத் தோற்றுமெனின், முன்னே யென்னாலுபதேசிக்கப்பெற்ற யோகப்பயிற்சியே செய்துவரவேண்டும், அஃதெங்ஙனமெனில் முற்கூறியவண்ணமே இந்திரியாதிகளை வசப்படுத்தி நியமமாக ஆசனமிட்டிருந்து முறையாகவும் சாவதானமாகவும் அப்பியாசிப்பதுமன்றி வேறு எவ்விதஞாபகமுமில்லாது யேகமனதாயிருந்து சோதியுட்சோதியாம் பரமபுருஷனாகிய எம்மையென்றுந் தியானமுடையவனாயிருப்பாயானால் நீயும் நம்மையேயடையலாமென்க. 8

அருச்சுன! உனக்குத் தியானஞ்செய்யுமாறு கூறியதெந்த மகாத்மனோ அந்த பரமபுருஷனது பெருமையைக் கூறுவோங்

கேட்பாய் : ஆதியுமந்தமுமில்லாதவராயும், எல்லாமறிபவராயும் எப்பொருட்கு முதல்வராயும், தாம் அந்தரியாமியாயிருந்து எல்லாவற்றையும் நடத்துபவராயும், அணுவுள்ளணுவாயும், மகத்துக்கு மகத்தாயும், சர்வலோக சம்ரக்ஷண கர்த்தனாயும், மனவாக்குக்கெட்டாதவராயும், சூரியனைப்போன்று சுவயம்பிரகாசியாயிருந்து தன்சமுகபிரபஞ்சாதிகளை வியாபகமாம்படிசெய்து வருபவராயும், பிரகிருதிக்குத் தலைவனாயுமிருக்கின்ற வாசுதேவனையே தியானஞ்செய்வாயாக. 9

சுவாமின்! தேவரீர் திருவாய்மலர்ந்தருளியவாறு மேற்கூறிய திவ்யமங்கள சொரூபனைத் தியானித்துவரின் அதனாலெய்தும்பயன் யாது? அருச்சுன! பூர்வத்தில் அப்பியாசித்துவந்த யோகப்பழக்கத்தினாலே மரணகாலத்தில் பரிசுத்தமான மனோதிடத்தினால்புருவமத்தியஸ்தானத்தினால்பிராணவாயுவைச் செலுத்தக்கூடியவன் பிரமரந்திரத்துக்கு அப்பால் விளங்கும் பரஞ்சோதிமயமாகிய பரமசைதன்யத்தையேயடைவன். 10

அருச்சுன! பிரமநிஷ்டர்களாவார் தத்தம் அநுபவத்தாற் கண்டதுவும், காமாதிய அறுவகையுடற்பகையாயுள்ளவைகளையொழித்துள்ள யெதிரிகளால் விரும்பப்பட்டதும், பிரமசாரிய ஆசிரமத்தால் கோருவதுமாகிய திவ்யசொரூபத்தை யடைதற்குச் சுலபமாயுள்ள வழியையுனக்கு இரண்டுசுலோகத்தாற் கூறுவோம் கேட்பாய். 11

அருச்சுன! இந்திரியாதியவைகளெல்லாம் அததன்வழி செல்லாதிழுத்து ஒருங்கே இருதயஸ்தானத்தில் நிலைபெறவைத்துப் பிராணாபானனை இயல்பாகச் சென்றுகொண்டிருந்த மார்க்கத்திற் செல்லவொட்டாது பிரமரந்திரத்திற் செலுத்தி ஓமென்னும் ஏகாக்ஷரரூபமான பரப்ரம்மத்தையுச்சரித்துக்கொண்டும் நம்மைத்தியானித்துக்கொண்டும் மரணாந்தகாலத்தில் தேகத்தைவிட்டவன் பரமகதியாகிய சாயுச்சியபதவியையடைவன். 12, 13

அருச்சுன! வாசாமகோசரத்துக் கெட்டாதவனாயுள்ள, நம்மை அந்தர்முகமாகத் தரிசித்தற்காக நெடுங்காலம் வருந்தித் தவமிழைத்துவரும் யோகிகளாவார் வைராக்கியத்தைமுன்னிட்டு பஞ்சேந்திரியங்களின் வழியேசெல்லாது மற்றொன்றினும் பற்றின்றி யேகாந்தபத்தியோடு நம்மிடத்தே நமஸ்கார பூர்வமா

யோகாப்பியாசஞ் செய்துவருவாராயின் அவர்களுக்கு நாம் மிக வெளிதாய்க் காணப்படுவோம். 14

சுவாமின்! தேவரீர் அவர்களுக்கு எளிதாயுடன்படும் விசேஷமான பலப்ராப்தியாதோ? அருச்சுன! மேற்கூறியவண்ணம் அந்தக்கரண புறக்கரணசுத்தியோடு, துக்காஸ்பதமாயுள்ள அநித்தியசரீரத்தை யுள்ளபடி வெறுத்தவர்களாதலால் அந்த மாயா சரீரத்தைவிட்டு நித்தியமாயும் சுத்தமாயுமுள்ள சொர்க்கலோகத்திலே நிரதிசயானந்தமாயுள்ள நம்மையேவந்தடைவார்கள்.

அருச்சுன! நம்முடைய சுத்தசைதன்ய சுயம்பிரகாச சொரூபத்தை நேரே தரிசியாதவரையில் அவர்கள் பிரமலோகஞ்சென்றாலும் திரும்பவும் பூமியிற் பிறந்தே தீரவேண்டும் ஆனால் அழியாத நித்தியபரிபூரணனாயிருக்கிற நம்மைச்சேர்ந்தால்மட்டும் அவர்கள் மீண்டும் எந்தச்சரீரமுமெடார்கள். நிற்க; செய்தற்கரிய கடுந்தவங்கள் செய்யினும், வேண்டியார் வேண்டுமவைகளையெல்லாந் தானஞ்செய்யினும், தேவப்பிரீதியாக அரிய யாகங்கள் முதலான புண்ணியகன்மங்கள் செய்யினும் இவ்வுலகானுபவங்கட்கு மேலான போக போக்கியங்கட்காஸ்பதமாயுள்ள புண்ணியலோகத்தை யடைவார்களென்று சாஸ்திராதிகள் முறையிட்டிருக்க, இப்போது தேவரீர், "சர்வலோகங்களுக்கு மேலான பிரமலோகத்தையடையினும் மீண்டும் சனன மரணமுண்டென்று எவ்வாறு கூறலா" மென்று கேட்டால் அருச்சுன? மேற்கூறிய சத்கன்மங்களை எந்தமட்டுஞ் செய்தார்களோ அந்தமட்டும் அவ்வுலகத்திலிருந்து சுவர்க்கானுபவங்களையெல்லாமனுபவித்து மறுபடியும் இவ்வுலகத்திலேயேவந்து பிறக்கவேண்டுவதே நிச்சயமாம். அன்றி அவ்வுலகங்களெல்லாம் நிலையற்றதாகுமானால் அதையடைந்தார்மட்டும் நித்தியமாகவாழ்தலெங்ஙனம்? மற்றும் இப்பூவுலகிலுள்ளபோது மோக்ஷாபேக்ஷைகொண்டு, பார்க்கப்படுவனவும் அநுபவிக்கப்படுவனவும் நமக்கன்னியமாயில்லையென்னும் நிச்சயம்பிறந்து உத்தமமான கன்மானுட்டானங்கள்செய்துவரும்யதீசுராள்மட்டும் பிரமலோகத்துவாரா மோக்ஷமெய்துவரென்று கோஷிக்குஞ் சுருதிப்பிரமாணப்படி அந்தப்பிரமலோகத்தையடைந்து ஆண்டுள்ள சதுர்முகனுரிடம் சொரூபவிசார சம்பாஷணைசெய்வதே யனுபூதியாக்கொண்டுநின்று அச்சதுர்முகன் என்னுருவெய்தும்போது

இந்த யதீசுரரும் எம்மையேயடைவர். ஆகவே அப்பிரமலோகத்தை யடையவேண்டுமென்று நமக்கன்னியமாயுள்ள புண்ணிய கன்மங்களினாலடைந்த எந்தப்புருஷனும் மீண்டும் பிறப்பிறப்பைப்பெறுவதிற் சிறிதுஞ் சந்தேகமில்லையென்க. 16

*சதுர்முகப்பிரமர் வாஸஸ்தானமாய் வாழும் சத்தியலோகமுதல் எல்லாவுலகங்களும் அசத்திய வுலகங்களேயன்றி நித்திய வுலகங்களல்லவெனத்தெரிந்து அவ்வுலக போகங்களிலும் விருப்பின்றி வெறுப்பும் வைராக்கியமும் பெறுவான் காரணமாகச்சிருட்டியின் இலக்ஷணங்களைப்பற்றிக்கூறத்தொடங்குகின்றார்.*

அருச்சுன! கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் இந்நான்கு யுகங்கள்கொண்டது ஒரு சதுர்யுகமெனப்படும். இந்தச் சதுர்யுகம் ஆயிரங்கொண்டது பிரமர்க்கோர் பகலாம். இரவுக்கும் இம்முறையே கணக்கெனவறிக. இவ்வாறாகிய காலகணிதம் யாருடைய சங்கற்பத்தைத்தவிர இல்லையென்றறிவார்களோ அந்த அறிவாளியே இப்பகலிரவெல்லாம் அறிந்த மகாபுருஷராவார். 17

அருச்சுன! பிரகிருதிசொரூபனான வாணிகேள்வனது பகற்போதில் எல்லாவுலகங்களுந் தோன்றிநின்று கன்மங்கள் செய்துகொண்டிருக்கும் பிறகு இராப்பொழுதில் அந்தச் சதுர்முகனிடமே யெல்லாவுலகங்களுஞ் சென்றடைந்து எல்லாக்கன்மங்களையும் விட்டு ஒடுங்கிநிற்குமென்க. 18

அருச்சுன! பூர்வகன்ம பிராரத்வவசத்தால் ஜீவர்களெல்லாம் பிரமதேவரது பகற்போதில் உற்பத்தியாவார்கள். அதேவிதமாக இரவில் ஒடுங்குவார்கள். இவ்வாறாகவே சர்வவுலகங்களும் பிரவாகரூபமாய் நடைபெற்றுவரும். அப்பிரமதேவருக்கு இவ்வாறாக நூறுவயதானவுடன் அவரது சத்தியலோகமும் மற்றுமுள்ள கீழுலகங்களும் அங்கங்குள்ள எல்லாப்பிராணிகளும் நாசமடைந்து ஈற்றில் அப்பிரமர்மட்டும் என்சொரூபதியானமே யெப்போதும் செய்துகொண்டிருந்ததால் என்சொரூபத்திலேயே ஐக்கியமாய்விடுவர். 19

சுவாமின்! மகாதபோதனர்கள் சென்று வாசஞ் செய்யக்கூடிய உத்தமவுலகமான சத்தியவுலகமே அசத்தியவுலகமாகுமானால் மற்றுஞ்சாஸ்வதமாயுள்ளவுலகம் யாதோ அதையறிவிக்க

வும். அருச்சுன! சதுர்முகன் ஆளுஞ்சத்தியலோகமுதல் சர்வவுலகங்களும் பொய்த்துப்போயினும் நித்தியமாயிருக்கின்ற பிரமசொரூபத்தைப்பற்றிச்சிறிதுகூறுவோம் கேட்பாய்: தாவரசங்கமமாதிய பொருள்களைத் தன் கர்ப்பத்திற்றுங்கியுள்ள பிரபஞ்சங்களும், அப்பிரபஞ்சங்களைத் தனது கர்ப்பத்திற்றுங்கியுள்ள வுலகங்களும், அவ்வுலகங்களில் வாழாநின்ற ஆத்மகோடிகளை நன்னெறிக்குய்ப்பான் விளங்கும் நான்மறைகளும் மற்றுமுள்ளனவும் பலவாய்த் தோன்றிவிரிந்ததற்குக் காரணம் மாயையேயாம். பின்னுமந்த மாயைக்குக் காரணமாயும், எல்லாவிந்திரியங்கட்கு மனதுக்குமெட்டாததாயும் பழம்பொருளாயுமுள்ள பரப்ரம்ம சொரூபமானது நசிப்பதேயில்லையாகும். 20

சுவாமின்! அந்தபிரம்மம் நசியாமைக்கு யேதும் பிரமாணங்களுளவாயின் தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றேன். அருச்சுன! இந்திரியாதிகளாலும், மனமுதலானவைகளாலும் அறிதற் கரிதானதாயும், அரூபமாயும், அக்ஷரசொரூபமாயுமுள்ளதெதுவோ அதையே பரம புருஷார்த்தமென வேதாகமங்களாலே கூறத்தக்கதாயிருக்கின்றது. யார் எந்தவுத்தமவவஸ்துவையடைந்தால் மீண்டும் சனனமரணமடையப்பெறார்களோ அந்தவுத்தம பரமானந்த சொரூபமே நாமாயிருக்கிறோம். 21

சுவாமின்! அவ்வாறாகிய பரமானந்த சொரூபத்தை யெம்போன்றாரடைதற்கேதும் உபாயங்களுளவாயின் கூறுக. அருச்சுன! காணற்கினிய இவ்வுலகங்களையெல்லாம் வியாபிக்கச்செய்ததும், அல்லது தோற்றுவித்தும் பிறகு கற்பாந்தத்தில் லயஞ்செய்விப்பது மெதுவோ அந்த பரஞானசொரூபமாகிய யெம்மைப் பிறிதோர்பற்றின்றி அந்தரங்கபத்தி செய்துவருபவனே நம்மையடைபவனாகும். ஆகவே இவ்வாறாகிய அந்தரங்கபத்தியின்றி வேறெவ்வித மார்க்கங்களினாலும் எந்தலோகத்தையடைவானேனும் மீண்டும் சனன மரணத்தையே யடைவன். 22

சுவாமின்! எவ்வித பக்திமார்க்கத்தையடைந்தவர்கள் பிறந்திறப்பர் மற்றெவ்வித பக்திமார்க்கத்தை யடைந்தவர்கள் பிறந்திறவார்? அநுக்கிரகிக்கவேண்டும். அருச்சுன! செகத்தையும் தன்சரீரத்தையும் துச்சமென்றுநினைத்துத் தேகத்தைவிட்டு எந்த மெஞ்ஞான சொரூபத்தை யடைந்தார்களோ அந்த ஞானமார்க்கத்தையும், பிரபஞ்சாதிகளையும், அவைகளாலடையும்

போகபோக்கியங்களையும் கேவலமித்தையென்றுவெறுத்து எந்த வுத்தமமானசத்கன்மத்தைக்கொண்டு பகவத்பாதசேவைசெய்து கொண்டிருந்தே தேகத்தை விட்டவர்கள் திரும்பவும் பிறப்பார்களோ அக்காலத்தையுங்கூறுவேன் கேட்பாய்: 23

அருச்சுன! பிறந்திறவாத முத்திசித்திக்கப்பெற்ற ஞானயோகியராவார் அக்கினியி னதிதேவதையையும், ஆதித்தியாதி தேவதையையும், சுக்கிலபக்ஷாதி தேவதையையும், உத்தராயணாதி தேவதையையும் உபாசித்து அவைகள் எம்மையன்றியில்லையென்றறிந்து உபாசனை செய்துகொண்டிருந்து முடிவில் அவ்வத்தேவதைகளின் மார்க்கமாக அவ்வக்காலங்களிலேயே யென்னையடைவார்களென்க. 24

அருச்சுன! காமியமாக வென்னையுபாசித்து யாகாதிய தபசுதான விரதாதிகள்செய்துவருங் கன்மயோகிகள் தூமாதி தேவதையையும், சந்திராதி தேவதையையும், கிருஷ்ணபக்ஷாதி தேவதையையும், தெக்ஷணாயனாதி தேவதையையுமுபாசித்துச் சுவர்க்காதிலோகங்களிற்சென்று போகங்களையனுபவித்துச் சந்திர மண்டலமார்க்கமாகவந்து மீண்டு மிவ்வுலகத்திலே பிறப்பார்களென்க. 25

அருச்சுன! இதனால் நீ தெரிந்துகொள்ளவேண்டிய முடிவானதென்னெனில், உலகத்திலே உத்தமமானவர்கள் தேகவியோகமானபின்பு அவர்களது சூக்குமமான தேகத்தோடும் செல்லும் மார்க்கங்கள் இரண்டுவகைப்படும். அவையெவையெனில், அர்ச்சுராதிமார்க்கம் தூமாதிமார்க்கமென்பனவாம். இந்தவிரண்டுமார்க்கங்களில் ஞானயோகிகள் அர்ச்சராதிமார்க்கமாகச் சென்று மோக்ஷத்தையடைவார்கள். கன்மயோகிகள் தூமாதி மார்க்கமாகச்சென்று திரும்பவும் பிறப்பார்களென்க. 26

அருச்சுன! மேற்கூறிய இருவிதமார்க்கங்களையும் நன்கறிந்து ஞானத்தெளிவுகொண்ட யோகியானவன் பெறப்படும்பயனையுங் கேட்பாய்: இந்தயோகீசுரன் தனது சிவியகாலத்தின் முற்பகுதியிலேயே சற்குருவையடைந்து சர்வசந்தேக விபரீதங்களையுங் கசடறக்கேட்டறிந்து பிரபஞ்சாதி போகபோக்கியங்களையும் சரீரத்தையும் கேவலமித்தையெனக்கண்டு அதனிடமாயுள்ள பிராந்தி விடுபட்டு கைவல்யமான மெஞ்ஞானத்தால் நம்மையேயடைவான். ஆகையால் நீயும் நம்மையன்றிவேறொன்று

மில்லையென்கிற வுறுதிகொண்டு என்னையே தியானித்து வருவாயாயின் செகப்பிராந்தியும் சரீராபிமானபிராந்தியும் விடுபட்டு யெம்மையே யடைவாயாக. 27

அருச்சுன! நின்னால் வினுதல்செய்யப்பட்ட எண்வகைச் சந்தேகங்கட்கும் கூறிய உத்தரார்த்தங்களினாலே 'யென்னையன்றி யன்னியமில்லை யென்கிற வுண்மைதெரிந்த யோகீசுரான் வேதோபநிடதங்களைக்கற்று அதன் சாராம்சங்களையுங் கரதலாமலகம்போலக் கண்டுணர்ந்தாலும், யாகாதிதானதவங்களினாலு மேற்பட்டுள்ள புண்ணியவிசேடத்தாலும் செகசீவ மூலபுருஷனாகிய யெமது சொரூபமேயடைவர். 28

அக்ஷரப் பிரமயோக அத்தியாய

முற்றிற்று.

அத்தியாயம் 8-க்கு-சுலோகப் பொழிப்பு-338.

## ஒன்பதாவது அத்தியாயம்

# இராசகுய்யயோகம்.

அவதாரிகை: — நிரதிசயானந்த சொருபமாகிய பரமாத்மாவைத் தரிசிப்பதற்குப் பிரதிபந்தமாயிருக்கிற தற்பதவாச்சியார்த்தங்களையும் அந்தபரமாத்மாவையன்றி வேறல்லவெனத் தெரிந்து பத்திசெய்யின் அந்தபரமாத்மாவை யடையலாமென சென்ற 7, 8, அத்தியாயங்களிற் கூறியவற்றிற்கு விசேடமாயுள்ள தமது விபூதி மகத்துவத்தையும், தம்மிடத்தே பத்திசெய்யும் விவரமும், தம்மைத் தரிசிப்பதற்கான ஞானோபாயங்களையும் இந்த ஒன்பதாமத்தியாயத்திற் கூறுகின்றார்.

அருச்சுன! என்னைத் தரிசிப்பதற்குச் சாதனமாயுள்ள பத்தியோக ஞானமார்க்கங்களை நாம் அடுத்தடுத்து எடுத்துபதேசித்துவருவதிற் சிறிதும் அசிரத்தையின்றிக் காதுகொடுத்தே வருவதால் தொம்பத லக்ஷியார்த்தமாகிய இரகசிய ஞானத்தையும், அந்தத்தொம்பதலக்ஷியார்த்தமானவரே தற்பதலக்ஷியார்த்தமென்னும் அநுபவ விஞ்ஞானத்தையுங் கூறுவோம் கேட்பாய்: இதனால் நீசம்சாரபந்தத்தினின்றும்விடுபட்டு மோக்ஷமடையலாம்.

அருச்சுன! மேற்கூறிய ஞானவிசேடணத்தைச் சிறிது கூறுவாம். வித்தைகள் பலவென்றும், அவைகளிற் பிரமவித்தையேவித்தை மற்றவித்தைகளெல்லாம் அவித்தையேயென்றும் வேதம் விளம்பாநிற்கும், நாம் இப்போது உனக்கோதத்தகுவது அந்தப் பிரமவித்தையேயாம். இப்பிரமவித்தையில் முதன்மையான இலக்ஷணம் யாதெனில், பிரமத்தைத் தரிசிப்பிக்கும் ஞானமென்னுங்குணமாம். இதனால் தொம்பதலக்ஷியார்த்தமான கூடஸ்தரே தானென்னும் இரகசியத்தையுடையதாயும், அந்தக்கூடஸ்தரே தற்பதலக்ஷியார்த்தமான பரமாத்மாவென்றும், அவரையன்றி யன்னியமில்லையென்று தெரியத்தக்கஞான அதிமேன்மையையுடைத்தானதாயும், சனனமரண சம்சாரத்தினின்றுங்கரையேற்றிப் பிரத்தியக்ஷாநுபவத்திற் காணப்படுவதாயும், அன்றி உத்தமோத்தம பலனைத் தரக்கூடியதாயும் ஏற்படுகின்றது. அருச்சுன! ஆனால் அதனையாராய்ந்தறிகிறது மிகச்சிரமமாயிருக்குமோவென ஓர்சமயம் நீ நினைக்கலாம்; அவ்வாறில்லை. அதனை

யறியவேண்டுமென்று உள்ளபடியாக ஆராய்வாயேயானால் உனது அதிநுட்பபுத்திக்கு நன்குபுலப்படும். ஆகவே நம்மாற் கூறப்படுகிற கன்மங்களைமாத்திரம் விதிப்படிசெய்துவரின் நாசரகிதமாகிய நிரதிசயாநந்த சொரூபத்தையடைந்து நேசசகிதமாகிய பேரானந்தப் பெருவாழ்வெய்தலாம். நிற்க; இந்த அதிபிரகசிய சூக்ஷுமஞான கலாவிநோதங்களையெல்லாம் உன்னுடைய அந்தரங்கபத்தியைச் சிந்தையிற்குறித்தே சொந்தமாயுரைத்தாம். 2

சுவாமின்! பெறுதற்கரியதான மோக்ஷத்தை அடைதற் கெளியதான ஞானயாக்கமிருந்தபோது அதைவிட்டு அனேவரும் ஏன் சமசாரிகளாகித் துக்கத்தையடைகின்றார்கள்? அருச்சுன! என்னையறிந்தடையத்தக்க ஞானமார்க்கத்திலும் அதற்கேதுவாயுள்ள தருமங்களிலும் சிரத்தாபத்திகுன்றிச் சோம்பேறிகளாயினோர் எனனை மறந்ததினால் * நமனுசனத்துக்கு ஆளாகிச் சனனமரண சம்சாரத்திலேயே பிராந்திகொண்டு திரிந்தால் இந்தஞானம் அவர்களுக்கெவ்வாறுண்டாம்? இதனாலவர்கள் துக்கத்தையடையாமலென்செய்வர். 3

அருச்சுன! நீயோ அவ்வாறின்றி உத்தமமான பத்தி விசுவாசமுள்ள சத்துவகுண சீலனாயிருப்பதாலுனக்கு நாம பிரியமாகக் கூறுவதுபோலவே நீயும் பிரியமாகவே கேட்பாய்: கர்மேந்திரியங்களாலும் ஞானேந்திரியங்களாலும் காணற்கணுத் துணையுங் கூடாததாயும, மனவாக்குக் கெட்டாததாயுமுள்ள பிரமசொரூபியாகிய நாம யென்றும் எவ்விடத்தும் பாலில் நெய் போல பரிபூரணமாய் நிறைந்திருக்கின்றோம். நம்மிடத்திலேயே 'அத்திப் பழத்தினுள் விதையைப்' போன்று பிரபஞ்சாதியனவெல்லாமிருக்கின்றன. ஆனாலும நாம அவைகளிற் சிறிதும பற்றாதுள்ளேம். 4

சுவாமின்! சாவவியாபியாயும், அனந்தந்தங்களது ஆதினமாயுமிருக்கிறபோது தேவரீர் அவைகளிற் பற்றற்றிருப்பதெப்படி? அருச்சுன! நம்முடைய அகண்டாகார வியாபகத்தில் பிரபஞ்சாதிய பூதபௌதிகங்களெல்லாம் பிரகாசித்திருப்பினும், அன்றி அவைகளை நாமே காபபாற்றிவரினும் ஒன்றோடொன்றைச் சேர்ப்பிப்பதும் சேராமற் செய்யக்கூடியதுமாகிய காரியார்த்தங்களனைத்தையும் நடத்தும் அதிபராக்கிரமமாகிய நமது

* நமனுசனம் - இயமனுக்கிரையாதல்.

மாயா யோகத்தினது தத்துவ விசேடத்தைக்கொண்டும், நாம் அவைகளிலொன்றினு மொன்றாமலே யிருப்போமென்க. 5

அருச்சுன! இன்னும் மேற்கூறிய விஷயத்திற்கேற்ற திருட்டாந்தங்கள் சிலவற்றை ஈண்டு கூறுவதையுங் கேட்பாய்; அளவிடவொண்ணா தகண்டவெளியாகிய ஆகாயப்பரப் பெங்கும் காற்று நிறைந்திருப்பினும் அந்தவாயுவை அவ்வாகாயமானது மெவ்வாறு சம்பந்தியாமலிருக்கிறதோ அவ்வாறே பிரபஞ்சாதிய பூதபௌதிகங்களனைத்தும் நம்பாலிருப்பினும் அவைகளோடும் நாம் பற்றிநில்லோம் என்றறிவாயாக. 6

சுவாமின்! நம்மாற் காணப்படுகிற இந்த செகசீவ பேதங்களெல்லாவற்றையுஞ் சிருட்டிப்பார்யாவர்? அருச்சுன! கற்பாந்த பிரளயகாலத்தில் இந்த பிரபஞ்சாதியவெல்லாம் நம்முடைய அகண்டாகார வியாபக கர்ப்பத்திலே ஒடுங்கிநின்று மீண்டும் அவ்வப் பூதங்கள் யாவும் அதனதன் கர்மபரிபாகத்துக்குத் தக்கவாறாக நாமே பிரமதேவனை யதிட்டித்துச் சிருட்டிசெய்விப்போம். அவ்வாறு சிருட்டியாதியவைகட்கு நாமே கர்த்தவ்ய காரணபூதனாயிருப்பினும் நாம் ஒன்றினும் பற்றாது யேகனாகவே யிருப்போம். 7

அருச்சுன! நாம் யாதொன்றானும் விகாரப்படாது நிர்விகாரியாயும் ஒன்றினு மொட்டாதவனாயு மிருக்கும்போது செகசீவபரங்களையெல்லாம் சிருட்டிசெய்வதெவ்வாறெனின், சென்மபூர்வ கன்மவசத்தால் தன்வயமில்லாது பரவசமுற்ற எல்லா சீவபூதங்களையும் எனது சுதந்தரமான பிரகிருதியைக்கொண்டு அவ்வப் பூதபேதங்களினது பிராரத்தானுகுணமாகச் சிருட்டிசெய்வோம். 8

சுவாமின்! தேவரீர் கூறியவாறு பலவிதமான சீவபேத சிருட்டிசெய்வதான காரியத்தைச் செய்துவருவதால் ஆன்மாக்கள்செய்யுங் கன்மங்கட்கீடாக பந்தமானதுதொடர்ந்திப்பதுபோலத் தேவரீர்க்கு மெவ்வாறு பிரதிபந்தம் சம்பவியாதுவிடும்? அருச்சுன! நீ கூறியவாறு நம்மாற் செய்யப்படுகிற பஞ்சகிருத்தியங்களிற் சிறிதும் நமக்கு விருப்புவெறுப்பின்றிச் செய்துவருகிறபடியால் அதநிமித்தம் நம்மை யக்கன்மபந்தம் வந்துறாதென்றறியக்கடவை. 9

அருச்சுன! இஃதன்றியும் நாம் நம்முடைய மூலப்பிரகிருதியை யதிட்டித்து நமதுபார்வையில் விளங்காநின்ற மாயையினால் விளங்கும் சத்வ ரஜஸ் தமசென்று மூன்று குணங்களே தாவர சங்கமாதி பிராணிகள்வாழும் பிரபஞ்சங்களாகிற விராட்புருஷனைச் சிருட்டித்துக்கொண்டு வருகின்றன. இவ்வாறே யெப்போதும் உலகந் தோன்றிநின்று அழியுங்காரியமாயுள்ளது.

சுவாமின்! உலககாரியங்கள் இவ்வாறாக நடைபெறும்போது ஒன்றினும் பற்றாதுத்தமமாய்விளங்கும் தேவரீரது திருவருளை முன்னிட்டு மனிதராவார்யாவரும் தம்மையுபாசியாதேதுகொண்டோ? அருச்சுன! சர்வபூதாதி பிரபஞ்சங்கட்கும் மூலகாரணனாகிய நான் எனது பாததரிசனார்த்தமாக முன்னே யென்னைப் பலகாலும் பக்தியோக தவங்களாகிய உத்தம கைங்கரியங்களால் திருத்திசெய்துவந்த மெய்யன்பர்கட்கு அநுக்கிரகஞ் செய்ய வேண்டியெடுத்த மனிதரூபமுதல் பலவகை ரூபங்களையு முள்ளபடியுணராது சாதாரண மனிதர்கள் பிறந்ததுபோலவே நாமும் பிறந்ததாகவும், அவர்களிறப்பதுபோலவே நாமுமிறப்பதாகவும் அவர்கள் இன்பதுன்பங்கட் கேதுவாக கன்மங்கள் செய்வது போலவே நாமும் செய்துவருவதாகவும் இன்னும் பலவாறாகவுந் தோன்றியவண்ணம் பிதற்றித்திரியும் அஞ்ஞானப் பேய்த்தனமுடையார் எங்ஙனம் எமது மெய் ஞானத்திருமேனியைக்கண்டு மேன்மையுறத் தரிசிக்கப்போகிறார்கள். ஒருபோதுமில்லை. 11

அருச்சுன! மற்றும் நம்மினும் வேறாயுள்ள அநேக அசுரத் தேவதைகளை வழிபாடுசெய் துபாசிக்கின் இஷ்டகாமியார்த்த போக பலன்களையெல்லாம் எதேஷ்டமாக வடையலாமென்றெண்ணமுடையவர்களாய் அநேக தார்வினியோக பதார்த்தங்களை யெல்லாஞ் சமர்ப்பித்து அநித்திய போகங்களையேயடையப் பிரார்த்தித்தவர்களாயும், பின்னுஞ் சிலர் உண்மைநெறியுணராது விவேக சூன்யர்களாய்க் கேவலமாய சாமானிய தேவதைகளை அநாசாரமா யுபாசிப்பவர்களாயும், வேறு சிலர், செய்யத்தகாத மந்திர கிரியாபூர்வ விரோதமாயுள்ள இழிந்த சில்லறைத்தேவோபாசனையைச் செய்பவர்களாயும், இன்னுஞ்சிலர், சத்துவகுணப் பிரதிபிம்பமாகிய மாயையையடைந்து சாஸ்திர ஆராய்ச்சி செய்து அதன் சூசனமாயுள்ள நுட்பங்களைத் தெரிந்து தார்க்கிகர்களாய், இயல்பாக பக்திசெய்துவருகின்ற சர்வசாதாரண

மானவர்களுடைய விவேகத்தையுங் கெடுப்பதே தொழிலாக வுடையவர்களாயும், பின்னுஞ்சிலர், இரசோகுண சம்பன்னர்களான ஆட்டப்பிரகிருதியின் வசத்தர்களாய் அகங்காரத்திற் கடிமைபூண்டு வீணான ஆடம்பராதி டம்பமுதலான அநேக பிராந்திவசத்தை யுடையவர்களா யேனையோர்க்குத் துன்பமான காரியத்தைச் செய்வதிலேயே திருஷ்டியுள்ளவர்களாயும், சிலர், தாமதகுணவசமுடையவர்களாய் இராக்ஷதப் பிரகிருதியை யடைந்து பிறரை வஞ்சிப்பதுமன்றி யவர்கட்குப் பலவிதகொடிய துன்பமே செய்துவருபவர்களாயுமுள்ள இவ்வாறான மூடாத்மாக்கள் என்னையெவ்வாறு உபாசனைசெய்வார்கள். 12

சுவாமின்! மற்றும் உபாசிப்பார் இன்னாரென்பதைத் தெரிவிக்கவேண்டுகிறேன். அருச்சுன! காமக்குரோதாதியவைகளைக் கட்டோடே விட்டவர்களாயும் தெய்விகமாயுள்ள சத்துவப்பிரகிருதியினுடைய விசேடமான குணங்களோடுங்கூடிய நல்லசித்தவிர்த்தியையுங்கொண்ட மகான்கள், சர்வபூத சாக்ஷியாயும் அதிசூக்ஷுமமான வடிவாயுமுள்ள என்னைத் தானேயென்றறிந்திருக்கிற நிரதிசயானந்த மேலீட்டினாலே அந்தர்முகமாகவறிந்து பகிர்முகமாகக்கண்டுள்ள எல்லாப் பண்டபதார்த்தங்களையும் எனக்கன்னியமல்லவென்று மனவாக்குக காயங்களினாலே பக்திசெய்துகொண்டு வருவார்கள். 13

அருச்சுன! இன்னும்பலர், என்னையன்றி வேறொன்றும் அன்னியமில்லையெனக்கண்ட வுண்மையினாலே சித்தந் திடவைராக்கியமுற்று எப்போதும் எனக்கு அதியானந்தத்தை விளைவிக்கக்கூடியதான என்னுடைய மகிமாப்பிரதாப கீர்த்தனங்களால் தோத்திரித்து நானே பரவாசுதேவனென்று சித்தாந்தித்து எனதுபாதத்தில் நமஸ்காராதிய வழிபாடுகள் பலசெய்தும், விஸ்வரூபமாயுள்ளவனும் நானேயன்றி மற்றையோரல்லவென்றும், நானே சர்வசுதந்திரமுடையவனன்றிப் பரதந்திரியானவனல்லவென்று முணர்ந்த உத்தமமான தங்களுடைய மனசினாலே யெனக்கே பத்திசெலுத்திக்கொண்டும் வருவார்கள். 14

அருச்சுன! வேறுசிலர், ஞானமயமான ஓமங்களினாலே யுபாசிப்பார்கள். பலர், லோகவர்க்கங்களெல்லாம் சாக்ஷாத் வாசுதேவமயமேயன்றி வேறன்றென்றும், அதனால் தன்னையும் அவராகவே யுபாசிப்பார்கள். சிலர் அப்பரவாசுதேவனே தனது

அத்தியந்தபக்தர்களைக் காக்கும்பொருட்டு இங்ஙனம் அவதரித்துள்ளாரென்ற உண்மைதெரிந்து நம்மையே வழிபடுவார்கள். பலர் அந்தவாசுதேவனுக்குத்தான் முக்கியமான தாசனாகவேண்டுமென்று எப்போதுந் தாசப்பணிகளையே செய்து கொண்டு வருவார்கள். மற்றுஞ்சிலர் அவ்வாசுதேவரே சிருட்டி திதி சம்ஹாரமென்னு முத்தொழிலையுஞ் செய்யவேண்டி பிரமவிட்டுணு ருத்திரனென்னு மூவுருவந் தாங்கினரென் றுபாசிப்பார்கள். ஆகவே இவர்கள் நமக்கு அத்தியந்த பக்தர்களாவார்களென்றறிக.

சுவாமின்! தேவரீர் கூறியவிதமன்றி மற்றும் காத்தற் குரிமைகொண்ட அவசரத்தில் எவ்விதமா யமைவீர்களென்பதை யறிவிக்கவும். அருச்சுன! காணப்படு பொருளனைத்தும் நாமேயாகியும், நாமில்லாது செகத்திலில்லையென்றும் நாம் உனக்குப் பலவாறாக பலமுறை யெடுத்துக்கூறினோம், நீயோ பின்னமுந் தடுத்துக்கேட்கிறாய்; ஆயினுமின்னுஞ் சிலவிசேஷமானவைகளையுங் கூறுவோங் கேட்பாய். ஒப்பற்ற தேவப்பிரீதியாகச்செய்யும் யாகாதிகளும், அந்தயாகாதிகளில் உச்சரிக்கப்படும் மகாமந்திரங்களும், அந்த மந்திராதீனமாயுள்ள அதிதேவதைகளும், அந்த தேவதைகளுக்காக ஆகுதிகொடுக்கின்ற பதார்த்தங்களும், மற்றுமுள்ள ஓமத்திரவியங்களும், ஓமாக்கினி, நெய் முதலியயாவும் நாமாகவே யிருப்பதாயெண்ணி யுபாசித்துவருவார்கள். 16

அருச்சுன! இன்னுங்கேட்பாய்: எல்லாவற்றையு மகாபரிசுத்தஞ் செய்யக்கூடியதான ஒப்பற்ற யேகாக்ஷரமாகிய ஓங்காரமும் நாமேயென்றும், எவைகட்கும் நன்மையேசெய்கிற தத்துவமும் நாமேயென்றும், யாவரும் பெறுதற்குரிய பிரயோசனங்களைத்தரந்தக்க தயாசொரூபமான அன்னையும் நாமேயென்றும், சர்வசிருட்டிகர்த்தரான சதுர்முகதேவனும் நாமேயென்றும், அச்சிருட்டி யெவர்களெனவரும் தாந்தாம் பூர்வசென்மங்களிற் செய்யப்பட்டதான வினைக்கீடாக முடிவுகாலத்தில் பலனளிக்கக் கூடியவனும் நாமேயென்றும், கட்புலனுக்குத் தோற்றப்படுகிற விஷயாதியவைவையும் நாமேயென்றும், இருக்கு, எசுர், சாமம், அதர்வனம் ஆகியயிந்த சதுர்வேதங்களும் நாமேயென்று முபாசிப்பார்கள். 17

அருச்சுன! சரியைகிரியாயோக ஞான மார்க்கங்களிலுள்ள எல்லாச் சன்மார்க்கச் சுத்தாத்மாக்களும் பெறும்பயனையளிக்

கும் விசேடமானஸ்தானமும் நாமேயென்றும், காவற்கடவுளா யிருப்பவனும் நாமேயென்றும், எவைகட்கும் தலைமைபூண்ட வஸ்துவும் நாமேயென்றும், இன்பதுன்பங்கட்குச் சாக்ஷிபூதனு யுள்ளவனும் நாமேயென்றும், போகானுபவங்கட்கு யேதுவான கருவிகரணங்களாயுள்ளனவும் நாமேயென்றும், எல்லாச்சராசர பேதங்களுந்தோன்றிக் காக்கப்பட்டபிறகு ஒடுங்கப்படுவதற்கு ஸ்தானமாகிய பிரகிருதிக்கு ஆஸ்பதமானதும், தோற்றப்பொருள் களை மீண்டும் காத்தற்பொருட்டு.யேதுவாயிருக்கிற பீஜாக்ஷரமும் நாமேயென்றும், ஆய்ந்தறிந்த மகான்கள் நம்மையுபாசிப்பார்க ளென்றறிக. 18

அருச்சுன! இன்னும், உஷ்ணத்தினுலும் பிரகாசத்தினு லும் உலகத்தை விளங்கச்செய்கின்ற ஆதித்தமூர்த்தியும் நாமே யென்றும், காலாகாலங்களுக்குத் தக்கபடியறிந்து மழைபெய்யும் படியும் பெய்யாமற் செய்யும்படியாயும் நடத்துவதும் நாமே யென்றும், அநித்தியமான தூலபூதங்களும் அதற்காதாரமா யுள்ள நித்தியமான சூக்ஷுமபூதங்களும் நாமேயென்றும், எவை களும் நிலைபெறச்செய்கின்ற சத்தியும் நாமேயென்றும், இன்னு முண்டான மற்றவைகளாயுமிருப்பதும் நாமேயென்று முபாசிப் பார்களாதலால் அவ்வாறே நீயுமுபாசிப்பாயாக. 19

சுவாமின்! தேவரீர் மேற்கூறிய பற்பல அம்சங்களாய் விளங்கியிருக்கிறபோது ஏன் அனைவரும் அறிந்துபாசியாதிருக் கிறார்கள்? அருச்சுன! பொன்னுலகமென்கிற தேவலோகவாசி களான இந்திராதி முப்பத்துமுக்கோடி தேவர்களும் திருப்தி யடைதற்கு யோக்கியமான அரியவேள்வியைச்செய்து தேவ போகங்களை யனுபவிக்கலாமென்று யிச்சைகொண்டவர்களாய் அதனுல் அந்தயிந்திரன் முதலாகிய தேவகூட்டங்களுக்கும் நாம் அதிதேவனுயிருக்கிறதை மறந்தவர்களாகியும், நாம்வேறு அவர் கள்வேறென்கிற புத்தியுடனே வேதங்களிற் கூறுகின்ற காமிய பலன்களைப் பெறக்கருதி சாஸ்திரரீதியாக யாகாதிகிருத்தியங்க ளைச்செய்து சோமபானத்தால் பாவங்களனைத்தையும் நீங்கப் பெற்றவர்களாகி சொர்க்கபிரார்த்தனைசெய்து புண்ணியமயமாய் விளங்கும் தேவேந்திரலோகத்தையடைந்து மகோன்னதமா யிருக்கின்றதேவபோகாதியவைகளை யனுபவிக்கிறதே மகாவிசேட மென்றெண்ணி யனுபவிப்பவர்களாயுள்ளவர்கள் எவ்வாறென்னை யுபாசிப்பார்கள்? 20

அருச்சுன! பின்னுங்கேட்பாய்: மேற்கூறிய யாகபோக விவேகிகளாவார் தாங்கள்செய்த யாகாதிபுண்ணியத்துக்குரிய காலமெவ்வளவோ அநுபரியந்தம் அந்தத்தேவபோகங்களை யனுபவித்து அதுமுடிந்தவாறே இப்பூமண்டலத்திலேவந்தவதரித்து மீண்டும் அதேபோன்ற சத்கர்மானுட்டானங்களைச் செய்துகொண்டும் அதன்பலனையனுபவிக்க மீண்டும் அங்கேபோய்ப்பிறந்தும் இவ்வாறாக மேலேபோகிறதும் கீழாய்வந்து பிறக்கிறதுமாகிய சனனமரணங்களை யடைவார்களேயன்றி, நம்மைத்தரிசித்து நமக்குரிய பக்தியோகங்களைச்செய்து உபாசிப்பவர்களைப்போல பிறந்திறவாத பேரின்பமென்கிற முத்தியையடையமாட்டார்களென்க. 21

சுவாமின்! தேவரீரைத்தரிசித்து பத்திசெய்தவர்கட்குமட்டும் எதனாற் சனனமரணங்களில்லை? அருச்சுன! என்னைப் போற்றிப்பணிந் துபாசிக்கும் எனது பிரிய பக்தர்களாவார் என்னைவிட்டு மற்றோர்தெய்வத்தை யுபாசியென்று பொருள்கொடுத்து வற்புறுத்தினும் அவ்வாறு ஒருதேவதையைக் கனவினும் நினையாராகி யெல்லாத்தெய்வங்கட்கும் நானே அதிதேவதையென்னுந் தீர்க்கமான யெண்ணங்கொண்டும், நான்வேறு தான் வேறு என்னும் பேதபாவனையின்றி யேகைகபாவனை கொண்டு என்னையேதொழுது உபாசித்துப் பார்க்கப்படுகிற யெப்பொருளும் யானாகவேயிருப்பதாகவும் பாவித்து பத்திசெய்துவருகிறவர்களானதால் இவர்களுக்கு சனனமரணமே கிடையாதென்பது தீர்மானமென்க. இன்னும் எவைகளைப் பார்ப்பார்களோ அவைகளையெல்லாந் தன்னைப்போன்றே பார்க்கிறதும், தன்னையுந் தன்தலைவனையுமே தரிசிப்பவர்களுமாயிருக்கிற இவர்களுக்கு சூக்ஷ்மகாரண சரீரங்கள் அழியுமாயினும் அதையெவ்வாறு காத்தற்கூடுமெனச் சந்தேகம்பிறக்கினும் கூறுவோங்கேட்பாய்: இவர்கள் தானாக யென்னையடைவதே யோகமாகும்; அதற்குப் பிரதிபந்தங்கள் உண்டாகாமல் சம்ரக்ஷணை செய்கிறதே க்ஷேமமாகும்; இவ்வாறுயுள்ளவர்களது யோகக்ஷேமத்தைப்பற்றி நாமே வகிக்கின்றதுமன்றி அவர்களுடைய தேகசம்ரக்ஷணை முதலானவைகட்கு வேண்டிய வுபகரணங்களையும் பலவந்தத்திற்கொடுத்து நாமே யிரக்ஷிப்போமென்றறிக. 22

சுவாமின்! பார்க்கும்போது தேவரீர் மேற்கூறியபிரகாரம் தேவர்களும் மனிதர்களும் மற்றுமுள்ள எல்லாச்சராசரங்களும்

தங்களது அம்சங்களாகவே யிருக்கும்போது தேவேந்திராதிகளை யுபாசித்தாலும் அது தேவரீரையு முபாசித்ததாக வேன் ஆகமாட்டாது? அருச்சுன! நீ கூறியபடி சகலதேவதைகளையு முத்தேசித்து உபாசிப்பவர்களும் நம்மையுபாசிப்பதாகவே யாகுமாயினும், எங்கும் நிறைந்தவனும் யாதொன்றாலும் நாசமடையப்பெறாத நித்தியனும் விளங்காநின்ற வெம்மையுள்ளபடி யுணர்ந்து மோக்ஷாபேக்ஷையோடு வேதசாஸ்திரவிதிப்படி உபாசியாமல் அந்தத்தேவதைகளுக்குத் திருப்திசெய்வதே மிகமேலாயதென காமியபக்திகொண்டு உபாசிப்பதால் அதற்குரிய அநித்திய போகங்களையேயனுபவித்து மீண்டும் பூமியிலேபிறந் துழல்வர்.

அருச்சுன! இன்னும், வேதசம்மதமான யாகங்கள் பலவற்றிற்குந் தலைமைத்தெய்வமெனவும், அவ்விதவேள்விகளுக்குரிய பலன்களையெல்லா மீந்தருளு மகாதேவனெனவும், மற்றதேவதைகளுக்கெல்லாம் அந்தரியாமியெனவும், எவைகட்கு மேலானவனெனவும் விதிப்படி யென்னையறிந்து உபாசியாமல் சாதாரணமான தேவதைகளையுபாசித்துப் பயனடைவோமென்றெண்ணி அதற்கான யக்கியங்களைச்செய்து அந்தலோகத்தையடைந்து தேவபோகங்களை யனுபவித்தபின் பூமியிற்பிறக்க யேதுவாகின்றார்கள். 24

அருச்சுன! இதில் இன்னுமோர் விவரத்தையுங் கேட்பாய்: எவன் எந்ததேவதையை யுபாசித்தானோ அவன் அந்ததேவதையினது லோகத்தையேயடைவன். பிதுர்க்களை யுபாசிப்பவன் பிதுர்லோகத்தையே யடைவன். விநாயகர் முதலான பூதகணங்களை யுபாசிப்பவன் அதற்குரியலோகத்தையடைவன். நம்மை யுபாசிப்பவன் நிலவரமாயுள்ள பரமானந்த சொரூபத்தையே யடைவனென்றறிக. 25

சுவாமின்! "விசேஷமான திரவியங்களைச் சம்பாதித்து அதைக்கொண்டு பலவித உபகரணப் பொருள்களைத்தேடி அதிகப் பிரயாசையோடு சிரத்தாபக்திகொண்டு வேதவிதிப்படி வேள்விமுதலிய தேவாராதனைசெய்கின்றவர்கள் அடையப்படும் லோகமும் பலனும் அழிந்துபோகும்போது, நித்தியமாயும் பரமானந்த சொரூபமாயுமுள்ள தேவரீரது பாதத்தையடைய வேண்டுமானால் ஏராளமான திரவியங்களும் அநேக உபகரணப் பொருள்களும் அதிகமான பிரயாசையும் வேண்டும்போல

தோன்றுவதால் தேவரீரது பதத்தையடைவது சுலபசாத்திய மாகா'' தெனக்கூறிய அருச்சுனனைநோக்கி ஸ்ரீகிருஷ்ணபகவான் சமாதானங்கூறுகின்றார்:— அருச்சுன! மட்டற்ற திரவிய சாதனங்களைக்கொண்டு யாதொரு பிற தெய்வங்களை யாராதிப்பதை விட வென்னை யுபாசிக்கிறவர்கட்கு அவ்வளவு திரவியமும் பிரயாசையும் வேண்டுவதில்லை. மிகச் சுலபமா யுபாசிக்கலாம்; ஆனால் சுலபமா யுபாசிக்கலா மென்றதனாலே பலனும் சொற்பமா யிருக்குமோவென ஐயமுறலாம், அப்படியல்ல; மகத்தாகிய நித்தியமான பலமேயாகும்; அஃதெவ்வாறெனில் அநேகதிரவியங்களைக்கொண்டு அநேக உபகரணப்பொருள்களைச் சம்பாதித்து மிகப்பிரயாசையோடு என்னைக்கண்டமாகப் பாவித்துக் காமியமாகச் சிரத்தாபத்தியோடு ஆராதனை செய்பவர்களைவிட, சக்தியானுசாரம் பத்திரபுஷ்பமேனும் பழமேனும் சலமேனுங் கொண்டு என்னையன்றி யன்னியமில்லையென்று யிடையறாத் திடபத்தியோடும் அந்தக்கரண சுத்தியோடும் நிஷ்காமியமா யெனக்குச் சமர்ப்பிப்பார்களாயின் அவைகளை நாம் மிகப்பிரியத் துவமாக்கொண்டு அவர்கட்குச் சாஸ்வதமான நம்முடையசாரூப பதத்தைக் கொடுப்போம். 26

அருச்சுன! இன்னும் என்னையுபாசிப்பதற்காகப் பத்திர புஷ்ப சம்பாத்தியஞ்செய்வதும் பிரயாசையாகத் தோன்றுமே யாயின் அதைவிடச் சுலபமான மார்க்கத்தையுங் கூறுவோம் கேட்பாய்: நீ உன்சரீராவயவங்களினாலே செய்யப்படுகிற எந்த கன்மங்களையும், மற்றும் நின்னால் புசிக்கப்படுவன, தேவதாப் பிரீதியாக ஓமஞ்செய்யப்படுவன, புண்ணியார்த்தமாகத் தானங் கொடுக்கப்படுவன இன்னும் மோக்ஷார்த்தமாகத் தவஞ்செய்யப் படுவன ஆகிய இவைகளையெல்லாம் உள்ளன்போடும் சிரத்தா பத்தியோடும் நமக்கே அர்ப்பணஞ் செய்வாயாயின் அதனால் நா மிகத் திருப்தியடைவோம். 27

சுவாமின்! தேவரீர் திருவாய்மலர்ந்தருளியவாறு செய்யப் படுகிற எல்லாக் கன்மங்களின்பயனையும் தேவரீர்க்கே அர்ப்பண மாகவேண்டுமெனச் செய்வேனானால் அதனாலடையும் பலன் யாவை? அருச்சுன! கூறியவண்ணம் எல்லாக்கன்மபலன்களை யும் எமக்கேயர்ப்பணஞ் செய்வாயாயின், நின்னாற்செய்யப்பட்ட காமியமான சர்வசங்கற்ப விகற்பங்களுக்கிடாக அடையப்பெறும்

சனனமரணமாகிய கன்மபந்தங்களினின்றும் நீங்கி யென்னிலும் வேறான தொன்றில்லையென்றும், அதுவே நீயென்னும் யேகைக பாவனையுடையவனாய்ச் சரீரத்தினிறுதிவரையில் மனவாக்குக் காயங்களினாலே காமியமின்றிப் புண்ணிய கன்மங்களைசெய்து முடிவில் என்சாட்சாத்காரத்தைச் சார்வாய். 28

சுவாமின்! தேவரீரே கதியென் றுபாசிப்பவர்கட்கு மோக்ஷத்தையளிப்பதிற் பிரியமும், அங்ஙனம் உபாசியாதவர்களைப் பந்தசாகரத்திற் றள்ளுவதாலு முண்டாகிற வெறுப்பும் தேவரீரிடத்துண்டாகிறபோது தேவரீர்க்கு இராகத்துவேஷாதிக ளிருப்பதாகத் தெரிகிறதே? அருச்சுன! சர்வான்மகோடிகளை யெல்லாம் நான் சமமாய்ப்பார்க்கிறதினாலே எனக்குவேண்டியவ னென்று பிரியமும், வேண்டாதவனென்று வெறுப்பும் என்னிடத்துண்டாகிறதில்லை. தவிர, அந்தகாரத்தையும் குளிரையும் நீக்குவதற்காக அக்கினியை யனுசரிப்பதுபோலவும், அபேக்ஷையானவைகளைப் பெறவேண்டியவர்கள் கற்பகவிருக்ஷத்தை யனுசரிப்பதுபோலவும் நித்தியமான மோக்ஷ சுகத்தைப் பெறவேண்டியவர்கள் என்னையடைந்து ஆராதனைசெய்து என்னையே சதா தியானித்து மோக்ஷத்தை யடைகிறார்கள். அன்றியும் என்னை அவர்கள் சதா சிந்தைசெய்வதால் யானும் அவர்களை யென்ஞாபகத்தில் வைத்திருப்பதாலும் ஏகைகபாவமாயிருப்பதால் அவர்களுக்கும் எனக்கும் பேதமேயில்லையாம். இதுநிற்க; தேவலோகத்தையடைந்து தேவபோகங்களை யனுபவிக்க யாகாதிகள் செய்து ஆராதிப்பவர்கள் அந்தலோக போகங்களை யனுபவித்துத் திரும்பவும் பூமியில் சனனமாகிறார்கள். ஆகவே எவனெவன் எந்தெந்தபலனை யுத்தேசித்து எந்தெந்த கன்மங்களைச் செய்கிறானோ அந்தவிதமாகவே அவ்வப் பலன்களையடைகிறான். கற்பகவிருக்ஷத்துக் கொப்பாகவுள்ள என்னிடத்து பக்ஷபாதமுமில்லை; அதனாற்பந்தமுமில்லை. 29

சுவாமின்! மேற்கூறிய நிஷ்காமியதேவாராதனையைச்சீலத்துவமுள்ள மெய்யன்பர்களாற்செய்து பலனடைவதேபோல, அவ்வாறு சீலத்துவமில்லாத சாமானிய அநாசாரிகள் செய்வார்களாயின் அவர்கள் ஏதுங் கதியடைவரோவென்னுஞ் சந்தேகம் பிறக்கின்றதே? அருச்சுன! மேலான சதாசாரத்தோடு கூடியவர்களாய் என்னை யேகரூப பாவனைசெய்து பக்திசெய்பவர்களை

வீட பாவகிருத்தியங்களில்லாத துராசாரிகளாயினும், அவர்கள் மற்ருேர் தெய்வப்பற்றுதலின்றி யென்னையே யெங்குமுள்ளவனுகப் பாவனைசெய்து யெனக்கும் உலகத்துக்கும் யாதொரு பேதமு மில்லையெனத்தெரிந்து அகண்டாகார சொரூபியாயிருக்கிற என்னையறிந்து அநயோன்யபக்தி செய்துவருவார்களாயின் அவர்களை உத்தமர்களென்றும், மோக்ஷபூமிக் காக்ஷியானவர்களென்றும் கூறப்படும். எதனுலெனின், எத்தெய்வத்தினு மெய்த்தெய்வத்தையறிந்து உள்ளன்போடு முபாசனை செய்து வருவதால் அவர்கள் சிலாக்கியமானவர்களென்றும், மோக்ஷமே யடைவார்களென்றுங் கூறலாயிற்று. 30

சுவாமின்! எப்போது ஒருவன் துராசாரனுய்விட்டானே அவன் சிரேஷ்டனென்றதெதுகொண்டோவறிந்திலன்? அருச்சுன! உலகத்திலுள்ள பற்பல தேவதைகளையெல்லாம் கேவலமசத்தென்றுவிட்டு என்னையே உத்தமதெய்வமாக்கொண்டு அந்தரங்க பூர்வமாய்ப் பக்திசெய்து வருபவன் துராசாரியாயினும் என்னிடத்து முதிர்ந்த பக்திசெய்த விசேஷத்தினுல் பூர்வகன்ம பாவங்களினின்றும் விடுபட்டு தாமோத்கிருஷ்டனுகி நித்தியமான மோக்ஷத்தையேயடைவன். அதுவேந்தநியாயம் உலகத்தோர்க் கொவ்வுமோவெனத் தோன்றுமாயின், ஒவ்வும்; எவ்வாறெனில், அநாசாரியாவான் பாவகிருத்தியத்தைச்செய்யாது பகவத்பக்தியைமட்டும் செய்துவருவானேல் நரகத்தையடையப் பெருது மோக்ஷமேயெய்துவனென்று மகான்களான பிரமநிஷ்டாபரர்களும் கல்வியறிவாற் சிறந்துள்ள மகாபண்டித சிரோமணிகளுஞ்சேர்ந்து வேதசாஸ்திர சாரங்களாகக் கூறியிருக்கிற பிரபந்தங்களையே போதுமான சாக்ஷித்துவமாகக் கொள்ளக்கடவர். அன்றி இவ்வித நியதியைப்பற்றி அறிஞர் கூட்டங்கள் நிறைந்துள்ள சபையின்கண் விசாரஞ்செய்யினும். ஆண்டுள்ள எல்லாராலுங் கொள்ளப்படுமேயன்றி தள்ளப்படவேமாட்டா. 31

இக்கருத்திற்கேற்க பிற்காலத்துப பிரமுகரான பிள்ளைப்பெருமாளையங்காரவர்கள் கூறிய பெருங்காப்பியத்துள்ள ஓர்செய்யுட்டுணுக்கை யீண்டுக்காண்க

பாதியா யழுகியகால் கையரேனும் பழிதொழிலு மிழிகுலமும் படைத்தாரேனும், ஆதியா யரவணையா யென்பாராகி லவர்கணமர் யாம் வணங்கு மடிகளாவார், சாதியா லொழுக்கத்தாற் றக்கோரேனுஞ் சதுர்

மறையால் வேள்வியால் மிக்கோரேனும், போதினன் முகன்பணியப்
பள்ளிகொள்ளும் பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே.

அருச்சுன! இன்னும், அநாசாரிகளாவார் நம்மிடத்து பத்தி செய்துவரும்போது நாம் அவர்களது உள்ளத்தினுசாரத்துக்கே மெய்ச்சி முத்தியிற் சேர்ப்போமே யன்றித் தள்ள மனங்கொள்ளோம். ஆகவே அந்த அநாசாரியின் பத்தி அவனைக் கரையேற்றுமென்பதிற் சந்தேகம்வேண்டாம். கேவலமான சண்டாளகுலத்திற் பிறந்தவர்களாயினும் நம்மிடத்துண்டாகிய பக்தி விசேடத்தினாலே சம்சாரத்தைக்கடந்து மோக்ஷத்தையே யடைவர்களென்பதற்கு இன்னுஞ் சிலசொல்லுவோம் கேட்பாய்: பஞ்சமகாபாவங்களாற்பிறந்த நீசகுலத்தவராயினும், வேதாத்தியயனமும் கன்மமுஞ்செய்தற் குரியரல்லாத யாதொரு பிராமணஸ்திரீகளானாலும், மேலான மூன்றுவருணங்கட்கும் ஊழியக்காரரான சூத்திரர்களானாலும், மற்றும் உழுதுபயிர்செய்கிற வைசியர்களானாலும் வேதசாஸ்திர விதிவழாமல் என்னிடத்தில் பத்தி செய்துவருவார்களாயின் நாமஅவர்களையெவ்விதத்தும் மோக்ஷமே யடைவிப்போம் என்க. 32

அருச்சுன! உலகத்துள்ள ஆன்மகோடிகளிற் பெரும்பாலார் தன்தேகத்தையே தானெனவும் பிரபஞ்சத்தை நித்தியமெனவுங்கொண்டு அநித்தியமாகிய விஷயபோகங்களில் மோகத்தால்மூழ்கி யெப்போதுந் துக்காகிராந்தியர்களான சாமானிய புருஷர்களும் ஸ்திரீகளும் அநாசாரிகளும் கெட்ட குலோத்பன்னர்களும் என்னிடத்துண்டாகிய பத்திவிசேடத்தால் மோக்ஷமடைவார்களாயின், நல்லகுலத்திற்பிறந்த உத்தமசீலர்களாய் பத்திசெய்துவருகின்ற உண்மையான வேதியர்கட்கும் இராஜரிஷிகட்கும் மோக்ஷங்கிடைப்பதற்குஞ் சந்தேகமுண்டோ? எ அருச்சுன! உனது தேகம் நிலையற்றதாயும் சுகவீனமாயுமிருப்பதாலும், இனிக்காலந்தாழ்க்காது அநித்தியமாயுள்ள போகங்களிலாசையைத்துறந்து நித்தியமாயும் மங்களகரமாயுமுள்ள நம்மையடைதற்கேதுவான பத்திசெய்து வருவாயாக. 33

சுவாமின்! உலகத்திற் காணப்படுகிற சீவாசீவ பேதங்களெல்லாம் தாமேயென்ற அபேதபாவனையாக பத்திசெய்யும்படியறிவித்துப் பிறகு யுத்தஞ்செய்யும்படியாகவும் அநுக்கிரகஞ்செய்தீர்கள்; இப்போது நான் பத்திசெய்யவேண்டிய விதிகளை

விவரமாயெனக் கோதுவீர்களாக. அருச்சுன! இனி நீ நமக்கு அத்தியந்த விசுவாசியாகி யெதைப் பூசித்தாலும் நம்மையே பூசிக்கிறபாவனையோடு பூசைசெய்யவேண்டும். அன்றி பார்க்கப்பட்டவைகளெல்லாம் என்னிலும் வேறாகப்பாராமல் என் பாவனையே செய்யவேண்டும்; எவைகட்கு நமஸ்காரஞ் செய்யினும் நமக்கே நமஸ்கரித்த பாவனையாகவே செய்யவேண்டும். மற்றும் நாமெவ்விடத்து முள்ளோமென்றும், நம்மையடைவதே பரமாநந்த கைவல்யமென்றும் அந்தர்முகமாக யெப்போதுந் திடஞ்செய்து வெளிமுகமாக நினது சொந்தமாகிய குலவிர்த்தியை நிஷ்காமியமாய்த் திரிகரணங்களாலுஞ் செய்து வருவாயாகில் நிரதிசயாநந்த சொரூபனாகிய நம்மையேயடைவாய். 34

இராச குய்யயோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 9–க்கு–சுலோகப் பொழிப்பு-372.

* பத்தாவது அத்தியாயம்

# விபூதி விஸ்தார யோகம்.

அவதாரிகை: ஸ்ரீகிருஷ்ணபகவான் சென்ற 7, 8, 9 அத்தியாயங்களிலே தமது விபூதிகளைச் சுருக்கமாகக்கூறி அவையனைத்துந் தாமேயென்று அநேகதிருஷ்டாந்த பூர்வமாயுபதேசித்துத் தம்மையே பத்திசெய்யுமாறு ஆக்ஞாபித்தார். இப்போது அதியிரகசியமாயுள்ள விபூதிகளைப்பற்றி மிகவிரிவாய்த் தெரிவிக்க எண்ணங்கொண்டும் அவைகளுந்தானேயென்று பத்திசெய்யவேண்டிய அபிப்பிராயமுடையவராய் இந்த 10-ம் அத்தியாயத்தில் 42-சுலோகபூர்வமாக உபதேசிக்கத்தொடங்குகின்றார்: அருச்சுன! இதற்குமுன் கூறிவந்த 3-அத்தியாயங்களால் நாம் உபதேசித்துவந்த நம்முடைய விபூதிகளையறிந்து சந்தோஷமுற்ற உனக்கு இன்னும் நீ யோகக்ஷேமத்தைப் பெறவேண்டுமென்ற கருத்துடையவனுய் மிகவிரிவாயிருக்கிற நம்முடைய விபூதிகளையறிந்து பத்திசெய்யும்படி யுபதேசிப்பதைக் கேட்பாய்: 1

அருச்சுன! - நாம் நினக்கிப்போது உபதேசிக்கத்தொடங்கும் நமது மகிமாவிபூதிகளை யெவருமறிவ தருமையாகும். எங்ஙனமெனில், பொன்னுலகவாசிகளான முப்பத்து முக்கோடி தேவர்களும், கைலாசவாசிகளாகிய நாற்பத்தெண்ணுயிர முனீசுரர்களும் மற்றுமுள்ள சித்தர் வித்தியாதராதியர்களாலேயுமறிதல் அசாத்தியமென்போம். ஆயினும் நம்மிடத்துப் பத்திசெய்து நமது கிருபாநோக்கம் பெற்றவர்களாலே மட்டுமறிதல் மிகவெளிதாமென்க. 2

சுவாமின்! தேவரீரது அருமையான * விபூதிகளைப்பற்றியறிந்தாலேதும் பலனுண்டாமோ? அருச்சுன! சர்வலோக சரண்யனுயும், நித்திய நின்மலனுயும், சர்வேசுரனுயுமுள்ள வெம்மையுள்ளபடியறிவார் யாவரோ அத்தகையோரே உத்தமராவார். அவர்கள் நம்மையுணர்ந்த திடத்தினுலே எல்லாப் பாவங்களையும் எல்லாப் பிராந்திகளையுமொழித்து ஈற்றில் நம்பதமேயெய்துவர்.

* விபூதி - ஈண்டு விசேஷகரம்.

அருச்சுன! இன்னும், நம்முடைய விபூதியினாலே உலக மெல்லாம் பிரகாசிக்கின்ற விவரத்தையுங்கூறக் கேட்பாய்: நன்மைதீமைகளைப் பகுத்தறியும் விவேகமும், எல்லாமாயல்லதுமாயிருக்கின்றேமென்பதை யறியுமறிவும், நாமன்றித் தானில்லையென்கிற நிச்சயவுணர்வும், ஒருவரால் செய்யப்படுகிற தீங்குகளினின்றும், குரோதமுண்டாகாதடக்கும் பொறுமையும், எதுவரினும் எதுபோகினும் யாரெது வசனிக்கினும் அதனாலெல்லாம் அகங்கரியாது சமாதானமாயிருக்கிற பேரறிவும், என்ன மிடிவரினும் அசத்தியமின்றிச் சத்தியநெறிநிற்கும் உத்தமகுணமும், பஞ்சேந்திரியங்களையுந் துர்விஷயங்களிற் செல்லவொட்டாதடக்குதலாகிய நிக்கிரகவுணர்வும், பிறசிந்தனையின்றி அந்தர்முகமாக பகவத் தியானஞ்செய்கிற ஞானேந்திரிய நிக்கிரக வுணர்வும், சீதோஷ்ணாதிகளின் சமத்துவவுணர்வும், பிறத்தற்கும் சாதற்கு மேதுவான காமியகன்மஞ்செய்யாதாவிடுகின்ற மகாவிவேகமும், எவற்றினும் நிர்ப்பயமாயிருக்கிற திடவீரமும். 4

காமக்குரோதமற்றிருக்கிற சமத்துவவுணர்வும், சீவகாருண்யமும், சந்தோஷம் தவம் தானம் பிரதாபம் அபகீர்த்தி இவை முதலான அநேக குணாகுண விசேஷங்கள் யாவும் நம்மாலேயே எல்லாச் சீவர்களுக்கு முண்டாகிறதென் றறியக்கடவை. சர்வசாக்ஷி பூதமாயும், அரூபமாயுமிருக்கிற நம்மால் மேற்கூறியவைகளெல்லாம் எவ்வாறுண்டாகுமென்னில், மேற்கூறிய குணாகுணங்களையுடைத்தான மானிடர்களாவார் தாங்கள் பூர்வ சென்ம கன்ம விசேஷத்தாலே அவரவர்களது பாவனாபிமானத்தால் நமது பிரகிருதியான மாயையினது சம்மானமாகப் பெற்றிருக்கிறதை நம்மாலேற்பட்டதாகக் கூறுவதேதவிர, நாமாகவொன்றும் வழங்குவதில்லையென்றறிவாய். 5

அருச்சுன! முனிபுங்கவராகிய பிருகுமுதலான சப்தரிஷிகளும், ஞானவான்களான சனகசனந்தன சனாதன சனற்குமாரரென்னும் நால்வர்களும், மநுமுதலாகிய பதினால்வரும், மகா பிரம்மாண்ட ஸ்தூலதேகியாகிய இரண்யகர்ப்பமென்பவனுமாகிய இன்னோரெல்லாம் எனது சுதந்தரப் பிரகிருதியின் மனோசங்கற்பத்தால் தோன்றினர். ஆயினுமிவர்களெல்லாம் எனது அம்சமானவர்களே. இவர்கள் மூலமாகவே பிரபஞ்சங்களெல்லாம் விருத்தியாயின. சிலர், பிரமதேவனாலே இச்சராசரங்களையெல்

லாம் சிருட்டிசெய்யப்பட்டதாகக் கலாவிநோதத்திற் காணப்படு கிறதேயென்கலாம்; ஆனால் அந்தப்பிரமதேவனும் முதலில் என் சங்கல்பத்தாலேயேதோன்றிப் பிறகு அவன் மனோசங்கற்பத் தாலே சிருட்டித்தான் என்பதும் உண்மையே. இனி அந்த பிரமசிருட்டியும் நின் மனோசங்கற்பத்தா லுண்டானதாகவுந் தெரியவரும். எப்போதெனில், நாம் நீயாகும்போது அறியப் படுமென்க. 6

சுவாமின்! தேவரீர் கூறியபடி யாவும் தேவரீரது விபூதியி னாலே விளைந்ததென்பதைத் தெரிந்துகொண்டதனா லடையும் பலன் என்ன? அருச்சுன! எனதுவிபூதியைப்பற்றியும் யோக மகத்துவத்தைப்பற்றியும் எவன் உள்ளபடி யறியவல்லவனோ அவன் எம்மிடத்தில் தியானயோகத்தைப்பெறுவன். 7

சுவாமின்! தேவரீரது விபூதியையறிந்ததனாலே தியான யோகத்தை யடைவதெப்படி? அருச்சுன! விராட்டுருவமாய் விளங்கும் பிரபஞ்சங்கள் உற்பத்தியாகும்பொருட்டும், மீண்டும் அவைகள் விருத்திமுகத்தால் விவகரிக்கப்படுகிறதற்கும் காரணம் நாமேயென்றும், நம்மையன்றி அணுப்பிரமாணமு மசைவுரு தென்றும் நமது விபூதிமகிமையையறிந்த விவேகிகளான பக்தர் கள் உள்ளன்போடு நம்மையே யுபாசிப்பார்கள். 8

அருச்சுன! இன்னும், அந்தபக்தர்களாவார் என்மீது இடை யுறாச்சித்தம்வைத்துப் பகிர்முகப்பூசையுஞ் செய்வார்கள். இன் னும் நமது திவ்யசரிதப்பிரபாவத்தையும் மகத்துவத்தையும் சமயம்நேர்ந்தழிவாய்கொண்டு வசனித்து வருவதுமன்றித்தான் உபதேசிக்கத்தக்கவர்கட்குப் போதித்துக்கொண்டும், உள்ளபடி யான அந்த மகிமாபிரசங்கமாகிய ஆநந்தசாகரத்தில் மூழ்கின வர்களாயு மிருப்பார்கள். அந்தகைய உத்தமமான நமது பக்தர் கட்கு ஞானோபதேசஞ்செய்து சனனமரண துக்காஸ்பத சம் சாரபந்தத்தினின்றும் நிவர்த்தித்து மோக்ஷத்தையடையும்படிச் செய்வோமென்க. 9

சுவாமின்! சொரூபமில்லாது அரூபமாயிருக்கின்ற தேவ ரீர் ஞானோபதேசஞ்செய்வதெப்படியோ வதைச்செப்பிடவேண் டுவன். அருச்சுன! நம்பாலன்பால் சதாதியானப்பிரிய முடை யவர்களாய் நம்மையே பத்திசெய்பவர்கள் எந்த புத்தி விர்த்தி

யைக்கொண்டு எம்மையடைவார்களோ அந்த புத்திக்குள் நாம் வித்தாயிருந்து முத்தியிற் சேர்ப்போமென்றுணர்க. 10

சுவாமின்! தேவரீர் அவ்வாறு புத்திக்குள் வித்தாயிருந்துமுத்தியைக்கொடுப்பதெத்தாலென்பதைத்தெரியவிரும்புகிறேன். அருச்சுன! நமது மெய்யன்பர்களுக்கு அநுக்கிரகிப்பான்வேண்டி அவர்கள் புத்திக்கு நாம் சாக்ஷிபூதமாகவும் அந்தர்யாமியாகவு மிருப்பதால் அந்த புத்திஸ்தானத்திலிருந்து * சோதகம் செய்துகொண்டிருப்போம். அந்தச் சோதகத்தினலே பிரகாசரூபமாகிய ஞானமென்னுந் தீபந்தோன்றி அஞ்ஞானஸ்பத சம்சாராந்தகாரத்தைப் போக்கடித்து நமது நிரதிசயாநந்த சொரூபத்தைத் தரிசிக்கும்படியுஞ் செய்விப்போம். 11

அவதாரிகை:—7, 8, 9, இந்த மூன்று அத்தியாயங்களால் உபதேசஞ்செய்த விசேடமான விபூதிகளை யுள்ளபடி பார்க்கும்போது பகவானைத்தவிர வேறோர் அன்னிய மில்லையென்றும், அத்தகைய விபூதியையுடைய பகவானைச் சாதாரண புருஷனைவிட யேகதேசமாயொரு விசேஷ புருஷனாகவே யெண்ணிச் சம்பாஷித்தது புத்தியினமென்றும், அந்த பகவத் சொரூபத்துக்கு ஆதியந்த மிராதென்றும் தனது புத்தியிற் சந்தேகமின்றி நிச்சயம்வந்தபடியால் பகவானைநோக்கி அருச்சுனன் தோத்திரஞ்செய்யத் தொடங்குவானாயினன்: சுவாமின் தேவதேவ மகாதேவனாகிய தேவரீரைப் பரப்பிரம்ம சொருபராயும், பாவமாகிய கடலிற்கிடந் தனுபவித்துப் பரிதவிக்கும் பாமரனை அப்பாவத்தி னின்றும் நீக்கிப் பரிசுத்தஞ் செய்யத்தக்கவராயும், சர்வான்மாக்களுஞ் சார்ந்துய்தற்கு ஆதாரபூதனும், மகாசிரேட்டராயும், சுயம்பிரகாச சொருபியாயும், பரம நித்தியராயும், திவ்ய கல்யாணகுண நிரராயும், தேவாதி தேவராயும், சர்வவியாபகராயும், சனன மரண ரகிதராயும், எல்லாமறிபவராயும், கருணை சொரூபியாயும், தற்பரசிற்பரனும், சச்சிதாநந்தராயும், சாஸ்வத சர்வ சாக்ஷியாயும், சர்வலோக சரண்யராயும், சர்வகாரண சர்வோந்தராயும், சர்வஞ்ஞசாந்த சர்வேசுரராயுமுள்ள தேவரீரது திவ்யப்ரபாவ மிப்போதே தெரிந்தேன். 12

அருச்சுன! இதுகாறும் எம்மைப் பலவாறாகப் பாவித்துச் சந்தேகித்திருந்த நீ இப்போது ஒருவிதமாகப் போற்றித்

* சோதகம் சுத்திசெய்தல் அல்லது பிரகாசிப்பிக்கச்செய்தல்

துதிப்ப தெதனாலோ? சுவாமின்! சப்தரிஷிகளும், தெய்வீக ரிஷியாகிய நாரதமகாமுனியும், அசிதன் தேவலன் வியாசமுனீந்திரன் முதலான மகான்களனைவரும் நான் இப்போது உள்ளபடியுணர்ந்துபோற்றிய நிச்சயமாகவே துதித்துக்கொண்டு வருகிறார்கள். தேவரீரும் இவ்வாறான விசேட விபூதிகளையெல்லாம் எனக்கநுக்கிரகஞ் செய்தருளினீர்கள். அதனைக் கேட்டறிந்ததனாலும், தேவரீரது அநேக விபூதி மகிமைகளை நேரே பார்த்தறிவதாலும் இப்போது என்விவேகத்திலெனக்குத்தெரியாமலே இங்ஙனங்கூற வேதுவாயிற்று. 13

சுவாமின்! தேவரீர் என்மீது கிருபைகூர்ந்து எனக்குபதேசித்துவந்த எல்லாத் தத்துவ நியாயார்த்தங்களையும் இன்றேயுள்ளபடியாக வறிந்தனன். ஷட்குண ஐஸ்வரிய சம்பன்ன! தேவாதியர் அசுரர் மானிடர்முதலான எவர்களாலும் தேவரீரது சுத்தஞான சொரூபத்தை யறிதலரிதாகும். 14

சுவாமின்! மற்றும் அறிபவர் யாவரெனின், சத்துவகுணத்தோடுகூடி இரக்ஷிக்கிறதையும், இராசத குணத்தோடுங்கூடி சிருட்டிசெய்கிறதையும், தமோகுணத்தோடுங்கூடிச் சங்கரிக்கிறதையும் செய்வித்துத் தான் சர்வேசுரனாகவிருந்து அவரவர்களுடைய கன்மானுகுணமாகப் பலனளித்து ஆதித்தியாதி பிரகாசங்களுக்கெல்லாம் பிரகாச ரூபமாயிருந்து பிரகாசிப்பித்துக்கொண்டு மகாபுருஷோத்தமராயும்விளங்காநின்ற தேவரீருடைய நிரதிசயானந்த சொரூபத்தைத் தேவரீரேயன்றி மற்றியாவுராலும் அறிதல் அசாத்தியமேயாம். 15

சுவாமின்! இந்த பிரமாண்டலோகங்களெங்கும் எந்தவிபூதி விசேஷத்தினாலே வியாபித்திருக்கிறீர்களோ அவ்வித ஆச்சரிய சர்வோத்தமமான தேவரீருடைய மகிமைகளைச் சிருட்டியேற்பட்டபின் உற்பவமானவர்களாலே தெரிந்துகொள்ள வேதுவில்லை. ஆகையால் அந்த அதியற்புத மகிமாச்சரியங்களை யெல்லாம் கூறத்தக்கவர் தேவரீரேயாகும். எல்லாம் எல்லாமாயிருக்கிற பொருளுக்கே யிசையுமன்றோ. 16

யோகீசுரர்களுக்கெல்லாம் மூலாந்தரங்க யோகீசுரராகியவே! முழுமுதற்பொருளே! இனி இச்சிறுநாயினேன் தேவரீரது திவ்யதிருவடி தரிசனார்த்தம் சிந்தனைசெய்யவேண்டிய கிரமமும், எவ்வாறாகத் துதிசெய்யவேண்டுமோ அதனை யிவ்வாறென்றும்,

எங்கெந்த மகிமாப்பிரபாவங்களைத் தமதாக நான்சிந்திக்கிறதற்கு யோக்கியமாயிருக்குமோ அவைகளையெல்லா மறியாதவனுயு மிருக்கின்றேன். 17

ஜனார்த்தன! ஆகையால் தேவாதிதேவராகிய தங்களது திவ்யயோகப் பிரபாவங்களையும் மகிமாவிசேஷங்களையும் எந்தெந்தவஸ்துக்களில் எவ்வெவ்விதமாகத் தேவரீரைச் சிந்தனை செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் சாங்கோபாங்கமாக இன்னும் அநுக்கிரகிக்கவேண்டும். தேவரீரது திவ்யாமிர்த பிரபாவரசத்தை யெவ்வளவுகொள்ளினும் திகட்டாததும் திருப்தியாகாததுமாயிருக்கிறது. 18

அருச்சுன! நீ விரும்பியவாறு நமதுமகிமைகளனைத்தையும் கூறுவதென்று லசாத்தியமாம். ஆகையால் தெய்வீகமாயுள்ள திவ்யசொரூப விபூதிகளில் முக்கியமான சிலவற்றைமட்டும் விவரமாகக்கூறுவேன் கேட்பாய்: நீ இவைகளை ஆராய்ந்தறியுங்கால் இதனுள்ளே மற்ற மகைதஸ்வரியம் அநுதர்ப்பூதமாயிருப்பதை யறிவதோடும், எல்லாவற்றையுமறிந்தால் என்னபலன் கிடைக்குமோ அந்தபலன் இவைகளினாலேயேயுண்டாம். இப்போது கூறிவரும் விபூதிகளிற் சில என்சொரூபமாயே பாவனைசெய்யவும் வேண்டும். ஏனெனில் சிலவற்றில் மாயாகாரியமான சடமய வஸ்துக்களும் நாமரூபங்களுங் கலந்துள்ளனவாதலால் அவைகளைநீக்கி நம்மைச் சைதன்யமாத்திரமாகப் பாவனைசெய்தல்வேண்டும். 19

அருச்சுன! காணப்படும் எல்லாப்பூத பிராணிகளுடைய இருதயஸ்தானத்தில் அந்தரியாமியாகவிருக்கும் பரமாத்மசொரூபம் நாமே * சரம், † அசரமாகிய பிரபஞ்சந்தோன்றுதற்கும், அவைகள் காக்கப்படுவதற்கும், பிறகு லயப்படுவதற்கும் காரணமாயிருக்கின்றதெதுவோ அந்தப்பழம்பொருளும் நாமே. இவைகளினால் எல்லாவற்றையும் தெரிந்தவனாயினும் அந்தவுண்மையை அந்தரங்கத்தில் நிறுத்தி வெளிமுகமாகப் பத்திசெய்யவேண்டி முக்கியமான மகைதஸ்வரியத்தையும் கேட்டுக்கொண்டவாறுகூறுவோங் கேட்பாயாக. 20

* சரம - அசையப்படுபொருள

† அசரம - அசைவிலாபபொருள.

அருச்சுன! ஆதித்தர்கள் பன்னிருவருள்ளே விஷ்ணு நாமம்பெற்ற ஆதித்தன் நாமே. பிரகாசங்களுள்ளே சூரியப் பிரகாசமும், சப்தவாயுக்களில் மரீசியென்னும் வாயுவும், நக்ஷத்திரங்களுள்ளே சந்திரனும் நாமே. வேதங்களுள்ளே ஞானோபதேசவாக்கியார்த்தங்களைக் கூறுகின்ற சாமவேதமும், முப்பத்து முக்கோடி தேவதைகளுக்குள்ளே தேவேந்திரனும், ஞானேந்திரியங்களுக்குள்ளே மனசும், எல்லாப் பூதப்பொருள்களிலு முள்ளவிவேகமும், * ஏகாதசருத்திரர்களுள்ளே. 21, 22, 23, 24

இன்னும், நாற்பத்தெண்ணாயிர மகரிஷிகளுக்குள்ளேபிருகு மகாரிஷியும், மந்திரங்கள் பலவற்றுள்ளே யேகாக்ஷர மென்கிற பிரணவமந்திரமும், எக்கியங்களுள்ளே செபயெக்கியமும், அசைவிலா தவைகளுள் இமயபர்வதமும், விருக்ஷங்களுள்ளே ‡ அசுவத்த விருக்ஷமும், தேவரிஷிகளுள்ளே நாரதரும், காந்தருவர்களுள்ளே சித்திரசேனனும், சித்தர்களுள்ளே கபிலமுனியும் நாமாகவேயிருக்கின்றோம். 25, 26

அசுவங்களுள்ளே, வெளாளரது தசாங்கத்துளொன்றாகிய உச்சைச்சிரவக்குதிரையும், யானைகளுக்குள்ளே ஐராவதமென்கிற வெள்ளையானையும், மனிதர்களுக்குள்ளே மணிமுடிதாங்கிய மன்னனும், ஆயுதங்களுள்ளே வச்சிராயுதமும், பசுக்களுள்ளே காமதேனுவும், பிரஜோற்பத்திகளுள்ளே மன்மதனும், சர்ப்பங்களுள்ளே வாசுகியும், விஷமற்றதாயிருக்கிற நாகசர்ப்பங்களுள் ஆதிசேடனும், ஜலவாசிகளுள்ளே வருணனும், பிதுர்க்களுள்ளே அரியமன் என்பானும், நீதியாகத்தண்டிப்பவருள்ளே இயதர்மராசனும் நாமாகவேயிருக்கின்றோம். 27, 28, 29,

அசுரர்கட்குள்ளே பிரகலாதனும், நிமிட முதற் கணக்கு செய்யக்கூடிய காலமும், மிருகங்களுள்ளே சிங்கமும், பக்ஷிகளுள்ளே கருடனும், வேகங்களுக்குள்ளே வாயுவேகமும், வில்

---

* ஏகாதசருத்திரர் - பதினொருருத்திரர்கள். அவர்கள், மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன, ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன என்பன.

சுகத்தைத்தரக்கூடிய சங்கரனும், யக்ஷ ராக்ஷதர்களுள்ளே குபேரனும், அட்டவசுக்களுள்ளே பாவகனும், மலைகளுக்குள்ளே மகாமேருபருவதமும், புரோகிதர்களுள்ளே விசேஷமான பிரகஸ்பதியும, சேனாதிபதிகளுள்ளே சுப்பிரமணியரும், நதிகளுக்குள்ளே கங்காநதியும் நாமாகவேயிருக்கின்றோம்.

‡ அசுவத்தம் - அரசமரம்.

வித்தைபயின்றவர்களுள்ளே இரகுபதியும், மச்சங்களுள்ளே முதன்மைபெற்ற மகரமச்சமும் நாமாகவே யிருக்கின்றோம். 31

அருச்சுனா! சர்வாத்ம பூதபேதங்களையெல்லாம் சிருட்டி செய்கின்ற காரியமும், சிருட்டியின்பிறகு காத்தல்செய்கின்ற காரியமும், பிறகு அழித்தற்காரியமும் நாமேயாகும். வித்தைகள் பலவற்றுள்ளும் அத்யாத்மமென்னும் பிரமவித்தையும் நானே. உலகத்திலே யாதொரு விவகாரத்தைமுன்னிட்டு வாதம்பேசுபவர்களில் சிலர் தன்மதோரதப்பிரகாரமும், தன்வாதமேமெற்றுபெறும்பொருட்டும், நியாயமாயினும் அநியாயமாயினும் ஒரேபிடிவாதமாகப்பேசுவர். தன்பிரயோசனத்தைக் கருதாது எதிரிக்குமட்டும் நஷ்டகஷ்டம் விளைத்தலைக்கருதி எனனென்ன இடையூறுகள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் சிலர்செய்து வருவர்கள். ஆத்மஞானத்தைப்பற்றிச் சமமானவர்களாவது அல்லது சாதாரணரான முமுக்ஷுக்களாவது ஒருவருக்கொருவர் செய்கின்றவாதமே கிரமமானவாதமென்று சொல்லத்தகும். இந்தமூவித வாதங்களிலும் முன்னிரண்டுவாதங்களாகிய இரஜோகுண தமோகுண விவாதங்களிலும் நாம் சம்மந்தப்படுவதின்றும். மூன்றுவதான சத்துவகுணவாதமே நாமாயிருக்கின்றோம். 32

அருச்சுனா! எந்த அக்ஷரங்களையும் பொருந்தி உச்சரியாநின்ற தலைமையக்ஷரமாகிய அகரம் என்றமும் நாமே. சமத்துவம் என்கிறவிஷயத்தில் ஸ்ரீ இராமனும் ஸ்ரீ கிருஷ்ணமும் எப்படியோ அவ்வாறேபோன்று விளங்கும் சமத்துவங்களும் நாமே. காலங்களுள்ளே சிருட்டிதிதி சம்ஹாரம் என்னும் முத்தொழிலும் நடைபெறும்போது கடவாநின்ற காலமெதுவோ அந்தகாலம் நாமேயாகும். கன்மங்களுள்ளும் சர்வசீவர்களுடைய கன்மானு குணத்துக்குத் தக்கவாறு பயனளிக்கின்ற கன்மமெதுவோ அந்தகன்மமே நாமாகும். 33

எல்லாவற்றையும் அழிக்குந்தன்மையில் மிருத்திவு நாமே. பூதங்களெல்லாவற்றையும் அவ்வப்பிரகாரம் தோற்றுவிக்கின்ற சத்தியும் நாமே. ஸ்திரிகளுக்குள்ள விசேஷ தர்மங்களாகிற நல்லகீர்த்தியும், லக்ஷ்மிகரமும் எதிர்கால காரியத்திலே யூகிக்கிற தன்மையும், ஏர்க்கனவே நடந்துள்ள காரியங்களை ஞாபகத்தில் வைத்திருக்கிற சித்தமும், தைரியகுணமும் பொருமையும் ஆகிய இவைகளெல்லாம் நாமே. 34

அருச்சுன! தேவதிருப்திகரமான உத்தம யாகாதிகளில் உச்சரிக்கின்ற மந்திரங்களுள் தேவேந்திரனைக் குறித்துச் சர்வ தேவதாத்மகயாக உச்சரிக்கின்ற சாமவேதமந்திரமும்; சந்தஸ் களுள் காயத்திரிசந்தஸும், மாசங்களுள்ளே, தேவாலயங்களி லெல்லாம் விசேஷமாக பூஜைசெய்துகொண்டாடுகின்ற மார்கழி மாதமும், இருதுக்களுள்ளே ஆலயங்களில் உற்சவாதிகளும் பிரஜைகளுள் விவாகாதியனவும் நடைபெறும் சித்திரை வைகாசி மாதமாகிய வசந்தருதுவும் நாமேயாம். 35

வஞ்சகமானதுள்ளே சொக்கட்டானாட்டத்துள் ஆட்டக் காரர்களிஷ்டப்பிரகாரம் பகடைகள் விழும்படியாகச் செய்கின்ற சத்தியும், தேஜிசுகளுள்ளே தேவாலாய பிர்மாலய முதலானவை களை யுண்டுபண்ணுகின்ற கீர்த்தியென்கிற தேஜிசும், யார்யார் எந்தெந்த விஷயங்களில் ஜெயமடைகின்றார்களோ அந்த வெற் றியும், அநேகவிதமான விஷயங்களைப்பற்றிப் பலர்களால் முயற் சிக்கின்ற பலவிதமுயற்சியும், சாத்வீகர்களுள் அன்னியசங்கற்ப மில்லாதிருக்கிற சாந்தமும் நாமாகவேயிருக்கின்றோம். 36

அருச்சுன! யாதவகுலதிலகரான வசுதேவரிடத்துற்பவித்து இப்போது பிரசன்னமாக நினக்குபதேசஞ் செய்துவருகின்ற வாசுதேவரும், பாண்டவர்களிலே தனஞ்சயன் என்கிற நீயும், முனிபுங்கவருள் வியாசமகாரிஷியும் திரிகாலவர்த்தமானிகளுள் சிறந்த சுக்கிரனும் நாமாகவேயிருக்கின்றோம். 37

அருச்சுன! தண்டனை பலவகையுள் யெவரையும் வசஞ் செய்கின்ற தண்டனையும், நீதிகளுள்ளே செயங்கொள்ளவேண் டியவர்களுக்குப் போதனைசெய்வதில் அவர்களால் ஒப்புக்கொள் கின்ற நீதியும், இரகசியங்களுள்ளே பிறசங்கற்பமின்றி தன்மட் டோடேயிருக்கின்ற மவுனரகசியமும், சீவர்களுடைய ஞானங் களுள் தத்துவசம்பந்தமான ஞானவான்களுடைய ஞானமும் நாமாகவேயிருக்கின்றோம். 38

அருச்சுன! எல்லாவிதமான பூதபேதங்களுடைய சிருட்டி திதி சம்ஹாரம் என்னு மூவிதகிருத்தியங்கட்கும் எதுவான பீஜ மும், இச்சராசரபேதமாயுள்ள பிரபஞ்சங்கள்யாவும் நம்மை யன்றி அணுப்பிரமாணமேனும் வேறானதொன்றில்லை. ஆகவே நாமே மேற்கூறியனவும் பிறவுமாயிருக்கின்றோமென்ற விபூதி யைத் திடமாகப் புத்தியிற் பதிப்பாயாக. 39

அருச்சுன! நமது மகோன்னதமான விபூதிகளுக்குப் பிரமாணத்தார் கணித்தற்கியலாவாம். இத்தகையை அதிவிசேடமான அநேகவிபூதிகளிலே உன்னு விவேகத்துக் கெட்டுமவைகளெவ்வளவோ அவ்வளவுமட்டும் முக்கியமான விபூதிகளைச் சங்கிரகமாகக் கூறினோம். 40

அருச்சுன! இதுகாறும் நம்மாற்கூறிவந்த விபூதிகளுமன்றி மற்றுமுள்ள விபூதிகளையுங் கேட்கப் பிரியமிருப்பின் பொதுவகையாற் கூறுவதையுங் கேட்பாய்: எந்தலோகங்களிலும் எந்தஸ்தலங்களிலும் எந்தவஸ்துக்களிடத்துங் காணப்படும் ஐஸ்வரியங்களும் மகிமைகளும், பிரகாசங்களும் மற்றுமுள்ள விசேஷபலன்களும் நம்முடைய முக்கியமான விபூதிகளென்றும், நமது அம்சத்தினாலுண்டானதென்று மறிவாயாக. 41

அருச்சுன! நீ அந்தர்முக விசாரம் நீங்கிப் பகிர்முகப்பட்டு இனி பத்திசெய்ய வேண்டுமென்கிற பிரியத்தோடு நேர்ந்த அவசரத்தினாலே நம்முடைய அநேகவிதமான விபூதிகளைப்பற்றி வினாதல் செய்ததின்பொருட்டு மிக்க ஆவலோடுந் தயையோடு முக்கியமாயுள்ள விபூதிகளைச் சங்கிரகமாகக் கூறினோம், அவ்வித விபூதிகளைமட்டும் தனித்தனியாய்ப் பத்திசெய்வதால் பூரணஞானத்தையும் பலனையு மடையமாட்டாய். ஏதனாலெனின் நாம், பிரபஞ்சாதிகளெவ்விடத்தும் என்றும் நமது ஒரே அம்சத்தினால் வியாபித்து விளங்குவதால் நீ தனித்தனியே செய்யும் பத்தியானது விபசாரபத்தியாய் முடியுமேயன்றி சுத்தபத்தியாகாவாம். ஆகையால் எல்லாப் பிரபஞ்சங்களாகிய சமஸ்தவஸ்துக்களிலும் நாமேயிருப்பதாகவும், நம்மையன்றி அன்னியமாக ஒருபதார்த்தமு மில்லையென்றும் திடபத்தியோடு அவிபசாரபத்திசெய்தல் வேண்டும். அவ்வாறு செய்வாயேயாயின் பூரணபலமாகிய கைவல்யத்தையடைதற் கதிகாரியாவாய். 42

இதனால் "சர்வம் விஷ்ணுமயம்ஜெகத்" என்ற ஆப்தவாக்கியம் சித்தாந்தமுற்றது பஞ்சேந்திரியங்கள் வழியாகச் சித்தம் பகிர்முகப்பட்டால் பார்க்கப்படுகிற பொருள்களெல்லாவற்றையும் பகவத்சொரூபமாகவே பாவனை செய்யவேண்டுமென்கிற அபிப்பிராய முடையவராதலால் இந்த பத்தாமத்தியாயத்திலே எங்குமுள்ள விசேஷகரமான எல்லா விபூதிப்பொருள்களையுஞ்சுட்டி அங்கங்குந்தன் னம்சமேயமர்ந்ததாக் கூறினாரென்க.

விபூதி விஸ்தாரயோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 10-க்கு-சுலோகப் பொழிப்பு-414.

# பதினொன்ருவது அத்தியாயம்

# விசுவரூபம்.

அவதாரிகை:— முந்திய பத்தாமத்தியாயத்திலே பகவான் தமது விபூதி மகிமைகளையெல்லாம் அநுக்கிரகஞ் செய்ததால் அருச்சுனன் அந்த விபூதிசகித விசுவரூபத்தைத் தரிசிக்கவேண்டுமென்று அபேக்ஷித்ததநிமித்தம் தம்முடைய விசுவரூபத்தைக் காட்டியதைப்பற்றி இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

முற்கூறிய விபூதி விஸ்தாரயோக அத்தியாயத்தின் முடிவிலே 'பிரபஞ்சங்களெங்கும் பரிபூரணாம்சமாக விளங்கியிருக்கின்றேன்' மென்றனுக்கிரகஞ்செய்த பகவானைநோக்கி அவ்வாறு வியாபகமாயிருக்கிற விசுவரூபத்தைத் தான் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கவேண்டுமென்று இச்சைகொண்ட அருச்சுனன், "சுவாமின்! அடியேனுக்கு அநுக்கிரகஞ்செய்து இரக்ஷிக்கவேண்டிய நிமித்தமாக அதிபிரகசியமாகிய சொரூபஞானத்தை யுபதேசித்ததால் என்னிடமிருந்த தேகப்பிராந்தியான அஞ்ஞானம் நஷ்டமாயின" என்றனன். 1

செந்தாமரை யிதழினைப்பழித்த நேத்திராலங்காரச்சீதர! தேவரீரிடமாக எல்லாப்பூத பரிணாமங்களுந் தோன்றிக் காக்கப் பெற்றுப் பின்முடிவடையுந் தன்மையையும், குன்ருத மகத்துவமும் அநுக்கிரகஞ் செய்ததனால் பரமசந்தோஷமடைந்தேன். 2

ஸ்ரீவைகுண்டநாத! தேவரீர் விசுவரூபத்தை யெவ்வாறு அநுக்ரகஞ் செய்தீர்களோ அவைகள் யாவும் உண்மையே. அவைகளிற் சிறிதுஞ் சந்தேகமேயில்லை. ஆயினும், ஞானம் ஐஸ்வரியம் சத்தியம் பலம் தைரியம் தேஜசு ஆகிய இவைகளோடுங் கூடிய தேவரீரது ஈசுரசொரூபத்தைப்பார்க்க மிக்க ஆவலுடையவனுயிருக்கின்றேன். 3

"யாதவகுலோற்பன்னமாதவ! தேவரீரது திவ்யசொரூபத்தைப் பார்க்கிறதற்கு நான் அருகனே அருகனல்லாதவனே அது தேவரீர்க்கேதெரியவரும். அவ்வாறு அருகனுனல் மகாவியாபகராயிருக்கின்றதேவரீரதுவிசுவரூபசாக்ஷியைத் தந்தருளவேண்டு" மென்று அருச்சுனன் பிரார்த்திக்க, பகவான் கருணை

கொண்டு தமது விசுவரூபத்தைப்பெறு நிமித்தம் "மிகச்சாவ தானமாகப் பார்க்கவேண்டு" மென்று ஆக்கியாபிக்கின்றார். 4

அருச்சுன! அநேகமாயிரமாயிரமாகவும், அநேகவிதபேதா பேதங்களாகவும், பற்பல விசித்திரங்களாகவும், நானாவிதவர்ண ரூபங்களாகவும், அநேகவிதமான சொரூப விசேஷங்களோடுங் கூடியிருக்கின்ற நம்முடைய விசுவசொரூபத்தைப் பார்ப்பா யென்றும். 5

இன்னும், பனிரெண்டுவித சூரியர்களையும், அட்டவசுக்களை யும், பதினொருவித உருத்திரமூர்த்திகளையும், அசுவினிதேவதை கள், மருத்துவதேவதைகள் எழுவகைவாயுக்கள் ஆகிய இவர்களை யெல்லாம் பார்ப்பீர்: தவிர, முன் பாராதனவும் கேளாதனவுமா யுள்ளவைகளையும், அதியாச்சரியகரமா யுள்ளவைகளையும் நம் விசுவரூபத்திலே பார்ப்பாயாக. 6

அருச்சுன! சராசரபேதங்க ளெவ்வளவோ அவ்வளவை யும் நம்மிடமிருக்கிறதைப்பார்ப்பாய்; இன்னும் பார்க்கவேண்டு மென்று இச்சையோடு நிச்சயங்கொண்ட தெவைகளோ அவை களையெல்லாம் இப்போதே பார்ப்பாய். 7

அருச்சுன! "உனது ஊனநேத்திரத்தாலே, விசாலமான தும் அதியாச்சரியமானதுமான நம்முடைய விசுவரூபத்தைப் பார்க்க வல்லவனல்ல. உத்தமமான ஞானநேத்திரந் தருகின் றேம், அதனாலே நமது யோகமாயையின் பிரபாவத்தையுடைய விசுவரூபத்தைப்பாரும்" என்று பகவான் அநுக்கிரகஞ்செய்த வாறு திருதராட்டிரனுக்குச் சஞ்சயர் ஆறு சுலோக பூர்வமாகக் கூறுகின்றார்: 8

திருதராட்டிரமகாராஜ! மகத்துக்களான மகாயோகியர் களுக்கெல்லாம் யோகீசுரராய் விளங்காநின்ற ஸ்ரீ கிருஷ்ணபக வான் அருச்சுனனைநோக்கிக் கருணையோடு சிரேட்டமாயுள்ள தமது விசுவரூபத்தைக் காண்பித்தனர். அதன் அதியாச்சரிய விநோதத்தை நாம் என்னென்றுகூறி என்னென்றுதுதிப்போம்! ஆயினும் ஞாபகமுள்ளதைக் கூடுமானவரையில் சொல்லிவரு வோம்: அநேகமுகங்களும், அநேக கண்களும், அநேகனேக * கரசரணாதிகளும், அதிவிநோத ஜொலிதமான ஆபரணாதி

* கரசரணாதிகள் - கைகால்கள்.

களும், அநேகவிதங்களான ஆயுதங்களும், மனதைக் கவரத்தக்க விசித்திரமான புஷ்ப மாலாலங்கிருதங்களும், அநேகவித வர்ண பேதாலங்கார பீதாம்பராதியனவும், பற்பல நறுமண திலகாதிகளும்விளங்கி அளவற்ற ஆச்சரியகரமாய்ப் பிரகாசித்ததோடுங் கூடிய காக்ஷிதந்தருளினார். இன்னும் ஏ ராஜாதிராஜ! இவ்வாறாய நானாவித அலங்காரங்களோடுந் தோன்றின விசுவரூபமானது, அநேக ஆதித்தர்கள் ஏககாலத்தி லொன்றாய்க்கூடிப் பிரகாசித்தா லெவ்வாறு ஏகசோதியாகக் காணக் கண்கூசுமோ அவ்வாறாய கிரணப் பிரகாசத்தையும் ஒப்பிடவொண்ணாததான மகாவிசுவரூபத்தோடு அருச்சுனனுக்குக் காக்ஷிதந்தருளினார்.

ஏ இராஜமகிப! இன்னும் அத்தகைய விசுவரூபத்திலே பற்பலவிதங்களாயுள்ள பிரபஞ்சாதியனவும், தேவர்கட்குத் தேவனான ஸ்ரீகிருஷ்ணபகவானது திவ்யசரீராகாயத்திலே காணப்பட்ட அற்புத சொரூபங்களை அருச்சுனன்பார்த்து மகா ஆச்சரியத்தையும் அடங்காத சந்தோஷத்தையும் அடைந்துள்ளான்.

மகாராஜ! இவ்விதமான ஆச்சரியத்திலும் ஆச்சரியமும், காக்ஷிகளில் ஒப்பற்றதுமான திவ்யவிநோதத் திருக்கோலக்காக்ஷியினை தனது ஞான ஆக்ஷியினாற் றரிசித்தமாத்திரத்தே தேகத்தில் மயிர்க்குச்செறியப் புளகாங்கிதங்கொண்டு அன்புமீதூற பகவானைநோக்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து சிரசின்மீது கைகுவித்துப் பதினேழு சுலோகபூர்வமாகத் தோத்திரஞ் செய்கின்றான்: 14

சுவாமின்! தேவரீர் இப்போதென்மீது கிருபைகூர்ந்து செய்வித்த ஒப்பற்ற பெருங் காக்ஷியின் மகத்துவத்தை என்னொரு நாவால் என்னென்று துதிப்பேன்! தேவரீரது திவ்ய விசுவரூபத்திலே இதுகாறும் யான் கண்டறியாததும் கேட்டறியாதனவுமாகிய ஆதித்தனாதிய தேவதைகளையும், முனீசுரர்களையும் நான்குவித பிரஜைகளையும் மேருவிலுள்ள பிரமருத்திராதியரையும் வசிட்டர்முதலான மகான்களையும் தக்ஷகாதி சர்ப்பங்களையுங் கண்டேன். அரவணைச்செல்வ! இன்னும் பற்பல ஆயுதங்கள்பிடித்த கரங்களோடும்பரந்து சிறந்த அநேக முகங்களோடும் அழகிய நேத்திரங்களோடுங்கூடிய அளவிடக்கூடாத நானாவித ரூபபேதங்களையுடைய தேவரீரது திவ்ய விசுவரூபத்தைத் தரிசனஞ்செய்தேன் மிகப் பெருமைவாய்ந்த தெய்வீக



விசுவாசப்பிரகாச திருமேனியையுடைய தேவரீரது அடி நடு முடியைத் தரிசிப்பதென்றால் யாரால்தரம்! எவராலுங்கூடாத தாகும். என்பாக்கியமே பாக்கியம்; இன்னும் நான்கண்ட அற்புதக்காக்ஷியிலே நவநவஜொலிதமான அநேக மணிமுடிகளும், கெதைகள் சக்கரங்களைத்தரித்தும், தேஜஸ்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், எவ்விடத்தும் பிரகாசத்தோடுங்கூடியவராயும், எவராலுங் காணற்கரியராயும், பிரகாசிக்கின்ற அக்கினி ஆதித்த சந்திராதியவைகட்கெல்லாம் பிரகாசத்தைக் கொடுக்கின்ற சுவம் பிரகாசனுமிருக்கின்ற தேவரீரது திவ்யதேசோன்மய விசுவசொரூபத்தைத் தரிசித்தேன். 17

ஏ இராஜகெம்பீர! மீண்டும் அருச்சுனன் தோத்திரித்ததையுங் கேட்பீராக. நித்திய நின்மல நிராகார நிரஞ்சனரான பரப்ரம்மசொரூபராயும், தேவரீருடைய திவ்யதிருவடிகளே கதியெனநம்பி வழிபாடுசெய்துவரும் முமுக்ஷுக்களா லறியப்படுகிறவராயும், விசுவத்துக்காதார விசுவராயும், சர்வான்மகாரணராயும், நிலவரமான தர்மரக்ஷகராயும், பழமைக்குப் பழமையராயும், மோக்ஷாபேக்ஷகர்கட்கு மோக்ஷமே தானாகியுமுள்ளவர் தேவரீரேயெனத் தெரிந்தேன். 18

மற்றும், ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ் சோதியராயும், மகியாநந்த மார்த்தாண்டராயும், சூரியசந்திர நேத்திரராயும், அண்டினோரையாதரிக்கும் அபயாஸ்தமுடையராயும், கருணைததும்புங் கண்களோடுங்கூடிய பிரகாசமான வதனவத்சலராயும் விளங்குகின்ற தேவரீருடைய சுயம்பிரகாசத்தினாலே பிரபஞ்சங்களியாவும் தாபமடையும்படியான சொரூபத்தைத் தரிசித்தேன். இன்னும், ஆகாயம் பூமிமுதலிய தசதிக்குகளெங்கும் வியாபகமாயிருக்கின்ற தேவரீரது அதியாச்சரியகரமாயும் உக்கிரமாயுமிருக்கின்ற சொரூபத்தைநோக்கித் திரிலோகாதியர்களும் மிகப்பயந்தவர்களாயு மிருக்கின்றார்கள். 19, 20

இன்னுஞ்சில தேவதைகளெல்லாம் பயத்தோடு தேவரீரே கதியெனச் சரண்புகுகின்றார்கள். சிலர் மருண்டவர்களாகி அஞ்சலிசெய்து இரக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கின்றார்கள். மகரிஷிகளும் சித்தர்குழாத்தினரும் சுபங்களையடையவேண்டித் தேவரீரை விஸ்தாரமாகவும் பத்திமையாகவுந் தோத்திரஞ்செய்து வருகின்றார்கள். பின்னும் பதினொரு ருத்

திரர்களும், துவாதசாதித்தர், அஷ்டவசுக்கள், சாத்தியர், விசுவ தேவர்கள், அசுவனிதேவதைகள், மருத்துவர், பிதுர்தேவதைகள், கந்தருவர், எக்ஷராக்ஷத அசுரர்கள், சித்தர்கள் ஆகிய இவர்கள் யாவரும் ஆச்சரியமடைந்து திகைத்து நிற்கின்றார்கள்.

இன்னுஞ்சிலர், பலவித வந்தனவழிபா டுடையவர்களாய்த் தரிசித்துப்போகிறார்கள். அந்தசொரூபமோ, அனேக ஆயிரக் கணக்கான முகங்களும், அநேகநேத்திரங்களும், அநேகநேக கைகளும், அநேக துடைகளோடும், அநேக கால்களோடும் அநேக உதரங்களும், அநேக வாய்களும், அநேக தந்தங்களுங் கூடிய ஆச்சரியமாய்த் தோன்றப்படுகிற தேவரீரது சொரூபத்தைக்கண்டு அடியேனும் பயமெய்துகின்றேன். இப்படியே உலகத்தார்யாவரும் பீதியடைகின்றார்கள். 23

பிரமனைப்பெரியோய்! இன்னும் பூமிமுதல் ஆகாயமளாவிய பிரகாசமாயும், அநேகரூப பேதங்களும், கோரமான வதனங்களும், திரண்டுருண்டு விழித்திருக்கின்ற நெருப்பெனவெரிக்கும் ஆயிரக்கணக்கான நேத்திரங்களையுமுடைய தேவரீரது விசுவரூபத்தைப்பார்த்துப் பிரமையோடுங்கூடியசித்தமுடையேனாயிருக்கின்றேன். பின்னுங் கோரமாகக் காணப்படுகின்ற பல்வரிசைகளைப்பார்த்துப் பிரளயகாலாக்கினிக்கொப்பான பயத்தையுடைத்தானதாயுமுள்ள தேவரீரது திருமுகநோக்கஞ் செய்தவுடனே திக்குத்தெரியாமலும் சுகமறியாமலும் பரவசப்பட்டவனாகிய என்னுடையபயத்தை நீக்கும்பொருட்டு ஏ ஜெகதீசா! தேவாதிதேவா! அதிசீக்கிரமாகப் பூர்வசொரூபத்தைப்போலவே விளங்கவேண்டும். இன்னும் திருதராட்டிரர் முதலானவர்களுடைய புத்திரர்களாகிய துரியோதனாதியர்களும், அவர்களோடுங் கூடியுள்ள இராஜர்கள் தங்கடங்கள் சேனைகளோடும், வீட்டுமர் துரோணர் கன்னன் முதலானவர்களும், நம்முடைய சேனைகளில் திருஷ்டத்துய்மன் முதலான மன்னர்களும் அவர்களது சேனைகளும் அதிவேகத்தோடுங் கூடியவர்களாகி, கோரதந்தங்களுடன் பயங்கரமாயிருக்கின்ற தேவரீருடையவாய்க்குள் நுழைகின்றார்கள். சிலர் பல்களின் நுனியிலே சிக்கிக்கொண்டு சரீராதியவைகளெல்லாம் நசுக்குண்டு ஆலையிலகப்பட்ட கரும்புபோலாகின்றதாகக் காணப்படுகின்றார்கள். இன்னும் அநேகவித நதிகளெல்லாம் சமுத்திரசங்கமமாகிறதுபோலத் தேவரீரது முகத்

துவாரத்தில் பதினெட்டக்குரோணி சேனைகளும் பிரவேசிக்கின்றன. 24, 25, 26, 27, 28

ஏ, ஸ்ரீநிவாச! விட்டில்பூச்சியானது தீபச்சுடரைத் தனக்கினிய ஆகாரமெனக்கருதி அதிலேவீழ்ந்துமடிவதுபோலத் தேவரீரது மகிமையையறியாது இந்தயுத்தகளத்திலே விளங்காநின்ற சேனாசைனியங்களெல்லாம் மடிந்துவிடுவோமென் றறியாராய்த் தேவரீரது வாய்வழியே பிரவேசிக்கின்றார்கள். வாசுதேவ! இந்த இராஜ இராஜாக்களனைவரும் அவரவர்களுடைய சேனைகளோடு காலாக்கினிக்குச் சமானமாய் ஜொலிக்கின்ற தேவரீரது வாயினிடமாக அகப்பட்டிருக்கின்ற யாவர்களையும் தேவரீரே பக்ஷிக்கிறதாகத் தெரிகிறது. தேவரீரது அதியுக்கிரமான தேஜஸானதுபிரபஞ்சங்களையெல்லாம்தகிக்கும்படியாகச்செய்கிறதே! ஏ, கவுஸ்துவமணிமார்ப! சர்வதேவசரண்ய! தீனதயாளோ! இவ்வாறு அதிகரே உக்கிரபயங்கரமாயிருக்கின்ற தேவரீரைஇன்னாரென்று எளியேற்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டுகிறேன்; நமஸ்காரம், நமஸ்காரம். மகா அற்புதமாகவும், அதியாச்சரியமாயுமிருக்கின்ற தேவரீரை இன்னாரெனத் தெரிந்துகொள்ளமிகப் பிரீதியுள்ள எனக்குப் பூர்வசொரூபமாயே யமர்ந்தருளவேண்டுகிறேன். இந்தச்சொரூபமெடுத்த அவசரமுமின்னதன்பொருட்டென்பதைத் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன். 29, 30, 31

இங்ஙனம் பலவாகப்பிரார்த்தித்ததைக் கேட்டருளியலோகநாதன், ஏ அருச்சுன! எல்லா உலகங்களையும் சம்ஹரிக்கின்ற காலன் நானே இவ்விதசேனைகளிலே உன்னைத்தவிர யாவரையுஞ் சங்கரிப்பான் வேண்டியே இந்தச்சொரூபமெடுத்தோம். இவர்களையெல்லாம் நீ சம்ஹரியாவிடினும் நம்மாலே நாசமடையப்படுவார்களென்பது நிச்சயமே. ஆகையால் இப்போது நீயெழுந்து யுத்தசன்னத்தனாய்ப் போர்புரிந்து சத்துருக்களை யெல்லாஞ் செயங்கொண்டு வீட்டுமராதியர்களை யெல்லாம் அருச்சுனன் ஜெயங்கொண்டானென்கிற கீர்த்தியைப்பெற்று அந்தராச்சியங்களையெல்லா மாளக்கடவை. இத்தியாதி சேனைகளெல்லாமுன்னேயே நம்மால் கொலையுண்டன. ஆகையால் "நாம் வெற்றி பெறுவோமோ அல்லது அபஜெயப்படுவோமோ" என்று சந்தேகமுறவேண்டாம்; நீ நிமித்தகாரணமேயன்றி மற்றன்று.

அருச்சுன! நான்குதிசைகளிலுமுள்ள அரசர்களும் வீட்டுமர் துரோணாசாரியர் கர்னன் ஆகிய இவர்களும் முன்னமே நம்

மால் கொல்லப்பட்டார்கள். ஆகவே அவர்களையும் நீ நிமித்த காரணனாய்க் கொல்வாய். இனிபயமென்பது சிறிதுமின்றி யுத்தஞ்செய்வாயானால் சத்துருக்களையெல்லாம் அதஞ்செய்து நீயே ஜெயங்கொள்ளப்போகிறாய். என்று கிருஷ்ணபகவான் கூற, ஏ மகாராஜ! அந்தவார்த்தைகளைக்கேட்ட அருச்சுனனுக்குத் தேகமெங்கும் மயிர்க்கூச்சலுண்டாகி நடுநடுங்கி வாய்குழறி ஒருபால் சந்தோஷமும் மற்றோர்பால் பயத்தையுமுடையவனாய்த் தன்னிருகரங்களையுஞ் சிரசின்மேல்குவித்துப் பகவானது மகிமாபிரபாவத்தை யுத்தேசித்து அடிக்கடி கீழேவிழுந்து நமஸ்கரித்துத் தோத்திரிக்கின்றான். 34, 35

திரிதராட்டிரராஜனே! பின்னும் அருச்சுனன் பகவானை நோக்கி ஏ ரிஷிகேசா! தேவரிஷிகளெல்லாம் தேவரீரது மகத்துவத்தை யுற்றுநோக்கி அநேகவிதமான தோத்திரங்கள்செய்து பரமசந்தோஷத்தையடைந்து மீண்டுமீண்டுந் தேவரீரது சொரூபத்தையே ஆவலோடு பார்க்கிறவர்களாயிருக்கிறார்கள். இன்னும் இராக்ஷத கணங்களெல்லாம் பீதிகொண்டவர்களாய் திக்கெட்டுமோடித் திகைக்கின்றார்கள். சித்தர்கணங்க ளனைவரும் பத்திவிசுவாசத்தோடு பணிகின்றார்கள். இன்னுஞ் செகத்துக்கெல்லாங் காரணபூதரும் ஆதாரமுமானவரே! துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்கின்ற தேவதேவே! தேவதைகளுக்கெல்லாம் பரவாசுதேவனும் மோக்ஷரூபனுமிருக்கிற முராரியே! சிருட்டிசெய் பிரமனைச்சிருட்டிசெய் பரமனே! சத்துருநாச மித்துருநாச உத்தமர்தாசராயும்அக்ஷராம்சராயுமுள்ள பரப்ரம்ம சொரூபா தேவரீர்க்கு யார்தான் நமஸ்கரியாதிருப்பார்கள்.

இன்னும், ஆதிக்காதியாயும், புருஷருக்கெல்லாம்பரமபுருஷராயும், விசுவப்பிரகாச விநோதராயும், மற்றும் எல்லா மறிபவராயும், சர்வரூபத்தராயும், எல்லாம் வல்லவராயும், மோக்ஷாஸ்தானராயுமிருக்கின்ற தேவரீரேவிசுவப்பிரதேசமெங்கும் அநேகரூபங்களாக வியாபித்திருக்கின்றீர்கள். பின்னும் சூரியசந்திரர்களும் இயமன் அக்கினி வாயு வருணன் ஆகிய இவர்களும் பிரமதேவரது பிதாவாகிய பின்னைகேள்வனும் தேவரீரேயாகையால் அநந்த நமஸ்காரம்! நமஸ்காரமென்று நமஸ்கரித்தும், இன்னும் பிரபஞ்சாதியவெல்லாந் தாமாகவே விளங்கிவருவதால் சர்வமும் தேவரீரையன்றி வேறாகக் காண்கிலேனாகையால் அதிபராக்கிரம

ராயும், அநந்த மங்கள குணாலயராயும் விளங்காநின்ற தேவரீரது திவ்யசொரூபத்தின் எப்பக்கங்களினும் நமஸ்காரம் நமஸ்காரமென்று நமஸ்கரித்து எழுந்துநின்ற அருச்சுனன் மிகப்பத்தி சிரத்தையோடும் வாய்பொத்திக் கைகட்டி திவ்யசொரூபத்தின் எதிர்நின்று, ஏ உலகளந்த வுத்தம புத்பலோசன! இதற்கு முன்னே தேவரீரைச் சிநேகமுறைகொண்டு ஏ கிருஷ்ணா! ஏ யாதவா! ஏ மைத்துன! ஏ மித்திரா! என்றும் இன்னும் பலவாறாகத் தேவரீரது மகிமாவிசேஷங்களையெல்லா மறியாது பிராந்திகொண்ட மனத்தினனாய் சகசமாக என்னென்ன பேசியிருந்தேனோ அவைகளையெல்லா மன்னித்தும், மற்றும் விவகார காலங்களிலே படுக்கையிலிருக்கும்போதும், விளையாடும்போதும், சமத்துவமாயிருந்தபோதும், போசனஞ்செய்தபோதும், சபைகளிலிருந்தபோதும் எனது மனோவாக்குக் காயங்களினாலே செய்த குற்றங்களை யெல்லாம் தயாசொரூபியாகிய தேவரீர் பொருத்துக்கொண்டு மதலைவாய் மொழியென மனக்களிப்புற்று அநுக்கிரகிக்கவேண்டுமென் ஆண்டவா! யென்று பன்முறையுந் தண்டஞ்சமர்ப்பித்துப் பின்னும் அப்பரவாசுதேவனையே துதிக்கின்றான். 38, 39, 40, 41, 42

ஏ மகாராஜனே! ஆதிசேடனாலும் அளவிடவொண்ணாத் தேவரீரது பிரபாவமனைத்தையும் யானோமதித்துக்கூறவல்லன்! சராசரபேதங்களாகக் காணப்பட்ட இவ்வுலகத்துக்குத் தந்தையுந்தாயுங் குருவுந் தலைவனும் நீயேயன்றி திரிலோகங்களிலேயும் யாரைச்சொல்லமுடியும்? தேவரீர்க்குச் சமானஸ்தர் ஒருவருமில்லையெனின் வேறோர் தெய்வமு முண்டென்று யெவராற் சொல்லத்தரம்? ஆகையால், எவ்வுலகுக்கு மிறைவராயுள்ள யெம்பெருமானே! தேவரீரை நமஸ்கரிக்கின்றேன் ஜெகத்கர்த்தராயும், தோத்திரங்கட்குத்தக்க பாத்திரராயுமுள்ள தேவரீரைப் பிரார்த்திக்கின்றனன். புத்திரன்பிழையைப் பிதாவும், மித்திரன் பிழையை மித்திரனும், தர்மபத்தினியாகிய மனையாள்செய்த பிழையை நாயகனும் மன்னித்துச் சகித்துக்கொள்வதுபோலத் தேவரீரும், அறியாமையே * ஆகிர்தியாகவுடைய யெளியேன் பிழைகளையெல்லாம், பொறுமையை யருமையான பூஷணமாக் கொண்ட புண்ணியசொரூபனானதால் பொறுத்தருளவேண்டும்.

* ஆகிர்தி - சொரூபம்.

இதற்குமுன் என்றும்பாராத விசுவமகா சொரூபத்தைப் பார்த் தானந்தித்துக் கிருதார்த்தனுயினேன். ஆயினும் என் மனம் பீதியடைந்து வியாகூலத்தையடைகின்றேன். ஆகையால் இப்போது நானடைந்துள்ள பயத்தைநீக்கிச் சந்தோஷப்படும் படியாகப் பூர்வசொரூபத்தையே பெற்றருளவேண்டுகிறேன். புஜபல பராக்கிரமங்களிற் சிறந்த விசுவமே ஆகிருதியாகவுடைய புனிதமேலோய்! கெதாயுதத்தோடுங் கிரீடகுண்டலங்கள் தரித் துச் † சௌமியமான சதுர்ப்புயங்களமைந்த பூர்வசொரூபத் தையே பெற்றருளவேண்டும். 45, 46

அவதாரிகை:— அத்தியந்த பக்தனுகிய அருச்சுனனுக்குத் தற்பத வாச்சியார்த்தங்களனைத்துந் தன்னையன்றி யன்னியமில்லை யென்றும் விவேகமுண்டாகவேண்டுமென இந்த விசுவரூப தரி சனஞ் செய்வித்தமையால் அதன்பெருமையை மூன்றுசுலோகங் களால் கூறுவாராயினர். அருச்சுன! எனதுமகாயோக மகத்து வத்தாலும், உன்மீது நமக்குள்ள கருணையினுலும் இப்போது பிரசன்னமாயிருக்கின்ற உத்தமமான சொரூபத்தை நீ தரிசிக் கும்படியாகப்பெற்றுள்ளோம். இந்தத் தேசோமய விசுவசொரூ பத்தை யிதுகாறும் பார்த்தவர்களொருவருமில்லை. நீயே யிப் போதுபார்த்தாய்; இதனுலே பெறற்கரிய பேறுபெற்றவனும் நீயேயாம். 47

மற்றும், வேதோப நிடதார்த்தங்களையெல்லாம் சந்தேக விபரீதமறக்கற்ற பண்டித மணிகளானுலும், யாகாதிகள் செய் தவர்களானுலும், அக்கினிஹோத்திரஞ் செய்தவர்களானுலும், விசேஷமான தானதருமங்கள் செய்தவர்களானுலும், அதிகடுந் தவம் புரிந்தவர்களானுலும், மற்றும் பலவித கன்மங்கள் செய் தவர்களானுலும் பெறுதற்கரிய பலவித விநோதாச்சரியமான விசுவ சொரூபத்தை யிம்மண்ணுலகத்திலே உன்னைத்தவிர வேறொருவரும் பார்ப்பதற்கு நாமு முடன்படமாட்டோம். அருச்சுன! ஆகையினுலே நீ நம்மிடம் ஆழ்ந்த சத்துவகுண பத்திசெய்து வந்தமையால் இனி நீயெப்போதுந் தியானஞ் செய்யவேண்டுமென்றே இந்த சொரூபந்தாங்கினேம். இதைப் பார்ப்பதற்குப் பயங்கரமும் வியாகூலமுமாயிருக்குமாயின் அவை களை நிவர்த்திக்கவேண்டி நமது பூர்வசொரூபத்தைப் பார்ப்பா யென்று பஞ்சவர்க்குத் தூதனுன பகவான் பழய கிருஷ்ண மூர்த்தி சொரூபத்தையே காண்பித்தனர். 48, 49

† சௌமியம் - அழகு.

ஏ மகாராஜ! வாசுதேவர் இவ்வாறாக பயமுற்றிருந்த அருச்சுனனை நோக்கி இனிமையான மதுரவாக்கியங்களால் சமாதானஞ்செய்து மீண்டும் தமது பூர்வரூபமாகிய கிருஷ்ணமூர்த்தி சொரூபத்தைக் கொண்டனரென்க. 50

இத்தகைய சாந்தமான சொரூபத்தைத்தரிசித்த அருச்சுனன் என்னகூறுகின்றானெனின், சனார்த்தன! தேவரீருடைய சாந்தமானவிந்த மனித ரூபத்தைப்பார்த்த யிப்போதே பழமையான சாந்தசித்தமுடையவனாயினேன் என்றுகூற, பகவான்:

அருச்சுன! எவராலும் பார்த்தற்கமையாத நமது ஈசுர சொரூபமாகிய விசுவரூபத்தைப்பார்த்தாய்; தேவர்முதல் யாவரும் இதுகாறுங் கண்டவர்களேயல்ல; ஆனால் இந்த விசுவரூபத்தைப் பார்க்கவேண்டுமென்று எப்போதும் கோரிக்கொண்டிருக்கின்றார்கள்; அத்தகைய ரூபத்தை நீ தியானஞ் செய்யவேண்டுமென்றே காண்பித்தோம். 52

அருச்சுன! காண்டற்கரிய காரணம் யாதோவெனின், இப்போது நீதரிசித்த நமது விசுவரூபத்தை யதார்த்தமாயறிந்து அன்போடு பத்திசெய்வதாலன்றி வேதபாராயணஞ் செய்வதாலும், தவஞ்செய்வதாலும், தானங் கொடுத்துவருவதாலும், யாகஞ்செய்வதாலும் நம்மைக்காண்ப தரிதாகும். 53

சத்துருவை ஜெயங்கொள்ளும் அருச்சுன! மற்றியாவர்தான் இந்தரூபங் காண்பாரென்றால், மற்றோர் தெய்வத்தையுபாசியாது யென்னையன்றி யன்னியமில்லையென்று திடமாகயென்னையே பத்திசெய்வா ரெவர்களோ அவர்களே சாஸ்திரவாயிலாகக் காணப்படுவதன்றி பரிசுத்தமான மனசையுடையவர்கட்குங் காணப்படுவேன். இவ்வாறாய நானேயவர்களென்று தெரிந்தனுபவிக்குமபடியாகவு முடன்பட்டுள்ளேன். 54

அருச்சுன! நாம் நினக்குச் சகலசாஸ்திரங்களினது சாரமாகியதும், பரம இரகசியார்த்தமானதுமெதுவோ அதைச் சுருக்கமாகக்கூறுவோம் கேட்பாய்: நம்மையுத்தேசித்து உள்ளன்போடுங்கூட நிஷ்காம கன்மங்கள் செய்கிறவர்களும், நம்மையே பரம புருஷார்த்தமாகக் கொள்கின்றவர்களும், ஈஷணாத்திரயங்களைவிட்டு நம்மிடத்தே அநந்யபத்திசெய்பவர்களும்,

யெவரிடமும் விரோதம் பாராட்டாதிருப்பவர்களுமாகிய இத்தகைய விசேஷகரப்பொருந்திய குணசீலர்களான மகாயோகிகளே நமது சொரூபத்தை யறிவார்களென்றறிவாயாக. 55

இதனால் தேவர்முதல் யாவராலுங் காணுதற் கரிதான விசுவ ரூபத்தைப் பார்க்கவேண்டுமாயின் பத்தியோகமின்றி யாதொன்றாலு மாகாதென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கிற்றென்க. சுபம்.

விசுவரூப அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 11-க்கு-சுலோகப் பொழிப்பு-469.

## பன்னிரண்டாவது அத்தியாயம்

# பத்தி யோகம்.

அவதாரிகை:— நிர்க்குண உபாசனை சகுண உபாசனை யென்று இருவித உபாசனைகளில், சரீராபிமானத்தோடுங்கூடிய வொருவன் நிர்க்குண உபாசனை செய்வதைவிட சகுணோபாசனை செய்வதே மிகமேலாயதென்று இந்த அத்தியாயத்தில் கூறி வருகின்றார்.

சுவாமின்! சகுணத்துவம் நிறைந்த விசுவரூபத்தையுடைய வரும், சர்வஞ்ஞத்துவமுதலிய குணங்களோடு கூடியவருமாகிய தேவரீரையடைந்து தேவரீரிடத்திலேயே மனதைப்பதித்து உபாசியாநின்ற பக்தர்களே தேவரீரையடையப் பெறுவார்க ளென்று சென்ற அத்தியாயத்தில் உபதேசித்துவந்தீர்கள். சிலர், அக்ஷரமயமாயும் சூக்ஷுமமாயு மிருக்கின்றன. நிர்க்குணமான பரப்ரம்ம சொரூபத்தை யுபாசனைசெய்வார்களென்று உபதே சித்தீர்கள். இவ்விருவித உபாசகருள்ளே சிரேஷ்டமான உபா சகரின்னாரென்று தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றேன். 1

அருச்சுன! சர்வஞ்ஞாதி குணத்துவம் நிறைந்த தேவ தேவனாகிய நம்பால் யாதொருவன் அன்பால் மனதைப்பதித்து எப்போதுந் தியானபக்தியோடும் நிஷ்காம கன்மங்களையுஞ் செய்துகொண்டு உண்மையான சிரத்தையோடு சகுணமாக நம் மைத் தரிசிப்பானோ அவனே சிரேட்டனாவன். 2

சுவாமின்! நிர்க்குண உபாஸ்தி செய்கின்றவன் எதனால் சிரேட்டனல்லவென்கிறீர்கள்? அருச்சுன! அவ்வாறெண்ணற்க; என்னெனில், அக்ஷரமயமாய் இத்தன்மையதென்று கூறவொண் ணாததாயும், பெயரும் உருவமுமில்லாததாயும், நித்தியமாயும், சர்வ வியாபகத்துவமாயும், தியானத்திற் கெட்டாததாயும், மாயைக்குக் காரணமாயும், மற்றும் யாதொரு விகார சலனமு மற்றதாயும், சைதன்னியமாயும் விளங்குகின்ற நம்சொரூபத்தை, சர்வேந்திரிய நிக்கிரகஞ்செய்தவர்களாய் எவைகளினுஞ் சம புத்தியோடு எவர்க்கும் தீயதைநீக்கி நல்லனசெய்பவர்களா யுபா சிப்பவர்களுஞ் சிரேஷ்டர்களேயாவர். அவர்களும் நம்மையே

யடைவார்கள். இதனால் மேற்கூறிய தன்மையானவஸ்து நாமே யென்று நீயறிவாயாக. 3

பாரத! நிர்க்குணோபாசனையே சிலாக்கியமெனினும் அதனை அநுட்டானுநி உபாசனையால் தியாநித்தற்கு நீ அருகனல்லாததாலும், சகுணோபாசனை செய்தபிறகே நிர்க்குணோபாசனைக்குச் சாதகமாயும் அருகனுயுமாதலை யுத்தேசித்தே ஆண்டு அதனைச்சிலாக்கிய மன்றெனக்கூறியதேயன்றி மற்றன்று. இன்னும், சூக்ஷுமமானதும், பரப்ரம்மமாயும், குணக்குறியற்றதாயுமுள்ள வஸ்துவை யுபாசிப்பது மிகமேன்மையே யெனினும், அதனை யுபாசித்துப் பெறவேண்டியவன் சர்வான்மாக்களிடத்துந் தயவே பாராட்டிச் சிந்தமுதலான கரணங்களைச் சமாதானநிலைமையதாக்கி தேகத்தைத் தானென்றகங்கரியாது விஷயாதிகளையும் பொருளாதிகளையும் தனதெனும் மமதாங்காரங் கொள்ளாது நிவர்த்தித்தும், சுகதுக்கானுபவங்களைச் சமத்துவமாயெண்ணி அநுட்டானத்தில் திடம்பெற்றபிறகே சூக்ஷுமமாயறியத்தக்க பிரம்மசொரூபத்தை யடைதற்கு அத்தியந்த விருப்பமுள்ளவனாய் நிர்க்குணோபாசனை செய்தல்வேண்டும். அவ்வித பக்குவத்தக்கவராகா தனைச் சகுணோபாசகர் (அதாவது தேகாதி பிரபஞ்சாபிமானிகள்) நிர்க்குணோபாசனை செய்யப்புகுவாராயின் அதனால் அநுட்டானகாலத்தில் ...கிலேசமுற்று உபாசனை முறறுப்பெறு... இரண்டுங் கெட்டதாய் முடியும். அதுகொண்டே சகுணோபாசனையே பிரதமமும் சிலாக்கியமுமென்று கூறப்பட்டது. ஆதல்கொண்டே நமது விசுவரூபதரிசனமாகிய சகுணோபாசனையை விசேடமென்றோம். இன்னும் அச்சகுணத்தைப்பார்க்கிலும், சனனமரணத்துக் கேதுவான சங்கற்ப விகற்பத்தையுடைய மனமுதலான ஞானேந்திரியாதிகள் சாந்த நிலைமைக்கு யோக்கியமாமாறு செய்துவரும் சத்கன்மோபாசனையே தகுதியாகுமென்றறிவாயாக. 4, 5

அருச்சுன! மேற்கூறிய நிர்க்குணோபாசனை நம்மடியவர்கட்கு மிக்ககஷ்டத்தை விளைக்குமென்றே சுலபசாத்தியமான கர்மபலத்தியாகத்தின் விசேஷத்தைக் கூறிவருவோம் கேட்க. வேறு தேவோபாசனையின்றி யெவராயினும் எல்லாக்கர்மங்களையும் விதிப்படி நம்பால் அர்ப்பணஞ்செய்து நம்மையே பரமபுருஷார்த்தமாகவெண்ணி வேறு எவ்வித சிந்தையுமின்றி நிர்ச்சிந்

ணையாய்ப் பத்தியோகத்தால் தியானஞ்செய்து வருவார்களாயின் நம்சொரூபத்தையே யடைவார்களென்று நிச்சயமாயுணர்க. 6

சுவாமின்! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய கன்மதியானங்களாலே தேவரீராகிய அந்தசொரூபத்தையெவ்வாறடையலாம்? அருச்சுன! சித்தநிர்மலஞ்செய்து அவ்விடத்தே நம்மை நிறுத்தித் தியானஞ்செய்துவரும் பத்தர்களைச் சனனமரணரூபத சம்சாரசாகரத்தில் கிடந்து தத்தளிப்பதினின்று மீட்டுக் கரையேறக் கைகொடுப்போமென்க. ஆகையால் வ அருச்சுன! நீயும் நம்மிடத்தில் மனதைப்பதித்துச் சதாகாமுடைய விசுவரூபத்தியானத்தையே செய்துகொண்டு வருவாயாயின் நம் அநுக்கிரகத்தால் ஞானேதயமாகி தேகாந்திய காலத்திலே சாயுச்சியமென்கிற நமது சொரூபத்தையே யடையப்பெறுவாய். இதிற் சற்றுஞ் சம்சயம்வேண்டாம். 7, 8

அருச்சுன! மேற்கூறியவாறு மனதைச்சுத்திகரித்து ஸ்திரமாக நம்மிடம் பதிந்த தியானஞ்செய்யச் சக்தியில்லாவிடினும் எவ்விதமாயேனும் நம்மையடையவேண்டுமெனப் புத்தியில் நிச்சயித்து வெளிமுகமாகநமக்குரியதான நிஷ்காமகன்மங்களைச் செய்துகொண்டு மேற்கூறியவாறு யோகாப்பியாசத்தால் நம்மைத்தியானஞ்செய்து வருவாயாயின் மனதின் குற்றங்களெல்லாம் நாளடைவில் தாமேவிடுபட்டு அதன்மேல் ஞானத்துவாரா நம்மையடைவாய். 9

அருச்சுன! இன்னும் இந்த தியான யோகாப்பியாசமுஞ் செய்யச் சக்தியில்லையாயின் எனக்குகந்ததாயிருக்கின்ற யேகாதசியுபவாசமுதலான விரதானுட்டானங்களும் நமது நாமகீர்த்தன பஜனமுதலாகிய சத்கன்மங்களையுஞ் செய்துவருவையேயாயின் அதனாலுந் தாமதயமாக மோக்ஷமேயடைவாய். 10

அருச்சுன! இன்னுங்கேட்பாய்: இவ்வாறு செய்துவருதற்கும் சக்தியில்லையாயின் சர்வத்திற்கும் என்னையே கதியெனநம்பி யெனக்கே சரண்புகுந்து நின்றால் செய்யப்படுகிற எல்லாக் கன்மங்களும் அவைகளின் பயன்களையும் மனோநிக்கிரகத்துடனே யெனக்கே யர்ப்பணஞ்செய்து யெல்லாபாரத்தையும் நம்பொறுப்பாய் செய்வாயாயின் அதனால் நம்மனுக்கிரகம்பெற்றுக் கிருதார்த்தனவாய். 11

அருச்சுன! நம்மை யேகதேசமாக ஞானமின்றி யுபாசிப்பதைவிட பரோக்ஷ ஞானத்தைப்பெறுவது சிலாக்கியமாம். அபரோக்ஷ ஞானத்தைவிட விசுவரூபத்தைத் தியானஞ்செய்வது சிரேஷ்டமாம். அவ்விசுவரூபதியானத்தைவிட சத்கன்மங்கள் செய்து அதன்பலனை அர்ப்பணஞ்செய்து வருவது மிகவுஞ் சிரேஷ்டமாம். அக்கன்மபல அர்ப்பணத்தால் சங்கற்ப விகற்பங்களும் சனனமரண சுகதுக்கங்களெல்லாம் சாந்தமடைந்து நம் சொரூபமாகிய மோக்ஷமெய்துவர். 12

சுவாமின்! தேவரீரிடத்து பக்திசெய்தவரும் மெய்யன்பர்கள் தேகாந்தியகாலத்தில் நிச்சயமாக மோக்ஷமெய்துவதைத் தெரிந்துகொள்ளும்படி அவர்கள் தேகத்தோடிருக்கும்போதே எவ்விதமான விசேஷ குணங்களோடாவது கூடியிருப்பார்களா? அருச்சுன! நீகேட்டதற்கு உத்தரமாக எட்டுச்சுலோகங்களாற் கூறுவோங் கேட்பாய்: உலகத்துள்ள எல்லாப்பூதாத்துமாக்களிடத்தும் துவேஷமின்றியிருப்பன். தப்போன்றாரிடத்துஞ் சமத்துவமாகச் சிநேகஞ்செய்வன். ஏழ்மையானவர்களிடத்துக் காருண்யம் பாராட்டுவன். தன்பெண்டு பிள்ளைகளிடத்தில் அந்யோந்யம் பாராட்டாமலுமிருப்பன். தேகத்தையே தானென்கிற மமகாரமற்றுச் சுகதுக்கம் வந்தபோது சமானமான புத்தியோடும், பூமிதேவியையொத்த பொறுமையுடையவனாயு மிருப்பன். இவனும் நமக்குப் பக்தனேயாவன். 13

இன்னும், சதா சந்தோஷசித்தனாயும், எனக்கன்னியமில்லையென்பதில் திடஸ்தனாயும், ஆத்மஞானம்பெறவேண்டிய நிமித்தம் மனதையும் புத்தியையும் நம்மிடமே அர்ப்பணஞ்செய்தவனாயுமிருப்பன். இவனும் நமக்குப் பிரியனேயாம். 14

அருச்சுன! இன்னும் உலகத்திலுள்ள எந்த சீவனுக்கும் இவனிடம் பயமில்லை. இவனுக்கும் எந்தசீவர்களாலும் பயமில்லை. அன்றியும் நன்மை சம்பவிக்குமாயின் அதனாற் சந்தோஷமும், பிறர்க்குவரும் ஊதியத்திற் பொறாமையற்றும் மற்றுங் குரோத மனமயக்க முதலிய இவையெல்லாம் எவனுக்கில்லையோ அவனும் நமக்குரிய பக்தனேயாவன். 15

அருச்சுன! இன்னுந்தானாக யாதொருவஸ்துவையும் விரும்பாமலும், தானாக ஏற்படும் விஷயங்களில் இச்சையின்றி யிருப்போனும், சோம்பலும் பீடையுமின்றி அகத்தும்புறத்துஞ் சுசி

யுடையவனும், வினையபுத்தியோடு பக்ஷபாத மில்லாதவனும், மனோவிசாரமற்றவனும், நம்மையடைவதற்கான காரியத்தை யன்றி மற்ற முயற்சிகளையெல்லா மொழிந்தவனும் நம்பக்தனே யாவன். 14

அருச்சுன! மற்றுந் தனக்கிச்சையுண்டாகக்கூடிய வேறு யாதாமொரு சிலாக்கியவிஷயங்கள் நேர்படினும் அதிற்சிறிதும் மனப்பற்றின்றியும், வெறுப்பெய்தும் நியவிஷயங்கள் நேருமாயின் அதில் மனோவியாகூலமடையாமலும், தன்னுரிமையும் இச்சையும் வாய்ந்த வாஸ்துவானது கெடுமாயின் அதனாற் கிலேசப்படாமலும், வெள்ளிபர்வதமாகிய கைலாசத்தையும் பொன்மலையாகிய மேருவையும் விரும்பினால் எவ்வாறு கிடைக்கமாட்டாதோ அதுபோல வாராதவொன்றை விரும்பாமலும் சுகதுக்க யேதுவான புண்ணியபாவங்களை யொழித்துப் பத்திசெய்பவனே நம்பக்தனாவான். 17

அருச்சுன! இன்னும் விரோதியாவாரையும் நட்புள்ளாரையும் சமமாகபாராட்டியும், மானாவமானங்களிலே சிறிதும் அபிமானமின்றி இவை தேகத்திற்கேயன்றி நாமாகிய ஆன்மாவுக்கு இல்லையெனக் கண்டுகழித்தும், குளிர்ச்சிவெப்பங்களிடத்தும் சுகதுக்காதிகளிடத்தும் உரிமைவையாது கேவலமித்தையென நிராகரித்து ஈசுரபக்தியில்லாத ஏனைச்சாமானியர்களது கூட்டத்தைச்சாராமலும் சித்தசமாதானஞ் செய்துகொண்டிருப்பவனே நமக்கு மெய்யன்பனாவான். பின்னுங்கேட்பா யருச்சுன! எக்காலத்துந் தான் தனித்திருக்கவேண்டுமென் றிச்சைகொண் டெதிரோக்கமா யிருப்பவனும், தனக்கெனதான் விரும்பாது இயல்பாகவே ஈசுரசங்கற்பமாகத் தன்னனுபவத்துக்கு வருமவைகளில்வெறுப்பின்றி விருப்போடுகொள்பவனும், வாராதவொன்றிலே வருந்தி யெதிர்பாராமலிருப்பவனும், இது நல்லஸ்தானமானதால் நாமிங்கிருக்கலாம் ; இது கெட்டஸ்தானமானதால் நாமிங்கிருக்கலாகாதென்னும் நிச்சயஞ்செய்யாது காலங்கழிப்பவனும், தூஷிப்பாரிடத்தும் பூஷிப்பாரிடத்தும்சமபாவனை பாராட்டி என்றும் நம்மிடத்து மனவாக்குக் காயங்களினாலே இயன்றவாறு பக்திசெய்துவருபவர்களும் நமக்கின்றியமையாத அடியவராவார்கள். 18, 19

அர்ச்சுன! முன்னே "மோக்ஷத்தை யடைபவர்களை எதாங் குணங்குறிகளா லறியலாமோ" வெனக் கேட்டாயல்லவா? அவ்வாறு மோக்ஷசாம்பிராச்சியத்தி லிச்சைகொண்டுள்ளோர், மேற்கூறிய பலவாறான சித்தசமாதானத்தோடிருந்து ஈசுரகைங்கரிய வந்தரரையு மிருந்திருப்பதைக்கொண்டே யறிவாயாக. இன்னும் பக்திசிரத்தையே தனக்கினிய அத்தியந்த காரியமாக்கொண்டு தானடையவேண்டிய பரமபுருஷார்த்தம் யாவும் நாமேயென நம்மையேயடைந்து நம்மாற் கூறப்பட்ட மேற்கூறிய மோக்ஷசாதகமான உத்தம அநுட்டானங்களை யெப்போதும் ஒரேநிலையா யனுட்டித்து வருவார்களாயின் அவ்வாறாய மெய்யன்பர்கள்மீது நமக்குப் பூரணமான விசுவாசமுண்டாகும். அவ்வாறு அவர்களுக்கு நம்மால் கருணையுண்டாகவே அவர்கள் பிரகிருதிபுருஷனையும், க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞனையும் ஞானஞேயத்தையும் பிரித்தறியுமாறு நாம் ஞானோதயஞ்செய்வித்து சிரேட்டமான நம்சொரூபத்தையு மடையும்படிசெய்வோம். ஆகவே நிர்க்குணோபாசனைசெய்வது மிகப்பிரயாசமென்பதை யறிவித்து சுலபசாத்தியமாயதும் மோக்ஷமெய்தற் கேதுவானதுமான சகுணோபாசனையே நன்றென ஸ்ரீகிருஷ்ண பரமாத்மன் அநுக்கிரகித்தவாறு திரிதராட்டிரவரசனுக்குச் சஞ்சயர் கூறினரென்க. சுபம்.

பத்தியோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 12-க்கு-சுலோகப் பொழிப்பு-489.

# பதின்மூன்றாவது அத்தியாயம்

# பிரகிருதி புருஷ யோகம்.

அவதாரிகை:—சென்ற அத்தியாயத்திலே தன்னையடைந்துள்ள மெய்யன்பர்களைச் சம்சார சாகரத்தினின்றும் சிக்கிரமாய்க் கரையேற்றுவோமெனப் பக்தியின் பெருமைகளைப்பற்றிச் சவிஸ்தாரமாகக் கூறிய ஸ்ரீகண்ணன், தாம் கூறிவந்த பக்தி சித்திக்கவேண்டி இவ்வத்தியாயத்திலே தத்துவ ஞானோபதேசஞ் செய்கின்றார்:—ஏ பக்தப்பிரிய! சென்ற பக்தியோக அத்தியாயத்தினிறுதிக்கண் "பிரகிருதி புருஷன் முதலியவைகளைப்பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ளுமாறு ஞானசாதனஞ் செய்வித்து மோக்ஷ சாம்பிராச்சியத்தைப் பாலித்தருள்வோ" மென்று அநுக்கிரகித்தீர்கள். அவ்வாறாய * பிரகிருதி, † புருஷன், ‡ க்ஷேத்திரம், § க்ஷேத்திரக்ஞன், ¶ ஞானம், 0 ஞேயம், ஆகிய இவைகளையெல்லாம் அடியேனறிந்துய்யுமாறு அநுக்கிரகஞ் செய்யவேண்டுகின்றேன். 1

அருச்சுன! பூர்வசெனனத்திலே ஒருவன்செய்த பாவபுண்ணியாதிகளை யனுபவித்தற் கேதுவாகப் பெற்றுள்ள சரீரத்துக்கே க்ஷேத்திரமென்றும், அந்த க்ஷேத்திரத்தைத் தனதாகப் பாவித்து அதிலே வாசஞ்செய்து வருபவனையே க்ஷேத்திரக்ஞனென்றுங் கூறப்படும். இதனால் ஏ அருச்சுன! சர்வான்மாக்களிடத்தும் அந்தர்யாமியாயிருக்கின்ற க்ஷேத்திரக்ஞன் நாமேயன்றி மற்றன்று. இதனை நீ திடமாயறிவாய். இவ்வாறாய க்ஷேத்திரக்ஞன் க்ஷேத்திரமென்னும் இவைகளின் பாகுபாட்டைப்பற்றி ஆய்ந்தறியக்கூடிய விவேகத்துக்கே ஞானமென்று சொல்லத்தகும். அந்த ஞானத்தாலேயே திடமெய்தி யிற்றில் மோக்ஷ பிராப்தமாகும். இவ்வாறாயாராய்ந்தறிந்த ஞானத்தால் மோக்ஷமடைய சாத்தியமாமேயன்றி மற்றெவ்வித ஞானத்தாற்

* பிரகிருதி - மகாமாயை.

† புருஷன் - மெய்யறிவுடைய ஆன்மா.

‡ க்ஷேத்திரம் - சரீரம்.

$ க்ஷேத்திரக்ஞன் - சரீரத்தில் வசிப்பவன்.

¶ ஞானம் - ஆத்மதரிசனத்தைப்பற்றி விசாரித்தறியும் அறிவாம்.

0 ஞேயம் - அறியப்படுவது.

கங்களாலும் கிட்டாது பாசபந்தங்களையே யபிவிர்த்திசெய்து பாழ்படுத்தி விடுமென்றறிக. ஆகையால் மேற்கூறியவாறு நன்கு ஆராய்ந்தறிந்தவரையே ஞானியென்றும் பிரபுவென்றுங் கொள்ளப்படும். எமக்கும் இவ்விதஞானத்தைப் பெற்றிருப்பவர்களே அன்பராகுவரன்றி மற்றையோரன்று. 3

அருச்சுன! மேலேகூறிய க்ஷேத்திரக்ஞனை இன்னவனென்றும் இவ்வித சுபாவத்தோடு கூடியவனென்றும், அந்த க்ஷேத்திர மித்தன்மைத்தென்றும், இன்னின்ன காரியங்களில் பற்றுள்ளதென்றும், இன்னின்ன விகாரத்தன்மையுடையதென்றும், இன்னகாரணத்தாலே தோன்றினதென்றும், இவ்வித பேதவாதனையோடு பொருந்தியுள்ளதென்றும் விவகரித்தறியவேண்டி இதன் விர்த்தாந்தங்களைச் சுருக்கமாகக் கூறுவதை நன்கறிவாயாக. சர்வாதாரமாயுள்ள சதுர்வேதங்களிலே இத்தியாதிவிஷயங்களைக்குறித்துப் பற்பலவேதுக்களால் அநேக ஞான தர்மங்களையுந் தனித்தனியே அவ்வோரிடங்களிலும் விரித்துஞ் சுருக்கமாகவுங் கூறப்பட்டுள்ளன. பிறகு வசிட்டாதி ரிஷிபுங்கவர்கள் அவைகளைக் கரிசறவோதியுணர்ந்த திடத்தினால் நம்மனோர் அறிந்து கடைத்தேறுமாறு உபநிடதங்களாகவுங் கூறியுள்ளார்கள். ஆகையால் நான் நமபக்தகோடிகள் எளிதிலுணர்ந்துய்யுமாறு நின்மூலமாக வெளியிட்டருள முன்வந்திருப்பதால் நீயும் அவ்வேதாந்த பிரம்ம சூத்திரார்த்தங்களையெல்லாம் சாங்கோபாங்கமாயறிந்து நிச்சய புத்திகொண்டு பத்திசெய்ய வேண்டுமென்றே கூறுவதைச் சிரத்தையோடும் சாவதானமாகக் கேட்பாய். 4, 5

அருச்சுன! இந்த மானிட சரீரம் 96-தத்துவங்களோடுங் கூடினதாகக் கூறப்படுமன்றே? அவைகளுள் முக்கியமான 24-ஆன்மதத்துவங்களைப்பற்றிப் பிரதமமாகக்கூறுவோங் கேட்பாய்: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஸ்தூலபூதங்கள் 5 - வகைப்படும். இதில் மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐந்தையும் ஞானேந்திரியமாகச் சொல்லப்படும். இவ்வைந்தின் விஷயமாக சப்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னுந் தன்மாத்திரைகள் ஐவகைப்படும். வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் ஐந்துங் கன்மேந்திரியங்களென்னப்படும். மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் சூக்ஷ்ம

அந்தக்கரணங்கள் நான்காம். ஆக இருபத்துநான்கு தத்துவங்களுக்கும் ஆன்மதத்துவங்களென்று சொல்லப்பெறும் மற்றும் மனோவிருத்திகளாகிய இச்சை, துவேஷம், சுகம், துக்கம், விஷய ஞானம், தைரியமுதலாக நான்பிறந்தேன், நான்வளர்ந்தேன், நான்சாகிறேன் என்னுமிவைமுதலான விகாரங்களோடுங் கூடியதாயும், சுகதுக்கமென்கிற போகங்களை யனுபவிக்கிறதற் கேதுவானஸ்தானமாயும், சடமாயும், அநித்தியமாயுமுள்ள சரீரமெனப்படும். இந்தச் சரீரத்தையே முன்னேநாம் க்ஷேத்திரமென்றது. ஆகையால் இந்தச் சரீரதர்மங்களின்னதென்றும் அச்செயல்களை யபிமானித்து நடப்பவன் இன்னவனெனவும் அறியு மாற்றலுடையவரையே க்ஷேத்திரக்ஞனென்று கூறப்பட்டது. 6, 7

அருச்சுன! இதன்மேல் ஞானஞேயங்களைப்பற்றி விவரிப்போம். ஞான ஞேயங்களென்னு மிரண்டனுள் ஞானமென்பதியாதெனில், க்ஷேத்திரகாரிய மின்னதெனவும் அந்தக்ஷேத்திரக்ஞனுடைய காரியமின்னதென்றும் வெவ்வேறாகவறிகிற விவேகத்துக்கே ஞானமென்று சொல்லப்படும். இந்த ஞானத்தை ஒருவன் பெறவேண்டுமானால் இப்போது நீயெப்படி விசாரிக்கிறாயோ அவ்வாறே சாஸ்திரங்களைக் குருமுகமாக விசாரஞ்செய்வதாலுண்டாகும் அறிவாகிய குணவிசேஷமாம். இவ்வித சத்சாஸ்திர விசாரத்தாலேயே நம் பூர்வ பக்தகோடிகளெல்லாம் சம்பூர்ண ஞானத்தைப்பெற்று யென்றுமழியாத மோக்ஷத்தையும் நம்மையுமடைந்துள்ளார். ஆகையால் ஏ அருச்சுன! அந்த ஆன்மதத்துவ ஞானசாஸ்திர விசாரத்தைக்கொண்டு நாளடைவில் சாதனைசெய்து வருவையேயாயின் அந்த ஞானவாயிலாக ஞேய மின்னதெனத்தெரிந்து பிறகு நஞ்சொரூபத்திலே சாயுச்சியமாகலாம். இனிக் கூறிவருகிற சாதனவிவரங்களையுங் கேட்பாய்: முதன்மையாக உலகத்தாரால் தன்னை பெருமான சம்மானதிகளைசெய்து கொண்டாட வேண்டுமென்று சிறிதும் நினையாத சித்தமாகச் சுத்திகரிந்த மனசுக்கே அமானித்துவமென்று சொல்வதுண்டு. தவிர, மேற்கூறிய பூஷித விசேஷங்கள் இயல்பாகவே யாரானுங் கிடைக்குமாயினும் அதனால் சந்தோஷாபிமான முதலான யாதொரு பற்றுமின்றி யிருப்பதோடு பிறஜீவ இம்சைக்குக் காரணமாகாமலும் பெருமைப்பாடில்லாமலு மிருத்தல்வேண்டும். இன்னும் "வஞ்சவார்த்தையாடின் அதனை நமக்

குள்ளுறையும் நின்மலனார்கண்டு ஞானமார்க்கத்திற்செல்லவொட்டாது தடுத்து கிஞ்சிக்ஞனென்று புறக்கணித்துவிடுவார்" எனக் கருதி மெய்யுரையே பயில்லவேண்டும். மற்றும் ஞானாசிரியருக்குகந்த பணிகளையோ அவைகளைச் சிறிதுந் தாழ்க்காது செய்தலும், சரீரவஸ்திராதிகள் சுத்தமாயிருப்பதுபோல அகத்திலும் அந்தக்கரணஞ் சுத்தமா யிருத்தல்வேண்டும். மேற்கூறிய புறச்சுத்தியினும் அகச்சுத்தியே மிகமேலாயதாம். எக்காரணங்களாலும் எவராலும் வெகுண்டவார்த்தையின்றி யின்சொல்லே வசனித்து பொறுமையிற் பூமிதேவியை நிகர்த்து விளங்கவேண்டும். ஆசாரியர் உபதேசித்தவாக்கியங்களின் அர்த்தங்களை மிகச்சிரத்தையோடுங் கேட்டுவருதல்வேண்டும். அநித்திய மாயா சரீரத்தை நானென்னும் பிரமையற் றிருத்தல் வேண்டும். 8

அருச்சுன! பின்னும் எந்த விஷயானுபவங்களேற்படினும் அவைகளிற் சிறிதும் ஆசை வையாது நிராசையாகவே அநுபவித்தல் வேண்டும். மற்றும் விஷய நிராசையை "நாமன்றோ பெற்றிருக்கின்றோம்" மென்று தனக்குள்ளேயும் அகங்காரமி யில்லாதிருத்தல் வேண்டும். சனனம் மரணம் வயோதிகம் வியாதி யிவைகளாலேற்படும் துக்கதோஷங்களை விசாரித்து நிதானத்தில் வைத்தல் வேண்டும். இதன்றி யெல்லாப்பிராணிகளிடத்தும் தயவான நடவடிக்கையுடையவனாயிருத்தல்வேண்டும். புத்திரமித்திர களத்திர கிரக முதலானவைகளில் வாஞ்சையற்றும், நன்மை தீமைகள் ஏற்படும்போதெல்லாம் அவைகளிலே சிறிதேனும் விருப்புவெறுப்பின்றிச் சமபாவனையாயிருத்தலுமவசியமேயாம். அதன்றியும் பிறதெய்வ வழிபாட்டினைக் கனவிலும் நினையாது நம்மையே தேவ தேவனாகவெண்ணி நம்மையன்றி வேறொன்று மில்லையென்னும் நிச்சயங்கொண்டு பக்திசெய்து ஏகாந்தமா யுபாசித்து வருதலோடு பொதுஜனங்களிடத்துப் பிரியத்துவமும் அவர்கள் கூட்டத்தில் நாட்டமன்றியு மிருத்தல் வேண்டும். 9, 10, 11

அருச்சுன! இதுகாறுங் கூறிவந்த ஞான சாதனங்களுக்கு விரோதமானதும் அஞ்ஞான வொழுக்கமாயதுமான அபிமானம் இடம்பம் என்னும் இவைகளைக் கட்டோடேவிட்டு ஆத்மதரிசன விசாரத்திலேயே அழுந்தியவனாய்த் தத்துவ விசாரத்திலும்

ஞானேந்தியமாகப்பெற்று மோக்ஷமடைதற்குச் சாதனங்களை வையோ அவைகளையெல்லாம் சிறிதும் வழுவாது சாதித்து வருதல்வேண்டும். இம்மட்டும் ஞானத்தால் ஞேயத்தையறிதற்குச் சாதகமேயாம். மகா முனிபுங்கவர்களான இருடியர்களும் இவ்வாறே கூறியுள்ளார்கள். 12

அருச்சுன! நாம் நினக்குபதேசித்துவந்த நானாவித சாதனங்களைத்தெரிந்து இன்னும் தெளிவுற வேண்டுவனவுங் கூறுவோம்: இத்தியாதி சாதனையினுலே முக்கியமாய்ப் பெறுவது ஞானமேயாம். இந்த ஞானத்தாற் சீவத்துவம் நீங்கப்பெற்றுப் பதித்துவமென்கிற ஆத்மதரிசனஞ் சித்தியாகும். அவ்வாறு சித்திபெற்ற தத்துவசொரூபமே பரமாத்மாவாகும். அப்பரமாத்ம சொரூபத்தையே ஆதியுமந்தமு மில்லாத அரும்பெருஞ் சோதி சொருபமென்றுங் கூறுவர் மேலோர். அந்த வஸ்துவையே சத்தசத்தென்றும் ஞானுஞ் ஞானமென்றுஞ் சொல்லவொண்ணு பெரிய பொருளாயுங் கூறப்படும். மற்றுங் குரு சிஷிய சமுகத்தில் பரப்ரம்ம சொருபமென்றும், அநுபவசாக்ஷியென்றும், மனவாக்குக்கெட்டாத அகோசரமென்றும், அநாதி நித்தியமென்றும், அகண்டாகார சொருபமென்றும், பரிபூரண வஸ்துவென்றும், ஒப்புவமையற்ற வொருவனென்றும் இன்னும் அவ்வத் தேச பாஷைகளாற் பற்பலவாறு அப்பரமார்த்த வஸ்துவையேவழங்கிவருவர்கள். இத்தகைய உத்தமோத்தம முத்தி முதலை முற்கூறிய ஞான யேதுவாலன்றி வேறெவ்வித மார்க்கத்தாலுங் காணக்கிடைப்ப தரிதாகும். ஞேயமென்று கூறுவது மிதனையேயென்க. 13

அருச்சுன! இன்னும் அப்பரமாத்மாவானது எவ்வெவ்விடங்களிலுமுள்ள எல்லாவித ஆன்ம சரீராவயங்களிலும் பொருந்தியிருப்பதோடு யுக்திவாதத்தால் "பொன்னன்றி ஆபரணங்க ளொப்படியில்லையோ அதேபோல" அவ்வாத்மாவையன்றி யெப்பிராணியு மில்லையென்று யேற்பட்டது. இதனாலேயே எங்கும் நிறைந்த பரிபூரணமென்றுஞ் சொல்லப்பட்டது. மற்றும் எல்லாத் தேகங்களிலும் பொருந்தியுள்ள இந்திரியங்கள்முதலான சத்துவ ராசத தமோகுணங்களையும் விளங்கும்படி செய்விப்பதாயும், சர்வாதாரமாய் வகித்துள்ளதாயு மமைந்தும், அனைகட்கன்னியமாயும் யாதொன்றினும்பற்றுமறும், வேறொன்றினுங் கட்டுப்படாதும், ஆகாயவெளியைப்போன்று யாதொரு

தொடர்புமின்றி விளங்குவதாகவுங் காணப்படுவதால் இதனை ஞேயமென் றழைக்கப்பெற்றது. 14, 15

சுவாமின்! என்றுமுள்ளதாயும் எங்கும் நிறைந்ததாயுமுள்ள இந்த ஆன்மதத்துவ சொரூபத்தை யாவரும் பார்க்கமுடியாத தென்னே? அருச்சுன! இந்த பரமான்மா அதிசூக்ஷ்ம சொரூபமாக எல்லாப்பிராணிகளின் அகப்புற மிரண்டிடத்தும் வியாபித்துச் சர்வசராசரமயமாய்த் தானேதானாகியிருப்பதால் அஞ்ஞானசொரூபர்களான சீவர்களாலே ஒருபோதுங் காணப்படாததாகும். இன்னும் ஓர்பாத்திரத்திலுள்ளபாலை ஓர்பால்யனுக்குக் காண்பித்து இந்தப் பாலில் வெண்ணெ யிருக்கிறதா பார்த்துக் கூறுவாய் என்று கேட்கில் அவன் அதைப்பார்த்து அதில் வெண்ணெயில்லையென்றே கூறுவனன்றே? மற்றும் அப்பாலையே வேறோர் விவேகியினிடங் காண்பித்துக் கேட்கின் பாலைப் பார்க்காமலே வெண்ணெயிருப்பதாகத் திடமாய்க்கூறுவன். இவ்விருவர்களில் விவேகியைப்போன்று அநுபவவிவேகம் பால்யனுக்கு விளக்கமின்மையால் பாலின் வெண்ணெயைத் தெரிந்துகொள்ள வியலாததுபோல அஞ்ஞானவசத்தர்களானோர்க்கு அந்த ஆன்ம சொரூபம் இலேசாகக் காண வியலாவாம். முற்கூறிய ஞான சாதனங்களைச் சாதித்தவர்களோ வெகு சுலப நிச்சயத்தா லறிவார்களென்பது திண்ணம். 16

இன்னும் அப்பரமாத்மா சர்வபிரபஞ்சாதியபொருள்களெல்லாம் காரண காரியமென்னும் இருவித பாகுபாடுள்ளதாகலான் அந்தந்த சரீரகரணத்திற் கபின்னமாய் விளங்கியும், காரியமான சரீராதிய பொருள்களின் பின்னமாயுங் காணப்படும். நிற்க; மற்றுஞ் சீவர்களை காத்தற்றொழில் புரியுங்கால் யாவையுங் காப்பதாகக் காணப்பட்டு பிரளயகாலத்தி லழிப்பதாகிப் படைத்தல் செய்யும்போது காரியமேயாகவுங் காணப்படுமென்க. 17

மீண்டும் அவ்வஸ்து ஞானவான்களுக்கு ஞானமயமாகி யறியப்படுபொருளாயுங் காணப்படும். அஞ்ஞானியர்கட்கோ இருளிடைப்பட்ட பொருளைப்போல அறியப்படாநிற்கும். ஆதித்த சந்திராதியர்கட்குப் பிரகாசத்தைக் கொடுத்துத் தானும் அப்பிரகாசமயமாயுங் காணப்படும். மற்றும் மாயைக்குப் பரமாயும், சாதனைகளாளடைந்த ஞானுநுபவத்தால் அடையப்படுகிறதாயும் ஞானஞேயங்களாயுமிருந்து சரீராதிய பிரபஞ்சமுதலாகிய எல்

லாந்தானேயாகி அப்பிரபஞ்சாதிய சீவர்களின் புத்திக்குச்சாக்ஷி பூதமாயுமிருக்கு மியல்புடைத்தாம். இவ்வாறாய பரம்பொருளேயே ஞேயமென்றும் பிரம்மமென்றுங் கூறுநிற்பர். 18

அருச்சுன! வசிட்டராதிய தவசிகாமணிகள்பால் கேட்டறிந்தவாறு சுருக்கியும் விளக்கியும் வந்தயிந்த ஆன்மதத்துவம் 24-லோடுங்கூடி க்ஷேத்திரத்தையும் அதற்கிலக்கணமாகிய க்ஷேத்திரக்ஞனையும் இன்னதென்றும், அவைகளை முறையே விவரமாயறிந்தொழுக ஞானமும், அந்நஞானஞ் சித்திப்பதற்கான சாதனமென்கிற அமானித்துவாதி குணங்களையுங்கூறினோம். அதோடு நில்லாது இக்குணாதி அநுபவ விசேஷஞாதிகளா லறியக்கூடிய ஞேயத்தையுங் கூறினோம். இவைகளெல்லாவற்றையும் நம்மிடம் உள்ளன்போடு பக்திசெய்துவரும் மெய்யன்பர்களறிந்து மோக்ஷமெய்தப் பெறுவரென்க. 19

சுவாமின்! இவ்வாறாக விருக்கும்போது துக்க ஏதுவான சனனமரண சம்சாரத்திற்கிடந்து ஏன்வீணே அலக்கழிகின்றார்கள்? அருச்சுன! இதுகாறும் நினக்குத்தோன்றிய சந்தேக விபரீதங்களான சங்கைகளில் நான்குவிஷயங்களுக்கும் உத்தரங் கூறினோம். மற்ற இரண்டுவிஷயங்கட்கும் விவரணங் கேட்பாயேல் மேற்சந்தேகந் தெளிவுற விளங்கக்கிடக்கும். அஃதாவது பிரகிருதியும்புருஷனும் அநாதிநித்தியர்களேயன்றி கேவலம் அநித்தியர்களல்ல; இவையிரண்டில் பிரகிருதியின் குணங்களான சத்துவ ரஜஸ் தமசென்னு மூன்றினாலே தேகேந்திரியாதியவெல்லாம் தோன்றியதேயன்றி புருஷனால் யாதொரு காரிய காரணமுமில்லையென்றும், சர்வசாக்ஷியாயுள்ளவனென்றும், விகாராதியாதொன்று மவனுக்கில்லையென்றும் அறிதல்வேண்டும். இப்புருடனென்பவனையே ஆன்மாவென்றறிக. 20

அருச்சுன! இவ்வாறாக தேவாதிதத்துவங்கட்கும் ஆன்மாவுக்கும் யாதொருசம்பந்தமு மில்லாதபோது பிரபஞ்சதோற்றத்திற் கேதுவான மூலப்பிரகிருதியின் விசேடணத்தாற் சத்துவாதியகுணங்களிற் கர்த்தத்துவ போக்தத்துவமுதலிய சரீராதிய விகாரங்களை விகாரயீனமானபுருடன் தன்னதெனப்பிரமைகொண்டு அநுபவித்து வருதலால் சனனமரணதுக்கத்துக்கு ஏதுவான சீவபாவனையைப்பெற்றானென்றறிக. 21

சுவாமின்! சரீராதிகரணங்களின் சாக்ஷியாயும், யாதொரு விகாராதிகளுமில்லாதவனாயுமுள்ள ஆன்மபுருடன் முக்குணவயப்பட்டு ஜீவபாவனையடைவதெங்ஙனம்? அருச்சுன! புருடனானவன் மூலமாயாசகிதம் முக்குணவயப்பட்டுச் சுகதுக்காதியவைகளிலே அபிமானங்கொண்டு இராகத்துவேஷாதியவைகளைப் பெற்று அதனையே நிலவரமானதெனக்கருதி யனுபவிப்பதால் அவ்வான்மா ஜீவத்துவமுற்றுத் தேவமானிடாம்சங்களுக்கேதுவாய்ப் பந்தநொந்தமடைகின்றான். இவ்வாறறியவேண்டிய விசாரஞானத்தை யுணரும் வரையில் அந்த ஆன்மாவுக்குத் தேகானுபவத்தினுண்டான பிரமையொழியாயாம். இன்னும் ஆன்மா யிவ்வண்ணமென்றும், இன்னதென்றுந் தெரிந்துகொள்ளும் விவேகம் விளக்கமானபோதே புருஷன் தனித்தவனேயன்றிச் சரீரசம்பந்த விகாரமற்றவனென்று நன்குபுலப்படுமென்க.

அருச்சுன! பின்னும் இப்புருடன் முக்குணசகிதமாயுள்ள மூலமாயாகாரியமாயிருக்கிற சரீரசம்பந்தப்பட்டுத் தேகியாயிருப்பினும் அவைகளோடு சிறிதும் சம்பந்தமற்று சாக்ஷிமாத்திரமாய் நின்று பிரகிருதிகுணங்களையும் இந்திரியாதிகளையும் தூண்டிக் கொண்டு கர்த்தவ்வியத்தை யடைந்து சமயம் நேர்ந்துழி பரிணமித்துச் சரீராதி யிந்திரியங்களனைத்தும் அசத்துவமடைந்த அக்கணமே தான் மகேசுரனாகவும் ஆன்மதத்துவம் 24-க்கும் தலைமையெய்தியபோது பரப்பிரம்மமென்றுங்கூறுதல் மரபாம். 23

அருச்சுன! இத்தகைய பரமபுருஷனெனப்படும் ஆன்மாவே பரமசிரேட்டமானவனென்றும், பரமாத்மாவென்றுந் தெரிந்து கொள்ளும்போதே பிரகிருதியாதிய குணங்களனைத்தும் பிரமமேயென்று நிச்சயமாகத் தெரியக்கிடக்குமேயன்றிச் சாதாரணமாகச் சரீரசம்பந்தப்பிராந்தி நீங்கவேமாட்டாதென்க. இதனால் மாயாசம்பந்த முக்குணமும் சார்ந்துள்ள சரீராவச்சின்னங்களும், அதற்கிலக்கணமாகிய ஆன்மாவையும் பிரித்துணரக்கூடிய பரமபுருடனெவனோ அந்தபரமஞானியே அநுபவகாலத்திற்றன்விதிவிலக்கின்றி நடந்தானேனும் அதனால் சிறிதும் பாவபுண்ணியங்களையும் அவைகளுக்கேதுவான சரீரசனனமரணங்களையும் பெறாது கைவல்யசித்தியேயடைவனென்க. 24

சுவாமின்! தேவரீர் கூறியவாறு சரீரத்தையும் ஆன்மாவையும் பிரித்தறிவதைக் காட்டிலும் சாதாரணமாயறிதற்கேதும்

வழியுண்டாயின் கூறுக. அருச்சுன! சிலர் சீவாத்மாவைப் பரமாத்மாவோடு ஐக்கியஞ்செய்யும் யோகத்தினாலேயறிவர். சிலர் நிஷ்காம கன்ம யோகானுபவங்களாலுமறிவார்கள். மற்றுஞ் சிலர் தன் அந்தரங்க பூர்வமான தியானயோகத்தால் தன் சரீரத்தினுள்ளேயே யறிவர்கள். வேறுசிலர் மாயையையும் ஆன்மாவையும் பிரித்தறியும் தத்துவவிசாரணையினாலேயு மறிவார்கள். ஆகவே இன்னோர் யாவரும் நமது சொரூபத்தையடைவது நிச்சயமேயாம். 25

சுவாமின்! பற்பலர் பற்பலவாறாய யோகசித்திகளாலேயறியும் சூக்ஷுமமார்க்கப் பயிற்சியற்றவர்களுக்கு மோக்ஷாபேக்ஷை மட்டுமிருக்குமாயின் அவர்கட்குத்தக்க இதரயேதுக்களுளவாயின் தயைசெய்தருள்க. அருச்சுன! யாம்பூர்வமுபதேசித்து வந்த தியானம் யோகம் முதலியவைகளாலடையச் சக்தியற்ற தாமதகுணத்தினர், சற்குருவையடைந்து அவர்களுக்கான பணிகளியற்றி வேதாந்த சிரவணஞ்செய்து அம்முறைகொண்டு பத்தி சிரத்தையோடு அநுதினமுமனுட்டித்து வருவார்களாயின், அந்த உத்தமாசிரியன் கிருபாவிசேடத்தாலும் சிரவணாதிட்டத்தாலும் நாளுக்குநாள் பத்திஞான சம்பன்னராகி யிறுதியில் மோக்ஷமெய்துவார்கள். 26

அருச்சுன! மூலமாயாந்தரங்க முக்குணங்களுடன் சம்பந்தித்துள்ள சரீர இலக்ஷணத்தைக் கூறியபோது விலக்ஷணமயமான தேகியென்கிற பரமாத்மபுருடனது இயல்பையும் [illegible] தறியாதவரையில் இவ்விரண்டும் ஒன்றுபட்ட நிலைமையால் சராசரபூதங்களின் தோற்றமும் அவைகள் மீண்டும் அழிவதுபோலவுந் தோற்றப்படும். ஆகையால் துக்கமயமாகிய சம்சாரசாகரத்தைக்கடத்தற் கேதுவான ஆன்ம ஞானோபதேசஞ் செய்வதைக் கவனமாய்க் கேட்டுணர்க. 27

அருச்சுன! சர்வசாமானியமாய்க் காணப்படும் சராசரபூதப்பரிணாமங்களெல்லாவற்றையும் பரமாத்மசொரூபியாகிய பகவானே வியாபித்துள்ளானன்றித் தானே தோன்றும் தற்பவம் அவைகட்கில்லையென்க. ஆனால் அப்பூதபரிணாமங்களனைத்தும் நசிக்கும்போது அவர் நசியாரென்றும், அந்தவஸ்துவைத்தானாக ஐயந்திரிபற அறிந்தவர்களே நன்காராய்ந்த உத்தமஞானிகளென்று கொள்ளப்படும். 28

அருச்சுன! மேலே விவகரித்தபடி எல்லாப்பூத பரிணாமங்களிடத்தும் விளங்குமாத்மாவே நாமெனவறிந்து தன்னையாவது மற்றெந்தப் பிராணிகளையாவது வதைசெய்து அவைகள் துன்புறச்சகியாத தயாகுணக்ஞன் தனது திடச்சித்தத்தினாலே "எக்காலத்துந் தனிமையாகவேயுள்ளோம், மற்றுமிச் சரீராவச்சின்னங்களோடு ஒப்புறவறியோம்" என்று தத்தமனவாக்குக் காயங்களினாலே இயன்றவாறு சுயகன்மதன்மங்களைக் காமியமின்றிச் செய்துவருவானாயின் தவறாது மோக்ஷத்திலாக்ஷிசெய்வனென்க.

சுவாமின்! சர்வபூதாத்மாக்களும் தத்தம் மனோபீஷ்டப்பிரகாரம் கன்மங்களைப் பற்பலவாறாகச் செய்துவருவதினாலே ஈசுவரன் எங்கும் சமநிலையாய் நிற்பதெங்ஙனம்? அருச்சுன! மாயையின் சேடிப்பால் குணத்திரயங்களைக்கொண்டு சரீராதி கரணங்களாலேயே கன்மங்களெல்லாம் செய்யப்படுகிறதேயன்றி ஆன்மா யாதொரு கன்மத்தையுஞ் செய்யவாவது அல்லது செய்யும்படி ஏவுதற் கர்த்தாவாகவாவது முன்வாராது அவ்வான்மாவன்றிச் சடமான கரணங்களெவ்வாறு செய்யுமெனின், பிரகிருதி சம்பந்த சத்துவாதிகுண முதலாகிய தேகேந்திரியங்களையபிமானித்ததாலேயே அவ்வான்மாவுக்குக் கர்த்தத்துவமும் அநுபவத்துவமும் எற்பட்டதேதவிர உள்ளபடியன்றென்று அறிதலே தத்துவ ஆராய்ச்சிசெய்யும் முற்றிய ஞானிகட்கு இலக்ஷணமாதலின் அவ்வாறு ஆராய்ந்தறிதல் வேண்டும். அவ்வாறு அறிந்துள்ள திடமானவனையே ஞானியென்றுபசரிக்கலாம். 30

சுவாமின்! இவ்வான்மா தற்சுதந்தரமாக சரீராதிய அந்தக்கரணங்களை அபிமானங்கொண்டு விஷயங்களிற் புகும்போது சமமாயேயிருப்பதாகக் கூறுவதெப்படி? அருச்சுன! மாயையின் காரியமாயுள்ள சரீராதி இந்திரியங்களால் நடைபெறும் கன்மங்களுக்கும், எங்கும் நிறைந்தும் ஏகவஸ்துவாயுமுள்ள ஆத்மசொரூபத்திற்கும் லேசத்தேனுஞ் சம்பந்தமேயில்லை. ஓரறிவுயிர்முதல் பற்பலபேதங்களாகக் காணப்படும் பிரபஞ்சங்களியாவும நம்பிரகிருதியினிடத்தே பிரளயகாலத்திலேயொடுங்கிநின்று பண்டுந் தோன்றும்போது அம்மாயையினிடமிருந்தே தோன்றப்படும். ஆகவே அம்மாயைக்கு அதிட்டான கர்த்தனாகிய பரமாத்மன் சமத்துவமாயும் சாக்ஷிபூதமாயு மிருக்கின்றதேயன்றி இந்திரியசம்பந்த மாயகன்மங்கட் குடன்படுவதே யில்லையென்க.

இவ்வாறுள்ளன உள்ளபடியறிந்து தேகாதி கன்மங்கள் தேகிக்கில்லையெனக் காணும் திடமே ஞானதிடமென்க. 31

சுவாமின்! சர்வசீவகோடிகளின் அகப்புறமிரண்டிடத்தும் வியாபித்துச் சமநிலையாயும் பரிபூரணமாயும் நிறைந்துள்ள பரமான்மா தேகசம்பந்தப்பட்டு கன்மங்களோடுமட்டும் சம்பந்தியாதென்னோ? அருச்சுன! எந்த சீவபூதத்துக்கு ஆதியேற்பட்டதோ அதற்கு அந்தமுண்டென்பதிற் சந்தேகமில்லை. சதுர்முகனுரால் சகந் தேகசந் தோன்றிற்றென்றாவது அல்லது மூலப்பிரகிருதியென்கிற மாயையினிடமாகத் தோன்றியதென்றாவது சொல்லப்படுகிறபோது, தோன்றிய தழியுமென்னும் யுத்தியால் எல்லாம் அழியப்படுவது நிச்சயமேயாம்; அங்ஙனம் அழியுந்தரத்தினராகுஞ் சீவர்களால்செய்யப்படுகிற பலவேறுவகையான கன்மங்கள் எங்ஙனம் அழியாநிற்கும்? ஆகவே பிராணிகளும் அப்பிராணிகளாற் செய்யப்படுகிற கன்மங்கள்யாவும் அநித்தியமென்பது நிச்சயமாயிற்று. இனி அநித்தியமான கன்மத்திலே நித்தியமாகியவத்துவுக்குச் சம்பந்தமின்றி தனித்துள்ளதென்று மேற்பட்டது. இங்ஙனம் ஒன்றினும்பற்றின்றித் தனித்த நித்தியவத்துவுக்கு அநித்திய சரீரத்தில் கன்ம பலன்களை யேற்றல் ஒவ்வாதே! ஓர்சமயந் தேகமழியினும் கன்மமழியாது ஆத்மாவோடு மீண்டுந் தோன்றுவதற் காதாரமாயிருக்காதோ வென்னின், அதுவுங்கூடாது. எவ்வாறெனில், கற்கண்டழிந்தபோது அதன்குணமாகிய மதுரம் எவ்வாறழியாநிற்கும்! நில்லாது; அதுபோலவே நித்தியமாயும் நிரஞ்சனமாயும் நிர்விகாரயாயுமுள்ள பரமான்மா சரீரத்தோ டொன்றுபட்டிருப்பினும் சரீரபலன்கள் எவையும் அவ்வான்மாவைப் பற்றுதொழியுமென்பது சத்தியமேயென்றுணர்க. 32

அருச்சுன! இன்னும் ஆகாயமானது சர்வாண்ட புவனங்களினது அகம்புறம் என்னும் இரண்டிடத்தும் வியாபித்திருப்பினும் எந்தப்பொருளிடத்தும் எவ்வாறு ஒட்டாமலிருக்குமோ அதுபோலவே பரமான்மாவும் எந்தச் சீவனிடத்தும் வியாபித்திருப்பினும் அவ்வச்சரீரகன்மங்களைச் சிறிதும் அவாவி நில்லாதென்க. 33

அருச்சுன! இதுகாறும் ஆன்மாவுக்குத் தேகானுபவத்தில் பற்றில்லையென்பதற்கு ஆகாயதிருட்டாந்தங் கூறினதுமன்றி

ஆதித்த திருஷ்டாந்தமுங் கூறக் கேட்பாய்: தேகாதி திருசிய
பிரபஞ்சங்களியாவும் விளங்கிக்கொண்டிருக்கின்றதாலே அவருக்
குப் பற்றுதலில்லையென்பதற்கு சாக்ஷியாக சூரியன் ஆகாயத்தி
நின்றும் எங்கும் பிரகாசித்து உலகங்களையெல்லாம் விளங்கும்
படிச்செய்யினும் தான் அந்தவுலகத்திலே பற்றில்லாமல் சுற்றி
வருகிறதுபோல பரமான்மாவானது எல்லாதேகேந்திரியாதிகளை
யும் பொருந்தி பிரகாசிக்கும்படிச்செய்யினும் அவைகளிலே அவ்
வான்மா சிறிதும் பற்றுதலுடையதன்று. 34

அருச்சுன! முன்னதாக க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன், பிர
கிருதி, புருடன் ஆக நான்கையும்பற்றிக்கூறி அதன்பின் ஞான
ஞேயங்களின்னதெனவுஞ் சுருதியுக்தி யனுபவங்களால் விவரித்
தோம். இவைகளில் சரீராதிய கரணங்களின் தர்மமான கன்ம
விகாரங்கள் யாவும் மாயாசம்பந்த சத்துவாதிய குணத்திரயங்
களால் செய்யப்படுகிறதேயன்றி க்ஷேத்திரக்ஞனை ஆன்மாவி
னால் யாதொருகருமமுஞ் செய்யத்தக்கதல்லவென்றும், அவ்
வான்மா ஒன்றினும் ஒன்றாத சாக்ஷிபூதமென்றும் கூறினோம்.
இவ்வாறாகக் காரணகாரிய விவரணங்களாலும் சுருதியாதி யனு
பவங்களாலும் பிரித்தறியும் பேரறிவாளனே சர்வகாரணமாகிய
பிரகிருதியினின்றும் நீங்கிப் பரிசுத்தனாய் மோக்ஷமெய்துவனென்
பது நிச்சயம். 35

பிரகிருதி புருஷயோக அத்தியாய
முற்றிற்று.

ஆக அத்தியாயம் 13-க்கு-சுலோகப் பொழிப்பு-524.

# குணத்திரயயோகம்.

அவதாரிகை:— சென்ற அத்தியாயத்தில் க்ஷேத்திரஞனை பரமான்மா க்ஷேத்திரமான சரீரத்ரயவற்றின் விஷயாநுபவங்களாகிற சுகதுக்காதியவைகளில் பாத்தியமின்றி யாவும் மாயாவிசிஷ்ட சத்துவாதி குணத்திரயங்களாலாக்கப்படுகிறதென்று கூறிவந்தநிமித்தம் மீண்டும் அக்குணத்திரயங்களையும் அதன் இலக்ஷணங்களையும் விரிவாய் இந்த அத்தியாயத்திற் கூறிவருகிறார்.

சுவாமின்! சென்ற பிரகிருதி புருஷயோக அத்தியாயத்தில் க்ஷேத்திரஞனென்னும் பரமாத்மன் நிர்விகாரியானவனென்றும், மாயாசம்பந்தமாயுள்ள முக்குணங்களாலேயே எல்லாக்கன்மங்களும் அக்கன்ம சுகதுக்கங்களும் சரீரத்திற்கேயென்றும், அந்தச் சரீரகுணத்திரயங்களால் நடக்கின்ற விஷயங்களெல்லாம் ஆன்மாவானது பிரம்மையால் அந்யோந்யபாவத்தால் ஒப்புக்கொண்டு பிறப்பதுபோலும் இறப்பதுபோலும் சஞ்சலமடைகின்றதென்றும் உபதேசித்ததுண்மையென்றே யென்னறிவுக்கெட்டியது. ஆயினும் அநேகசெனனப்பழங்கவாசனையால் தேகியாகிய ஆன்மாவே கர்த்தாவாயிருந்து எல்லாக்கன்மங்களையுந் தூண்டிப்பின் தானும் அக்கன்மபயனாகிய சுகதுக்காதியவைகளை யநுபவிக்கிறதாகத் திடப்பட்டிருக்கிற பிராந்தியானது இந்த சனனத்திலும் வந்து தொந்தித்திருப்பதால் அந்தபிராந்தியை யெவ்வாறு துலைப்பித்து மோக்ஷமடையலாமென யென்னிதயம் எண்ணிமெலிகின்றது. ஆகையால் இந்தபிராந்தியை யெவ்வாறு ஒழிக்கவேண்டுமோ அதைத் தயைகூர்ந் தனுக்கிரகஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். அருச்சுன! முன்னமே நாம் முக்குண விசேஷத்தாலேயே யெல்லாம் நடந்தேறுகிறதென்றும் ஆன்மாவினால் நடப்பதொன்றுமில்லையென்றுங் கூறினோம். நீ அதனை நன்கறியாய்போலும்; ஆனாலும் அகங்காரத்தினாலே தேகியேசெய்கிறதுபோலத் தோற்றப்படுகிறதென்று தெரிவிக்கிற வுண்மையறிவைக்கொண்டே அந்த சந்தேகபிராந்தியை யொழிக்கவேண்டுமேயன்றி மற்றொன்றில்லை. ஆகவே அவ்வாறுதோற்றியது தோற்ற

மேயன்றி உண்மையல்லவென்றறிந்த அறிவே ஞானமாகக் கொண்டு பூர்வதபோதனர்களான இருடியர்களெல்லாஞ் சந்தேக விபரீதமறத்தெளிந்தனுட்டித்ததால் அவர்கள் சனனமரண சம்சாரத்தினின்றும் விடுபட்டு மோக்ஷமெய்தியதாக யேற்படுகிறது இனி அந்த ஞானத்தையுங் கூறுவோங் கேட்பாய்: 1

அருச்சுன! அந்த ஞானமார்க்கத்தைப்பற்றி உனக்கு மிகச் சுலபமாக உபதேசிப்பதைக் கவனமாய்க் கேட்டறிந்து அந்தபிரகாரம் அனுட்டிப்பாயேயாயின் நீயெவ்விதத்தும் பந்தம் நீங்கி முத்தியையடைவாய். திரும்ப படைப்பின் றுவக்கத்தில் பிறக்கவும் பிரளயகாலத்தில் மரணமடையவுமாட்டாய். நிச்சயம். பார்த்தனே! நாம் நினக்கு ஆதியிலுபதேசித்தபடியே நின்னால் செய்யப்படுகிற நிஷ்காம கன்மங்களினால் சித்தசுத்தியாகி அதன் மேல் சற்குருவையடைந்து அவர்க்கானபணிகளெல்லாஞ்செய்து அவர்பால் கேட்டுத்தெளிந்து சிரவண மனன நிதித்தியாசனங்களெல்லா முறையே செய்துவருகிறபோது தேகாதி திரிசிய பிரபஞ்சங்களுக்கெல்லாம் தான்சம்பந்தியாத சாக்ஷிபூதமானவனென்றும், விகாரியல்லவென்றும், தன்னையன்றி யன்னியமில்லாதவனென்றுந் தெரிந்துகொண்டஞானமே உண்மைஞானமாகும். அந்த ஞானத்தைக்கொண்டே அகங்காரப்பிராந்தியை யொழித்துச் சுகவாழ்வெய்துவாயாக. 2

சுவாமின்! தேவரீர் எனக்குப் பற்பலவாறு பிரபலமான சுருதியுக்தி யனுபவங்களாலே யடிக்கடுக்காயெடுத் துபதேசிக்கும்போது எனக்கு உண்மையும் அறியுக்கினிமையுமாகக் காணப்படினும் தேவரீரைவிட்டு நீங்கியவுடனே அந்தஞானங்களெல்லாவற்றையும் என்மனதின் சமீபத்திலிருந்துகொண்டு மாற்றிவருகிறதுபோலக் காணப்படுகிறதே! அருச்சுன! அவ்வாறுகாணப்படுகிற தோற்றமும் நாமன்றி யன்னியமில்லையென ஓரேதிடமாகக் கூறுவதைக் கேட்பாய்: எப்பொருட்கு மிறைவனாகிய நம்மிடத்தில் சங்கற்பம் என்னு மாயையுண்டு. அந்தமாயையே பிரளயகாலத்தில் சர்வசீவர்களது கன்மவாசனையைப்பற்றி நம்பாலொடுங்கியிருக்கும். பிறகு சிருட்டியினாரம்பத்தில் அந்தமாயையினிடமிருந்து பிரம்மதேவன் முதலாயுள்ள சர்வபூதாத்மப் பிரபஞ்சங்களெல்லாந் தோன்றப்படும். 3

அருச்சுன! இவ்வாறு உயர்திணைச் சிருட்டிமுதல் அஃறிணைச்சிருட்டி யீறாகவுடைய எல்லாப்பிராணிகட்கும் அந்தமாயையே பிறப்பிடமாகக் கூறப்படும். அம்மாயையினிடமேநாமும் வியாபித்திருப்பதினாலே அதற்குநாமே ஆதாரமின்றி வேறில்லாததால் அதற்கும் நாமேபிறப்பிடமுமாயினோம். இங்ஙனம் பகவதாதீனமிருக்கிறமாயையினாலே பூதங்களனைத்தும் தோன்றியொடுங்குவதாலே அவைகளும் நாமன்றி அன்னியமில்லையென்று பார்ப்பாயாயின் அப்போது நானாவிதமாகத் தோன்றக் காரணமேயில்லை. இந்த முறையாகப்பாராது மாயைவசப்பட்டு அதனாலுண்டாகு முக்குணமயத்தனாய் விஷயாதிகளி லிச்சையுடையவனாயின் அதனால் உண்மையில்லாததான அகங்காரமானது நீங்காமற் பிராந்தியினால் சனனமரண சம்சாரத்தையே யடைவன். 4

சுவாமின்! எதார்த்தமற்றதான சத்துவாதிகுண காரியங்களால் ஏற்பட்டதாயிருக்கிற விவரங்களைப்பற்றிச் சிறிது எனக்குபதேசிக்க வேண்டுகிறேன். அருச்சுன! சாத்துவிதம் இராசதம் தாமத மென்னு மூன்றுகுணங்களும் மூலப்பிரகிருதியுனிடத்தே தோன்றி அவ்வியக்தனாகிய ஆன்மாவைப்பந்தித்துக் கொண்டு பிரகிருதியின் காரியமான சரீரகன்மங்களையெல்லாம் அவ்வான்மா தானேசெய்வதாக அபிமானிக்கச்செய்துவிடுகிறது. இவ்வாறு அபிமானத்துவம் வந்ததான பாவனையை யுண்மையென்றே சத்துவாதிய முக்குணங்கள் சுகதுக்காதிய அநுபவங்களிற் சம்யோகித்துப் பந்தத்தைச் சொந்தப்படுத்தி அவ்வான்மாவே சர்வவினையின் கர்த்தாவென்னும் பட்டமுங்கட்டி விடுகிறதேயன்றி உண்மையாக ஆன்மாவுக்கு யாதொருசுகதுக்காதிய பந்தமோக்ஷமில்லையென்றே நிச்சயமாயறிவாய். 5

சுவாமின்! இவ்வாறான தாந்திரீகசுபாவமாயுள்ள முக்குணங்களையும் அதன் விவகாரங்களையும் வியக்தமாகத் தெளிவுறும்படி யெனக்கோதியருள்க. அருச்சுன! மேற்கூறிய மூன்று குணங்களிலே முதற்குணமாகிய உத்தம சத்துவ குணமானது, (பாற்கடலில் மூதேவியும் காலவிடமுந் தோன்றியதோடு இலக்குமிதேவியும் பிறந்ததன்ன) இராசத தாமதங்களோடு தோன்றினும் அவைகளின் வாசனையின்றிப் பரிசுத்தமாயிருந்துகொண்டு ஆன்மாவானது நிர்மலமான சுயம்பிரகாசியென்றும், பற்றொன்றில்லாப் பரிபூரணச் சுத்தனென்றும், நிர்விகார நித்தனென்றும்

இன்னும் பலவாறான தத்துவஞானத்தைச் சரீரியின் உணரும் படிச்செய்வித்து எப்போதும் சத்தானுபவத்திலேயே சித்தத் தைச் சேர்ப்பித்து முடிவில் அவன் இன்றியமையா மோக்ஷ பதவியு மடையும்படிச் சத்விஷயங்களிலேயே கைகாட்டி விடு மென்க. 6

அருச்சுன! மேற்கூறிய இரண்டாவதான இரசோகுணமா னது இராகசொரூபமாய்த் தோன்றித் தனதிருப்பிடமாகிய சீவ னுக்குச் சதாவெப்பொருளினிடத்தும் இச்சையுண்டாகச்செய்து கொண்டு மேனமேலும் அவ்வொன்றையும் பெறுதற்கே அவா வச்செய்து அவனை நீங்காத ஆசைக்கடலிலாழ்த்திப் பந்தமோ கங்களைச் சொந்தமாயடையவுஞ் செய்துவிடுமென்க. 7

அருச்சுன! இன்னும் மூன்றாவதான தாமதகுணமானது அவிவேகத்தன்மையாய்த் தோன்றித் தன்னிருப்பிடமாகிய சரீர சீவனைப் பிராந்திவசத்தனாகச்செய்து அற்பமானதும் பிரயோ சனமற்றதுமான வித்யாதிகளிலே பிரவிர்த்திக்கவும், சோம்பல் தூக்கமுதலிய அசேஷங்களிலே ஆசக்திசெய்வித்தும் மென் றும் பந்தசாகரத்திலேயே படிந்திருக்கவுஞ் செய்துவிடுமென்க.

அருச்சுன! இதனால் ஆன்மகோடிகளானவர் மேற்கூறிய மூன்றுகுணங்களையு முடையவர்களாய் அக்குண விசேடத்தா லேயே பரிணமித்து எக்கருமங்களையுஞ்செய்து வருவார்களென் கிற விவரத்தையுங் கூறக்கேட்பாய். சீவனானவன் முதற்குண மான சத்துவகுணத்தின் வயப்பட்டபோது அசத்தைவிட்டுச் சத்தாயிருக்கிற புண்ணியகன்மங்களில் ஆசக்தியுடையவனாய் அஞ்ஞான காரியங்களை அடியோடுவிடுத்துச் சுககரமாயேயிருப் பன். இரண்டாவதான இரசோகுணவயப்பட்டபோது தனக் குத்தோன்றிய கன்மங்களைச் செய்துகொண்டு இன்பதுன்பங்க ளுக்கேதுவான வித்யாதிமோகனாய் அனைத்துந் தானே செய்வ தான புத்தியோடு வீண்காலங் கழித்துவருவன். மூன்றாவதான தாமதகுணத்தின் வயப்பட்டபோது அக்கிருத்தியங்களையே செய்துகொண்டும் சிலபோது நல்லனவாகிய வெந்தவிஷயங்களி லும் * லக்ஷத்தும் பிரவிர்த்திக்காது ஞானமென்பது சிறிதுமின்றி அஞ்ஞானமயமாகி அகாரியங்களையே பூரணதிருப்தியோடு செய் துகொண்டு சதா துன்பானுபவியாய்க்கிடப்பன். 9

அருச்சுன! இவ்வித விசேஷங்களோடுங்கூடிய முக்குணங்களும் ஒருவனிடத்தில் ஏககாலத்தில் விசேஷிப்பதுமன்றி ஒரு குணமே விசேஷித்திருப்பதுமில்லை யெவ்வாறென்னில், ஒரு சமயம் சத்துவகுணந் தனித்தும் மற்றோர்சமயம் இராசோகுணந் தனித்தும் பின்னுமோர்சமயம் தமோகுணந் தனித்தும் இவ்வாறு மாறிமாறி யெவ்வொன்றாகச் சேஷித்துக்கொண்டே அவைகளின் கன்மங்களை நடத்திவருமென்க. 10

அருச்சுன! இந்தவிதமாக ஜீவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற முக்குணங்களுந் தனித்தனியாக விசேஷித்துக் கன்மங்களைச் செய்கிறபோது இப்போதின்னகுணம் விசேஷித்திருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளும் விவரமுங் கூறிவருகின்றேன்: யாதொரு விஷயங்களிலும் விருப்பமின்றி மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும ஞானேந்திரியங்களாலும் கன்மேந்திரியங்களாலும் பகவத்பிரீதியான புண்ணிய கன்மங்களைச் செய்துகொண்டு சதா பகவத்குணானுபவ விசாராதிய ஞானவிருத்தியு முண்டாய்க்கொண்டிருக்கும்போது அந்தசமயம் சாத்துவிக குணம் சேஷித்திருக்கிறதென்று அறிதல் வேண்டும். 11

அருச்சுன! கேவலவிஷயானுபவங்களி லிச்சைகொண்டநுபவிப்பதும், அடக்கமின்றி எவற்றிலும் அதிகமீறுதலாகிய பிரவிருத்தியும், எந்தககாரியங்களையும் உலோபத்தனமாய் நடத்திவருதலும், தானென்கிற அகங்காரஞ்சேஷித்து நிறைவாயாகிய இத்தன்மையாய் விளங்கும்போது இராசதகுணஞ் சேஷித்திருக்கிறதென்றறியவேண்டும். 12

அருச்சுன! யாதொரு காரியங்களிலும் பயசிரத்தையோ அல்லது பக்திசிரத்தையோ இவைகளொன்றுமின்றி போகமேயேதுவாயுள்ள நல்லறிவுந் தூலங்காரமே யேவல்லமான பெருங்காரியங்களை விசேடமாகச் செய்துகொண்டு பிராகிருதியோடுங்கூடிய சித்தவிர்த்தியுடையவனாயிம்மை மறுமையின் பயனென்பன அறிதலுமின்றி மௌடிகாந்தகாரியாய் விளங்கும்போது தாமதகுணஞ் சேஷித்ததெனவறிதல் வேண்டும். 13

அருச்சுன!! இந்த முக்குணங்களிலே தனித்தனி யொவ்வொரு குணங்களையுடைத்தானபோது தேகவியோகமானவர்களடையும் பலனையுங் கூறுவோம். முதலாவது சாத்துவிகுணம்

சேடித்திருக்கும்போது மரணமடைந்தவன் சன்மார்க்கிகளையும் புண்ணிய லோகத்திலே போய்ப்பிறப்பன்.

அருச்சுன! இராசதகுணஞ் சேடித்திருக்கும்போதுதே நீங்கப்பெற்றவன் சீவனவிர்த்தியான கன்மங்களைச்செய்துகொண்டிருப்பவனிடத்தே போய்ப்பிறப்பன். தாமதகுணஞ் சேடித்திருக்கும்போது இறந்தவன் குதிரை, எருமை, கழுதை பெருமாடு முதலான மிருகாதிகளினிடமாகப் பிறப்பனென்க.

அருச்சுன! மேற்கூறியவாறு பற்பலவிடங்களிற் பிறந்துள்ள அம்முக்குணத்தவர்களும் அவ்வக்குணவிசேடமான பலனடைவதையுங் கூறுவோம் கேட்பாய். சத்துவகுணத்தோடிறந்ததன்பலனாக மேலான சத்கன்மவிருத்தியும் சுக நிவாத்தியான சந்தோஷமும விவேகவிர்த்தியுமுண்டாய் விளங்குவன். இராசதகுணத்தோடிறந் ததன்பலனாக உலோபித்தனமும துக்கசுகம் சமத்துவமாயுமுண்டாய் விளங்குவன். தாமதகுணத்தோடிறந்ததன்பலனாக சதாவிசாரமும மூடசுபாவமு முண்டாய் விளங்குவனெனக். 16.

அருச்சுன! சத்துவகுணத்தாலடைவது ஞானயேதுவான நல்லறிவும் சந்தோடமுமாம. இராசதகுணத்தாலடைவது உலோபித்தன்மையும் சுகதுக்க சமத்துவமுமாகும். தாமதகுணத்தாலடைவது அசாத்தியமான பிராந்தியும் விசாரமுமாம். 17

அருச்சுன! இவ்வாறான விசேஷங்களோடு எவ்விடத்தே பிறப்பரெனின், சத்துவகுணோத்தமன் மேலுலகத்திலும், இராசத குணத்தவன் இந்த மனிதர்கள் வாழும் பூவுலகின்கண்ணும், தாமதகுணத்தவன் நரகலோகத்தையு மடைவன். இம்முக்குண சமபந்தத்தாலேயே மனிதர்களுக்குச் சம்சாரம் விரிந்ததாம். 18

அருச்சுன! ஆகையாற்றான் சர்வேந்திரியாதி சரீரமாக விருந்திபெற்ற இம்மூன்று குணங்களினாலே எல்லாக்கன்மங்களுஞ் செய்யப்படுகிறதேயன்றி, யாதொன்றினும் பற்றுது பரிசுத்தமாயிருக்கிறதும சாக்ஷிபூதமுமாகிய யதார்த்த ஆன்மசொரூபத்தாலல்லவென்றறிந்த மகாபுருடனே நம்மை யடைவதுமன்றி முக்குணரகிதனென்றும சொல்லப்பெறுவன். ஆகவே எவர்களும தத்தம் சொந்தகன்மங்களைச் செய்துவருவதால் சித்தம் நிர்மலமாகி அதனல் ஞானமுண்டாகப்பெற்று மோக்ஷலோகத்

லை ஆக்ஷிசெய்ய ஏதுவாயிருத்தலால் உனக்குச் சுதந்தர ாழிலாயுள்ள யுத்தவிர்த்தியையே செய்யக்கடவாயென்று றினேம். 19

சுவாமின்! மேற்கூறிய மூவகைக்குணங்களால் கன்மங்களனைத்தும் செய்யப்படுகிறதென்றும், அக்கன்மானுபவங்களுக்கு ஆன்மா சாக்ஷியென்றும் உபதேசித்து வந்தீர்கள். அப்போது தேவரீரது சொரூபத்தையடைவதெப்படி? அருச்சுன! க்ஷேத்திரஞ்ஞன் அல்லது தேகி அல்லது ஆன்மாவானவன் சரீரத்துக்கேதுவாயுள்ள முக்குணங்களையும் அதன் காரியமான சனனமரணம் வயோதிகம் துக்க முதலானவைகளினின்றும் விலகியும், அக்காரியங்களுக்குச் சாக்ஷிபூதனெனவும், தானே யனைத்துமாயுள்ளதென்றும் உறுதிப்பாடாய விவேகத்தோடு கூடிவாழ்ந்து வருதலினாலேயும் இப்பிறவியின்கண்ணே யிவன் முத்தனாகிறானென்க. 20

சுவாமின்! மூவிதகுணங்களையுஞ் சாராது விளங்கும் சாக்ஷிசாக்ஷாத்கார ஆன்மாவுக்குக் காரணசரீரம் சூக்ஷ்மசரீரமாகிய சஞ்சித ஆகாமியங்கள் மறைந்திடினும், தூலசரீரமாகிய பிராரத்தமுள்ளளவும் முக்குண காரியாதிகளிற்சிறிதும் சம்பந்தியாது எவ்வித ஒழுக்க காரியாதிகளோடிருந்து மெத்தன்மையான பத்திவினையங்களைச் செய்துவருவார்கள்? தேவரீர் கிருபைகூர்ந்தருள்வீர்களாக. என்று பணிந்து[illegible] அருச்சுனனை நோக்கி பகவான் கூறுகின்றார்: 21

அருச்சுன! சாத்துவீககுண விசேஷமாகிய சத்கன்மானுட்டானாதி சுகானுபவங்களென்ன, இரஜோகுண விசேஷமான சீவனவிருத்தி சுகதுக்கங்களென்ன, தாமதகுண விசேஷிதமாகிய துக்கமயங்களென்ன இவையனைத்தும் தனக்குண்டாயபோது யாதொரு விசாரத்தையும், நிவர்த்தியானபோது சந்தோஷத்தையும் குறித்தறிவிளங்கும் புருஷோத்தமன் சிறிதும் அடையப்பெறான். எதனாலெனின், அப்பரமபுருஷனுக்கு மேற்கூறிய சுகதுக்காதியவனைத்தும் பிரகிருதிசம்பந்த முக்குண காரியமேயன்றி மற்றன்றென்று தான் சாக்ஷித்துவமாயிருக்கிற திடத்தினாலே எச்சமயங்களையும் சமத்துவமாயே யெண்ணியிருப்பனென்க. 22

அருச்சுன! பின்னும் அப்பரமபுருஷர்கள் மற்றும்யாதொரு காரியாதிகளையும் ஓர் பொருட்டாயெண்ணாது ஆன்மதரிசனமே தனக்கின்றியமையாத பெரும்பேறெனக் கருதித் திரிகுண காரியாதிகளை யுதாசீனஞ்செய்து இராகத்துவேஷாதிய விஷயானுபவங்களிற்சென்ற மனசினால் தான்சலிப்பெய்தாது தனித்தும், கருவிகரணங்களால் எய்தப்பெறும் யோகாதியவனைத்தும் முக்குண கோலாகலமேயென வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற்றெரிந்துள்ள திடத்தமனத்தினால் தான் தன்னந் தனிமையான யேகவஸ்துவெனவும் மேற்கூறிய குணசேட்டைகளில் நாட்டம் வைப்பது கேவலம் அவித்தையேயென யோர்க்கனவே தெரிந்து தெளிந்த திடவிவேகத்தால் சிறிதேனுஞ் சலிப்பெய்தா திருப்பர்களென்க. 23

அருச்சுன! மகாதிட வீரசிகாமணிகளாவார் தங்கள் பார்வையிற்பட்டது அதியுன்னத வஸ்துவாயினும் அல்லது கேவல வஸ்துவாயினும் அவைகளைக் கொஞ்சமேனும் விருப்புவெறுப்பாய்ப் பாராது சர்வசாமானியமாயே யெண்ணியும், மற்றும் பூஷிததூஷிதங்களில் விருப்புவெறுப் பில்லாமலும் ஒரேதிடப் புத்தியாயேயிருப்பர்கள். 24

இன்னும் எந்தக்காரியங்களிலும் அபிமானமின்றிச் சத்துருமித்துருவானோரிடத்தும் சமத்துவம் பாராட்டிப் பிறராலடையப்பெறும் மானவமானங்களால் சலிபபெய்தாது சமாதான சித்தவிர்த்தியோடு சர்வதா குணவிசேடிதங்கட் கன்னியமாயேயிருப்பர்கள். 25

சுவாமின்! தேவரீர்கூறியதிடச்சித்தம்வாய்ந்த மகாபுருஷர்களுக்குள்ள கரணவொழுக்கங்களை யனுசரிப்பதென்றால் மிகவுங் கஷ்டமாகக் காணப்படுகிறபடியால் வேறு எவ்விதமாயாவது எனது அந்தக்கரணங்கள் குணத்திரயங்களின்வழி செல்லாது தனித்திருக்கவேண்டிய உத்தம சூக்ஷுமமார்க்கமிருப்பின் தயைசெய்தருள்வீர்களாக. அருச்சுன! நீகேட்ட மனோதிடத்திற்கான சூக்ஷுமமார்க்கம் நாம் மேலே கூறுவதைத் தவிர்த்து வேறொன்றுமில்லை. அதாவது: சர்வவிபுவாயிருக்கிற வெம்மையே ஒரேபடித்தான மனத்திடத்தால் பக்திசெய்தல் வேண்டும். அவ்வாறு நாளடைவில் பக்திபுரிந்த சத்துவகுண விசே

டத்தால் ஞானமுண்டாகப்பெற்று அதனால் திரிகுணரகிதனைய் மோக்ஷமெய்தும் யோக்கியனாவாய். 26

அருச்சுன! மேலேகூறியபடி பத்திபுரியின் முத்திபெறாத லெங்ஙனமென்னில், சர்வாண்ட புவனங்களுக்கும், மோக்ஷசாம் பிராச்சியத்திற்கும், அந்த மோக்ஷயேதுவான சாத்துவித கன்ம தன்மங்களுக்கும் யானே ஆதாரபூதனாயிருப்பதோடு அவைகட்கு ஆஸ்தானமாயு மிருத்தலால் எவ்விதத்தும் எம்மையே யடைவனென்க. 27

குணத்திரய யோக அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 14–க்கு–சுலோகப் பொழிப்பு-551.

## பதினைந்தாவது அத்தியாயம்

# புருஷோத்தம யோகம்.

அவதாரிகை:—சென்ற குணத்திரய யோக அத்தியாயத்தின் முடிபாக பகவத்பத்தியாலன்றி ஞானமெய்த வியலாதென்றும், அந்த ஞானத்தாலன்றி மோக்ஷம் லபிக்கமாட்டாதெனவுங் கூறப்பட்டுள்ளது. மற்றும் அவ்வித பத்திஞானங்களைப் பெறுதற்கு வைராக்கியம் அவசியமென்றும், அவ்வித வைராக்கியம் வருதற்குச் சகத்தை மெய்யெனக்கருதாது கேவலம் அசத்தெனவேயறிந்து வெறுத்தல் வேண்டுமெனவுங்கூறி அவ்வசத்தானவுலகம் அநித்தியத்தினு மனித்தியமா யதாவரங்களிற் சிரேட்டமான அசுவத்த விருக்ஷத்தை யொத்திருக்கிறதெனவுங் கூறியதன்றி ஒப்பற்று ஒரேபொருளாய் விளங்கும் பரமகருணை நிலயமாகிய வெம்பரமபதியொருவரேநித்தியரெனவும், அப்பரமபதியினிலக்ஷணங்களைப்பற்றியும் இனிக்கூறத் தொடங்குகின்றார்.

சுவாமின்! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியவாறு ஆன்மாக்கள் ஞான மோக்ஷங்களை யடையவேண்டுமாயின் அதற்கேதுவாகப் பக்தியொன்றே அத்தியாவசிய மென்றீர்கள்; பெறுதற்கரிதாகிய மோக்ஷத்தை புரிதற்கெளிதாகிய பத்தியினாலே யாவரு மிகச்சுலபமாயடையலாமே—; அங்ஙனமிருக்க என் அனைவரும் அப்பத்திநெறியில் நில்லாது வீணே அவலம்பிக்கின்றார்கள்? அருச்சுன! அதற்குக்காரணம் இதுகாறும் நீயறிந்திலையோ! கூறுவோம் கேள்: இந்திரஜால கோலாகலமாய்க் காணப்படுகிற இந்தவுலகவாழ்வை மெய்யெனக்கருதி யழுந்தியிருக்கும் வரையில் பத்திமார்க்கஞ் சித்தியாவாம. ஆகவே உலகவிருக்ஷங்களைப் போலாது மேற்பக்கம் வேரும் கீழ்ப்பக்கம் கொப்புமுதலானவைகளோடுமிருக்கிற இந்த லோகானுபவசம்சாரமாகிய விருக்ஷம் புவனமூன்றினும் அதற்கப்பாலும் விரிந்துநிற்கும். இவ்வாறு உண்மைபோன்றே யெங்கும் வியாபித்துள்ளது தோற்றமாத்திரமேயன்றி உண்மையாக பொய்ப்பொருளென்றே மகான்களால் கூறப்பட்டுள்ள சுருதிப்பிரமாணங்களால் நன்கு விளங்கப்படும்: அன்றி அவ்வித அசுவத்தமென்கிற சம்சாரவிருக்ஷத்துக்கு வேதங்கள் இலைகளையொக்குமென்றும், அதனை நன்று

யுள்ளபடியறிபவனே வேதசாராம்சத்தை நன்கறிந்தவனாவா
னென்றும், சம்சாரக்கரை கடந்தவனெனவுங் கொள்ளப்படும்.

அருச்சுன! மேற்கூறிய அசுவத்தவிருக்ஷத்தின் இலக்ஷணத்
தைக் கூறுவோம் கேட்பாய்: அவ்விருக்ஷத்திற்கு ஆதாரமாகிய
சலம் இங்கே சத்துவாதிய முக்குணங்களாம். அந்த முக்குண
நீரைப்பருகியே சதுர்முகனார்முதல் சராசரங்கள் யாவும்கொம்பு
களும் இலைகளுமாக வெப்புறத்தும் விளங்கிச் செழிக்கின்றது.
அந்தவிருக்ஷத்திலுள்ள விஷயங்களாகிற கொழுந்திலைகளை இம்
மண்ணுலகமாந்தரிச்சித்துப் புண்ணியபாவமென்னும் கர்ம அனு
பவிகளாய்ப் பந்தமெய்தினர்கள். அவ்வாறெய்தப்பட்டுள்ள கர்ம
பந்தத்துக்கேதுவாக பூர்வவாசனையென்னும் வேர்களானவை
சுவர்க்கமத்திய பாதலமென்கிற எப்பக்கங்களினும் வியாபித்து
ஓங்கிநிற்கின்றது. 2

அருச்சன! மாயாசம்பந்தமாயேவிளங்கும் மானிடராவா
ரெவரும் இதனை யித்தகையதென வுய்த்துணரமாட்டார்கள்.
இவ்விருக்ஷம் மற்றைய விருக்ஷங்களைப்போன்று அகலநீளங் கண்
டறியப்படாததும், எவராலுங் கண்டிதஞ் செய்யவொண்ணாத
தும், துக்காஸ்பதமாயும், சனனமரண மற்றதாயும் விளங்கிக்
கொண்டிருக்கின்றது. இவ்வித சம்ஸார விருக்ஷத்தை வைராக்
கியமாகிறவாள் கொண்டு வேரறுத்துச்சாய்க்கிற புண்ணியசீலர்
களே யாதொன்றினும் பற்றுதலின்றித் தத்துவ ஞானம் பெற
யெத்தனிப்பார்களாதலால் நீயும் அவ்வாறே அநுட்டிப்பாயாக
வென்றருளிச்செய்த பரமாத்மனைநோக்கிஎசர்வவிபோ! மேலே
கூறிவந்த பிரமாண்டமானசம்சாரசாகர அசுவத்தவிருக்ஷத்தைச்
சேதித்தற் கேதுவையும், அவ்வாறு வெட்டிவீழ்த்தியபின் யான
டையும் பலப்ராப்தமு மின்னதெனத் தெரிவிக்குமாறு வேண்டு
கிறேன். 3

அருச்சுன! மட்டற்றவேர்களோடுங் கிளைகளோடும் அடர
விழுது வீழ்ந்து விரிந்திருக்கிற சம்சாரமென்கிற விருக்ஷத்தைச்
சேதித்து வீழ்த்தவேண்டுமானால், தானுந் தன்தேகாதிய வனு
பவங்களு மெய்யெனமோகித்த அஞ்ஞானாஹங்காரங்கழன்று ஈஷ
ணாத்திரயங்களை விவேகமெனும் வாளாற் பற்றறத்தறித்து எஞ்
சிய வைராக்கிய ஞானத்தைக் கைக்கொண்டு ஒப்பற்ற பரப்ரம்ம
வஸ்துவை யடைதல் வேண்டும். அந்த நிர்க்குண வஸ்துவை

யும் விசாரித்தடைத லெவ்வாறெனின், எந்தமூலப்பிரகிருதியால் இவ்வுலகமாகிய சராசரபேதங்கள் விரிந்தனவோ அந்த மகா மாயையை யதிட்டித்துள்ள யாதொரு பரவாசுதேவனாகிய நம்மை அதிதீவிர பக்குவத்தோடு அன்புமீதுறப் பாதம்பணிந்து பக்தி பூர்வமாகிய கைங்கரியவந்தனுயிருப்பின் பிரம சைதன்யத்திற் பேதமறக் கலத்தலாகிய சாயுச்சிய பதவியைப் பெறுவது சத்தியமேயாம். 4

அருச்சுன! இவ்வாறடையப்பெறும் பாக்கியவான்களின் குணதிசயத்தையுஞ் சிறிது கூறுவோங் கேட்பாய்: தேகமே தான், போகமே மோக்ஷமெனும் அஞ்ஞானவஸ்தை நீங்கப்பெற்றவர்களாய் பிரபஞ்சாதிய அநுபவங்களை யுள்ளபடி மித்தையெனக் கண்டறிந்து மாடுமனை பெண்டு பிள்ளைகளிடத்து வாஞ்சையற்றும், விஷயானுபவங்களிற் சிறிதும் இச்சையில்லாதவர்களாகியும், மாயாபந்த ரகிதர்களாயும், ஆன்மவிசாரத்திற்றேறிய வுணர்வுடையவர்களாயும், இராகத்துவேஷாதிய கரணசேட்டையற்று என்று மழிதலில்லா ஆத்மாநந்த மொன்றினிடத்தேயே நீங்காத விசாரசிந்தனை கொண்டவர்களாயிருப்பர். இத்தகைய உத்தமபுருஷர்களே மீண்டுந் தோன்றுதலில்லாது பரமாத்மசொரூபத்திலே லயப்படுவார்களென்க. 5

சுவாமின்! இப்போது கூறிவந்த இலக்ஷண மகாபுருஷர்கள் மீண்டும் பிறவாதிருத்தற்கு யேது யாதோவறிந்திலன்? அருச்சுன! முச்சுடரென்கிற சோமசூரியாக்கினி யென்பவை தன் முற்பட்ட எல்லாப் பதார்த்தங்கட்கும் பிரகாசத்தைக் கொடுத்துத் தானும் பிரகாச விளக்கமாக விளங்கப்படுமேயன்றி இயல்பாகவே தன்னைத்தானே பிரகாசிப்பிக்க வலியிலதாயிருக்கின்றது. இதனால் அவைகட்குப் பிரகாசத்தைக் கொடுத்திருக்கின்ற சுவயம்பிரகாசமாகிய சத்துப்பொருளே அவைகளை விளக்கக் கூடியதெனவேற்பட்டது. அவ்விதம் அருட்பெருஞ் சோதியின் வயப்பட்ட மகான்கள் யாரோ அவர்களே மீண்டும் இம்மண்ணுலகிற் பிறந்திறவார்களென்க. அந்தவொப்பற்ற மெய்ப்பெருஞ் சுடராகிய பரமான்மாவென்பதும் நாமேயாம். நம்மையடைதலையே மோக்ஷமடைதலென்றுஞ் சொல்லப்பெறும். 6

சுவாமின்! தேவரீர் திருவாய்மலர்ந்தன வறிந்துகொண்டேன்; இதனால் செகத்சர்வம் கேவல மித்தையென்னும் பொய்ப்

மற்பொருளெனவும், பரமான்மாவாகிய தேவரீரே பரவஸ்து வென்றுந் தெள்ளிதின் விளங்குகின்றது. இவ்வாறாக, ஜீவான்மாவுக்குச் சம்சாரபந்தத்தால் சுகதுக்கமேற்பட்டு ஓர்சமயம் உயர்வும் மற்றோர்சமயம் இழிவும் வருதற்கேதுவென்னை வறிவிக்கவும்? கேட்பாயருச்சுன! நீ கூறிய ஜீவான்மாவானது, யாதொன்றினும் பற்றுதலின்றித் தனித்தும், ஏனையபொருள்களுக்குத் தானே முதன்மையானதாயும், என்றுமுள்ள நித்தியவஸ்துவாயுமுள்ள நம்முடைய அம்சப்பொருளேயாம். அத்தகைய உத்தமவஸ்துவானது தான் அபிமானித்துள்ள மாயாசம்பந்த அஞ்ஞானோபாச ஸ்தூலப்பொருளாகிய சரீரத்திலே அந்தக்கரணங்களான மனமாதி தத்துவங்களோடு சமயோகித்து இராகத்துவேஷத்தினாலே சுகதுக்கானுபவத்திற்சிக்கிப் பின் சத்துவ விவேகம்பிறக்க விவகார ஞானமயமாகிச் சாக்கிரகாலத்தில் பகிர்முகப் பார்வைக்குமட்டும் பிறப்பிறப்புற்றதுபோன்ற தோற்றத்தினளவாக மேன்மை தாழ்மையை யடைகிறதாகக் காணப்படுகிறதேயன்றி உண்மையில் ஆன்மாவுக்கு உயர்விழிவென்பது சிறிதுமின்றாம். 7

சுவாமின்! இவ்வாறு யாதொரு தொடர்புமிலா ஆன்மாவுக்கு இந்திரிய கட்டும் அதனாற் சம்சாரபந்தமு முண்டாயதெவ்வாறு? அருச்சுன! மனமாதியிந்திரியங்கள் 17 - க்கும் ஆஸ்பதமாய் விளங்கும் ஜீவான்மா தான் சரீரத்தினின்றும் புறப்படுங்கால், (மந்தமாருதமானது மலரின் கந்தமானதைக் கிரகித்தேகுதல் போன்று) அந்த சென்மகன்ம வாசனையோடு பூர்வரூக்ஷமயிந்திரியாதிகூட்டங்கள் சகிதம் வினைத்திட்பத்திற்கேற்ப மற்றோர் தேகத்தையடைந்து அதன்மூலமாக வினைப்பயனை யனுபவிக்குமென்க. 8

சுவாமின்! அவ்வான்மா மற்றுமோர் சரீரத்தையவாவி அதனை அடைதற்குக் காரணம் யாது? கேட்பாயருச்சுன! ஆன்மாவானது தனக்கென மத்தியஸ்தனையா யேற்பட்ட விஷயானுபவ சுபாவமாயுள்ள பஞ்சேந்திரியாதிகளுடனே சங்கற்பவிகற்பமென்னு மிருவித காரியானுபவங்களோடுகூடிய மனமாதி அந்தக்கரணங்களுடன் விஷயபோகாதியில் மூழ்கிச் சுகதுக்கங்களனைத்துந் தனதெனப்பாவித்துச் சம்சாரத்திலகப்பட்டுழல்வதற்கு முக்கியமானது சரீரமாகலின் அவ்வான்மாவுக்குச் சரீரம் அவசியமாயிற்றென்க. 9

சுவாமின்! இவ்வித பிராந்தியின் காரியமாகிய சரீராநுபவத்தைச் சீவன் தனதாகப் போலியபிப்பிராயங் கொண்டதெனப் பெரும்பாலா ரறியப்படாமைக்குக் காரணம் யாது? அருச்சுன! மனிதப் பிறப்பினர்களுள்ளே மிகப்பலர் தாம்தாம் முந்திய கன்மவசத்தால் பந்தப்பட்டுவந்த சரீரத்தைச் சொந்தமாகவும் நித்தியமாகவுங்கருதி அவிவேகசிகாமணிகளாய் விளங்கி ஆன்மா சரீரத்தைத் துறத்தலும் பிறத்தலும் மிவ்வாறென்பதையும், அந்தந்த தேகத்திலே சூக்ஷ்மவிந்திரியாதிகளோடுகூடி வாழ்ந்த அநுபவத்தாழ்மையின் விசேஷத்தைச் சிறிதும் பரியாலோசியாமலுமுள்ள மந்ததரத்தினராயின் யெவ்வாறறிவர்? சத்துவகுணம் வாய்ந்தவரும் தீவிரதர விசேடிகளுமாகிய ஞானசீலர்களுக்கே ஆன்மலக்ஷண விவேகம் நன்கு விளங்கப்பெற்று. அவர்களே சத்தியநெறிநின்ற மகாபுருடர்களாய்ச் சம்சாராபாசச்சாகரத்தைக் கடந்தேறியவர்களாயுங் கணிக்கப்படுவர். 10

சுவாமின்! தேவரீர்கூறிய அன்னோர்மட்டு மறிவதென்னோவறியேன்? அருச்சுன! மேற்கூறிய திடப்பிரக்ஞர்கள் தங்கள் காலத்தின் பெரும்பாகத்தைச் சத் சாஸ்திரா ராய்ச்சியிலேயே போக்கிப் பின் உத்தமகுருவையடைந்து அவர்க்கினிய பணியாற்றித் தங்கட்குரிய சந்தேக விபரீதங்களை யறத்தெளிந்து அதன்மேற் சாதனங்களை யெல்லாஞ் சாதித்துச் சடசீவலெக்ஷணங்களின் பாகுபாட்டை நன்கறிந்தும், ஈற்றில் பரமாத்மலெக்ஷணங்களையும் விசாரித்தறிந்து அதேயனுபவமாயிருப்பர்கள். மற்றும், சாமானியர்கள்போன்று சரீராதிகளோடுகூடி விஷயானுபவங்களை யநுபவிப்பவர்போலக் காணப்படினும் அவ்வநுபவமனைத்தும் பாக்கியமன்றி அந்தர்ப்பூதானுபவமாய் ஆத்மானந்தத்தையே யடைந்துகொண்டு தன்னந்தனிமையான சைதன்யத்திலேயே புத்தியை வைத்திருப்பதால் அவர்களறிந்திருப்பதுசகசமேயாம். இவர்களன்றிச் சித்தசுத்தியற்ற அஞ்ஞாநாத்மாக்கள் எவ்வளவு காலம்வரைக்கற்றறிவாரேனும் அவ்வஞ்ஞானமறைப்பால் அவைகளின் இரகசியார்த்தங்களையறியாதும், தானாதி யெக்கியங்கள் பலவாகச்செய்யினும், மற்றுமுள்ள பற்பல தாந்திரீககன்மச் செய்கைகளைக்கொண்டும் அப்பரமான்மாவைத் தரிசித்தல் அரிதினுமரிதாம். 11

அருச்சுன! யாம் முற்கூறிவந்த பரமாத்மனை அறிவாலறிதலென்றால் சாமானிய மல்லவென ஒருக்கால் நீ டலைப்பெய்தலா

மென்று எனக்குள் தோன்றுவதால் இன்னும் சுலபசாத்தியமான மார்க்கத்தையுங் கூறக்கேட்பாய் : மேலேகுறித்த சோம சூரியாக்கினியாதிகளிடத்தில் வியாபித்துச் சர்வலோகங்களையும் பிரகாசமாத்திரமாக விளக்கமுறச் செய்கின்றது எந்தஜோதிராம்சமோ அவை நம்மிடமிருந்தே அவைகட்கேற்பட்டதாக அறியக்கடவாய். 12

இன்னும், யாமே இம்மண்ணுலக விராட்டுருவெய்தி அதன் மேல் மற்றெல்லாப் பூதங்களையும் வகித்துக்கொண்டும், சீதளாமிர்தத்தைப்பொருந்திவிளங்கும் சந்திர அம்சமாய்த்தோன்றிச் சூரியனாலடைந்த வெப்பங்களின் சாந்தியாகப் பயிர்செடி கொடி மர முதலானவைகளையெல்லாம் சீதளமெய்தித் தழைக்கும்படியுஞ் செய்துவருகின்றோம். 13

பின்னுஞ் சர்வசீவான்மாக்களிடமும் உதராக்கினியாயிருந்து அவ்வான்மாக்களுண்ணும் அன்னமுதலான வஸ்துக்களின் இரசவர்க்கங்களையெல்லாம் உண்டல் தின்றல் பருகல் முதலிய நான்குவகையினவாய்ப் புசித்துப் பிராணன் அபானன் என்னும் வாயுக்களோடுகூடிச் சரீரத்தை நாளுக்குநாள் புஷ்டிக்கவுஞ் செய்கின்றோம். 14

அருச்சுனா! இன்னமுங்கேள் : எல்லாப்பிணிகளது இதயாம்பரவெளியில் அந்தரியாமியாயிருந்தும், அவ்வப்பிராணிகளுக்கு ஞாபகவுணர்வும் அஃதின்மைக்குக் காரணமும் நாமாகவேயிருக்கின்றோம். இஃதன்றியும் ஒவ்வொரு சரீரத்தினிடமாக அந்தர்ப்பூதமாயிருந்துகொண்டு இது நன்று இதுதீது என்று விளங்கச்செய்கின்ற விவேகவிளக்கமென்பதும் நாமேயாம். வேதாகமாதிகளில் முழக்காநின்றதெப்பொருளோ அந்தவொப்பற்ற பரப்பொருளும், அத்தகைய உத்தமோத்தம சத்தியவஸ்துவை விளங்கச்செய்யும் வேதாந்த சாஸ்திராசிரியனும், அவ்வேத சாஸ்திரங்களின் சாராம்சங்களைக் கசடறவுணர்ந்தவனும் யாமேயாம். 15

சுவாமின்! தேவரீர் கூறியனவனைத்தும் தாமேயென்பது விகசிதமாயிற்று அங்ஙனமாயின் அவ்வவற்றால் சமயம்நேர்ந்துழி பாசவாசனை யேற்படுமே? அருச்சுனா! உண்மையாக நீ விசாரிப்பையேயானால் நாமன்றி யன்னியமான தொன்றுமில்லையென்று நன்றாய்விளங்கும். அவ்வாறாகவே நீ சீடனென்றும் யாம் குரு

வென்றும் போதனுசிரவண திசையிலிருந்து நினக்காய்ச்சொல்ல வந்ததேயன்றி யென்றும் யெமக்கு யாதொன்றினும் பிரியாப் பிரியமே யில்லையென்பது இதுவரையில் நாம் உபதேசித்துவந்த தால் நீ தெரிந்துகொள்ளாவிடினும் நான் இனி உனக்குபதேசிக்க விருக்கும் மூன்று சுலோகங்களால் நன்குவிளங்கும். அதாவது உலகத்தினிடத்தே காணப்படும் மனிதர்களை இரண்டுவகையாகப் பிரித்து பேசப்படும். எவ்வாறெனின், க்ஷரபுருஷாள் அக்ஷரபுருஷாள் என இவ்விருபாலாருள்ளே மூலமாயாந்தரங்க சம்பந்த தத்துவாதிகள் 24-லோடுங் கூடியவர்களெவரோ அவர்களையெல்லாம் க்ஷரமென்றும், அவ்வித தத்துவகூட்டச் சரீகள் நசிப்பினும் நசியாதிருக்கின்ற 25-வது தத்துவமென்னும் நித்தியகூடஸ்தரை அக்ஷரமென்றுஞ் சொல்லப்படும். இந்த கூடஸ்தரையே சிவன் என்று பேசப்படுவதுமுண்டு. 16

அருச்சுன! சர்வ லோகங்களிலும் சர்வாந்தரியாமியாயிருந்து யெல்லாவற்றையுந் தமதாகவே பொறுத்துக்கொண்டும், தொம்பத வாச்சியார்த்தமாகிய 24-தத்துவங்கட்கும் தொம்பத லக்ஷியார்த்தமாய 25-வது தத்துவமான பிரத்தியேகாத்மாவின அப்பாற்பட்டவரெனவும், அவரே உத்தமபுருஷன், பரமான்மா, ஈசுரன் என்னும் இப்பெயர்தாங்கிய மூலபுருடன் யானேயென்றும் வேதாதிகள் விளம்பாநிற்கும். இத்தகைய யெம்மையோ பற்றுதல்வந்து பற்றுவது! நன்குயோசிப்பாயாக. இதுநிற்க; அருச்சுன! யாமோ யென்றும் பொன்றுதலில்லா நித்தியவத்துவாய் க்ஷரசரீராதியவைகட்கு அப்பாலாயுள்ளோம். இன்னும் எல்லாச் சரீரங்களிடத்தும் அக்ஷரமாய்த் தனித்துள்ள கூடஸ்த புருஷனுக்கு மப்பாலாகவிளங்கி, மற்றும் அகம்புறம் எங்கும் வியாபித்திருப்பதாலேயே சர்வத்ராளாலும் வேதங்களாலும் புகழ்ந்து கொண்டாடப்பெற்று மகாபுருஷோத்தமனெனப் பெயரும்பெற்றுளோம். சுவாமின்! தேவரீர் கூறியனகேட்டுத் திடம் பெற்றேன். ஆயினும் இவ்வாறுள்ள தேவரீரைத் தெரிந்து கொண்டதால் யானடையுங்கதி யென்னவோ? 17, 18

அருச்சுன! "இவ்வுலகின்கண்ணே நம்மால் பார்க்கப்படுவனவனைத்தும் ஸ்ரீவாசுதேவாம்சமே; அவ்வஸ்துவையன்றி மற்றொன்றையுங் காணேம்" மென்று உள்ளபடியுணர்ந்த உத்தமமானவரும் உருதிப்பாடாயுமுள்ள நிச்சய விவேகஸ்தர்களானோர் சர்வேஸ்வரனைய் விளக்கும் யெம்மையே பரவஸ்துவென வறிந்து

தெளிந்த ஞானஸ்தர்களாக விளங்குவர். அவர்களையே யெல்லா முணர்ந்தவரென்றும், சர்வவல்லபத்துவமும் பொருந்திய சாம்பிராச்சியரென்றுஞ் சொல்லபடுவதோடு அவர்கள் எல்லாப்படியாலும் யெம்மையே யிடையறுவுபாசனையால் அந்தர்முகப்பத்தி புரிந்து ஈற்றில் எம்முரு வெய்துவரென்பது நிச்சயமேயாம். 19

அருச்சுன! இதுகாறும் யாமுனக் குபதேசித்ததுபோலல்லாது இந்த அத்தியாயத்தால் கூறவொண்ணு அதிஞான இரகசியங்களையெல்லாம் சாங்கோபாங்கமாக வுபதேசித்தோம். இவ்வரிய ஞானசாரத்தை இம்மையிலறிந்தொழுகுவார் யாவரோ அவர்களே இம்மாயாவுலகத்தை வென்ற மகா ஞானிகளாவார். ஆகையால் விவேகபானுவாய் விளங்கும் நீயும் மேலே கூறிவந்த அசுவத்தமாகிற சம்சார விருக்ஷத்தை அறிவெனும் ஆயுதத்தைக் கொண்டு அடியோடு தறித்தெறிந்து ஒப்புயர்வில்லாத் தற்பரமாத்மனை யடையக்கடவாய். என்று இந்த அத்தியாயத்தை இதோடு முடிக்கின்றார். சுபம். 20

புருஷோத்தம யோக அத்தியாய

முற்றிற்று.

ஆ அத்தியாயம் 15–க்கு–சுலோகப் பொழிப்பு-571.

## பதினாறாவது அத்தியாயம்

# தெய்வ அசுர சம்பத்தி யோகம்.

அவதாரிகை :—முற்கூறிய அத்தியாயத்தின் வாயிலாகச் சம்சாரமென்பது அசுவத்த விருக்ஷத்துக்குச் சமமென்றும், அந்த சம்சாரவிருக்ஷத்தை * வித்யா விவேகமென்னும் வாளால் வீசியெறிந்து நித்தியமான மோக்ஷசாம்பிராச்சியத்தை யடைதல் வேண்டுமெனச்சொல்லி சித்தாந்தித்தாராயினும், அந்த மோக்ஷசித்தியென்பதும் ஞானும்சர்களான கடவுள் கிருபாபிரசாத கைவல்யர்களால் மட்டும் அடையக்கூடுமேயன்றி யேனைய அசுர சம்பத்தாகிய அஞ்ஞானபாச பாவகிருத்தியர்களாலே பெறுதலசாத்திய மெனவுங்கூறி அவர்கள் பெரும்பாலும் துக்காஸ்பதமான கேவலசனனங்களையே பெறுவர்களென்றும் இந்த அத்தியாயத்தின் வாயிலாகக் கூறத்தொடங்குகின்றார்.

சுவாமின்! மேலே கூறியபிரகாரம் இவ்வுலகின்கண்ணே உத்தமோத்தமர்களா யாவராலும் விசுவாசிக்கப்பட்டு வியந்து கொண்டாடப்படும் மகாவிவேகிகளாலும் அடையமுடியாதெனத் தோற்றுகிறதே! அங்ஙனமாக மற்றைச்சாதாரணர்கட்கெங்கே கிடைக்கப்போகிறதெனச் சந்தேகிக்கின்றேன். அருச்சுன! நீ கூறியவாறு அதுமிக அருமையான காரியமேயாம். ஆனால் அந்த சம்பத்தைப்பற்றி இருவகையாய்ப் பேசப்படும். அதாவது தெய்வசம்பத்து அசுரசம்பத்து என்பனவாம். இவற்றுள் தெய்வசம்பத்தைப் பெறுபவர் இவ்வுலகத்திலே அதியபூர்வமாய்க் காணப்படுவர். மற்றும் அசுரசம்பத்தைப் பெற்றவர்களோ மிகப்பலராயிருப்பர்; இவர்களாலேயடைதலென்றுமில்லை. பின்னை யிவர்களடைவதுதான் யாதோவெனில், நரகத்தைத் தவிர்த்து வேறுயாதுமில்லை; இவர்களையே நீயுங்கூறியதென்க. ஆகவே இவ்விரு சம்பத்துகளைப்பற்றி உனக்கு யாமுபதேசிக்க வேண்டுவ தவசியமாதலின் ஈண்டு விரிவாய்க் கூறுவோங் கேட்பாய். அருச்சுன! ஒருவன் தெய்வசம்பத்தை யுடைத்தாயிருத்தற் கடையாளமாக அவன் சுத்தமான சத்துவகுண விர்த்தியிலேயே புத்தியை பிரவிர்த்திக்கச்செய்து எவைகளினிடத்துஞ்

---

* வித்யா — ஞானம்.

சிறிதும் பயமின்றியேயிருப்பன். உத்தமர்கட்குத் தம்மாலியன்ற வாறு உதவிபுரிவன். தனது பஞ்சேந்திரியங்களையும் தீயகாரியங்களிற் செல்லவொட்டாதடக்கிப் புண்ணியகாரியங்களிலேயே செலுத்திவருவன். மாயாவசத்தனாகாது ஞானவசப்பட்டேயிருப்பன். மற்றும் எவர்பாலும் மிதம்பேசுவன். ஐந்துவகையாக யாகாதியனவுஞ் செய்வன். இன்னும் வேதசாஸ்திராராய்ச்சியுந் தியானுபிவிர்த்தியுமேனைத் தவமுஞ்செய்து வருவனென்க. 1

அருச்சுன! இன்னும் யாதொருசீவனுக்கும் தன்மனமாற இம்சைசெய்ய உடன்படவேமாட்டான். அன்றி அவனுக்குத் தீயவொழுக்கங்களென்றால் நஞ்செனத்தெரிந்து விலகிநிற்பன். என்றும் உத்தமமார்க்கானுபவமே மேலிட்டுக்கொண்டுவரும். மகாசாத்மீக விவேகமும் தானதரும சிந்தையுமாயிருப்பன். யாதொரு காரியாதிகளிலும் மயங்கமாட்டான். அன்னியருடைய குணதோஷங்களை எள்ளளவுங்கருதான். ஆறறிவுயிர்முதல் ஓரறிவுயிர் பரியந்தம் இரக்கமுடையவனும், அவன் சித்தம் சுத்தமான ஜலத்தைப்போன்று நிர்மலமாயிருக்கும். மற்றும் விஷயானுபவங்களி லழுந்திவிடாது சமாதானமாயும் சாவதானமாயுமிருந்து பாவகாரியங்களிலும், விசேடமில்லாத சாமானியங்களிலெல்லாந் தன்புத்தியைச்செலுத்த லெச்சைகொண்டு கிருபணகுணமின்றியே விளங்கப்படுவன். 2

அருச்சுன! இவையன்றி யின்னும் யாதொருவருக்கும் எவ்விததுரோகமுஞ்செய்யாது எந்தவிஷயானுபவங்களிலும் அபிமானமின்றி அகப்புறச்சீலமும் குரோதாதியுமற்றுத் தைரியமனசும் சாந்தநிலையும் நல்ல உத்தமாம்சமும் பொருந்தியவனாய்க் காணப்படுவன். ஏ பார்த்தா! இவ்வாறாய பலவகைச் சத்குணகிருதியனை எம்பக்தனுக்கு எம்மிடத்துள்ள நீங்காதபத்தியினாலேயே மேற்கூறிய உத்தம சத்தாம்சங்களெல்லாம் பொருந்தினவென்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆகையால் இத்தகைய உத்தமமான விசேஷங்களோடு கூடியிருத்தற்கே தெய்வசம்பத்தென்று கூறுவர்கள். 3

அருச்சுன! மற்றும் அசுரசம்பத்தைப்பெற்று எக்காலத்து மீளாத சர்வசாமானியர்களது இலக்ஷணமுங் கேட்பாய்: சத்துவகுணந்தங்கிய சாது சந்நியாசிகளைத் துரும்பெனமதித்து இகழ்ந்தும், காமக்குரோதாதியனவும், இடம்பம் படாடோபம், பயங்

கர ஆர்ப்பாடம், யாதினுமபிமானம், தானெனும் அகங்காராதியன ஆகிய இத்தியாதி சிற்றினச்செய்கைகள் பெரிதும் நிரம்பித் தெய்வம், சுவர்க்கநரகம், பாவபுண்ணியம், நல்லார்பெரியார் முதலிய இவைகளுண்டென்கிற உணர்வேயில்லாதிருப்பர். ஆகவே இவ்வாறுய அவிவேகச் சரக்குகளைப் பூரணமாய் நிரப்பியுள்ளவர்களையே அசுரசம்பத் துடையவர்களென்று அறியக்கடவாய். 4

அருச்சுன! இதுகாறும் இருவித சம்பத்துகளின் விவரணங்களையுந்தெரிந்தாய்; இனி இவைகளினுல் அன்னவரடையும் பலன்களையுஞ் சிறிது கூறக்கேட்பாய்: மேற்கூறிய தெய்வ சம்பத்தைப் பெற்றுள்ளார் மோக்ஷத்தை மிக எளிதாயும், அசுரசம்பத்தோடுங் கூடியவர்கள் நரகத்தை மிக எளிதாயும் அடையப் பெறுவார்களென்பது வேதசம்மதமாக யேற்பட்டுள்ளது. இவ்விருவகையுள் நீயோ மிகச்சிறந்ததாயுள்ள தெய்வசம்பத்தையடைந்திருக்கிறுயாதலால் எவ்விதத்தும் உனக்கு யாதொரு சந்தேக கிலேசங்களுமின்றி மோக்ஷமே சான்னித்தியமாய்க் கிடைக்குமெனவறிக. 5

அருச்சுன! இப்படி யிருவித பாகுபாடான சம்பத்துள் முதன்மையான தெய்வசம்பத்தைச் சாங்கோபாங்கமாக உனக்குபதேசித்தோம். பிறகு அசுரசம்பத்திக்கூறினேம். ஆயினுமிதனைவிரிவாய்க் கூறுதுவிட்டோமாதலால் இனியுமதைப்பற்றிப் பெரிதுங் கூறக்கேட்பாய். 6

அருச்சுன! மிகத்தாழ்வான அசுரசம்பத்துடையோர் அதர்மாதிகளிலே பெரிதும் பிரவேசித்தும், தர்மாதி சத்துவவிஷயங்களிலே சிறிதுஞ் சிந்தனையற்றவர்களாய்க் காணப்படுவார்கள். மற்றுந் தற்சூழ்ந்த ஜீவான்மாக்களிடத்திற்றயவும் பொருமையுமின்றிச் சீலத்துவம், உண்மைநெறிநிற்றலாதிய விசேஷகுணங்களற்றவர்களாயும் விளங்கத்தெரிகுவாய். 7

அருச்சுன! பின்னும் ஆன்மாக்கள் உய்யுநெறிநின்றெழுகுமாறு கடவுள்கிருபையாலேற்பட்ட சட்டதிட்டங்களாகிற வேதசாஸ்திரங்களைக் கொஞ்சமேனு மாராய்ந்தறியமாட்டார்கள். அதோடுநில்லாது அவைகளில் அசத்திய புத்தியுமுண்டாகும். காணப்பட்ட இப்பெரிய பூமண்டலாதியவைகளை வகுத்தற்குமோர் கடவுளிருக்கவேண்டுமென்றுணாரும் உணர்ச்சியும், அக்கடவுளிடத்தே பத்திமையும் சிறிதுமற்றவர்களாயிருப்பர். இன்னும்

இருவினைப்பயன்களாகிய பாவபுண்ணியங்களுண்டென்பதிற் சந்தேகமுடையவர்களாய்ப் பிரஜாவிர்த்திக்குக் காரணம் ஆண்பால் பெண்பாலென்னு மிருபாலாரது காமநுகர்ச்சியேயன்றிக் கடவுள் சிருட்டியன்றென்றும், நம்மாற் காணப்படும் உலகம் சத்தியமானதேயென்றும் இப்படி பலவாறாகத் தங்கடங்கள் அபிப்பிராயம் போனபடியெல்லாம் பிதற்றி யிவ்வுலகமியல்பேயன்றி யெங்கடவுளாலும் படைக்கப்பட்ட தன்றெனவுங் கூறும் நாஸ்திகர்களாய் விளங்குவரென்க. 8

அருச்சுன! இவ்வாறாக அவரவர்களுக்குத் தோன்றியவாறெல்லாம் சாம்பிரதாயமாய்ப்பேசித் தங்கள் வாழ்நாளை வீணாகக்கழித்து மனிதருள்ளே பதரென்று வெறுக்கத்தக்க யோக்கியர்களாய், மறுமைப்பயனாகிய பேரின்பப் பெருவாழ்வெய்தற்கு உரிமையான மெய்ந்நெறியில்நில்லாது துராத்மாக்களாய் அயுக்தி பூர்வமாக வீணேயாயும் பேயவதாரங்களாயு மிருப்பர். இன்னும் யாவரேனும் அபூர்வமாகச் சன்மார்க்கிகளாயிருப்பவர்களையுந் தூஷித்துக் கெடுத்துக் (தான்கெட்டதுமன்றிச் சந்திரபுஷ்கரணியையுங்கூடக் கெடுத்தான்) என்பதுபோல நல்லோரை நிந்தித்து அவர்களுக்குள்ள பிராரத்தசேட பாவங்களையும் விசேடமாய் மூட்டைமூட்டையெனச் சுமந்து கடைசியாக எரிவாய் நரகத்தையே தனக்குச் சொந்தமாக ஆங்கேசென்று ஆக்ஷிசெய்வர்கள். இன்னுஞ்சிலர், தங்கள் புண்ணியத்துக்கீடாகக் கிடைத்த சம்பத்தைக்கொண்டு திருப்தியடையாது பற்பல காரியாதியனுபவங்களிலெல்லாம் ஆசைகொண்டும், மேலும் மேலும் காசே காசேயென்று ஆசாவேசங்கொண்டு அகிலமெங்கும் அலகையைப்போலச்சுற்றி அதர்மவழியில் பொருளைப்பலவாகச் சம்பாதித்துப் புண்ணியகாரியாதிகளிலே சிறிதுஞ் செலவுசெய்யாது வீணை அக்கிரமாதிய காரியங்களிலேயே அப்பொருளனைத்தையும் அழித்துத் தானந் தவம் விரதாநுட்டான சுசீலத்துவமுமிழந்து உலகவிரோதமான காரியங்களைச்செய்து இருகான்மாடெனத் திரிந்துழன்று சனனமரணத்துக்கே யோக்கியராய்க் கிடப்பர். 9

இன்னமுங்கேட்பா யருச்சுன! தங்கள் ஆயுள்காலம் வரையில் கேவலமாகிய நிபகாரியாதிகளையே மகாமோக்ஷ சாதகம் போலச் செய்தும், உள்ளபடி பகவதாராதனை செய்வதுபோல

எண்ணமாத்திரங்கொண்டு படாடோப டம்பாதி குரோதம் மதம் என்பவைகளால் அறிவிழந்து, யாமும் விரதானுட்டானங்கள் செய்கின்றோமென்று பிறரறிய போலியனுட்டானாதிகளும் மற்றும் துர்த்தேவதைகளைப் பிடித்துக்கொண்டு பேயாட்டத்திருவிழாவையுங் கொண்டாடிமகிழ்வர். இம்மகிழ்வு அறிவாரிகழ்வுக்கே யேதுவாகுமெனவறிக. 10

சத்தியகுணோத்தம! இவைமட்டோ, இன்னுமோர் சார்பார் தங்கட்குரிய விஷயங்களிலே காமியநுகர்ச்சியால் விருதாவாக போதுபோக்கி அதுவே தங்கட்கின்றியமையாத மோக்ஷானுபவமெனக்கொண்டும், காலமெல்லாம் அந்த கேவலானுபவத்துக் கேதுவாகவேண்டிய திரவியாதிகளைத் தேட்டஞ்செய்வதே முக்கியமான நாட்டமாக அதுவிஷயமான பிரவிர்த்தியிலேயே விருப்பமுடையவர்களாயிருப்பர்கள். 11

அருச்சுன! இன்னும்பலர், நியாயா நியாயமின்றிப் பலவித பாவமார்க்கங்களினாலே மிகச்சிரமத்தோடு பொருட்சம்பாதித்துக் காமாதியறுவித குணங்களாகிய கயிறுகளாற் கட்டுண்டு மதமீறி யிதமாறிச் செய்கருமங்க ளின்னதெனவுமோராது மேற்கூறிய காமக்குரோதாதிய சம்பந்தமான பரமாபாச விஷயானுபவங்களையே கொண்டாடிக் குடும்பசாகரத்தில் வீழ்ந்து திண்டாடிநிற்பர். 12

அருச்சுன! இத்துணைச்சீலத்துவ மகாபாசச் சிகாமணிகளாவார் தன்னைச் சூழ்ந்தாரிடத்தும் ஒத்தாரிடத்தும் மிகப் பெருமைபாராட்டி நான் செய்துவரும் வியாபாரத்தில் இன்றளவும் நின்ற இலாபத்துகை யிவ்வளவு; யேர்க்கனவே மூலதனமாயுள்ள திவ்வளவு, இனிவரக்கூடிய திவ்வளவாகும். ஆக இம்மூவகையாலும் நம்பால் இம்மட்டு தொகைக்கு யேற்பட்டுவிட்டது இனி நாம் பிரபுவெனும் பேரும்பெறுவோம். நம்முடைய யோகமேயோகம், நம்முடைய பெருமையே பெருமை, நம் வாழ்வேவாழ்வு; இனி நமக்கென்ன தாழ்வு, யாதொன்றுமில்லை; நாம் நினைத்தவாறெல்லா மனுபவிக்கலாம்; என்னும் கெர்விதவாகனாரூடர்களாய் மெய்ந்நெறியுணராது யிறுமாந்துழல்வர். 13

அருச்சுன! மேற்கூறிய சுகானுபூதிக்குரிய அவிவேகிகளது ஞானமேதெனின்றால், யெந்தவிஷயங்களிலும் தானே பிரதானமாக முன்னின்று, நானேயெல்லாச்சுகங்களையு மனுபவிப்ப

வன், என்சுகத்துக்குமுன்னே மற்றையர் சுகமெல்லாம் கிஞ்சுகமேயென்றும், நானே பலவான், என்பலத்துக்குமுன்னே மற்றையர்பலமெல்லாம் வீணசபலமேயென்றும், நானே சன்மார்க்கன், என்சன்மார்க்கத்தின்முன்னே மற்றையர் மார்க்கமெல்லாம் புன்மார்க்கமேயென்றும், நான் ஈசுரத்தன்மைவாய்ந்தவன், என் ஈசுரத்தன்மைக்குமுன்னே மற்றையர்தன்மையெல்லாம் சனீஸ்வரத்தன்மையே யென்றும், நானே சத்துருசங்காரன், என் சங்காரத்தின்முன்னே மற்றையர் சங்காரமெல்லாம் வெங்காரமேயென்றும் இவ்வாறாகத் தன்னையேபுகழ்ந்துத் தான்றோன்றித் தம்பிரானாய் விளங்கி யெல்லாராலுமிகழப்படுவர். 14

அருச்சுன! இன்னும் அன்னோர் செல்வம் குலம் கோத்திரம் மாடுமனை பெண்டுபிள்ளை யௌவனம் அழகு முதலியவைகளில் எனக்குச் சமத்துவமுள்ளார் ஒருவருமில்லையென்றும், மற்றும் வேள்வி, கூத்தாடுவோன், பாடுவோன், கவிராயன், வித்வாம்சர்கள் ஆகிய இன்னோர்க்கெல்லாம் என்னிஷ்டம்போலச் சன்மானிப்பேன்; என்னைப்போலச் சன்மானிப்போர் இங்கு எவரையுங் காண்கிலேன் என்றும், யான் பலவிதபேரும் பெருமையும்பெற்று சந்தோஷமாகக் காலங்கழிக்கிறேன் என்றுங்கூறி அவிவேக பூரணப்பிரசங்கியா யகமகிழ்ந்திருப்பர். 15

அருச்சுன! கேட்டனையோ? இவ்வாறாய மந்தமதியினர் பலவாறாய பிராந்திக்குட்பட்டுக் காமாதுரராய் மோகவலையிற் கட்டுண்டு பலவித போகானுபவிகளாய் நஞ்சினுங்கொடிய வஞ்சியரிடை நடுப்புழையிலே சதாமூழ்குவதே பெரும்பேறாகக் கொண்டு ரௌரவாதி நரகத்தையே யடைதற்குத் தயாராகவிருக்கின்றனர். 16

வெற்றிகொள்வீரய! வேறுசிலர், தனக்குள்ள சொற்ப திரவியத்தைக்கொண்டே தன்னைப்பெரியதோர் கோடீஸ்வரனெனமதித்து யாவரையுந் தன்கீழ்ப்படுத்தவெண்ணமுடையவர்களாய் நாம் இதுகாறும் பூலோகானுபவங்கள் யாவையுங் குறைவின்றி யனுபவித்துவிட்டோம்; இனிதேவலோகத்திலேபோய்த்தேவர்களாகப்பிறந்து தேவபோகங்களை யனுபவிக்கவேண்டித் தேவதிருப்தியாகிய யாகங்கள் செய்வோமென்று கொடிகட்டி வீணாடம்பரங்களைச்செய்து சாஸ்திரங்களை நன்கறியாத சாமானிய பிராமணர்களை யாகாதிய நடத்தும் ஆசிரியர்களாய் வைத்துக்

கொண்டு பசுபந்தயாகஞ் செய்வதாய்ப் பறைசாற்றி அஜமர்த்தனாதிய கர்மங்களெல்லாஞ் செய்து வீண் இடம்பத்தினளவாக அநேக பொருள்களைச் செலவிட்டு ஈகையுமிரக்கமு மில்லாதுதாகமென்பாரைத் தடிகொண்டுமோட்டும் தயாசொரூபாளாகவுமுள்ளார். 17

அருச்சுன! உடலொடுபிறந்து உடலிலேவளர்ந்து உடலுக்கே * ஊறுசெய்யும் உடற்பகையாகிய காமக்குரோத லோப மோக மதமாற்சரியமென்கிற மூர்க்கச் சகோதரரைத் தனக்குச் சகாயர்களாய்க்கொண்டொழுகும் ஷை அஞ்ஞானபிரயுக்களாவார், நாம் எந்தச்சரீரங்களிடத்தும் அந்தர்ப்பூதமாய்விளங்குவதை ஒருசிறிதுமுணராதவர்களாயும், நமது பகிர்முக நடவடிக்கைகளைக் கொண்டு நம்மைச் சர்வசாமானியமான மனிதப்பிறப்பினனேயென்றும், மற்றும் பலவாறு தூஷித்தும், நம்மிடத்தே நீங்காது பத்திசெய்துவரும் பாகவத சிகாமணிகளினது ஆப்தவாக்கியங்களைச் சிறிதுஞ் சிந்தித்தொழுகாதும், அதோடு நில்லாது அப்பரம பாகவதர்களை மனம்போனபடியெல்லாம் நிந்தித்துச் சமயம்நேர்ந்துழி யாகாதியனவுஞ்செய்வர்கள். ஆகவே இவர்கள் யாகும் மரணயோகமாய்க் கடைசியாக வெரிவாய் நரகமே யிருப்பிடமாவதன்றி மற்றெதுவும்பெற அருகராகார். 18

சுவாமின்! இவ்வித பரமஞான சூன்யர்கட்குக் கதியென்னவோ? அருச்சுன! எம்மையும் எமதருமைப் பக்தசிகாமணிகளையுந் தூஷித்தபரமசண்டாளர்களுக்குக்கதியும் வேண்டுமோ! இவாகட்கு நல்லகதியேகிடையாது. மனிதர்களுள்ளே பிறக்கினும் கேவலம் மிலேச்சராகவும் மகாபாவகுருதர்களாயும்பிறந்து பஞ்சமகாபாவத்துக்கு இருப்பிடமாயும்விளங்கி அனுசாரப்பொக்கிஷமாய்ச் சதாபிறந்திறந்துழலும் சம்சாரசாகரத்திலே துக்கமென்னும் அலையாலெற்றுண்டு அசுரசம்பத்தோடு கூடிவாழ்ந்து மீண்டும் மகாபாவிகளிடமாகப் போய்ப்பிறப்பர். 19

அருச்சுன! இன்னும் அவர்களை எக்காலத்தும் நம்முடைய பாதசேவைக் காளாகாவண்ணம் மனிதப்பிறப்பின்கண்ணே பிறவாமற்செய்து கேவலம் மலை வன முதலான அதி கடின பிரதேசங்களிலே அசுரயோனியென்கிற கரடி புலி மலைப்பாம்பு

* ஊறுசெய்தல் - துன்பஞ்செய்தல்.

எறும்பு புழு முதலிய அதிகேவல சனனங்களினிடத்தே பிறக்கச்செய்வோம். 20

சுவாமின்! இதுகாறுந் தேவரீர் திருவாய்மலர்ந்தனவற்றால் அசுரசம்பத்தும் தேவசம்பத்து மின்னவையெனத்தெரிந்ததோடு அவைகளையடைந்தாரடையும் பலாபலன்களும் தெரிந்துகொண்டேன். இனிநான் அசுரசம்பத்தையடையாது தெய்வசம்பத்தையே யடையும்படியானதும், அதனால் மோக்ஷம் லபிக்கும்படியானதுமான சுலபமார்க்கத்தை யெனக்கனுக்கிரகிக்கப் பிரார்த்திக்கிறேன். அருச்சுன! ஆன்மாக்கள் மோக்ஷமடையாது கெடுத்து நாசஞ்செய்து அசுரசம்பத்தை யடையும்படிச்செய்வது காமக்குரோத லோபம் என்னும் மூவிதகுணங்களாம். இந்த முக்குணங்களைவிட்டவர்கள் மேலுலகத்திலே சென்று நித்தியசுகத்தை யனுபவிப்பர்கள். இக்குணங்களைச் சார்ந்தொழுகுவார் நரகமே கதியெனப்பெறுவர் ஆகவே இந்தவுண்மையையறிந்த சத்தியபுத்தியினர் இக்குணங்களோடு கூடிவாழாதுநிற்பரென்க. 21

சுவாமின்! இம்மூன்றுகுணங்களின் வழிச்செல்லாதவர் எக்கதியடைவர்? அருச்சுன! துக்கத்துக்கே ஆஸ்பதமாயிருக்கிறதும், பின்பு நரகத்திற்றள்ளுவதுமான மேற்கூறிய குணங்களைச் சுத்தமாக விட்டவர்கள் தத்துவசித்திசெய்து ஆத்மவிசாரணையான ஞானவியவகாரங்களைக்கொண்டு ஆத்ம தரிசனஞ்செய்ய விருப்பமுடையவர்களா யிருத்தலால் அவர்கள் மகாபரிசுத்தாளாய்ச் சீவன்முத்தர்களென் றழைக்கப்பட்டு ஈற்றில் மோக்ஷ பதவியையே யடைவர்கள். 22

அருச்சுன! யாம் மேலேகூறியபடி காமாதிய மூன்று குணங்களையும் விடாது அநுசரித்துக்கொண்டு வேதசாஸ்திர விரோதமாக நடந்துவருபவர்கள். அவிவேகத்தினாலே ஞான சூன்யர்களாய் எக்காலத்தும் மோக்ஷசுகத்தை யடையவேமாட்டார்கள். இதிற்கொஞ்சமுஞ் சந்தேகம் வேண்டாம். 23

ஆகையாலே அருச்சுன! ஞானமார்க்கத்தையும் அஞ்ஞான மார்க்கத்தையும் மிகத்தெளிவாய்க் கூறத்தக்க சுருதிகளின் சாராம்சங்களை நன்காராய்ந்தறிந்து இராசத தாமதகுண காரியங்களைப் பின்பற்றாது சத்துவகுண காரியாதிகளையே பிரதானமாக்கொண்டொழுகி உனக்கு விருப்பமானபடி உன் சத்கர்மாக்

களைச் சிறிதுந் தாழ்க்காது சிரத்தையோடுஞ்செய்து வருவையே யானால் நின்மனம் நிர்மலத்துவமெய்தித் தெய்வசம்பத்தாகிய உத்தம சம்பவங்களையெல்லாம் பெற்றுத் தத்துவஞானவாயிலாகச் சாயுச்சிய பதவியைப்பெறுவாய். 24

இதனால் தேவசம்பத்து அசுரசம்பத்துகளின் இலக்ஷணமும், தெய்வ சம்பத்தையடைந்தவர்கள் சிரத்தாபத்தியினாலே தத்துவ விசாரணைசெய்து சித்திபெற்று மோக்ஷபதவியைப் பெறுவர்களென்பதுவுந் தோன்றுகின்றது. சுபம்.

தெய்வ அசுரசம்பத்தி யோக அத்தியாய

முற்றிற்று.

ஆட அத்தியாயம் 16–க்கு–சுலோகப் பொழிப்பு-595.

## பதினேழாவது அத்தியாயம்

# சிரத்தாத்திரய யோகம்.

அவதாரிகை:—வேதசாஸ்திராதிகளில் விதித்தவாறு உள்ளும் புறமுமொத்து சாத்துவித சிரத்தாபத்தியோடே கன்மஞ் செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறு செய்துவருவோர் நிச்சயமாக மோக்ஷ சாம்பிராச்சியத்தைப் பெறுவரென்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் சாஸ்திரோக்தமாகச் செய்வதைவிட்டுப் பூர்வீக சாம்பிரதாயபிரகாரம் தங்கடங்களிஷ்டம்போல் பகவதாராதனைமுதலிய உபாசனைகளைச் செய்துவருபவர்களுமுண்டே! அந்தச்சிரத்தாபத்தி யெத்தன்மையது? அதன் பிரயோசனமென்ன என்பதான அருச்சுனனது அபிப்பிராயத்தையறிந்து ஸ்ரீகண்ணபிரான் "மோக்ஷாபேக்ஷையுடையவர்கள் சாத்துவிக கன்மத்தாலன்றித் தங்கள் பூர்வீக சாம்பிரதாயத்தா லுபாசிப்பார்களாயின் மோக்ஷம் லபிக்கமாட்டாதென்றும், அந்தப்பூர்வீக சிரத்தையும் மூவகைப்படுமென்றும் விவரமாக இந்த அத்தியாயத்தின்மூலமா யுபதேசிக்கத் தொடங்குகின்றார்.

சுவாமின்! சென்ற அத்தியாயத்தின் சாரமாக வேதசாஸ்திரங்களிலே விதித்தவண்ணமாக எவர்களுந் தத்தம் சுதர்மாசார கர்மங்களை யனுட்டித்து ஞானவந்தாளாய் மோக்ஷமடைதல் வேண்டும். அங்ஙனமின்றித் தங்கடங்கள் மனம்போனபோக்கிலே கன்மதன்மஞ்செய்வார் பிறந்துபிறந்து யிறந்திறந்துபேய்க்காற்றிலகப்பட்ட பஞ்செனப்பரப்பரென்றுஅருமைய தருமையானதாகவேயறிந்தேன். மற்றும் அவ்வேதாகம விதிவழியைத் தவறியவர்களாய் அவலமதிகொண்ட அலெக்ஷியத்தாலேனும் சோம்பராலேனும் தங்களுடைய பண்டைய வழக்கப்பிரகாரம் ஏதும் இஷ்டமான சில்லரைத்தெய்வங்களை மிகச் சிரத்தையோடுபாசித்து வருவார்களாயின் அவ்வுபாசனை முக்குணங்களில் எக்குணத்தைச் சார்ந்ததோவென்பதைத் தெரிந்துகொள்ள விருப்பமுடையேனாதலால் தயைசெய்தருளுக. 1

அருச்சுனனே! சதுர்முகனார் வாயிலாகவந்த சதுர்மறைவிதிகொண் டுபாசனைசெய்து வருதலே சத்துவகுண சிரத்தை

யென்றும், அதுவே பரமபதிக்கு உகந்ததெனவும், அதனாலேயே கிடைத்தற்கரிய ஞான மோக்ஷங்களெல்லாம் கைவல்யமாமென்றும் சுருதியாதிகளின் கொள்கையாம். இன்னும் நவீன உலகியல் கொண்டாவது அல்லது பண்டையகாலப் பழக்க வழக்கமாயாவது கொண்டாடப்படும் உபாசனாக்கிரமங்களையெல்லாம் ஆராயுங்கால் முக்குணத்தனவாகவே காணப்படும். இந்த சத்துவாதிய குணத்திரயங்களைத் தழுவிய சிரத்தா பத்தியும் மூவகையாகப் பூர்வசென்ம வாசனையினாலேயே பிரிந்து தோன்றுமென்க. 2

அருச்சுன! பொதுமுறையாகப் பிராணிகளுக்கே பூர்வ சென்ம கன்மவாசனையின் காரணமாகவே சத்துவாதி குணங்களமைந்துள்ளனவாயினும் ஒருவன் தன் முந்தியசென்னத்திலே அவன் புத்தியின் விர்த்தியானது எந்தகுணத்தைத் தழுவியதாயிருந்ததோ அதேவாசனையால் இந்தசென்மத்திலும் சத்துவ சிரத்தையிலிருந்தால் சத்துவகுண சிரத்தையும், இராசதகுண சிரத்தையை யுடைத்தாயிருந்தால் இராசதச்சிரத்தையும் விசேடமாக அமையப்பெற்று விளங்குவன். 3

அருச்சுன! ஒருவனுக்கு உபாசனாசிரத்தைச் சத்துவ குணத்தைச் சார்ந்ததாயமைந்திருந்தாலும், சத்துவத்தில் இராசதம் சத்துவத்தில் தாமதம் எனச் சமயசந்தர்ப்பத்துக்குத் தக்கினவாறாக யேகதேசத்தில் கலந்துங்காணப்படும். அஃதெவ்வாறெனின், பூர்வசம்பிரதாயப்படியாவது அல்லது நவீன தேசாசாரப்படியாவது தேவபோகங்களை விரும்பி இந்திரன் முதலான தேவர்களை யுபாசனைசெய்து வருவார்களாயின் அந்தவுபாசனை சாத்துவீக சிரத்தையென்று கொள்ளவேண்டும். மற்றும் அத்தேவாம்சங்கட்கடுத்துள்ள இராக்ஷதாம்சங்களை யுபாசித்துப் பலனையெதிர் நோக்காகவுடைய சிரத்தைக்கு இராசதகுணச் சிரத்தையென்றும், கேவலமான அசுரசம்பத்தாகிய துர்த்தேவதா பத்தியுபாசனையால் அற்பமான பலனையுத்தேசித்துச் செய்யப்படும் சிரத்தையெவையோ அவைகளைத் தமோகுணச் சிரத்தையெனவுங் கொள்ளவேண்டும். ஆகவே இவ்வித இருவகைக் குண விசேடத்தாலாய சிரத்தையினால் கேவலமான அநித்திய போகாதிகள் லபிதமாய்ச் சனனமரண சம்சாராதிகள் விருத்தியாமேயொழிய ஞான மோக்ஷாதிய உயர்தரப் பதவிகளானவை கிடைக்கமாட்டாவென்றும் நன்றாயுணரவேண்டும். 4

சுவாமின்! நித்தியமான ஞானமோக்ஷங்களைத் தரத்தக்க சத்துவகுணச் சிரத்தையா லுபாசிப்பதை விட்டுச் சாமானிய அநித்திய போகாதிகளுக் கேதுவான சிற்றினச்சிரத்தையில் பிரவிர்த்திப்பதெதனாலோ தெரிவிக்க விரும்புகிறேன். அருச்சுன! மேலேகூறியதான மூன்றுவித குணத்தோடுஞ் செய்யப்படும் சிரத்தைகளில் மிகத்தாழ்ந்ததாயுள்ள கர்மசிரத்தையைக்கொண் டொழுகுவோர் இத்தகையோரென்பதையுங் கேட்பாய்: அகங்கார விசேடமான சாமானிய காரியாதி பிடிவாதமும், எவர்களினுந்தான் மிக்கபெருமையுடையானென விளங்கவேண்டுமென்று இடம்பாதிகாரியமும், பின்னும் தனக்கு வேண்டியவாறு அநுபவித்தற் கேதுவாக காமியநுகர்ச்சிப் பிரவிர்த்தியும் விசேடமாயமையப்பெற்றுள்ள விருப்ப பலவந்தர்கள் ஜீவகாருண்யமின்றிச் சுருதிப்பிரமாணங்கட்கு மாறுபாடான அநித்திய பலப்ராப்த கர்மசிரத்தையையே யனுட்டிப்பரென்க. 5

அருச்சுன! நான் ஜீவகாருண்யமாகவே நமது சதுர்முகன் வாயிலாக வெளியிட்டருளிய வேதாகமசாஸ்திராதிகளில்விதித்தவாறு நிஷ்காம கன்மானுட்டானங்களால் நம்மைத் தரிசிக்க வேண்டுவது விகிதமாயிருக்க, அங்ஙனஞ்செய்யாது வேதசிரவணாதிகளில் அசிரத்தையுடையவர்களாய், வீணான விரதாதிகளால் உடலைவாட்டி அவ்வுடலினுரிமையாயுள்ள ஆன்மாவையும் வாட்டமுறச்செய்து, சரீராதிகடோறும் வியாபகமாயுள்ள நம் ஆக்ஞையைத் தவறியவர்களாய்த் தெய்வசம்பத்தையுமிழக்கப்பெற்று கேவலமான அசுரசம்பத்தைக்கொண்டே துக்கசாகரத்திலாழ்ந்துவர். 6

அருச்சுன! இன்னும் இவ்வாறாய சாமானியர்களது போசனம். தானந்தவம் யாகாதிய கன்மங்களெல்லாந் தனித்தனியே மூவிதகுணத்தைப் பொருந்திய நடைபெறுமென்க. இம்மூவகையுள்ளும் பின்னிரண்டு குணங்களைச்சாராது முதற்குணமாகிய சத்துவவிர்த்தியையே கடைப்பிடித் தொழுகல்வேண்டும். அவைகளின் பேதாபேதங்களையும் ஈண்டு விவரிக்கத் தெரிகுவாய். 7

அருச்சுன! முக்குணங்களினு முதற்குணமாய சாத்துவிக குணத்தவன் புசிப்பில் பால் நெய் முதலிய சத்துவகையோடு உருசிகரமான உன்னதவுணவுகளைச் சொற்பமாக வுண்பவனும்,

ஆரோக்கிய தேகபலம் சரீரசுகம் ஆயுள் உற்சாக முதலியவை
களைத் தினேதினே கவனித்து அபிவிர்த்திசெய்தும், மற்றும்
பார்க்கப்பட்டபோதே விரும்பச்செய்கின்ற அதியுன்னத பரிமள
உருசிகர ஆகாராதிய வனைத்தையும்விட்டு வேறுசாமானிய ஆகா
ராதிகளை விரும்புதல் செய்யான். அவ்வாறு கிடைத்தபோதும்
தனக்கென ஆசைகொண்டருந்தாது தற்சூழ்ந்தார், பெரியோர்
முதலானவர்களுக்கும் பங்கிட்டுப் பிறகு தானுந் தன் இஷ்டதேவ
தார்ப்பணத்தோடு புசித்துவருவன். 8

அருச்சுன! இரண்டாவதான இரசோ குணத்ஞனுடைய
ஆகார கிரமங்களையுஞ் சிறிதுகூறுவோம்: அதிகாரசாரமாகிய
உப்புப்புளி கசப்பு கடுகு காரமுதலானவைகளோடும், வரக்ஷிக்
கேதுவான உஷ்ணதியனவுமாகிய அசுர ஆகாராதிகளையே
யெதேஷ்டமாக அடிக்கடியுந் தான்மட்டுமுண்ணும் எண்ணத்
தோடுமுண்பன். அன்றி உண்ணுமுறையாக வுண்ணுது கொண்ட
மட்டும் புசித்துப் பின் அதனால் பலவித துன்பத்துக்குள்ளாகி
ரோகசம்பன்னனாய்ச் சோகமோகத்திலாழ்ந்தி வருந்தாநிற்பன்.

அருச்சுன! மூன்றாவதான தமஸ்என்கிற குணத்தையுடை
யோன் அதிதாக சோக ரோக மோகத்தையுங் கொடுக்கின்ற
இரசவர்க்கங்களுடனே துர்நாற்றப் பதார்த்தங்களை நறுமணங்
கமழ்வதுபோல விருப்பங்கொண்டு கெட்டுப்போனதும் நாட்பட்
டதுமானவைகளையும், எச்சில் முதலிய ஈனசம்பந்தமுள்ளதாய
அபரிசுத்தாபாச வஸ்துக்களையும் மிகப்பிரியமாகவு முட்கொண்
டுழல்வன். 10

அருச்சுன! மற்றும் யாகாதிகளில் சாத்துவிக யெக்கிய
மாவது: பலனை யெதிர்நோக்காதும், வேதசாஸ்திர விதிவழுா
தும், மிகச் சிரத்தாபத்தியோடு தேவதார்ப்பணமாகத் தீவிரதர
மான அன்போடுஞ் செய்துவருதலே உத்தமமான வேள்வி
யாகும். 11

அருச்சுன! தேவலோகானுபவப் பிரியத்தோடும், ஏனை
யோரால் மிகநன்குமதிப்பெய்தல் வேண்டுமென்ற யெண்ணத்தை
யகத்தே கொண்டவர்களாய்ப் பகிர்முகமாக மகாபத்திரசித்தை
யோடுஞ் செய்வதுபோல வினையமாகக்காட்டி அகங்கார வதிகா
ராதிய டப்பப்பிரதி பிம்பாகிர்தியர்களாய்ச் செய்யப்படும் யாகத்
துக்கே இராசதகுண வேள்வியென்று சொல்லத்தகும். 12

அருச்சுன! இன்னுந் தாமதயெக்ஞ மெவ்வாறெனில். வேதாகமவிதியைச் சிறிதுந்தழுவாது யேதோ கிடைத்த யாக திரவியங்களைக்கொண்டும், வேள்வியின் ஆசிரியர்களைக்கடுகடுத்து மந்திரலோபம் கிரியாலோபமாகப் பிராமண சமாராதனை முதலியதுகளையுங் குறைத்து யாமும் வேள்விசெய்த வியாபகனாயி விட்டோமென்னும் அஞ்ஞானாங்கார சீலத்துவத்தோடுஞ் செய்யப்படும் வேள்வியே தாமதகுண வேள்வியென்பார்கள். 13

அருச்சுன! வேள்வியின் பாகுபாடிவ்வாறாக, இனித்தபசின் இலக்ஷணத்தையுங்கேட்பாய்: தவமென்பது பகவத்பிரசாதத்தைக் குறித்ததோர் நன்முயற்சியாம். இத்தவமும் மூன்று வகையினவாகச் செய்யப்படும். அதாவது மனவாக்குக் காய மென்னும் மூன்றினாலும் சக்திபுத்தியானுசாரமாகச் செய்து வருவர்கள். இவைகளுள் முக்கியமாகவுங் கூடுமானவரையிலும் பிறவுயிர்களிடத்தே காருண்யம்பாராட்டல், போதகாசிரியர், சமயாசிரியர், ஞானாசிரியர் என்பாரிடத்தே உள்ளபடி பக்திபூர்வமாகப் பணிசெய்தல், மிகவுஞ் சீலத்துவமாகப் பிரமசரிய ஆசிரமத்தைக்காத்தல், கடவுளிடத்தும், பிரமஞானியர்களிடத்தும் மற்றுமுள்ள பெரியோர்களிடத்தும் ஊன்றிய பக்திமூலமாக வழிபட்டு ஆராதனை முதலியனவுஞ் செய்தல் ஆகிய சத்துவகுணனுட்டானியாயிருப்பதே இக்காயத்தினாற் செயப்படுந்தவமாகும்.

அருச்சுன! இன்னும் வேதாகமபாராயணம், மந்திரசெபம், எவர்பாலும்பயங் கோரமுதலியவையின்றி யினியவசனங்களையே வசனித்தல், அதனினும் உத்தமமான சத்தியவாசகங்களாகிற இதோபதேசங்களையே யெடுத்தோதல், அவ்வார்த்தைகளால் கேட்போரனைவர்க்கும் நன்மை பயப்பிப்பதா யிருத்தலாகிய இவையெல்லாம் புண்ணிய விசேடத்தால் வந்த நாவினால் பேசப் படும் வாக்கின் தவமென்று சொல்லப்படும். 15

அருச்சுன! குற்றமற்ற பரிசுத்த விஷயங்களைக் கருதுதலும், விவேகானந்தத்தி லாழ்தலும், சாந்தமே தனிக்கினிய சுபாவமாக்கொண்டு தன்னாசிரியர் கூறிய ஞானார்த்த வுபதேச உண்மைகளைச் சிந்தித்துத் தெளிதலும், எந்த விஷயங்களைக் கேட்பினும் அவைகளில் சத்துவவிஷயங்களையே புத்தியிற் பதித்தலும், சமயம் நேர்ந்துழி பரமகருணாநிதியாகிய பரம்பொருளைத் தியானித்தலும், மற்றும் யாதொன்றையுங் கருதாது சித்தசுத்

தியா யிருத்தலுமாகிய இவைகளெல்லாம் மானஸ தவமென்று சொல்லப்படும். 16

அருச்சுன! இவ்வாறுயதவங்களும் முக்குணமாறுபாட்டை யனுசரித்தே செய்யப்படுவதால் மூன்றுவகையினவாய்ப் பேசப் படும். அதாவது மிகச்சாந்த நிலையிலிருந்துகொண்டு பலனை யபேக்ஷியாது ஒரேமனதாய்ப் பக்திசிரத்தையோடு செய்யப் படுந்தவமே சத்துவகுண தவமென்று மறைகள் சாற்றுமென்க.

அருச்சுன! இன்னும் இடம்பாலங்காரங்களோடு பிறர்பா லுள்ள நல்லவஸ்துக்களைத் தான்பெற விருப்பங்கொண்டும், தன் னைச் சன்மார்க்கன் என்று எல்லாராலுங் கொண்டாடவேண்டு மென்றும், எவருந் தன்னைக்கண்டமாத்திரத்தே யெழுந்துநின்று கைகட்டி வாய்பொத்தி * அஞ்சலி முதலியனவுஞ் செய்தல் வேண்டுமென்றும், மற்றுந் தன்னைப் பிறர் போஷிக்கவும் பூஷிக்க வும் செய்தல் வேண்டுமென்றுஞ் செய்யப்படுமித்தியாதி பொய்த் தவங்களியாவுந் துக்கயேதுவாயும் அநித்தியமாயு முடியுமாத லால் இதனை இராசதகுண தவமென்றிகழப்படும். 18

அருச்சுன! இன்னும் வஞ்சமே வடிவாய்த்தோன்றிப் பார் வைக்கு சைவப்பழம்போன்று கழுத்தில் தாழ்வட முதலியன பூண்டு பத்தியென்பதே யின்னதெனத் தெரிந்திலனாய்த் தீயகிரி யாம்சங்களால் தன்தேகத்தையுங்கெடுத்து, எவர்க்கு மிதசத் துருவாகிப் பிறர்பொருளைக் கவரும் வஞ்சவிரதானுட்டானங்க ளெல்லாஞ் செய்துவரும் போலித்தவசினருமுண்டு. இவ்வித தவத்தையே தாமதகுண தவமென்று தள்ளப்பட்டு ஈற்றில் எரி வாய் நரகத்தையே யெனதெனப்பெறுவர். 19

அருச்சுன! இதுகாறுந் தவத்தின் பாகுபாட்டைக் கூறி னோம்; இனிதான இலக்ஷணத்தையுங் கேட்பாயாக: தானமென் பது தன்பால்யாசிப்பவர் வேண்டுகோட்கிரங்கி அவர்கட் கன் போடு கொடுப்பதேயாம். இவ்வாறின்றி 'யாம் தசதானங்களை யுஞ் சம்பூர்ணமாகச்செய்து பெரும்புண்ணியத்துக்குப் பாத்திர வானாய்விட்டோம்; நம்போன்று தானஞ்செய்தாரெவருமில்லை.' யென்று கர்விதமமதாபரணம்பூண்டு தான்செய்த தானங்களைப் பற்றிப் பிரகடனாதியனவுஞ் செய்து மறுமையிற் புண்ணிய போகங்களை யபேக்ஷித்தும், பிரதியுபகாரத்தை யெதிர் நோக்க

* அஞ்சலி கரங்கூப்புதல், அதாவது கும்பிடுதல்.

மோகங்கொண்டும் செய்யாது உத்தமவான்களுக்கு அன்போடு பக்ஷபாதமின்றித் தீவிரதரத்தோடு கொடுத்தலே 'சத்துவகுண தானமெனச் சாற்றுவாம். 20

அருச்சுன! இன்னுந் தானபலனையபேக்ஷிதனாய், இந்தத் தானங்களை நாமன்றோ செய்துமுடித்தோம்: வேறே யாவர் செய்யவல்லார்! என்றும், தானம்பெறுவாரைக் கண்டமாத்திரத்தே வருத்தத்தோடும், 'இப்போது சாத்தியமின்று பிறகு வரலாம்' என்று சொல்லிப் பிறகுசெய்தல் ஆகிய இவ்விததானங்கள் இரசோகுண தானமெனப்பெயர்பெறும். 21

அருச்சுன! இன்னும் தானமேற்றற்குச் சிறிதுந் தகுதியற்ற அபாத்திரனுக்கீதல், அநாசாரகாலத்தீதல், நிந்தித்தீதல், பெருமைக்கீதல், வெறுப்புடனீதல், விரும்பியதன்றி வேறொன்றீதல், காலந்தாழ்த்தீதல் ஆகிய இவையெல்லாந் தாமதகுண தானமெனப் பெயர்பெறும். 22

சுவாமின்! தேவரீர் கூறிய தானலக்ஷணங்களை நன்கறிந்தனன். ஆயினும் மேற்கூறிய சத்துவகுண தானமன்றி மற்றை யிராசத தாமதகுண தானஞ்செய்தவர்களுக்கு ஏதும் பிராயச்சித்தமுளதாயின்கூறுக. அருச்சுன! நீகேட்ட தானங்கட்குப் பிராயச்சித்தமுமில்லை; அன்றிப் பலனுமில்லை. என்னெனில், எந்த சதுர்வேதங்களும் எந்தச் சதுர்முகன் வாயிலாகப் பிறந்ததோ அந்தவேதங்களிலே "ஓம் தத்ஸத்" என்று ஓர்வசனம் ஏற்பட்டுள்ளது. இதன்பொருளென்னவெனில், ஓம் தத் ஸத் என மூன்றுபதமாகப்பிரிந்து பிரம்மசொரூபத்தையே பொருளாகக்குறித்து விளங்குகின்றது. இங்ஙனம் ஒரேபொருளைக் குறித்து மூன்றுபதங்க ளேற்படுவானேன் எனின், கூறுதும்; மேலேகூறிவந்தவேள்வி, தானம், தவம் என்னு மூன்றையு முறையே பிரமஞானியரான சீவன்முத்தர்களும், மோக்ஷாபேக்ஷிதரான முமுக்ஷுக்களும், மற்றுங் கிரகஸ்தாசிரமிகளும் தாங்கள் எக்கியதான தவமாதியன செய்யத்தொடங்குங்கால் முதற்கண் ஒவ்வொருவரும் ஒவ்வொருபதத்தை யுச்சரித்துப் பிரம்மஸ்வரூபத்தைத் தியானித்தே பின்பு மேற்கூறிய சத்கன்மாக்களைச்செய்தல் அவசியமும் வேதசம்மதமுமாதலால் அங்ஙனங்கூற நேர்ந்ததென்க.

அருச்சுன! அஃதெவ்வாறெனில், பிரமஞான கைவல்யர்களான சீவன்முத்தராவார் உத்தமமான யாகாதி தானதவ முதலிய கர்மாக்களைச் செய்யத் தொடங்குங்கால் முதற்கண் ஏகாக்ஷரமாகிய ஓம் என்னும் பிரணவத்தை யுச்சரித்துச் சர்வமும் பிரம்ம சொரூப பாவனைகொண்டே செய்தல்வேண்டும். 24

இன்னும் மோக்ஷாபேக்ஷைகொண்ட முமுக்ஷுக்களென்பார் மேற்கூறிய சத்கர்மாக்கள் செய்யத்தொடங்கும் பிரதமத்தில் பிரம்மபாவனையை யுத்தேசித்து தத் என்னும் பதத்தை யுச்சரித்தே செய்தல்வேண்டும். அவ்வாறு செய்யப்படுவதான கர்மாக்களின் பலனையுந் தான்பெற விரும்பாமல் பரப்ரம்மத்துக்கே யாகும்படி யர்ப்பித்தன்முறையாம். 25

இன்னுங் கிரகஸ்தாசிரமிகளான இல்லறம் நடாத்துவோர், நித்தியமாயும் சத்தாயுமுள்ள பரப்ரம்மவஸ்துவை முன்னிட்டுக்கொண்டு விவாகாதியதான தவங்கள் செய்யப்படும்போதெல்லாம் உத்தமமென்னும் பொருள் தருகின்ற ஸத் என்னும் பதத்தை யுச்சரித்தே செய்தல்வேண்டும். அவ்வாறு அநுஷ்டித்துவரும் கர்மங்களெல்லாம் செய்வது நாமல்ல; எல்லாம் அந்த ஒப்பற்ற பிரம்ம வஸ்துவினாலேயே நடைபெறுகின்றதென்றும், பலப்ராப்தியை விரும்பாது எல்லாம் அப்பிரம்மத்துக்கே யாகுகவென்று மனுட்டித்தல் வேண்டும். 26

அருச்சுன! இந்தசத்தென்னும் சப்தார்த்தமானது பிரம்ம வஸ்துவுக்காதலால் வேதபாராயண அதிகாரிகளாவார் எவர்களும் தாங்கள் சமயம் நேர்ந்துழிச்செய்யப்படும் தானந் தவம் வேள்வி விவாகாதிய எல்லா உத்தமகாரியாதிகளின் றுவக்கமாக ஆசிரயிப்பதாலே மூவித பாகுபாடாய்ப்பிரிந்து ஒரேவஸ்துவைக்குறிக்கும் 'ஓம் தத் ஸத்' என்றவாக்கியம் இன்றியமையாததாய் மேற்கூறிய மூன்றாசிரமிகளுக்கும் பொதுமுறையாக வேதத்திற் கூறப்பட்டதாகலின் எவ்வாற்றானு மோக்ஷலபிதத்தையே யுண்டுபண்ணுமென்க. 27

அருச்சுன! இதுகாறும் நம்மாற் கூறப்பட்டதான ஓம் தத் ஸத் என்னும் சப்தார்த்தப் பிரதிப்பிரயோசனங்களை யெந்த கன்மாக்களாலல் அடைய முயல்வார்களோ அந்தயாகாதி தானதவ விவாக கன்மங்களனைத்தும் சாஸ்திராதாரவிகிதமாகச் செய்யப்படினும் அதனால் யாதும்பிரயோசனமில்லாமற் போவதுமுண்டு.

ஏதனுலெனின், உத்தமமான சாத்துவித முறையைக்கொண்டு செய்யாது இராசத தாமதகுணமுறையை யாசிரயித்துச் செய்யப்படுவதாலேயாம். யாதொருபலனையும் பிரம்மத்துக்கே யர்ப்பணமாகவேண்டுமென்றெண்ணாது மறுமைக் கேதுவா யபேக்ஷித்தலாலும் அவ்வாறுகும். ஆகவே மேற்காட்டிய மூன்றுசிரமிகளும் யார்யார் எந்தபத்தையுச்சரித்து நிஷ்காமியமாய்ச் செய்யப்படல் வேண்டுமென்று கூறப்பட்டுள்ளதோ அவ்வாறே சாத்வீக சிரத்தையைக்கொண்டு செய்தன்முறையாம். அவ்வானு செய்வதனு லிம்மையிலே தத்துவஞான மெய்தப்பெற்றுமறுமையில் ஒப்பற்ற மோக்ஷசாம்பிராச்சியத்திலே நிராடங்கயாக ஆக்ஷி செய்வார்களாதலால் அவ்வாறே கடைப்பிடித்தொழுகி நீயும் உத்தமகதியைச் சேரக்கடவாயென் றனுக்கிரகித்தோம். சுபம்.

சிரத்தாத்திரய யோக அத்தியாய

முற்றிற்று.

அ௲ அத்தியாயம் 17--க்கு--சுலோகப் பொழிப்பு-623.

# பதினெட்டாவது அத்தியாயம்

# சந்நியாசயோகம்.

அவதாரிகை:—இதுகாறுங் கூறிவந்த அத்தியாயங்கள் 17-யுங்கேட்ட அருச்சுனன், மீண்டும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மனை நோக்கி ஏ உத்தமாசார்ய! தேவரீர் இந்ததீனனாகிய என்மீது கருணைகூர்ந்தருளிய சதுர்வேத சாரங்களும் மிகத்தெளிவாய் விளங்கியதாயினும் சந்நியாச ஆசிரமாதிய பெருமையையும், மற்றும் உபநிடதார்த்த சாராம்சங்களையும் நன்குவிளக்கி மேற் கூறிவந்த கீதாத்தியாயங்களின் கருத்துகளைச் சங்கிரகமாகவும், முடிபுரையாகவு முபதேசித்தருளவேண்டுமென்று கேட்டதற் குத்தரமாக பகவான் உபதேசிக்கத் தொடங்குகின்றார்.

சுவாமின்! தேவரீர் மேலேகூறியதுணர்ந்தனன். ஆயி னும் இன்னும் உத்தமமான தத்துவ நியதிகளையும் வேதமுடி வாய் விளங்கும் சந்நியாச ஆசிரமத்தின் இலக்ஷணங்களையும் மற் றும் தியாகமர்ம தர்மங்களையும் அடியேனுக்கிரங்கி அநுக்ரகஞ் செய்வீர்களாக. 1

அருச்சுன! யாதொரு அற்பபலனையுங்கருதாது செய்யப் படும் ஈசுரார்ப்பணமான கன்மங்களே சந்நியாசத்தின் முக்கிய மான இலக்ஷியகாரியமாம். இதன்றி பிரதிதினமுஞ் செய்யப் படும் சந்தியாவந்தனாதி * நைமித்திய † பிராயச்சித்த கர்மங் களையும் பெருமைபாராட்டாது முறையே ஈசுரதியானமாகச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்துவருங் கர்மாக்களின் பய னைத்தானடைய விரும்பாது சர்வமும் ஈசுரார்ப்பணமாகவே தியா கஞ்செய்தல் வேண்டும். இவ்வாறுசெய்தலே முறையாமெனச் சர்வ முதறிஞர்களுங் கூறியுள்ளார். 2

உலகின்கண் உச்சீவிக்காநின்ற சீவர்கள் பெரும்பாலும் ஒவ் வொரு சார்பார் ஒவ்வொரு மதத்தினர்களாகவே விளங்குகின் றார்களல்லவா? அவ்வாறாய பற்பல மதத்தினர்களுள்ளே தத் துவபரிசீலர்களான ‡ சாங்கிய மதத்தினர்களும் மற்றுஞ் சமத்

---

* நைமித்தியம் - காமியகர்மங்கள்.

† பிராயச்சித்தம் - கர்மாக்களின் குற்றத்திற்காகச் செய்யப்படும் சாந்தி.

‡ சாங்கியமதத்தினர் - ஆத்மதத்துவஞானிபார்.

துவமான மதத்தினர்களும் அந்தந்த மதாசாரியர்கள் திருவாய் மலர்ந்தருளியவாறே கர்மாக்களையனுட்டித்து மோக்ஷசாம்பிராச்சிய போகபோக்கியங்களை யனுபவித்துவருவார்கள். மீண்டும் இவ்வித போகக்ஷேமங்களுக்கு ஏதுவான காமிய கன்மாக்களால் சனனமரணம் லபிப்பதால் அவ்வித காமிய கன்மாக்களை விட்டு விடவேண்டுமென்று மெண்ணுவர்கள். மற்றுமோர் மதத்தினர் தானந்தவம் யாகாதி புண்ணிய கர்மங்களைச் சிரத்தையோடு செய்யின் அதற்கீடாக மேலுலகங்களிலே சென்று உத்தம போகங்களைப் பெறலாமென்றும் இவ்வாறு மதச்சார்பினர் பலரும் தாங்கள் எதையும்விடாமலே செய்துவருதலியல்பாம். 3

அருச்சுன: இன்னும் மூவகையான தியாகலக்ஷணங்களையும் விவரமாகச் சொல்லுவோங் கேட்பாய்; ஏனெனில், இந்தத்தியாகத்தின் சாராம்சங்களை நன்றாக ஆராயாச்சிலர் தங்கடங்களுக்குக்குத் தோன்றியவாறு மனம்போனபடி விகல்பார்த்தங்கள் செய்து வருவார்கள். இப்படிச்செய்வதால் யாதும் பிரயோசனமின்றாம். என்னெனில், கன்மஞ்செய்யும்போது "தான் செய்வதான வெண்ணத்தைச்" சுத்தமாக விட்டவர்களாய், அவ்வித கன்மபலனையுந் தானடைய விரும்பாமலும், (சர்வகர்ம சாதக திரவியங்களையும் நம்மையுங் கடவுளே படைத்தாராதலால் எல்லாப்பலனும் அவருடையதே, அன்றிச் செய்விப்பவரும் அவரே;) யென்றும் எண்ணமுடையவர்களாயும், சாஸ்திரோக்தமான கன்மங்களைச் செய்துமுடித்து அதன்பயனை ஈசுரார்ப்பணமாகச்செய்யவேண்டுமென்பதே எமது சித்தாந்தமாம். 4

அருச்சுன! இவ்வாறுசெய்தலினுலே பிரயோசனமென்னவென உனக்குத்தோன்றும்; அதற்கு உத்தரமுங்கூறக் கேட்பாய்; தானமென்ன தவமென்னமற்றும்வேள்வியென்ன இவைகளனைத்தையும் நிஷித்தமென்று செய்யாமல் விடலாகாவாம். ஏனெனில், இவைகளைச் செய்துவருவதால் அறிவாளிகளுக்கு மேலும் மேலும் சித்தசுத்தியுண்டாகி ஞானமெய்தி முடிவில் மோக்ஷசித்தியும்பெறுவது நிச்சயமாதலாலென்க. 5

அருச்சுன! மேற்கூறிய கன்மங்களைப் பலனபேக்ஷையின்றி மகா பத்திசிரத்தையோடு செய்தல் வேண்டுமென்னுஞ் சத்துவ குணச் சிரத்தையோடு செய்தும், அவ்வாறு செய்யும்போது ஷை கர்மாவுக்குத் தன்னைக் கர்த்தாவாகக்கொள்ளாது ஈசுரனையே

சர்வகர்த்தாவாகவெண்ணிக்கொண்டு செய்தல்வேண்டுமென்பதே நம் கருத்தென்க. 6

இவ்வாறாக ஒவ்வொரு ஆசிரமிகளும் தங்கடங்கள் வருணாசாரத்துக்கேற்பவாறு தத்தமக்குரிய நித்திய கன்மானுட்டானங்களை விதிப்படிச் சிரத்தையோடு சாத்தியமானவரையில் செய்வதே முறையாகும். அவ்வாறு செய்யாது யேதோ நாமும் கன்மங்களைச் செய்கின்றோமென்று பிறர் மதிப்புக்காகவே அலெக்ஷியமாயேனும் பெருமையைபுத்தேசித்தேனுஞ் செய்யப்படுகிறதினாலே இகபரமிரண்டினுக்கும் யாதொரு பிரயோசனமுமில்லாமற் போவதுமன்றித் தாமததியாகமெனவுந் தள்ளப்படும்.

அருச்சுன! சரீராதியசிரமத்தை முன்னிட்டும், மேற்கூறிய உத்தம கர்மாக்களைச்செய்வது துக்காஸ்பதமென்றும், செல்வச்செருக்கைக்கொண்டும், அஞ்ஞானத்தினாலும்செய்யாது விடுவார்களாயின் அவர்கள்செய்யுந் தியாகத்துக்கு இராசததியாகமென்று கொள்ளாது தள்ளப்படுதலோடு அவர்கள் மோக்ஷார்த்தத்துக்கு பாட்படமாட்டார்களென்க. 8

அருச்சுன! மேலே கூறியபடியன்றி உண்மையானசத்துவகுணத்தோடுங் கூடியவனாய்ச் சிரத்தாபத்தியோடும், யாதொரு பற்றுமின்றிப் பலமுமபேக்ஷியாது சத்தியமான திடவிவேகத்தனாய் எல்லாவிஷயங்களுக்குந் தன்னைக்கர்த்தவ்யமாக்கொள்ளாது ஈசுரனையே முன்னிட்டு செய்யப்படுந் தியாகமே சாத்துவீக தியாகமெனப்படும். அன்றி ஞானமோக்ஷங்களுக்கும் இவையே யேதுவாம். 9

சுவாமின்! தேவரீர் இப்போது உபதேசித்துவந்த சாத்துவிகதியாகத்தைச் செய்யக்கூடிய உத்தமனது இலக்ஷணத்தைப் பற்றி யெடுத்தோதுமாறு பிரார்த்திக்கின்றேன். அருச்சுன! சர்வசாஸ்திர ரீதியாகச் செய்துவந்த கன்மாக்களின் பலாபேக்ஷையில்லாது ஈசுரார்ப்பணமாகவே செய்துவந்த யாதொரு உத்தமனாவான், தான்செய்யும் யெவ்விதகாரியாதிகளும் சத்துவகுணத்தைத் தழுவியும் யாதொரு கர்மாவினுஞ் சந்தேக விபரீதமில்லாதிடமான மனமுடையவனாய்ச் செய்துவருதலோடும், குளிர்காலத்திலே உதயகாலத்திற் செய்யவேண்டிய ஸ்நான அநுட்டானாதிகளில்வெறுப்படைந்து, செய்யாதுவிடாதும்வெயில் காலங்களில் செய்யப்படும் ஸ்நானாதிகர்மாக்களினாலே சந்

தோஷியாமலும் எப்போதும் ஒரேபடித்தாய்ச்சமத்துவமாகவே செய்துவருவன். 10

சுவாமின்! யாதொரு பலனையும் விரும்பாது கன்மங்களைச் செய்வதைக்காட்டிலும், பஞ்சேந்திரியாதி பிரவிர்த்தியாகிய விஷயங்களிற் பிரவிர்த்தியாது கன்மங்களையுஞ் செய்யாவிடின் அதனால் சனன மரண சம்சாரபயமின்றி ஞானமோக்ஷங்கள் கிடைத்தல் மிகச்சுலபமாகத் தோற்றுகிறதே? அருச்சுன! நீ கூறியது ஒருவாறு நியாயமேயாயினும், ஒருவனுக்குத்தேகாபிமானமுள்ளளவரையில் வைதிக கன்மத்தாலன்றி யெவ்விதத்தும் சித்தம் நிர்மலத்துவத்தை யடையப்பெறுவாம். அவ்வாறாகச் சித்தஞ்சுத்தமாகாதுபோகவே ஞானவைராக்கியாதிகள் எய்தப்படமாட்டா. எப்போது ஞான வைராக்கிய மில்லையோ அவனுக்கு மோக்ஷலபிதமே யில்லாமற் போமென்க. ஆகவே கன்மோத்கிருஷ்டத்தினால் பலனைத் தியாகஞ்செய்பவன் எவனோ அவனையே தியாகியென்று கொள்ளப்படும். 11

சுவாமின்! தேவரீர் விவரித்தபடியே கன்மாவைச்செய்து அதன் பிரயோசனமாகிய பலனைத் தியாகஞ் செய்வானாயின் அதனாலவனடையும்பயன்யாது? அருச்சுன! வேதோத்கிருஷ்டமான சத்துவகுண கன்மங்களை அதாவது வேள்விமுதலிய காமிய கன்மங்களைச் செய்துவருவானாயின் அதனாலவன் ஒப்பற்ற சுவர்க்கானுபவங்களை யடைவான். இராசத குணயினமாகிய * மிசிர கன்மங்களைச் செய்துவருவானேல் அதனாலவன் இம்மண்ணுலகிற்பிறந்து சனனமரண சம்சாரசாகரத்திலுழன்று மீளவழிதெரியாது துன்பப்படுவன். தமோகுணத்தோடுங்கூடிய கேவலமான அசத்கர்மங்களைச் செய்வானாயின் அதனாலவன் மீளாத நரகத்தில்வீழ்ந்து பரதவிப்பன். ஆகையால் நாம்மேலே கூறிவந்தபிரகாரம் நித்திய நைமித்திய பிராயச்சித்தாதி உத்தமகர்மாக்களைப் பத்திசிரத்தையோடே விதிப்படிச்செய்துமுடித்து அதன் பிரயோசனமாய்க் கிடைத்த பலப்ராப்திகளை உள்ளபடி ஈசுரத்தியாகஞ் செய்வானாயின் சித்தநிர்மலமெய்தி ஞானவைராக்கியங்களைப்பெற்று மூவுலக போகங்கட்கு மேலாய மோக்ஷாதிகாரியாவனென்க. 12

சுவாமின்! தேவரீர்கூறிய தொருவாறு நியதியேயாயினும் என்மனம் குழப்பமடைகின்றது. என்னெனில், மேற்கூறிய

* மிசிரகன்மம் - சத்கர்ம துர்க்கருமங்களைச் சமபாகமாய்ச்செய்தல்.

வாறு பலனைத்தியாகஞ்செய்து கன்மாக்கள் செய்யினும் அதனுற் பலனும், அப்பலத்தால் சனனமும் என் உண்டாகமாட்டா? அருச்சுன! நான் உபதேசிப்பதை அவ்வப்போது நன்ருய்ப் புத்தியிற் பதிப்பாயேல் ஒருபோதும் மனக்குழப்பம் வாராது. எவ்வாறெனின், கன்மஞ்செய்யும்போது அதன்பலனை இச்சியாது செய்துவருவாயாயின் அந்தபலன் உன்னைச் சாரமாட்டா. அங்ஙனஞ் சாராமைக்குக் காரணம் எதுவாயிருந்ததெனின், அக்கன்மங்களைச்செய்பவன் நீயல்லவாதலாலும், நீ காரண கர்த்தாவேயன்றிக் காரியகர்த்தாவல்ல வாதலாலுமேயாம். இன்னும் பஞ்சயேதுக்களால் ஷ்டி கர்மாக்கள் செய்யப்படுவதாலேயும், ஆன்மா கேவலம் யாதொன்றினும் பற்ருதவனுதலாலும், ஆகையால் அவ்வான்மா கன்மபலபாத்திய மில்லாதவனென்று தத்துவ சாஸ்திரவிகிதப்படி நினக்கெடுத்தோதினேம். இன்னும் அதைப் பற்றி விவரமாகக் கேட்பாயாக. 13

அருச்சுன! அக்கன்ம பலனை யெய்தக் காரணமாய் நின்ற தத்துவங்களைந்தையும் விவரிப்போம் கேட்பாய்: 1-சரீரம். 2-அகங்காராதிகள். 3-தசேந்திரியங்கள். 4-ஐவகைப்பிராணன்கள். 5-அதிட்டான தேவதைகள். ஆக இவ்வைந்துவகையான தத்துவக் கூட்டங்களே கன்மங்களைத்துஞ் செய்துவருவதாயறிதல் முறையாம். 14

அருச்சுன! ஒருவன்செய்யுங் கன்மங்களை மனவாக்குக் காயங்களினுலே செய்யப்படினும் அதற் காதாரமாய்நின்ற மேற்கூறிய ஐவகைத் தத்துவங்களே யேதுவானபடியால் சீவாத்மாவுக்கு யாதொரு தொந்தபந்தமுமின்றி பரிசுத்தமாகவே தனிப்பொருளாயிருக்கிறதென்று நீ திடமாகயெண்ணக்கடவாய்.

அருச்சுன! இதனுல் தர்மாதர்ம கர்மாக்களையெல்லாஞ் செய்வது மேற்கூறிய தத்துவக்கூட்டங்களேயென்றுமுன்னத்தியாயங்களிற் கூறியதன்றியும் இன்னுங்கூறுவ கேட்பாய்:—சர்வ கர்மாதிகட்குந் தத்துவங்களே யேதுவன்றி மற்றச் சீவான்மா யாதுஞ் செய்வதே யில்லையெனத் தெளியாது யெல்லாம் ஆத்மாவே செய்கிறதாகவெண்ணும் மந்தமதியினன். தான் சற்குருவாயிலாகச் சாத்திரவிசாரணை செய்தானில்லையென்றும், துர்ச்செய்கையிலேயே தன் காலமெல்லாங்கழித்த துராத்மாவாகவும் அஞ்ஞானமே சொரூபமாகவு முடையவனென்றறிந்து தள்ளப்படல்வேண்டும். 16

அருச்சுன! இதனால், நல்லறிவோடுகூடிய சதாசார விசார சீலனாவானின்னானென்பதையுங் கூறுவேன்கேட்பாய்: யாதொருவனால் செய்யப்படுகிற கர்மாக்களைத் தான்செய்கிறதாயில்லாமல் எல்லாந் தத்துவாதிகளின் ஏவுதலே யாமெனவும், சரீராதியவைகளிற் சிறிதும் பற்றின்றி கன்மஞ்செய்வதால் அகங்காராதிகளில்லாது அனைத்துங் கருவிகரணங்களின் காரியமேயெனவறிந்தும், ஆன்மா தானாக வொன்றுஞ் செய்கிறவனல்ல, அதனால் அவ்வான்மாவுக்கு யாதொரு பழிபாவங்களும் வந்துறாதென்றும் அறிந்தவனே உத்தம அறிவாளியாவன். அன்றி அவனே சுதன்மாசாரத்தால் பலபேர்களை, (அகங்காரமும், தான்செய்வதான வெண்ணத்தையும் விட்டு நியாயங் காரணமாக) வதைசெய்வானாயினும் அதனாலவன் ஒருபோதும் பழிபாவங்கட் காட்படானென்க. 17

சுவாமின்! நியாயமாகவும் அகங்காராதியற்றும் சுதன்மமாக அநேகர்களை வதைசெய்வானாயின் அதனாலவன் பழிபாவங்கட்குச்சிறிதும் ஆட்படானென்பது என்னநியாயங்கொண்டோ? அருச்சுன! கன்மங்களெல்லாம் ஞாதுரு ஞானஞேயமென்னுந் திரிபுடியில் கட்டுண்டதேயன்றி மற்றன்று. ஆகவே இத்திரிபுடிக்கு அகப்படாது அதீதப்பட்டும், யாதொரு தத்துவாதிகளோடும் பற்றற்றுமுள்ள ஆன்மாவோடுங் கூடியவனுக்குப் பாவபந்த மேற்படாதென்று மேலே நாம் கூறியது சத்திய வசனமேயாம். நீ அதனை நன்காலோசித்தாயில்லை. இனி அக்கன்மங்களெல்லாம் எங்ஙனந் திரிபுடிக்குள்ளாயதென்று யோசிக்கலாம். எந்த கர்மாக்களுஞ் செய்யத்துவக்கமாகும்போது அறிவென்பதாலே துவக்கிச் செய்யப்படுங் காரியாதிகள் "அறிவு, அறிந்தது, அறியப்படுபொருள்" எனமூன்றுவகையாயும், மீண்டுமிதனையே கர்த்தா, கரணம், கன்மமென்றும்மூவகையாயுங்கூறப்படுமென் றறியக்கடவாய். 18

அருச்சுன! இப்போது கூறிவந்த திரிபுடியின் இலக்ஷணமாவது ஞானம் ஞாதுரு ஞேயமென மூன்றும் ஒவ்வோர்சமயம் * குணசம்யோகத்தால் ஒவ்வொன்றுந் தனித்தனியே மூவகையாய்த்திரியும். அவைகளின் விர்த்தாந்தங்களைப்பற்றித் தத்துவ

* குணசம்யோகம்-முக்குணச்சேர்க்கை.

சாஸ்திரங்களில் மிகவிரிவாய்க் கூறப்பட்டுள்ளதை யெடுத்தோது வோங் கேட்பாய். 19

அருச்சுன! இப்பிரபஞ்சத்திலே விளங்காநின்ற ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்பரியந்தமுள்ள சகலாத்மாக்களிடத்தும் பரிபூரணமாய் நிறைந்து விளங்குவது ஒப்பற்ற ஒருபொருளாய பரமாத்மாவேயென அறிந்தெந்த பேரறிவோ அந்த விவேகத்துக்கே சத்துவகுண விவேகமென்று சாற்றுவர் நூலோர். 20

அருச்சுன! மேற்கூறியபடி எல்லாப் பூதபௌதிகங்களிடத்தும் பொருந்தியுள்ள பூதநாதனாகிய சர்வேசுரனைத் தெரிந்து கொள்ளும் ஆற்றலில்லாச் சாமானியசிலர், ஒவ்வொருஸ்தலத்திலுமுள்ள ஒவ்வொரு மூர்த்தியினிடமாக மட்டும் அப்பரம் பொருள் வியாபித்திருப்பதாகவறிந்து அவைகளிடத்தே பத்தி செய்தலான விவேகத்துக்கே இராசதகுண ஞானமெனக் கூறப் படும். 21

அருச்சுன! காணப்படுபொருளாய சராசரபேதங்களிலே சற்றுங் கடவுள் தன்மை பொருந்தியிருப்பதன்று; எல்லாம் இயற்கையிற் றோன்றியதாகும்; அன்றி தான்கண்ட ஒருரிலே யுள்ள ஓராலயத்தின் மூர்த்தியே தெய்வம், வேறெதெய்வ மென்பதெங்குமில்லையெனச் சாதிக்கும் மௌடீகபுத்தியையே தமோகுண ஞானமென்று சாற்றுவாம். 22

அருச்சுன! எவனொருவன் தனக்குரிய சுதன்மமான கன்மங்களை இராகத்துவேஷமின்றி மிகச்சிரத்தையோடு பலனை யபேக்ஷியாது யாதொரு பற்றுமின்றிச் சர்வ சாதாரணமாகச் செய்துவருகிறானோ அவ்வாறாய கன்மத்துக்குச் சத்துவகுண கன்மமென்று கூறப்படும். 23

அருச்சுன! இன்னும் அகங்கார மமகாரத்தைக்கொண்டு மிகப் பிரயாசையோடு பலனையும் எதிர்நோக்கமாகவுடைய ஒருவனால் செய்யப்படுகிற கன்மங்களெவையோ அக்கன்மங்களுக்கே இராசதகுண கன்மமென்று சொல்லப்பெறும். 24

அருச்சுன! உள்ளபடி கர்மஞ்செய்ய வேண்டுமென் றெண்ணாது பெரியதோர் பலப்ராப்தியை யடையவேண்டுமென்று அவாவீறுற மயதாங்காரத்தை முன்னிட்டு மிக்க பிராந்திவசத்தனாய்க் கன்மத்துக்குத்தக்க பொருட்செலவுஞ்செய்யாது உலோபித்தனமாகச் சிலவைச்சுருக்கி இதர பிரஜைகளுக்குத் துன்பத்தையுங்

கொடுத்துப் பலரையுந் துவேஷித்துக்கொண்டு செய்யப்படுகிற கன்மத்துக்கே தமோகுண கன்மமென்று தக்கோர்கூறுவர். 25

அருச்சுன! இனி முக்குணத்தோடுங்கூடிய கன்மகர்த்தாக்களைப்பற்றிச் சிறிது விவரிப்போம். முக்குணங்களில் முதற் குணமாகிய சாத்துவிககுண கர்த்தாவானவன் தான் கர்மஞ்செய்ததைப்பற்றி நான் செய்தேனென்று பகிரங்கஞ்செய்யாது அகர்த்தாவாயிருந்தும், அகங்காராதியனவொழித்துச் சாத்மீகமாய்ப் பற்றற்று மிகத்திடப்புத்தியோடு செய்துவருவான். அவ்வாறு செய்த கன்ம மினிதுமுடிந்தாலும் அல்லது நிறைவேறாவிடினும் அதனாற்சிறிதும் சலிப்பும் சந்தோஷமுமடையாது சமர்தான மான மனதோடு செய்துவருவன். 26

அருச்சுன! இரண்டாவதான இராசதகுணத்தோடுங் கர்மஞ்செய்யுங் கர்த்தாவானவன் முக்கியமாய்க் கர்மபலத்தையபேக்ஷித்தும், பெண்டுபிள்ளைகளிடத்தில் மமதாங்காரம் பாராட்டலும், கன்மச்சிலவில் உலோபித்தனமாயும், அன்னியர்பொருளில் ஆசைகொண்டு பிறர்க்கிம்சைசெய்தும், அனுசாரியாயும், இலாபலோபங்களிலே லெக்ஷியம்வைத்துச் சிரத்தைகுன்றி பேருக்குமட்டும் கன்மஞ்செய்துவருவன். 27

அருச்சுன! மூன்றாவதான தமோகுண கர்மகர்த்தாவானவன் தான்செய்யுங் கர்மத்திலே மிகச்சோம்பலோடுங்கூட சாவதானமாகவும், அன்னியரை அவமதிப்பவனாயும், வஞ்சகமான நெஞ்சகத்தால் எவர்பாலும் தாழ்மைபாராட்டாது பெருமையே பாராட்டியும், அஞ்ஞான வசத்தனாயும், மிகச்சபலசித்த விர்த்தியினனாயும், எதனிலும் படபடப்பேயன்றிச் சாதாரணமில்லாதவனாயும் விளங்குவன். 28

அருச்சுன! இனிச் சாத்துவிக யிராசத தாமதமென்னும் முக்குணங்களாகக் காணப்படுகிற பேத விவேகஸ்தர்களைப்பற்றியும் அவர்கள் குணவிசேடங்களைப்பற்றியும் கூறுவோங் கேட்பாயாக. 29

அருச்சுன! தர்மகர்மத்தைச் செய்வதிலேயே சிந்தையும், அவ்வாறில்லாத வீண்காரியாதிகளிலே நிர்ச்சிந்தையுமுடையவனாய்த் தக்கனசெய்து தகாதனவொழித்தும், இதுநன்று இது தீதெனப்பகுத்தறிந்தும், இது பிரயோசனகாரியம், இது அப்பிரயோசனகாரியமென்றும், மற்றும்பந்தமோக்ஷங்களின்னின்ன

தெனவும் நன்காராய்ந்து சித்தாந்தஞ்செய்த புத்தியெதுவோ அதற்கே சத்துவகுணப் புத்தியெனப்படும். 30

அருச்சுன! இரசோ குணப்புத்தியைக்கேள்: இக்காரியம் விகிதமாகச் செய்யத்தக்கன, இது செய்யத்தகாதனவென்றும், இதுநற்செயல் இதுதீச்செயலென்றும், இதுதர்மமானது இது அதர்மமானதென்றும், மற்றுமுள்ள காரியாதிகளை ஞானமின்றி செய்யாதுவிட்டும், நிரவிசாரித்தறியாது தனக்குத்தானே முடிவுசெய்துள்ள புத்தியையே இராசத குணப்புத்தி யென்னப் படும். 31

அருச்சுன! மெய்யறிவு துலக்கமின்றி அவிவேகத்தால் பிராந்தியடைந்து நற்கருமங்களையெல்லாந் தீயகருமமென்றும், தீயனவெல்லாம் நற்கருமமெனக்கொண்டும், சத்தை அசத்தென் றும் அசத்தைச் சத்தென்றும், மற்றுமுண்டான காரியாகாரியங் களையெல்லாம் விகற்பமாகவெண்ணியும் நடவாநின்ற குமார்க்கப் புத்தியையே தாமதகுணப்புத்தியெனத் தள்ளப்படுமென்க. 32

அருச்சுன! மேற்கூறியவண்ணமே மனிதர்களின் தைரிய மும் முக்குணங்களைத் தழுவியே விளங்குமென்க. அதாவது: பஞ்சேந்திரியங்களென்ன ஞானேந்திரியங்களென்ன இவைகளை விஷயாதிகளிற் செல்லவொட்டாதடக்கி வெற்றிபெற்றதெந்த விவேக வைராக்கிய தைரியமோ அந்ததைரியத்துக்கே சத்துவ குணதைரியமெனப்படும். 33

அருச்சுன! புருஷார்த்தங்களான அறம்பொருளின்பமென் பவைகளாலேற்படும் பயனை யடையவேண்டுமென்றும் அவாக் கொண்டு அதற்கான நன்முயற்சிகளிலே பகிரங்கமாகப் பிரவிர்த் தித்து முயற்சிப்பதாகிய தைரியத்தையே இரசோகுண தைரிய மெனப்படும். 34

அருச்சுன! உத்தமபுத்தியே சுத்தமாயின்றி உலகோர் வெறுப்படையுமாறு துர்ப்புத்திகொண்டு கெட்டகாரியாதிகளைச் செய்துவருதலோடு மதமாற்சரியாதிகளின் சகாயத்தாலும், தூக்கம், பீதி, சோக முதலானவைகளுக் காஸ்பதமான காரி யாதிகளைச்செய்யுந் தைரியத்துக்கே தமோகுண தைரியமெனச் சாற்றுவர்மேலோர். 35

அருச்சுன! மேற்கூறியனபோன்று சுகமென்பதும் மூவகை குணபேதங்களையுடையதாம். அதாவது நல்லாசிரியரையடுத்து

உத்தம நூலாராய்ச்சியால் மெய்ஞ்ஞான மடையப்பெற்று பலவித சாதனைகளினாலே பரமானந்த சுகானுபவத்திலேயே தன் புத்தியை வைத்துக்கொண்டு சம்சாரதுக்க நிக்கிரகஞ்செய்து சதாநந்தசீலனாயிருக்கவேண்டுவதே சுருதிசம்மதியாம். 36

அருச்சுனா! நிர்மல விவேக விர்த்தியினாலே சாதனை காலங்களில் மிகச்சாதாரணமாகச் சாதித்து மத்தியகாலத்தில் மகாதுக்காருடனாய் விசாரமடைந்து பிறகு சாதனையிற்றேறிச் சித்தியுறும்போது தேவாமிர்தம்போன்ற சுகோதயமாய்ச் சர்வதா பரஞானானுபவச் சித்தியிலேயே புத்தியைலயப்படுத்திய உத்தமமான திடவிவேகத்தால் உதயமாகுஞ் சுகத்துக்கே சத்துவகுணச்சுகமென்று சாற்றுவர் மேலோர். 37

அருச்சுனா! ஞான கர்மேந்திரியாதிகள் ஒருங்கே விஷயாதிகளில் பிரவிர்த்தித்தபோது முதன் முதல் மகா சுகாமிர்தமாகக் காணப்பட்டு பிறகு அவைகளினின்றும் பிரிந்தகாலத்தில் அந்த அநுபவத்தைக் கேவலம் துச்சலமென நினைப்பெய்தக்கூடிய சுகத்துக்கே இரசோகுணச் சுகமெனக் கூறப்படும். 38

அருச்சுனா! அவிவேகசிகாமணியாய வொருவன், உறக்கம் வரும்போதும், நித்திரைசெய்து மீண்டும் எழும்போதும் மயக்கங்காரணமாக மகா சுகத்தையடைந்ததுபோற் கருதியதெந்த சுகமோ அந்தசுகத்தையே பரமசுகமாக வெண்ணுவதுண்டு. இதையே முத்திக்குச் சத்துருவாய் தமோகுணமெனத் தள்ளிவிடுவர் கள்ளமிலாக் கலைஞானங்கற்ற மேலோர். 39

அருச்சுனா! இவ்வாறாய மோகவசத்தர்கள், மாயையினது பிரேரணையின் காரியமான முக்குணசேஷ்டைப்பாற் றோன்றும் இவ்வனித்திய போகசுகங்களையே பரமசுகமெனவெண்ணித் தயங்குவரேயன்றிப் பரமஞானிகளாவார் சிறிதும் மயங்காராதலால் இவர்கட்குத் தேவலோகத்திலுள்ள தேவர்களையும் ஈடாகக் கூறவொண்ணாதென்க. 40

சுவாமின்! தேவரீர்கூறியபடி சர்வத்ராளும் முக்குணத்திற் சிக்கியவர்களேயானால் சாமானிய மனிதர்கள் எவ்வாறு முத்தி மோக்ஷாதிகளடைவது? கேட்பாயருச்சுனா! இம்மண்ணுலக மானிடஜனங்களை பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனச் சதுர்வருணமாகப் பூர்வாசிரியர்களால் பிரிந்து அவரவர்கட்கான மனுதர்ம சாஸ்திரங்களுங் கற்பிக்கப்பட்டிருக்கிற

தல்லவா? அவ்வாறாய நான்கு வகுப்பார்க்கு முறையே சத்துவாதிய குணத்துக்குத் தக்கவாறாகவே வருணாசிரம தர்மங்களும் கணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்நால்வரும் தங்கடங்களது முந்திய செனனப்பழக்க வழக்க வாசனையை முன்னிட்டு அவரவர்களது சாதிமுறைமைக்கேற்ற கர்ம தர்மாக்களைச் செய்துகொண்டு ஈசுரபக்தியுஞ் செய்துவருவார்களானால் அவரவர்கட்கு அப்பரம்பொருளின் அநுக்கிரகத்தால் நாளுக்குநாள் மனமானது பரிசுத்தத்தையடைந்து ஞானமுண்டாகப்பெற்று ஈற்றில்மோக்ஷமெய்துவதிற் சிறிதுஞ் சந்தேகமேயில்லையென நீ கண்டிப்பாயறியக்கடவாய். 41

சுவாமின்! தேவரீர் மேலே யெடுத்தோதிய நான்கு வருணத்தார்களுக்குமுரிய கர்மங்களையும், அக்கர்மத்தாலவரவர்களடையும் பலப்ராப்திகளையும் நன்கெடுத் தோதுவீர்களாக? அருச்சுன! முதற்சாதியரான பிராமணர்களுக்கு வேதசாஸ்திர விவகாரம், மோக்ஷா பேக்ஷையில் உண்மையான திடவிசாரணாநுபவம், சித்த நிரோத சாதனம், கர்மேந்திரிய ஞானேந்திரியங்களையடக்கல், உள்ளும் புறமுஞ் சுத்தமாயிருத்தல், நிஷ்டாபராளாயிருத்தல், எக்கியாதி சாந்திசெய்தல், பிரத்தியக்ஷாநுபவம், பிராயச்சித்தாதி வைதிக கர்மங்களாகிய இவைகளெல்லாம் பிராமணர்க்குரிய முக்கியதருமமாம். 42

அருச்சுன! 2-வதான க்ஷத்திரியர்களுக்கு சௌரிய வீரிய ஔதாரிமுதலிய புஜபல பராக்கிரமங்கள், பிரபலகீர்த்தி, மகாதைரியம், இராசாங்க விஷயங்களை மிக நீதியாகவும் யுத்தியாகவும் நடத்துதல், போர்முகத்தில் முன்வைத்தகாலைப் பின்வாங்காதுநிற்றல், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தில் கடவுளைப்போல கருணையோடு நடத்துதல், குடிகளுக்குத் தன்னாலும் பிறராலும் யாதொரு இடுக்கண்வாராதபடிப் பாதுகாத்தல், குடிகளிடத்தே 6-ல் ஓர் கடமைவாங்குதல் ஆகிய இவையெல்லாம் இராஜாக்களாகிய க்ஷத்திரியர்க்குரிய கடமையாம். 43

அருச்சுன! 3-வதான வைசியர்கட்கு வியாபாரஞ்செய்தல், வேளாண்மைசெய்தல், பசுக்களைக்காத்துவிருத்திசெய்தல், ஆகிய இவையேயாம். மற்றும் இம்மூன்று வருணத்தார்க்கும் ஏவற்பணிசெய்து அவரவர்களாற்றரப்பட்ட கூலிகொண்டு சீவிப்பதே நான்காவதான சூத்திரர்கட்குச் சுதந்திர கன்மமென்க.

ஆகவே இந்நால்வரும் தங்கடங்கள் சுதந்தர கர்மாக்களைச் செய்யும்போது யாதொரு பிரதிப் பிரயோசனத்தையுங் கருதாது நிட்காமியமாகவே செய்துவரல்வேண்டும். இவ்வாறு செய்வார்களாயின் நாளடைவில் மனோசீலமெய்தி அதனால் ஞானமோக்ஷங்களை யடைவர்கள். 44

அருச்சுன! எவர்களாயினும் தங்கடங்களுக்குரிய சுதன்மத்தைமட்டும் செய்துவருவதால் உத்தமமான பலனையே யடைவர்கள். இதனால் வேறெவ்விதமான அபசவ்வியத்தையு மடையமாட்டார்கள். எவ்வாறெனில், ஒவ்வொருவரும் தத்தம் வருணாசிரமச் சுதன்மகாரியாதிகளில் பிரவிர்த்திக்கும்போதெல்லாம் என்னையே முன்னிட்டும், உள்ளும்புறமுமொத்த மனதோடும், எனக்கர்ப்பணமாகவே செய்துவருவதால் எவ்விதத்தும் எனக்காராதனையாகிறது. ஆகவே அவர்கள் அபசவ்யமடையாது சுபப்பிரயோசனத்தையே யடைவர்கள். ஆகையால் நீ யெவ்விதத்தும் உனக்குச் சுதந்தரமாயுள்ள யுத்தவிர்த்தியை யாதொரு நிராடங்கமாகவும் நிஷ்காமியமாகவும் செய்வாயாயின் தப்பாமல் மோக்ஷசுகத்துக் காளாவாயென்பது நிச்சயமேயாம். 45

அருச்சுன! மோக்ஷாபேக்ஷிதன் எத்தெய்வத்தை யாராதிப்பதென உனக்கோர் சமயம் சந்தேகம் நிகழலாம். ஆதலின் அதைப்பற்றியுஞ் சிறிதுகூறக்கேட்பாய்: சர்வாண்டபுவன சராசரங்களையெல்லாம் படைத்துக் காத்தழித்து மீண்டும் அநுக்கிரகாதியன செய்யவல்லவனும், மேற்கூறிய அண்டபுவனங்களனைத்திலும் மற்றும் எண்டிசையினும் எள்ளுக்குளெண்ணெயென வியாபித்துள்ளவனும், ஏகவஸ்துவாய் அனைத்தையும் பிரமப்பிரளய காலத்தில் தனிப்பெருங்கருணையினாலே தனது கர்ப்பத்தில் லயப்படுத்திக்கொள்ளும் பேராற்றலும் பெருங்கருணையுமுள்ள தனிப்பெருந்தலைமைத் தயாபரமூர்த்திக்கு ஆட்படவேண்டி யெவருந் தத்தமக்குரிய உத்தம கர்மதர்மங்களை அவர்க்கர்ப்பணமாகவே செய்துவரின் அதுவே அப்பரம்பொருளுக்குப் பெரியதோர் ஆராதனையாம். ஆதலால் எவ்வெவரும் ஞானமோக்ஷங்களைச் சிறிதும் ஐயப்பாடின்றி யடைவது நிச்சயமே யென்க. 46

சுவாமின்! தேவரீர் கூறியன கொண்டு தெளிந்தேன். ஆயினும், ஒவ்வொருவரும் தந்தம் சுதன்மத்தைக்காட்டிலும்

மேம்பாடான கன்மங்களைச் செய்வார்களாயின் அதனால் அவர்கள் மோக்ஷமடையார்களா? அருச்சுன! எவன் எந்தவருணமும் ஆசிரமமும் உடையவனா யிருக்கின்றானோ அவன் அந்த வருணாசிரமத்துக்குரிய கர்மதர்மங்களையேயன்றி மேல்வருணத்தானது கர்மத்தைக் கீழ்வருணத்தானும், கீழ்வருணத்தானது கர்மத்தை மேல்வருணத்தானும் ஆசிரயித்தல் எவ்விதத்தும் பொருந்தாது. ஆதலால் அவனவன் சுதர்மத்தைச் செய்தலே சுருதிசம்மதி அங்ஙனமின்றிச் சுதன்மம் ஈனமெனத்தள்ளி அன்னிய வருணத்தாரது கன்மதன்மங்களைச் செய்யப்புகின் அதனாலவர்கள் பாவசாபங்களையே யெய்தப்பெறுவரென்க. 47

அருச்சுன! எவாகளும் தந்தம் சொந்தமான கர்மாவானது கேவலம் ஈனமானதாயினும் அக்கன்மம் மேல்வருணத்தார்க்கு மட்டும் ஈனமாய்த் தோன்றுமேயொழிய தன் ஜாதிக்குரிய சகச தொழிலேயாம். அத்தொழிலால் பழியும் பாவமு மிகழ்வுமின்றென்க. இதன்றி மேல்வருணத்தாரது கன்மாவைச் செய்தவில், நெருப்பை நீறுபூத்து மறைத்திருப்பதுபோல அக்கன்மங்களினுமுள்ள குணதோஷங்கள் மறைபட்டிருக்குமாதலால் அவைகளைச்செய்தலும் விகிதமன்றெனப்பட்டது. இதுநிற்க; இன்னும் அக்கன்மாவானது தனது சுதன்மத்துக்கு மேன்மையதாதலின் அதனால் பெரும்பாலும் மமதாங்காரங்கள் தோன்றி நிட்காமியமாகச்செய்யாது காமியமாயே செய்ய நேருமாதலால் தோஷமெய்திப் பாவத்துக் குள்ளாகிச் சனன மரணத்தையடைந்துகொண்டே வருவர்களென்க. 48

அருச்சுன! ஒருவன் தன் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களை அததன்வழியே செல்லவொட்டாதடக்கி ஈஷணாத்திரயங்களின் வாசனையற்றுச் சந்தேகவிபரீதமின்றி யேகமனதோடு நிராசையாகவே தனது வருணத்துக்கேற்ற கர்மதர்மங்களைச் சிறிதும் பழுதின்றி முறையே செய்துவருவானாயின் அதனாலவன் மனம் நிர்மலத்துவமெய்தி ஞானத்துவாரா பரப்ரம்ம சொரூபத்திலே லயப்பட்டுப் பிறப்பென்னும் பெருஞ்சாகரத்திற் படியமீண்டும் வாரானென்க. 49

சுவாமின்! தேவரீர் மேற்கூறியவண்ணந் தன் சாதிக்குரிய கன்மம் கேவலமானதாகக் காணப்பட்டபோது அதையனுட்டித்தவன் எவ்வாறு மோக்ஷானுபவத்துக்கருகனாவன்? அருச்சுன!

தன்கர்மம் தன்குலத்துக் கினமன்று; மேற்குலத்தார்க்குமட்டும் அங்ஙனங் கூறினோம். ஆகவே தன்சாதிக்கேற்ற கர்மாவைச் சிறிதுந் தவறாது விதிப்படிச்செய்பவனுக்கு அதனால் முதற்பிர யோசனமாகச் சித்தசுத்தியுண்டாம். சித்தம் சுத்தமாகவே பிறகு ஞான நிட்டைக்கு யோக்கியனாவனென்க. 50

அருச்சுன! மேற்கூறியபடி ஞானநிட்டையைச் சாதித்தவனே யோகியெனப்படுவான். அந்த ஞானயோகத்தால் சத்துவகுண விசேஷிதனாய் தான்செய்யுஞ் சாதனாகர்மங்களை நிர்மலமாயேசெய்து திடவிவேகத்தைக்கொண்டு மனோ நாசஞ் செய்து ஷை சத்துவகுண சாதனங்களினின்றுந் தேறியபின் அச்சாதனையும்விட்டு விருப்புவெறுப்பற்றிருப்பனென்க. 51

இவ்வாறு இராகத்துவேஷமற்ற யோகியாவான் சாந்திராயணமுறையாக ஆகாராதிகளைக் குறைத்துண்டு தனியிடத்தேயிருந்துகொண்டு வைராக்கிய திடத்தனாய்த்திரிகரணங்களானமனவாக்குக் காயத்தைச் சுவாதீனஞ்செய்து பரப்ரம்மத்தியானத்திலேயே தன்கருத்தைப் பதித்திருப்பன். 52

அருச்சுன! இப்படிப் பக்குவப்பட்ட யாதொரு யோகியென்பான் காமக் குரோத லோப மோக மத மாற்சரிய மாகிய உடற்பகையை வேரறுத்து அகங்காராதியன நீத்து மூவாசையையு முற்றத் துறந்து மகா சாத்மீக குணத்தோடுங் கூடியவனாய்ச் சதா பிரம்மதிருஷ்டியிலேயே பிரியத்துவவாய் நிற்பன்.

அருச்சுன! இவ்வாறாய இலக்ஷண யோகியின் நடவடிக்கையெவ்வாறாக விருக்குமென நீ நினைக்கலாம். கூறுவேன் கேள்: ஷை யோகி உலகத்திருந்தானேனும் உலகியற்சிறிதும் அவன்பாலிலவாகும். என்னெனில் தன்னிடத்தே யார்யெதைச் செய்யினும் அதனால் அந்தயோகி அகங்கரியாது சர்வத்ராளிடத்தும் சாந்தமேசெலுத்திச் சர்வசீவனையுஞ் சமத்துவ பாவனையாகப் பார்ப்பதும், சென்றதைக் கருதாது சேர்வதை நினையாதும், வந்ததில் மகிழ்ச்சியும் வராமையிலிகழ்ச்சியுங் கொள்ளாதும் சர்வம் பிரம்மமயமாயே பார்த்துவருவனென்க. 54

அருச்சுன! இத்தகைய உத்தமோத்தமயோகி தனது சத்துவகுண பத்திவைராக்கிய திடத்தைக்கொண்டு சுத்த சாட்குண்ய சச்சிதானந்தப் பரம்பொருள் நாமேயென்று தெளிந்து

உண்மையான நிலையில்நின்று நம்மையுள்ளபடியறிந்த ஞானநிடத்தினாலே எவ்விதத்தும் நம்மைவந்தடைவனென்க. 55

சுவாமின்! தேவரீரது சச்சிதாநந்த சொரூபத்தையறிதற்காவது அல்லது அடைதற்காவது சாமானியமாகக் கிடைக்காது போலக் காணப்படுகிறதே! இதற்கென்செயலாம்? அருச்சுன! நீ செய்ய வேண்டுவதைக் கேள்:—நீ யெவ்விதத்தும் நம்மையன்றி வேறெத்தெய்வத்தையும் போற்றாது என்னையே மிக மேலாய தெய்வமாக்கொண்டு நித்திய கர்மானுட்டானங்கள் செய்யும்போதும், மற்றுந் தவம் நிஷ்டை முதலான சாதனைகளிலெல்லாம் என்னையேகுறித்து யெனக்கே ஆராதனையுஞ்செய்துகொண்டு வருவாயானால் எமது கருணாபிரசாதத்தாலே சித்த சுத்தியெய்தி அதனால் ஞானோதயமாகப்பெற்று ஈற்றில் நித்தியமான முத்தியின்பத்தைப் பெற்றுவாழ்வாய். 56

அருச்சுன! இனி நீ நம்முடைய தியான யோகமாகிய பக்தியோகானுட்டானங்களை மிகச்சிரத்தையோடும் விதிப்படி ஆசிரயித்தும், மனவாக்குக்காயங்களொருமித்தும், கன்மபலன்களையெல்லாம் நமக்கேயர்ப்பித்தும், என்னையே பரமபுருஷார்த்த சாதனமெனக்கொண்டும், நிச்சயமான நிடவிவேகத்தால் எப்போதும் என்னிடத்திலேயே மனதைச்செலுத்தி வருவாயாக.

அருச்சுன! நாம் இப்போது கூறியபிரகாரம் நீ அநுட்டித்து வருவையேயாயின் நாளடைவில் அவ்வநுட்டான விசேடத்தாலே நம்முடைய கிருபைக்குப் பாத்திரவானாகி கடத்தற்கருமையாகிய பிறப்பிறப்பென்னும் பெருஞ் சாகரத்தைக்கடந்து என்றும் அழிவிலாப் பேரானந்தப் பெருஞ்சமுகத்தோடொன்றுபடுவாய். இவ்வாறின்றி உன்மனம்போனவாறு நல்லது கெட்டதென்பவைகளெல்லாம் நமக்குத்தெரிந்ததே! ஆயினும் பிறகு சமயம்நேர்ந்துழி பார்ப்போம் என்று அகங்காராதியவைகளால் ஆட்கொள்ளப்பட்டு இதுகாறும் நாம் கூறியவனைத்தையுங் குடங்கவிழ் நீரென போக்கிவிட்டு நம்முடைய உபதேசத்தை அலட்சியப்படுத்திவிட்டால் பின்பு யாதொரு புருஷார்த்தங்களைச் சிறிதும் அடையப்பெறாது வீணேபிறந்த விழலாவாய். 58

அருச்சுன! நீ ஒருக்கால் கர்விதத்தினாலே நாம்கூறியதைப் புறக்கணித்து உனது சுதர்மமாகிய யுத்தவிர்த்தியைச் சிறிதுங் கவனியாது விடுவாயாயின் அந்த அகங்காரயோசனை உன்

னைக் கெடுக்கவந்த அநுகூலவிரோதியான நீ நினைத்துத் தள்ளி விடவேண்டும். எவ்விதத்தும் நின்குலவிர்த்தியானது இராசத குணரூபமாய்ப் பரிணமித்துள்ள மகாமாயையை மிகப்பலமாய்த் தோற்றிவித்து உன்னை யுத்தத்தில் பிரவிர்த்திக்கச்செய்யும். அப்போது உன் சாந்தவெண்ணம் ஒடுங்கி எவ்விதத்தும் யுத்தஞ் செய்யும சந்தத்தருவாயாதலாலென்க. 59

அருச்சுன! பின்னும் நின்குலவிர்த்தியான க்ஷத்திரிய தருமத்துக்குரிய சௌரிய வீரிய ஔதாரியாதிகளெல்லாம் நின்னைப் பலமாய்க்கவிந்துள்ளன. நீயோ அதையறியாது நின்குல விர்த்தியாம் யுத்தத்தை யுக்தமெனக்கொண்டு செய்யாவிடினும் நீமற்றோர் சமயம் அந்நியர்வசத்தனாய் யுத்தஞ்செய்யும் சமயம்நேரும். ஆனால் அது உனக்கிப்போது விளங்கா; நாம் அதை நன்றாயறிவோம். 60

அருச்சுன! "சரீராதிகளிடத்தும் சம்சாராதிகளிடத்தும் அபிமானம் பாராட்டியுலவும் ஆன்மாக்களையெல்லாம் நாம் அவரவர்களுக்குரிய கர்மகாரியாதிகளையே செய்யும்படி நமது மாயையால் செலுத்தும் ஏதுகர்த்தாவாக விளங்குகின்றோமென்று உள்ளபடியறிந்து தத்துவசாஸ்திர முறையைத்தழுவி இவ்விவாதமானது நாம் செய்கிறதல்ல, மாயையின் காரிய விசேடமெனக் கருதி நின்குலதர்ம யுத்தவிர்த்தியைச் செய்யவேண்டும். இன்னும் நாம் சர்வான்மாக்களுடைய இருதயபீடத்திலே வியாபித்துள்ளோமென்பதையுங் கருதுவாய்" என்றபரமாத்மாவைநோக்கி அருச்சுனன், சுவாமின்! என்குலவிர்த்தியான கன்மங்களை நான் எவ்வாறு செய்வது? என்று மீண்டுங் கேட்பானாயினான். 61

அருச்சுன! உலகத்திலே பதுமையாட்டும் நாடகக்காறர்கள் ஒவ்வொரு பதுமைகளையும் அததற்குத் தனித்தனியே ஒவ்வொரு சூக்ஷக்கயர்கொண்டு ஆட்டிவைப்பதை நீ நன்றாய்ப்பார்த்திருப்பாயல்லவா? அதேபோல நாம் சர்வான்மாக்களையும், அவரவர்களது இருவினைகளையுங் கயிறாக்கொண்டு அவரவர்களுடைய இருதய கமலஸ்தானத்திலிருந்து தத்தம் கர்மங்களைச் செய்து வரும்படி ஆட்டிவருகிறோம். அவ்வாறாட்டிவிக்கும் கடவுளை நீநன்கறிந்து வழிபட்டு அவருத்திரவுபிரகாரம் நடப்பதால் உன் மனம் நிர்மலத்துவமெய்தி நிலைமையான அவருடைய சொரூ

பத்தையே யடையப்பெறுவாய். இதுவே நீசெய்யவேண்டிய கருமமுறைமை. 62

அருச்சுன! கருணையே திருவுருவெனக்கொண்டு வெளிவந்த எம்மைச்சார்ந்ததால் நினக்கு நாம் செய்யவேண்டியவுதவி இந்த கீதாசார இரகசியார்த்தங்களையுபதேசித்ததேயாம். ஆகையால் நீ இதனை இன்னும் ஊன்றி ஊன்றி விசாரித்தறிவையேயானால் உண்மையான வேர்நிலை யுனக்கேதோன்றும். அங்ஙனந் தோன்றுவதைப்போலவே செய்யக்கடவாய். 63

சுவாமின்! தேவரீர் இதுகாறும் உபதேசித்துவந்த அம்மட்டும் நன்குயாலோசித் தறியுமிடத்து எனக்குள் தோன்றுவதொன்று. அதாவது, நாமரூபமான இந்தவுலகம் கேவலம் அநித்தியமானவையே! இதை நிலவரமாயெண்ணுவது பிராந்தியென்னும் அஞ்ஞான மயக்கமேயாம். ஆகையால் தேவரீர் கூறியது சத்தியமே. அதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. ஆயினும் இவ்வித உண்மையான ஞானசாத்திரங்களை யொருமனதாயுணரும் திடமாகிய ஆற்றலற்று மற்றும் மோக்ஷாபேக்ஷைமட்டுமிருக்குமானால் அவர்கள் எந்தவிதமாக முத்திபெறுவதென்ற மட்டும் எனக்குக் கிருபைசெய் துபதேசிக்கப் பிரார்த்திக்கிறேன்; அருச்சுன; நீ அத்தியந்தபக்தனும் பரமாநந்த சீடனுமானதுபற்றி நாமுபதேசிப்பதை மிகச்சிரத்தையோடு கேட்டு சிந்தித்துத் தெளிபவனுதலாலும் உனக்குபதேசிப்பதே தகுதி ஆகையால் இ.ரியுனக்கு நன்மையுண்டாகுயாறு மிகச்சுலபசாத்தியமான மார்க்கத்தைப்பற்றிக் கூறுவேன் கேட்பாய். ஆனாலது இதுவரையிலுங்கூறிவந்ததினும் மற்றும் உலகமர்மங்களினுமேலான அதியிரகசியமான விஷயமாகும். மிகக் கவனித்துக் கேட்பாயாக. 64

அருச்சுன! நீ யெந்தசமயத்திலும் யெந்தகாரிய துவக்கத்திலும் நம் நினைப்பை விட்டிராதே. நம்மையன்றி வேறெத் தெய்வத்தையுந் தொழாதிருப்பாயாக. நம்மை யொப்புவமையற்ற உத்தமகுருவாயடைந்து நம்வாக்கியாதிகளையே வேதமாக நம்புவாய். உன் வந்தன வழிபாடெல்லாம் நமக்கேயாகட்டும். இவ்விதமாக நீயென்றுமிடையறா தனுட்டிப்பாயாயின் நாளாவிர்த்தியிலுனக்கு ஞானம் லப்தமாய் நம்முடைய கிருபாவிசேடத்தால் சாயுச்சியபதமாகிய நம்மையடைதலே சித்திக்குமாம்.

இந்தவுண்மையிற் சிறிதும் அவநம்புதல் வேண்டாம். உன்னுடைய உண்மையான அன்பும் உள்ளபடியான பக்தியுங்கண்டு நாம் உன்மீது அன்புற்று உனக்கிதனை யோதினோம். ஆகலின் நீயிதனைச் சத்தியவாசகமாய்க் கொள்ளுவாய். 65

இப்போது! இப்போதுங் கூறியதுந்தவிர இன்னுஞ் சில வுண்மையையுங் கேட்பாய்: இனி நீ சர்வசங்க பரித்தியாகஞ் செய்துவிட்டு விபசாரப்பத்தியின்றி யெம்மையே பக்திசிரத்தையோடு வணங்குதல் செய்வாய்; இதற்கு நான் பிரதிப்பிரயோசனமாக உன்னைப் பிறப்பிறப்புக்கு யோக்கியமான சர்வ பாவ ஆஸ்பத சம்சாரத்தினின்று மீட்டு முத்தியிற்சேர்ப்போம். இனி செய்யுங் கர்மங்களால் பாவமும், அப்பாவத்தால் நரகமும் வருமெனக்கருதுவதொழிக. 66

இன்னும், இத்தகைய அதிநுட்பமும் மகா இரகசியமுமான கீதாயிரகசியார்த்தங்களை நாமுனக்குபதேசித்தவண்ணம் நீயும் சமயம்நேர்ந்துழி எவர்க்கேனு முபதேசிக்கநேரும்; அங்ஙனம் நேரும்போது நீயிதனை யெவர்களுக்கு முபதேசித்தலாகாது. நாம் பக்தியிற்சிறந்த வுத்தமனுனதா லுனக் குபதேசித்தது போலவேநீயும், எவன் தனக்குரியசுதன்மத்தில் பிரவிர்த்தியாது அன்னியகருமத்தில் பிரவிர்த்தித்தவனுயிருப்பனே அந்த ஞானசூனியனுக்கும், தவமிலா தவமாயுள்ள வேறுந்தடியனுக்கும், சர்வவல்லமையும்பொருந்திய நம்மிடத்தே அன்பின்றி நம்மைச் சாதாரண மனிதனென்றே நினைக்கும் உலுத்தனுக்கும், நம்மை யுள்ளபடியுணர்ந்து பத்தியாய்ப் பணியாதவனுக்கும், உத்தமாசிரியரையடுத்து அவர்க்கான பணிசெய்யாத அதிமூடனுக்கும் சற்றுமுபதேசியா தொழிக. அன்றி யென் ஆணைமீறி யுபதேசிப்பாயாயின் நீ மீளாத நரகத்துக் காளாதல் நிச்சயமாம். 67

அருச்சுன! மேற்கூறிய குற்றமிலாவுத்தமர்கட் குபதேசிக்கும் அறிவாளிகளுக்குரிய பலனைக் கேட்பாயாக: ஒப்பற்றதான அதியுன்னத கீதாமிர்தத்தை நம்முடைய மெய்யடியார்களுக்கு உபதேசிப்பவர்கள் மெய்யுணர்வெய்தப்பெற்று நம்மையே வழிபட்டு நமக்கே தொண்டு முதலியனவுஞ்செய்து ஈற்றில் நமது வைகுண்டபதவியையே யடைவரென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. 68

இன்னும் நாமுரைத்த இச்சத்தியவாசகமான கீதாசாரத்தை அன்பர்களுக் குபதேசிப்பானாயின் அவனே எமக்குப் பிரியபக்தனாவன். இவனைப்போன்று நமக்கு மெய்யடியவர்கள் முன்னுமில்லை இனி யேற்படப்போகிறதுமில்லையென்றும் நினைக்கின்றேன். இவ்வாறு உபதேசிப்பவனை யேன் விசேடிதமாகக்கொண்டேனென்றால், இத்தகைய வுபதேசமான சத்கைங்கரியத்தில் தலையிடுவதரிதினு மரிதானதால் இவ்வாறு வியந்துகூற நேர்ந்ததென்றறிக. 69

அருச்சுன! இனியிந்த கீதார்த்தத்தை யெப்போதும் பாராயணஞ் செய்துவரும் மெய்யன்பர்களுக்குரிய பயனையுங் கூறுவேன் கேட்பாய்: நான் நின் வினாதனுக்கிசைந்து உத்தரபூர்வமாகச் சொல்லிவந்த யிந்த கீதையைப் பாராயணஞ் செய்பவன் யோகியர்கட்கெல்லா மேலானதான ஞானவேள்வியிலே நம்மையர்ச்சித்ததாகவெண்ணி மிகவுமகிழ்வோம். மற்றும் இவன் நமக்கன்னியமான வேறொருவரைத் தியானித்தானேனும் அதற்கும் நாமே அவன்பால் முந்திச்சென்று பிரத்தியக்ஷ காக்ஷி கொடுப்போமென்க. 70

அருச்சுன! இந்த கீதாவாக்கியத்தை ஒருவர் வாசிக்கக் கேட்பவர், அப்படிகேட்பதில் சிறிதும் வேறுஞாபகமில்லாது மிகச்சிரத்தையோடும் திருப்தியோடும் பக்தியினையமாகவுங் கேட்டல் முறையாம். இவ்வாறுகேட்கின் அதனால் கேட்டவர்கள் தாங்கள் முன்னேசெய்த பாவங்களினின்றும் நீங்கி அஸ்வமேதயாகஞ் செய்தவர்களடையும் தெய்வபோக போக்கியங்களையுமடைவார்களென்க. 71

அருச்சுன! நீ இதுகாறும் நாமுபதேசித்த கீதையை ஒரேமனதாகச் சிரத்தையோடுங் கேட்டாயல்லவா? அவ்வாறு கேட்டதனால் நினக்கு இதுபரியந்தம் "தேகமே நாம், போகமே மோக்ஷம்" என்று தோற்றப்பட்டிருந்த அஞ்ஞானகிருதம் நீங்கியிருக்கலாமே? இல்லையென்றால் இன்னமும் உன்மனசுக்குத் தெளிவுறக் கூறுவோமென்று கிருபையோடுங்கேட்க. 72

அருச்சுனன்:— மிகத்தாழ்ந்து கைகட்டி வாய்பொத்தி நின்று "அத்தியந்த மெய்யன்பர்களுக்கு ஒப்பற்ற ஞானமிர்தத்தையூட்டு மகாதெய்வ சிகாமணியே! இயல்பாகவே பாசபந்தங்களிற் கிடந்துழலாநின்ற சிறியேனது அ[illegible]யன்றோடே

துலைந்து தேவரீரது கருணாஞானப்பிரவாகத்தைச் செவிமடுத்துப் பிரமஞ்ஞானியாயினேன்; சந்தேகப் பிசாசங்களெல்லாம் சந்தோடேபோயின. இனித் தேவரீரது ஆக்ஞையெவ்வாறோ அவ்வாறு நடக்கச் சித்தமொருமித்துளேன்." என்றிவ்வாறாகக் கூறிப் பரமாத்மனைத் தோத்திரிக்கின்றானென்று திரிதராட்டிரன்பால் சஞ்சயர் கூறுவாராயினார். 73

ஏ மகாராஜ! அருச்சுனன் பரமாத்மனைநோக்கி எவ்வாறு தோத்திரிக்கின்றானென்றால், சர்வபுவனகர்த்தாவான என் ஆண்டவரே! என்னையிதுகாறும் பற்றியிருந்த அஞ்ஞானத்தாலன்றோ தேவரீரது மகிமையை யறியாதுபோயினேன்! ஆ கெட்டேன்! அநேகமான என்வாழ்நாளையெல்லாம் வீணாளாகத்துலைத்த என் அவலமதிக் கென்செய்வேன்! என்று பலவாறு தன்னைக்கடிந்து வருந்திநின்று இன்றே தேவரீரது திவ்யதிருநோக்கினாலும் தயவாலும் தெரிந்துகொண்டேன் என்று பலவாறு பரவசமாயாநந்தங்கொண்டாடித் தோத்திரிக்கின்றான். இப்பிரபஞ்சத்தைமூடியுள்ள இருளினாலே ஆன்மாக்களுக்கு யாதுந் தோற்றமின்றிப் பிறகு ஆதவனொளியால் சர்வமும் பரிஷ்காரமாய்த் துலங்குவது போலத் தேவரீரது கருணாபிரவாகத்தால் அடியேனது அஞ்ஞானவிருள்நீங்கி யென்னையின்னானெனத் தெரிந்தேன் என்றும், ஆகாயமானது யாதினுங்கலந்திருந்தும் பின்னை ஒன்றினும் பற்றாது தனித்தும், தான் அனைத்தினுக்குஞ் சகாயமாயிருப்பது போலவே தேவரீர் இப்பிரபஞ்சத்தைச் சிருட்டிசெய்து காத்து அழிக்கினும் இவைகளோடுஞ் சிறிதும் ஒன்றுபடாது யெவற்றிற்கும் பெரியதோராதரவாய் நிற்றலைச் சிறிது மறிந்திலனே! யென்றும். 74

உஷ்ணமுந்தீயும் பேதமின்றி நேர்மையாயிருப்பதுபோலவே எந்த அந்தக்கரணங்களோடுங் கலந்துநின்று அக்கரணாதிகளுமறியாவண்ணம் அவைகட்குத்துணையாய் வினைகளைமுடித்து அந்தரியாமியாயுமிருந்து ஆத்ம சம்ரக்ஷணஞ்செய்வது இவ்வாறெனத் தெரியேனே! என்றுந்துதிக்கின்றான். 75

சுவாமின்! தேவரீரது மெய்யன்பர்களை அன்போடு காத்தருளும் பரமதயாளுவென யானிதுகாறுமறியாது ஒதிபோன்று நின்றேனே! என் அவிவேகம் ஓர் உருவகமாய் எனக்குமுன்

காணப்படின் அதையின்வாறு செய்வேனென்பது தெரியக் கிடக்குமே! 76

பலவேறு வகையான விவேக திடத்தினாலு மறியவொண்ணாத ஏ கருணைக்கண்ணா! ஐம்புலக்காட்டாற்றில் படிந்துலவும் அந்தக்கரணக் கூட்டங்கள் பிரிந்து நிற்கும்போது சிறிதும் அவைகளோடுஞ் சேராதுநின்ற தேவரீரது பெருமையையும் அருட்டிறமையையும் யாவரறியவல்லார்! அத்தகைய தேவரீர் அடியேனையும் ஓர்பொருட்டாகவெண்ணி இரக்ஷணார்த்தம் இக்கோலத் திருவுருவெடுத்ததோ! என்று துதிகூறினன். 77

கண்ணாடியிலே பிரதிபலியாதபோது வேற்றுருவந்தோற்றமின்மைபோன்று கரணங்களைக் கலவாதபோது அறிபவனும் அறியப்படுபொருளுமின்றியேகமாயிருத்தல் நின்னியல்பன்றோ? ஏ க்ஷீராப்திவாச! என்றிவ்வாறாகத் தோத்திரித்தான். 78

ஒரேசூரியன் பற்பல தடாகங்களிலும் அநேகவுருவங்களாகத் தோன்றப்படுவதுபோலவே தேவரீரும் ஏகவஸ்துவாய் விளங்கி அந்தக்கரணங்கள்தோறும் பேதமாய்க் காணப்படுகின்ற மாயாவிசித்திர வல்லபமே வல்லபம்! தேவரீரது திவ்யசொரூபத்தின் பிரமாண மிவ்வளவென்று கணக்கிட்டுக் கூறுதற்குப்பழமறைகளாலு மாகாதென்றால் இங்கு யானோவறிவேன்! ஏ சொல்லற்கடங்காத சோதிப்பிழம்போய்! என்றுந்தோத்திரித்தான்.

நித்தியசுத்த நிர்மலாகிர்தியரான தேவரீர், சலனமிலாச் சாலம்பரகிதனையும், எங்கும் வியாபித்துள்ள பூரண சுகஜோதிதனையுமுள்ள பரமாத்மனேயென்பது நிச்சயம். ஆனாலும் ஆதித்தனுமாகாயமும் ஜலத்தினிடமாகப் பிரதிபலித்து அந்த ஜலமசையும்போது அதிற்படிந்து தோன்றும் ஆதித்த ஆகாயமும் அசைந்தாடுவதுபோலவே சீவர்களது கருவி கரணங்களிளெல்லாம் பொருந்தியிருப்பினும் அக்கரணாதிகள் பேதித்திருப்பதுபோலல்லாது அபேதமாய்ப் பிம்பம்போல் பிரகாசிக்கின்றீர்கள். இவ்வாறுவிளங்குந் திவ்யதகைமைசால் தேவரீரை, பழமறைபயின்று சாஸ்திராதிகளில் மிகவல்லரான மூதறிஞர்களாலும் நன்கறித லசாத்தியமாகக் காணப்படுகின்றதே! என்றிவ்வாறு தோத்திரிக்கின்றான். 80

தெய்வீகபண்டகசாலையாமிந்தவுலகின்கண் காணப்படுகின்ற பல்வேறு வகையான பொருள்களனைத்தையும் கட்புலனுக்குத்

தோற்றுவிப்பது ஆகாயத்துலவும் ஆதித்தனன்றோ? தேவரீர் அவ்வாதித்த மூர்த்தியைப்போன்றே சர்வான்மாக்களது நல்வினை தீவினைகளையெல்லா முள்ளபடியறிந்து அவரவர்களது ஒவ்வொரு பிறவிகட்கும் பயனுதவு முதவி நாயகனென்றறியுமாற்றலற்றுப் பிற்றற்றுருத்தியாமிந்த பேயுடலையோம்பி நின்றேனே! இனித் தேவரீரது திவ்ய திருவடித்தாமரையின் பிரபாவமனைத்தையு மறிவதென்றுகொலோவென்றுந் துதிக்கின்றான். 81

இன்னுஞ் சீவகோடிகட்கெல்லாங் கண்களிருந்தும் சூரியப்பிரகாசமில்லாவுழி யெங்ஙனம் பண்டங்கள் புலவுங் காணப்படுவதில்லையோ அதேபோல தேவரீர் எல்லா சீவகரணங்களிலுங் கலந்து அவைகளை யதனதன்றொழிலில் பிரவிர்த்திக்கச்செய்து நின்றாலும் தம்மைக்காண்பது அரிதாகின்றதே! ஆராயும்போது அக்கருவி கரணங்களுக் கெட்டாதவனென்றும், வேதத்துக் கெட்டா விழுப்பொருளெனவும் விளங்குகின்றதே! இத்தகைய தத்துவானன்னியனுய தேவரீர் சீவ சிருட்டிக்கெனவெடுத்தருளிய திருவவதாரத்தைச் சர்வசாமானியமாய்க் கன்றுமேய்த்த கண்ணனென்பதால் குறையொன்றில்லாக் குணக்கடலென்றறியு மறிவில்லையேயென் றிவ்வாறுகவும் போற்றுவானாயினன். 82

ககனப்பரப்பில் உலவும் மேகங்கள் அதற்கெவ்வளவோ வுயரத்தில் விளங்கும் சூரியசந்திராதியர்களை மறைக்கின்றவாறுபோலத் தேவரீரையாராய்ந்தறியுமாற்றலில்லாத ஊனக்கண்ணர்களுக்கு மறைந்திருப்பதாகவும், ஏதோ ஜனன மரணமானது போன்றும் விளங்குமன்றி மெய்யறிவுடையோரது மெஞ்ஞானத்தால் பார்க்கும்போது என்றும் பிறந்திறவாதபேரருளுருவாய் விளங்காநிற்கும் பரமயோகியும் நீரேயாகின்றீர் என்றிவ்வாறுகவுந் துதிக்கின்றான். 83

பஞ்சபூதங்களிலொன்றாய ஆகாயவெளியானது தனக்குள் எல்லாப் பண்டபதார்த்தங்களையுமடக்கி யிடங்கொடுத்துக் கலந்து நிற்கின்றவாறுபோலவே சர்வாண்ட புவனங்களையு மும்மிடத்தே வைத்திருப்பினும் தேவரீர் அவைகளிலே சிறிதுஞ் சாராதிருக்குந் தந்திரமெப்படியோ தெரியேன்; இவ்வாறான தம்முடைய அருட்டிறமறியா யேனையோர் சிலர் தம்மைப் பசுமேய்த்தானென்றாலும் கோபிகளைப் புல்லினனென்றாலும் தேவரீர்க்குக் குணதோஷ மொன்றுங்காணேமே, என் இறையவனே! என்றிவ்வாறுக வாழ்த்துவானாயினன். 84

சங்கற்ப விகற்பமென்பது சிறிதுமின்றி ஒப்பற்ற வொரு பொருளாய் விளங்கும் தேவரீர் இச்சேதன சீவபரங்களைக் கலந்துகொண்டு அபேதனாய்க் காணப்படுகின்ற பரம சாமர்த்தியத்தை யாராயுமிடத்துச் சந்திராதியர்கள் தண்ணீரிற் பிரதிபலித் தசைவதுபோன்றும், கண்ணாடியிற்பொருந்திய பலவர்ண பேதங்களைப்போன்றும் அவைகளோடு ஒன்றுபட்டதுபோல ஆன்மாக்களது கருவிகரணாதிகளின் வாயிலாக அலைப்புண்டு அவைகட்கு முக்கியஹேதுவாயும் நின்ற ஏசக்கரதரா! தேவரீரது திவ்யாகிருதியாகிய அகண்டாகாரத் திருமேனியைக் காண்பானிந்த வூனக்கண்ணிரண்டும் போராதே! அங்ஙனங்கண்டோமென்று கூறுவது மலடிமைந்தனென்பதுபோலாம். என்றிவ்வாறாகவும் வாழ்த்துகின்றான். 85

என்னை யின்னானென் றறியவொண்ணாது இயல்பாகவே மறைத்துள்ள மாயாந்தகாரத்தை அரிய ஞானபானுவைக்கொண்டோடி உண்மைப்பொருளின்னனதென்னத் தோற்றுவித்த உத்தமசற்குருவே! இப்போது தேவரீரித்தன்மையரென்றும், தமியேனின்னானென்றுஞ் செவ்வனே யறிந்தேனாதலால் இனியெனக்கோர் தற்சுதந்திரமு மின்றெனக்கண்டேன். எல்லாந் தேவரீரது ஆக்ஞையேயாம். யானெனதறப் போதித்தருளிய ஞானாசிரியரே! தேவரீரிதுகாறும் கூறியபடியே பற்றில்லாது எனது எதிரிகளாகிய துரியோதனாதியர்களோடும் போர் புரிவான் சித்தமொருமித்துளேன், என்று அவரது ஆணைமேற்கொண்டு தனது ஒப்பற்ற காண்டீபத்தைக் கையிலெடுத்து யுத்தசன்னத்தனாயிருக்கின்றான் என்று சஞ்சயர் கூறினரென்க. 86

இதனைச் செவிமடுத்த துரியோதன மகாராஜன் சஞ்சயரை நோக்கி முக்காலமுணர்ந்த ஏ முனிபுங்கவ! தேவரீர், அன்னோரிருவரும் சம்பாஷித்துவந்த சத்திய விர்த்தாந்தங்களனைத்தையு மெவ்வா றுணர்ந்தீர்களென்னலும், சஞ்சயர், ஏ மகாராஜனே! எனது அத்யந்த ஞானாசிரியர் வேதவியாசரன்றே? அவரே யித்துணையும் சமயநேர்ந்துழி யுபதேசித்தவண்ணம் யான் தங்கட்கோதலாயினேன். ஆனால் இவ்வரியசம்பாஷணையை மற்றியாருமறிந்திலர். என்றுகூறி அத்தியந்தானந்த வசத்தராய்த் துதிகூறுவாராயினர். 87

ஏ திரிதராட்டிர மகாராஜ! மகாஞான சிகாமணியாய் விளங்கிய அருச்சுனனும், ஸ்ரீமந்நாராயணவதாரமாகிய கிருஷ்ணமூர்த்

தியுமாகச் சம்பாஷித்த சரியை கிரியா யோக ஞானுனுபூதி விஷயங்களனைத்தையுங் கேட்டமாத்திரத்தே [illegible]ஆனந்தசாகரத்தில் மூழ்கியவனுய்த் தேகம்புளகாங்கிதத்தோடு மெய்சிலிர்ப்ப அதியாச்சரியமடைந்து தங்கட்குரைப்பத் தலைப்பட்டேன். 88

அன்றியும், பரமயோகியும், ஸ்ரீமந் [illegible] வதாரமுமாய நந்தகோபாலமூர்த்தியார் அதிப்பரம [illegible] வுபதேசித்தருளிய இந்தவொப்பற்ற கன்மயோக ஞான[illegible]யைச் சதுர்வேத சம்பன்னரான வியாசமகாரிஷியின் [illegible]னாக யானுங் கேட்டானந்தசாகரத்திற் படிந்தேன். 89

ஏ மகாராஜ! சாலோக சாமீப சாரூப சாயுச்சிய முதலான சர்வபதவிகட்கு மேதுவாய் விளங்கிய அரிய பெரிய கிருஷ்ணர்ச்சுன சம்வாத கீதையின் பிரபாவத்தையும், ஞானர்த்த தத்துவார்த்தங்களின் இரகசியங்களையுங்கேட்ட என்மனமும் அறிவும் அடிக்கடி அதனையே சிந்தித்துச் சிந்தித்துப் பேரானந்தப் பெருங் கடலு ளாழ்கின்றன. 90

இதுமட்டோ! ஸ்ரீபகவான் அருச்சுனனது வேண்டுகோட் கிசைந்து எடுத்தருளிய விசுவரூபக்காக்ஷியின் விசேஷத்தை யான் பார்த்ததுமுதல் என்மனம் எண்ணியெண்ணித் தேகபுளகிதமாய்ப் பரவசப்பட்டு என்னறிவு இன்பமயமாகின்றது. என்றுங் கூறுவாராயினர். 91

ஓய் சஞ்சயரே! இதுநிற்க; இப்போது நீர் பார்த்தவரையில் இவ்விருதிறத்தாரும் யுத்தஞ்செய்வார்களாயின் ஜெயம் பெறுவார் யாவரெனக்கேட்ட திரிதராட்டிரனை நோக்கிச் சஞ்சயர், ஏ மகாராஜனே! தர்ம தேவதா சொரூபமாக ஸ்ரீகிருஷ்ண பகவானும், ஒப்பற்றகாண்டீபத்தைக் கைப்பற்றுநின்ற யாதொரு அருச்சுனனும், மற்றுந் தர்மநியாயமென்னு நீதிநெறியும், இராஜலெக்ஷ்மிதேவியும வாசஞ்செய்துள்ள தெந்தப்பக்கத்திலோ அவர்களே பூரணமாய் வெற்றிபெறுவார்களென்பது என்னறிவில் விளங்குகின்றது. ஆகவே தாம் துரியோதனனுள்பட யாவரும் யுத்தஞ்செய்வதை நிறுத்திவிடுதலே யுக்தமெனக்கொண்டு பகவானுய் விளங்கும் தேவகீகுமாரரான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைச் சரணடைதலே நலமெனத்தோன்றுகின்றது. என்று சஞ்சயர் கூறிநிறுத்துகின்றார். சுபம்.

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண பகவான் திருவாய் மலர்ந்தருளிய கருணாமிர்தமாகிய [illegible]வாசகத்தை, யாதொரு விஜயவீரனை அருச்சுனன் கேட்டதினால் சர்வசௌபாக்கியங்களோடுங்கூடிய வெற்றியையும் ஞான மோக்ஷங்களையும் எவ்வாறுபெற்றுப் பெருவாழ்வெய்தினனோ அதுபோலவே ஞானமோக்ஷாஸ்பதமான இக்கீதா நவநீதத்தை [illegible]ர் கேட்டோர் பிரசங்கித்தோர் முதலிய யாவரும் பெறுதற்கரிய ஞான மோக்ஷங்களையெய்திப் பேராநந்த முறுவரென்பது சத்தியமேயாம். சுபம்.

சஞ்சேப அத்தியாய

முற்றிற்று.

ஆக அத்தியாயம் 18-க்கு-சுலோகப் பொழிப்பு-716.

**பகவத்கீதா நவநீத வசன**

முற்றிற்று.

---

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரம்மணே நம: